Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 20-1-2014 Issued : 20-1-2014

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 4, 2013—தொகுதி 42—எண் 2

Thursday, the 4th April 2013—Volume 42—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

சட்டமன்ற பேரவை
தமிழ்நாடு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4–4–2013

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்–விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 335-382

2. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 382

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்— 383-389

(அ) மதுரையில் துணைக்கோள் நகரம் அமைத்தல், வீட்டு வசதி வாரியம், குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை. 383-387

(ஆ) தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் அணைக்கட்டுகள் மற்றும் நீர்வழங்கு ஆதாரங்களைப் புனரமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை. 387-389

4. மதுரையில் துணைக்கோள் நகரம் அமைத்தல், வீட்டு வசதி வாரியம், குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்டுதல் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் அணைக்கட்டுகள் மற்றும் நீர்வளம் ஆதாரங்களைப் புனரமைத்தல் முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி 389-399

முனைவர் செ.கு. தமிழரசன் 389-391

திரு. உ. தனியரசு 391-393

திரு. ரா. சரத்குமார் 393-395

திரு. அ. அஸ்லம் பாஷா 395

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் 396

திரு. ந. நஞ்சப்பன் 396-397

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 397-399

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி 399-514

கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் 399-400, 409,411, 413-422 432-443 447-448 450-451 453-468 475-476 480-514

திரு. எஸ்.ஆர். பார்த்திபன் 410-420 423-426

திரு. கார்த்திக் தொண்டைமான் 426-432

முனைவர் கோவி. செழியன் 432-439 441-449

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 446

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 440

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 443-445

திரு. க. பாலகிருஷ்ணன் 406 448-453 455, 457-458, 460-469

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

டாக்டர் க. கிருஷ்ணசாமி 409, 457-458

திரு. மு. முருகன் 470-472

திரு. வெ. பொன்னுப்பாண்டி 404, 473-478

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 406, 479-486

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 515-516

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்ற பேரவை
தமிழ்நாடு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, பங்குனி 22, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 ஏப்ரல் 4, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு."*

மணற்கேணியில் எந்த அளவிற்குத் தோண்டுகிறோமோ அந்த அளவிற்கு நீர் ஊறும். அதுபோல, மக்கள் எந்த அளவிற்குக் கற்கிறார்களோ, அந்த அளவிற்கு அறிவு பெருகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

135—

கருவூலம்

***12349—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கருவூலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒரு வருவாய் வட்டத்திற்கு ஒரு சார் கருவூலம் என்ற அடிப்படையில் கருவூல அமைப்பினைச் சீரமைக்க, தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அம்முடிவிற்கேற்ப, ஆம்பூர் வருவாய் வட்டத்தில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009 ஆம் ஆண்டு ஆம்பூர் தாலுகா உருவாக்கப்பட்டது. ஆம்பூர் தாலுகா 79 வருவாய் கிராமங்கள், 5 உள் வட்டங்கள் கொண்டிருக்கிற ஒரு தாலுகாவாகும். தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள ஆம்பூர் தாலுகா, வளர்ந்து வருகின்ற ஒரு மிகப்பெரிய நகரமாக இருக்கிறது. கருவூலத்திற்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், ஆம்பூரிலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள வாணியம்பாடிக்குச் செல்லவேண்டும். வாணியம்பாடியிலிருந்து மூன்று கிலோமீட்டர் உள்ளே செல்லவேண்டும். அதேபோல என்னுடைய தொகுதியின் கடைக்கோடியில் இருக்கின்ற ஆசனாம்பட்டிலிருந்து கருவூலத்திற்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், 45 கிலோமீட்டர் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொதுமக்களின் நலன் கருதி, இந்தக் கருவூலத்தை இந்த நல்லாட்சியிலேயே வெகுவிரைவில் அமைத்துத் தருமாறு கேட்டு, அப்படி அமைத்துத் தரப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் முக்கியத்துவத்தை மாண்புமிகு அம்மா

2013 ஏப்ரல் 4]

அவர்களுடைய அரசு உணர்ந்திருக்கிறது. ஆம்பூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கு குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி சார்நிலைக் கருவூலங்களிலிருந்து பணிகள் பிரிக்கப்பட்டு அதற்குரிய பூர்வாங்கப் பணிகள் ஆய்வில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஆம்பூரிலே சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை சீக்கிரம் எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் சார்நிலைக் கருவூலம் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைத்துத் தர மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து வட்டங்களிலும், ஒரு வட்டத்திற்கு ஒரு சார்நிலைக் கருவூலம் இருக்கவேண்டும் என்பதன் அவசியத்தைக் கருதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொள்கைரீதியாக முடிவு எடுத்துள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கீழ்வேளூர் வட்டத்திலும் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்குரிய பணிகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே ஆரணி வட்டாட்சியர் அலுவலகம் ஏறத்தாழ 2 ஏக்கர் பரப்பளவிலே இருக்கிறது. அதிலே புதிதாக ஒரு சார்நிலைக் கருவூலக் கட்டடம் கட்டித் தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இந்திய மருத்துவ சங்கத்தில் ஏறத்தாழ 40-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வாரத்திற்கு ஒரு நாள் பொதுமக்களுக்கு இலவசமாக மருத்துவம் பார்ப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கும் அந்த வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலே 1,000 சதுர அடியிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கருவூலம் குறித்து மட்டும் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்று, இந்த இரண்டு வருட நல்லாட்சியில் 14 சார்நிலைக் கருவூலங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 4]

136—

தரம் உயர்த்துதல்

***23951—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகராட்சிப் பகுதியில் 10 மெகா வாட் திறனுடைய துணை மின் நிலையத்தை 16 மெகா வாட் திறனுடைய துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த வினாவிற்கு விடை அளிப்பதற்கு முன்பு, இந்த வினாவிலே இருக்கின்ற தவறை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, புவனகிரி தொகுதி, சிதம்பரம் நகராட்சிப் பகுதியில் 10 மெகா வாட் திறனுடைய துணை மின் நிலையத்தை 16 மெகா வாட் திறனுடைய துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பது உறுப்பினருடைய கேள்வி. அந்தக் கேள்வியை 10 மெகா வாட் திறனுடைய மின்மாற்றி என்பதற்குப் பதிலாக 10 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றி என்று மாற்றிக்கொள்ள வேண்டும். மெகா வாட் என்பதற்குப் பதிலாக எம்.வி.ஏ. அதாவது Mega Volt Ampere என்று மாற்றிக்கொள்ள வேண்டும். இரண்டிற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. ஆகவே, அதை எம்.வி.ஏ. எனத் திருத்தி பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விடை—ஆம். ஒரு 10 எம்.வி.ஏ. மின்மாற்றி, 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியாக ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டாவது புதியதாக 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட ஒரு மின்மாற்றியும் இந்த மாத இறுதிக்குள் நிறுவப்பட்டு இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 4

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகரித்து வருகின்ற மின் இணைப்புகள் காரணமாக இதுபோன்ற துணை மின் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்கிற கோரிக்கைகள் ஆங்காங்கே இருந்து வருகின்றன. என்னுடைய குன்னம் தொகுதியிலும் பல இடங்களில் இந்தக் கோரிக்கை இருக்கிறது. தமிழகம் முழுவதும் இதுபோன்ற கோரிக்கைகள் இருக்கின்றன. மிகக் குறைவான இடங்களிலே மட்டும்தான் புதிதாக மின்மாற்றிகள் அமைக்க வேண்டியது வரும். தமிழகம் முழுவதும் 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் இருக்கின்ற இடங்களிலெல்லாம் அவற்றை 16 எம்.வி.ஏ.–திறன் கொண்ட மின்மாற்றிகளாகத் தரம் உயர்த்துவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தனி சிறப்பு நேர்வாக எடுத்துச் செய்வதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த முறை மின் துறை அமைச்சராக இருந்தார்கள். இப்பொழுது மின் துறை மற்றும் கலால் துறை அமைச்சராக upgrade ஆகியிருக்கிறாரே, அதேமாதிரி இதை ஒரு upgrade ஆக எடுத்துச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் கேளுங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குத் தொடர்புடைய துணை வினாவைக் கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளின்படி, அந்தத் தொகுதியிலே எந்தெந்த பகுதியிலே கூடுதல் திறன்கொண்ட மின்மாற்றிகள் அமைக்கப்பட வேண்டும் என்பதைக் கண்டறிந்து, ஆய்வு செய்து, இருக்கின்ற மின் பளுவிற்கு ஏற்ப நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, தேவைப்படின் அந்தப் பகுதியிலே உள்ள துணை மின் நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். அரக்கோணம் வட்டம், நெமிலி பொன்னையில் 33 கே.வி. துணை மின் நிலையம் ஒன்றுள்ளது. அரக்கோணம் தொகுதி மற்றும் சோளிங்கர் தொகுதி 30 ஊராட்சிகளைக் கொண்டது. அங்கு விவசாய மக்களும், நெசவாளர் பெருமக்களும் மிகுதியாக வாழ்ந்து வருகிறார்கள். அங்குள்ள 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக மாற்ற வேண்டி சுமார் 20 ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்து வருகின்றார்கள். எனவே, மாண்புமிகு அண்ணன் அவர்கள் 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதுபோல, ஒட்டுமொத்தமாக தமிழகத்தினுடைய அனைத்துப் பகுதிகளிலும் எந்தெந்தப் பகுதிகளிலே கூடுதல் மின்பளு இப்பொழுது அதிகரித்திருக்கிறது, தேவை அதிகரித்திருக்கிறது என்பதைக் கணக்கிட்டு, அந்த இடங்களிலேயெல்லாம் படிப்படியாக, சம்பந்தப்பட்ட துணை மின் நிலையங்களைத் தரம் உயர்த்திட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, இப்பொழுது தமிழ்நாடு மின்சார வாரியம் அனைத்து இடங்களிலும் எந்தெந்த அளவுக்கு இப்பொழுது மின்பளு அதிகரித்து இருக்கிறது என்பதை ஆய்வு செய்து வருகிறது. அந்த ஆய்வின் அடிப்படையிலே தேவையான அத்தனை இடங்களிலும் படிப்படியாகவும், அதேசமயத்தில் விரைவாகவும் துணை மின் நிலையங்களைத் தரமுயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனடிப்படையிலே, உங்களுடைய அரக்கோணம் தொகுதியிலும் தேவையான இடங்களிலே துணை மின் நிலையங்களைத் தரமுயர்த்துவதற்கு வேண்டிய

[2013 ஏப்ரல் 4

நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம் அவர்கள்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் நான் என்றும் வணங்கும் எங்கள் குடும்ப குலதெய்வம், மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். என்னுடைய கேள்வியில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கீரப்பாளையம் ஒன்றியம், ஓரத்தூரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகள் குறைந்த மின் அழுத்தப் பகுதிகளாக உள்ள காரணத்தினால், அங்கு 110 மெகா வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதை மெகா வாட் என்று குறிப்பிட வேண்டாம். 110/33, 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் என்று குறிப்பிட வேண்டும். அதிலே மின் மாற்றிகளைப் பற்றி குறிப்பிடுகிறபொழுது மெகா வாட் என்பதற்குப் பதிலாக எம்.வி.ஏ. என்று உங்களுடைய கேள்வியிலே அதை மாற்றிக் கொள்ள வேண்டும். சட்டமன்றப்பதிவேட்டில் தவறுதலாகப் பதிவாகக் கூடாது என்பதற்காகத்தான் அதைத் திருத்திச் சொன்னேன். அந்த அடிப்படையிலே, இன்றைக்குப் புவனகிரி, சிதம்பரம் நகராட்சியில் நீங்கள் கேட்ட பகுதியில், 110/33 மற்றும் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தில் ஏற்கெனவே இயக்கத்திலுள்ள இரண்டு 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளை 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளாக தரமுயர்த்துவதற்காக ரூ.160 இலட்சத்து 50 ஆயிரம் செலவிலே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 10 எம்.வி.ஏ. மின்மாற்றி ஒன்று 16 எம்.வி.ஏ. மின்மாற்றியாக ஏற்கெனவே

2013 ஏப்ரல் 4]

தரமுயர்த்தப்பட்டு, இயக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இத் துணை மின் நிலையத்தில் கூடுதலாக தேவைப்படுகின்ற மற்றொரு 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியும், 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியாக தரமுயர்த்துவதற்கு இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாத இறுதிக்குள் அந்தப் பணிகள் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

137—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***5681—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சுரண்டையில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு விரிவான திட்ட மதிப்பீடு ரூ.36.87 கோடிக்கு

[2013 ஏப்ரல் 4

தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டு, நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தகவலுக்கு நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், எனது தொகுதியில் தென்காசிக்குட்பட்ட வி.கே. புதூர் பேருந்து நிலையத்தை அமைக்க ரூ.1 கோடியும் மற்றும் இலஞ்சி பேரூராட்சி அலுவலகம் கட்டும் பணிக்கு அனுமதியளித்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்காசி தொகுதி, சுரண்டை தேர்வுநிலைப், பேரூராட்சி 1,289.92 ஹெக்டேர் பரப்பளவு கொண்டதாகும். இது 35,000 மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். கடந்த காலங்களிலே அங்கு அவர்களாகவே பல இடங்களில் வீடுகள் கட்டிக்கொண்ட காரணத்தினால், அது சீரமைக்கப்படாமல் தானாகவே உருவான ஒரு பகுதியாக மாறியிருக்கிறது. ஆகவே, அங்கு வடிகால் மற்றும் கழிவுநீர் வசதிகள் முழுமையாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணிகள் நிறைவேற்றித் தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆக, அது வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கும். அங்கு 21 கழிப்பிடங்களும், 6,119 தனி கழிப்பிடங்களும் வீடுகளிலே இருந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியைப் பார்க்கும்போதே, அந்த ஓடை செல்கின்ற வழியெல்லாம் துர்நாற்றம் வீசிக்கொண்டு, அங்கு பல நோய்கள் பரவுகின்ற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இது தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளை விரைவில் முடித்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்பதோடு, முடித்துத் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, அது பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. திட்டத்தைத் தயாரிக்கின்றபோதே, பெரிய நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை எப்படி பல பகுதிகளாகப் பிரித்துச் செயல்படுத்துகிறோமோ, அதைப்போலத்தான் சிறிய பேரூராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் பல பகுதிகளாகப் பிரித்துச் செயல்படுத்தப்படுகிறது. அதைப்போல இங்கும் இது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. எனவே, நிதியாதாரம் கிடைக்கப்பெற்றவுடன், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி தொகுதியில், தருமபுரி நகரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 19 வார்டுகளில் மட்டும் தற்போது நடைபெற்று, முடியும் தருவாயில் உள்ளது. வீடுகளுக்கு உரிய இணைப்புகள் இன்னும் வழங்கப்படவில்லை. இன்னும் மீதமுள்ள 14 வார்டுகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் எப்போது தொடங்கப்படும்? எவ்வளவு நாட்களில் முடிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, அங்கே ஏற்கெனவே ஒரு பகுதியில் பணி முடிக்கப்பட்டிருக்கிறது; இன்னொரு பகுதியில் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன. அப்படி தொடங்குவதற்குத் தேவையான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. நிதியாதாரம் உருவாக்கப்பட்டவுடன், அந்தப் பணிகளும் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது பாதாளச் சாக்கடைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு இணைப்புகள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை நகரத்தில் 2007–2008 ஆம் ஆண்டு பாதாளச் சாக்கடைத் திட்டம் உருவாக்கப்பட்டு, discharge point–ல் ஏற்பட்ட பல்வேறு குழப்பங்களால் அந்தப் பணி முழுமை பெறாததால், அங்கு பல்வேறுவிதமான சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக அதில் கவனம் செலுத்தி, அந்தத் திட்டம் முழுமையாக விரைந்து நடைபெறுவதற்கு உதவிடுவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட இது போன்ற பல்வேறு திட்டங்கள், உரிய நிதியாதாரங்கள் சரியான முறையில் ஏற்பாடு செய்யாத காரணத்தினால், அவை கைவிடப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல; நிலங்களைக் கையகப்படுத்தாமலேயே திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அவற்றைச் செயல்படுத்துகின்ற நேரத்தில், நிலம்

2013 ஏப்ரல் 4]

கையகப்படுத்தப்படாத காரணத்தினால், அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த நகராட்சியில் தொடர்ந்து நல்ல முறையில் அந்தப் பணியினைச் செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம். எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் நகரத்திலே பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான பணிகள் அனைத்தும் முடிவடைந்த போதிலும்கூட, இன்னும் அந்தத் திட்டம் செயல்பாட்டிற்கு வரவில்லை. ஆங்காங்கே சில சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, அந்தச் சிக்கல்களையெல்லாம் தீர்த்து, விரைவிலே இராமநாதபுரத்திலே அதை நிறைவேற்ற வேண்டும். சென்ற அ.தி.மு.க. ஆட்சியிலே தீட்டப்பட்ட திட்டம் அது. ஏற்கெனவே, நான் இந்தக் கேள்வியை எழுப்புகின்றபோது, விரைவிலே அந்தப் பணி முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, விரைவிலே அதை முடிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சியில் உருவாக்கப்பட்டது என்பது முக்கியமல்ல; மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைய வேண்டுமென்பதற்காகவும், அவர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்புகளை விரைவாக மேம்படுத்தித் தர வேண்டுமென்பதற்காகவும், மிகவும் வேகமாகச் செயல்பட்டுக்

[2013 ஏப்ரல் 4

கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கேள்வி கேட்டதன் அடிப்படையில், அதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்காக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக, மற்றப் பணிகளிலிருந்து இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி வேறுபடுகிறது. அதுதான் காலதாமதம் ஆவதற்குரிய காரணம். மற்றப் பணிகளை இயந்திரங்களை வைத்து முழுமையாக நிறைவேற்றிட முடிகிறது. ஆனால், பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், குறுகலான வீடுகளின் மத்தியிலே இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், பெரிய இயந்திரங்களை அந்த இடங்களுக்குக் கொண்டு செல்ல முடிவதில்லை. எனவே, அந்த இடங்களில் மனிதர்கள் அந்தப் பணியைச் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகின்ற காரணத்தினால்தான், இதில் காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், விரைவாக நடவடிக்கை எடுத்து, மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே அந்தத் திட்டம் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தற்போது எந்த நிலையிலே உள்ளது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகராட்சியில், அந்தத் திட்டம் நல்ல நிலையிலே உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2013 ஏப்ரல் 4]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

138—

தொழிற்பேட்டை

***8235—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், அந்தியூரில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாவட்டம், அந்தியூரில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், போதுமான நிதி ஆதாரங்களுடன் தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை அடிப்படையில் ஈரோடு மாவட்டம் அந்தியூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ மூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "The democracy is the Government of the people, by the people and for the people" *என்ற கூற்றிற்கிணங்க, மக்களால், மக்களுக்காக, மக்களாட்சி நடத்திக்கொண்டிருக்கும் மகராசி எங்கள் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது பணிவான வணக்கத்தைக் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, மலை கிராமங்களை உள்ளடக்கிய தொகுதி

[2013 ஏப்ரல் 4

ஆகும். இங்கு மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இத்தொகுதி மக்கள் விவசாயத்தையே முழுமையாக நம்பியிருக்கின்றனர். இப்பகுதியில் மக்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்றவகையில் எந்தவொரு தொழிற்சாலைகளும் இல்லை. இங்குள்ள மக்கள் வேலைவாய்ப்புக்காக 100 கி.மீ. பயணம் செய்து, வெளி மாவட்டங்களுக்குச் செல்கின்ற சூழ்நிலை உள்ளது. மேலும், இங்குள்ள இளைஞர்கள், தங்கள் பள்ளி மேல்நிலைப் படிப்பை முடித்துவிட்டு, வேலைவாய்ப்புக்காக வெளியூர்களுக்குச் சென்று வருகின்றனர். இந்தப் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க போதுமான இடவசதியும் உள்ளது. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக, எல்லா மாவட்டங்களுக்கும் நிறைவான திட்டங்களை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இப்பகுதி மக்களின் கோரிக்கையான, அந்தியூர் பகுதியில் தொழிற்பேட்டை அமைத்து, வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும் திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசியபோது, 'மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவையெல்லாம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன' என்று கூறி, 'எங்களுடைய மாவட்டத்திற்கும் தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுவும், குறிப்பாக அந்த மாவட்டத்திலுள்ள மக்கள் வேலைவாய்ப்பைத் தேடி வெளி மாவட்டங்களுக்குச் செல்கின்றனர் என்று கூறினார்கள். ஈரோடு மாவட்டத்தில், மொடக்குறிச்சி, தம்பிரான்வலசு என்ற இடத்தில் ஒரு தொழிற்பேட்டையும், சென்னிமலை ரோடு, காசிப்பாளையத்தில் ஒரு சிட்கோ தொழிற்பேட்டையும், தாராபுரம் வட்டம், நஞ்சை ஊத்துக்குளி பகுதியில் ஒரு தொழிற்பேட்டையும் அமைந்துள்ளது. அதுமாத்திரமல்லாது, ஈரோடு மாவட்டத்திலுள்ள வேளாண் பொதுமக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக ரூபாய் 600 இலட்சம் மதிப்பீட்டில் கயிறு குழுமம் அமைப்பதற்கான திட்டம் தயார் நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 4]

அதேபோன்று, அந்தியூர் பகுதியிலிருந்து 40 கி.மீ. தூரத்தில்தான் மொடக்குறிச்சி உள்ளது; அந்தியூர் பகுதியிலிருந்து 35 கி.மீ. தூரத்தில்தான் காசிப்பாளையம் அமைந்துள்ளது; அந்தியூருக்குப் பக்கத்தில்தான் நஞ்சை ஊத்துக்குளி உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இத்தகைய தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு புறம்போக்கு நிலம் அந்தியூர் பகுதியில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்; அப்படி இடம் இருக்குமேயானால், மாவட்ட ஆட்சித் தலைவரோடும், மாவட்டத் தொழில் மைய அலுவலர்களுடனும் கலந்து பேசி, அந்தியூர் பகுதியில் சிட்கோ நிறுவனம் மூலமாக தொழிற்பேட்டை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தியூர் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யும் என்று கூறியிருக்கின்றார்கள். அதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியையும், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொதியையும் இணைக்கும் கிருஷ்ணகிரி–ஓசூர் ஆறு வழிச் சாலையில் கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் ஆட்சியிலே 89 ஏக்கரிலே சிட்கோவின் சார்பாக தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்டது. அந்தத் தொழிற்பேட்டையிலே சுமார் 1½ கோடி ரூபாய் செலவிலே சாலைகள், விளக்குகள் எல்லாம் போடப்பட்டு, அடிப்படை வசதிகள் எல்லாம் செய்யப்பட்டு இன்றைக்கு அப்படியே நிற்கிறது. தொழில் முனைவோர் அத்தனை பேரும் அந்த பிளாட்களுக்காக மனுக்களைக் கொடுத்து இன்று

[2013 ஏப்ரல் 4

வரையிலே கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அப்படியே நிலுவையில் இருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிற்பேட்டை எப்போது பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அங்கே ஒரு தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டு, அங்கே தொடக்கப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் எல்லாம் செய்யப்பட்டன என்று சொன்னார்கள். அந்தப் பணிகள் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நடைபெற்று அங்கே மனுக்கள் எல்லாம் தரப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே, பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்படாமல், ஆங்காங்கே பல பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நேற்றும் நான் இதைக் குறிப்பிட்டுச் சொன்னேன். தொடர் நடவடிக்கைகள் இல்லை. ஆனால், அதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்பொழுது துரிதமான நடவடிக்கை எடுத்து, 20 ஆண்டுக் காலமாக நடைமுறையில் இல்லாதவற்றையும், நடைமுறைகளுக்கேற்ப இல்லாத சில செயல்பாடுகளை எல்லாம் ஒழுங்குபடுத்துகிற வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. எங்கெங்கெல்லாம் நிலங்கள் வேண்டுமென்று அவர்கள் பணித்தார்களோ, விண்ணப்பங்களைச் செய்தார்களோ, நிலத்தை ஒதுக்க முடியாமல் இருக்கக்கூடிய அந்தப் பகுதிகளுக்கெல்லாம் ஒட்டுமொத்தமாக நிதிநிலை அறிக்கையிலே நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று இங்கே நம்முடைய துறையின் சார்பாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சார்பாக ஒரு தொகுப்பு வெளியிடப்படும் எனவே, இவை அத்துணைக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் தொகுப்பு வெளியிடுகிறபொழுது பதில் கிடைக்கும். இந்தத் துறையை சிறந்த துறையாக ஆக்கக்கூடிய வகையில் அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாகச் செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

139—

குளிர்பதனக் கிடங்கு

***20508—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டையில் தக்காளிக்கென் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டையில் தக்காளி குளிர்பதனக் கிடங்கு அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை பகுதியிலுள்ள மண்ணின் தன்மை, தட்பவெப்ப நிலை ஆகியவற்றின் காரணமாக மிகத் தரமான தக்காளிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்தப் பகுதியில் தக்காளி ஏராளமாக விளைகிற அதே வேளையில், உரிய மார்க்கெட் இல்லாத காரணத்தால், அந்த விவசாயிகள் தக்காளியை சாலையில் கொட்டுகின்ற அவல நிலை நீடிக்கிறது. எனவே, வெளி மாநிலங்களுக்குக்கூட ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் அந்தப்*

[2013 ஏப்ரல் 4

பகுதியில் தக்காளிக்கென ஒரு குளிர்ப்பதனக் கிடங்கு அமைத்தால், நிச்சயமாக அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அது ஒரு மிகப்பெரிய வாய்ப்பாக அமையும். ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து, இராயக்கோட்டையில் தக்காளிக்கென குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, 3,193 ஹெக்டேர் பரப்பளவிலே தக்காளி பயிரிடப்பட்டு வருகிறது. 51 ஆயிரத்து 88 மெட்ரிக் டன் தக்காளி மகசூல் செய்யப்பட்டு வருகிறது. இதிலே 50,403 மெட்ரிக் டன் தக்காளி விற்பனை செய்யப்படுகிறது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையினால், கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மாம்பழத்திற்கென 50 மெட்ரிக் டன் குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலே 17,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4 குளிர்பதனக் கிடங்குகள் தனியார்மூலம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (R.I.D.F.) திட்டத்தின்கீழ் அமைக்கப்பட உள்ளது. மாம்பழங்கள் குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே விளையும் என்பதால், மாம்பழம் விளையும் காலம் தவிர்த்து மற்ற காலங்களில், இந்தக் குளிர்பதனக் கிடங்குகளை தக்காளி விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 4]

149—

மேம்பாலம்

***4729—திரு. கே. குப்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியில் மாட்டுமந்தை முதல் மணலி வரை மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதியில் மாட்டு மந்தை முதல் மணலி வரை மேம்பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*

திரு. கே. குப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களின் நலன் கருதி, கடந்த கால தி.மு.க. முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள் கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். . .(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை. கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக்கூடாது என்று சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) உறுப்பினரிடம் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினரிடம்*

[2013 ஏப்ரல் 4

குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியைக் கேட்கச் சொல்லிவிட்டேன். தி.மு.க. உறுப்பினர்கள் உட்காருங்கள், (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, (குறுக்கீடு) நான்தான் குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியைக் கேட்கச் சொல்லிவிட்டேனே! உட்காருங்கள், (குறுக்கீடு) குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியைக் கேட்கச் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை குற்றச்சாட்டு இல்லாமல் பேசச் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அது ஒன்றும் குற்றச்சாட்டு இல்லை. உறுப்பினர் இப்போதுதான் கேள்வி கேட்க ஆரம்பித்திருக்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) குற்றச்சாட்டு இல்லாமல் உறுப்பினரைப் பேசச் சொல்லியிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியைக் கேட்கச் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இல்லாமல், முறையாக கேள்வியைக் கேட்பது என்பது மரபு. அது எல்லோருக்கும் ஆரோக்கியமாக இருக்கும். தயவுசெய்து அவையைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏதுவாக, எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று, உறுப்பினர் அவர்கள் கருத்துக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள். கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு)

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குற்றச்சாட்டு அல்ல. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், நீங்கள் இதையெல்லாம் சொல்ல வேண்டாம். குற்றச்சாட்டு இல்லாமல் கேளுங்கள்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா

2013 ஏப்ரல் 4]

அவர்கள் ஏழையெளிய மீனவர்கள் பல பேர் உயிர் இழந்திருக்கக்கூடியதை கருத்திலேகொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுத்து, இந்தக் கச்சத் தீவை மீட்க சட்டப் போராட்டம் நடத்தினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதங்களில் தமிழக மீனவர்களின் சார்பிலே என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் மாட்டு மந்தை பகுதியில் இரயில்வே மேம்பாலம் என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். மாட்டு மந்தை முதல் மணலி வரை மேம்பாலம் இல்லாததால் மணலி, சின்னசேக்காடு, மணலி எம்.எம்.டி.ஏ., மாத்தூர், மஞ்சம்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டால், அதாவது நெஞ்சுவலி நோயாளிகளை, அந்தப் பகுதியில் கொண்டு வரும்போது, சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இரயில்வே கேட் மூடப்பட்டு விடுவதால், Heart Attack வந்து உயிர் இழக்க நேரிடுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு வருகின்ற வழியிலேயே பிரசவம் ஏற்படும் நிலையும் இருக்கிறது. மாட்டு மந்தை—மணலி இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தருவது என்பது மிக அவசியமான ஒன்றாகும். இதனைக் கருத்தில்கெண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த மாட்டு மந்தை முதல் மணலி வரை இரயில்வே மேம்பாலத்தை அமைத்துத்தர ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில், மாட்டு மந்தைப் பகுதியில் அமைந்துள்ள தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் இரயில் நிலையங்களுக்கு இடையில், திருவொற்றியூர் மாட்டு மந்தை அருகில் இரயில்வே கடவு எண் 3–க்கு மாறாக சாலை மேம்பாலம் ரூ.47 கோடி செலவில் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்படும் பணிகள் முடியும்

[2013 ஏப்ரல் 4

தருவாயில் உள்ளது. தற்போது சாலை மேம்பாலம் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி எட்டாவது முறையாக 5–4–2013 அன்று கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி முடிவடைந்தவுடன், பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாட்டு மந்தை மணலி இரயில்வே மேம்பாலத்தை 47 கோடி ரூபாய் செலவில் அமைத்துத் தர உத்தரவிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றிகளை திருவொற்றியூர் மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொண்டு, அதேநேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மேம்பாலப் பணியை விரைந்து முடித்துத் தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 5–4–2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தப்புள்ளி முடிந்தவுடன் பணிகளை விரைவில் துவங்கிட நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் இரயில் நிலையம் உள்ள அரகண்டநல்லூர் பகுதியிலே மிகப் பெரிய அளவிலே அந்த இரயில் பாதையின் குறுக்கே போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, அந்தப் போக்குவரத்து நெரிசல் பல ஆண்டு காலமாக இருக்கிறது. அந்தப் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த அரகண்டநல்லூர் பகுதியிலே இரயில்வே மேம்பாலம்

2013 ஏப்ரல் 4]

அமைக்கப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலே இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 24 மணி நேரத்தில் இரயில்வே கடவு மூடப்படுகின்ற நேரத்தில் எல்லாம் இரயில்வே கடவுகளை கடப்பதற்கு காத்திருக்கும் வாகனங்களுடைய எண்ணிக்கையைக் கணக்கிட வேண்டும் அதனை சராசரி செய்து, ஒவ்வொரு வாகனத்திற்கும் அதற்கான புள்ளிகளை அளித்து, அதன்படி நாளொன்றுக்கு ஒரு இலட்சம் இரயில்வே வாகன அலகுகளுக்கு மேல் இருக்கும் இரயில்வே கடவுகளில் இரயில்வே மேம்பாலம், கீழ்ப்பாலம் கட்டுவதற்கு இரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்த பிறகுதான் அங்கே மேம்பாலம் கட்ட முடியும். இந்தக் கணக்கீட்டை இரயில்வே துறை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து அங்கே ஒரு இலட்சம் வாகனங்களுக்கு மேல் இருக்குமானால், அந்தப் பகுதியில் மேம்பாலம் கட்டுவதற்கு அரசின் நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட போரூர் மேம்பாலப் பணிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார். அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற நேரத்தில் கடந்த 14 ஆம் தேதி டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் எப்போது துவங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போரூர் மேம்பாலம் அமைக்கும் பணி எப்போது துவங்கும் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, நானும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், சென்னை மேயர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியைப் பார்வையிட்டிருக்கிறோம் அந்தப் பகுதியிலே இப்பணிக்காக ஏற்கெனவே, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே ஒப்பந்தம் விடப்பட்டது அப்போது அங்கேயிருக்கின்ற கடை வணிகர்கள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடர்ந்த காரணத்தினாலேயே பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி வந்தபிறகு, விரைந்து வழக்குகள் முடிவுற்று, இப்போது அங்கு பாலப் பணிகள் நடைபெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அங்கே பாலம் அமைக்கக்கூடிய பகுதிக்குக்கீழே குடிதண்ணீர் செல்கின்ற குழாய் இருக்கின்ற காரணத்தாலே, அதை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. அது டெண்டர் கமிட்டிக்குச் சென்று, அதற்குப் பிறகுதான் பாலப் பணிகள் மேற்கொள்ளப்படும். டெண்டர் போட்டவர்கள் எவ்வளவு above போட்டு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதையெல்லாம் பரிசீலனை செய்த பிறகு டெண்டர் முடிக்கப்பட்டு, விரைவில் பணிகள் மேற்கொள்ள, அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *141*, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

141—

தடுப்பணை

***6127—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 ஏப்ரல் 4]

(அ) சிதம்பரம் தொகுதி, பிச்சாவரத்துக்கு அருகில் உப்பனாற்றில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, பிச்சாவரம் அருகில் உப்பனாற்றில் தடுப்பணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார். அந்தப் பகுதியிலே ஏற்கெனவே ஒரு ரெகுலேட்டர் அமைத்து தண்ணீர் தேக்கப்பட்டு, உப்புநீர் உட்புகுவது தடுக்கப்பட்டு, விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, பிச்சாவரம் அருகிலே உப்பனாற்றிலே மேலும் ஒரு தடுப்பணை கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றுவதால், அங்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிச்சாவரத்திலே ஏற்கெனவே ஒரு ரெகுலேட்டர் இருக்கிற காரணத்தினால், அதற்குக் கீழே தடுப்பணை கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். அந்த ரெகுலேட்டருக்கும் கடற்கரைக்கும் சற்றேறக்குறைய மூன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. இந்த மூன்றரை கிலோ மீட்டருக்கு இடைப்பட்ட தூரத்தில் உள்ள 10–க்கும் மேற்பட்ட கிராமங்களிலே இருக்கின்ற நஞ்சை வயல்கள் கடல்நீர் உட்புகுந்து நாசமாகி விடுகிறது. கிள்ளை பேரூராட்சி உட்பட, பல பேரூராட்சிகள் கடற்கரைக்குப் பக்கத்திலே இருக்கின்ற காரணத்தினால் நிலத்தடி நீர் உட்பட உப்பு நீராக மாறி அங்கே குடிநீருக்குப் பெரும் பஞ்சம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த ரெகுலேட்டருக்கும், கடற்கரைக்கும் இடையிலே இருக்கக்கூடிய ஒரு இடத்தில் அந்த உப்பு நீர் உள்ளே வராமல் தடுத்தால் நிலத்தடி நீரைப் பாதுகாத்து கிள்ளை பேரூராட்சியில் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க முடியும். ஏறக்குறைய 10 கிராமங்களிலே, 3,000–க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் உப்பு நீர் புகுந்து*

[2013 ஏப்ரல் 4

பாழ்படாமல் பாதுகாக்க முடியும். எனவே, அந்த ரெகுலேட்டருக்குக்கீழே, கடலுக்குப் பக்கத்திலே உப்பு நீர் புகாமல் இருக்க தடுப்பணை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

142—

கால்நடை மருந்தகம்

***5327—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பெருந்தொழுவு ஊராட்சி, கவுண்டம்பாளையத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்லடம் தொகுதி, பெருந்தொழுவு ஊராட்சிக்குட்பட்ட கவுண்டம்பாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த வினா இங்கு இடம்

2013 ஏப்ரல் 4]

பெறுவதற்கு முன்பாகவே அந்த பெருந்தொழுவு என்ற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியாகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நித்தம் நித்தம் வணங்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். பல்லடம் தொகுதி, பொங்களூர் ஒன்றியம், பெருந்தொழுவு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க ஆணையிட்டு சிறப்பித்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், பல்லடம் தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றியை உரித்தாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2008 ஆம் ஆண்டு எனது அரூர் தொகுதி, நரிப்பள்ளியில் கால்நடை கிளை மருந்தகத்தைத் திறப்பதற்காக அரசாணை வெளியிடப்பட்டு, இதுநாள் வரை திறக்கப்படவில்லை. அரசாணை நிலுவையில் உள்ளது. நரிப்பள்ளியிலிருந்து பெரியப்பட்டி, சிக்கலூர் என 10 கி.மீ. தூரத்தில் வாழக்கூடிய அந்த கிராம மக்களுக்கு தீர்த்தமலை வந்தால் மட்டும்தான், அவர்கள் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி செய்துகொள்ள முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட நரிப்பள்ளியில் அந்தக் கால்நடை மருந்தகத்தை இந்த ஆண்டாவது திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கிராமத்திற்கு 2008 ஆம் ஆண்டு கடந்த ஆட்சியில் ஆணை வழங்கப்பட்டு இதுவரை திறக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்தத் துறை ஆய்வு செய்து நிச்சயமாக அதைத் திறப்பதற்கு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சியில் இருக்கக்கூடிய கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னால், 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும் என்ற விதி இருக்கின்றது. அது 5,000–மாக உயரும்போது, அது கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அதுவே, 10,000 கால்நடைகளாக உயரும்போது, அங்கே மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். என்வே, உறுப்பினர் குறிப்பிடுகின்ற கோட்டூர் ஊராட்சியில் உள்ள அந்தக் கால்நடை மருந்தகத்தில் 10,000 கால்நடைகள் அங்கே இருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியினைப் பெற்று, அது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 4]

143—

தொழிற்பேட்டை

***6568—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு ஒன்றியங்களில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்கெனவே கும்மிடிப்பூண்டி, தேர்வாய்கண்டிகை மற்றும் மப்பேடு ஆகிய இடங்களில் மொத்தமாக 2,728 ஏக்கரில் சிப்காட் வளாகம் அமைக்கப்பட்டு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டை ஒன்றியம் அல்லது பள்ளிப்பட்டு தொகுதியில் போதிய நிலம் கிடைத்தால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிப்காட் வளாகம் அமைக்க பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. அருண் சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

144—

ஆயத்த ஆடைகள் மையம்

***20309—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 4

(அ) சேலம் கூட்டுறவு நூற்பாலை வளாகத்தில் ஆயத்த ஆடைகள் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் கூட்டுறவு நூற்பாலை வளாகத்தில் ஆயத்த ஆடைகள் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இந்தக் கேள்வி எழவில்லை.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரிலே, அம்மாப்பேட்டை காமராஜர் காலனியில், நெசவாளர்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியிலே, 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலை, கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மூடிக்கிடக்கிறது. ஏறக்குறைய 40 ஏக்கர் பரப்பளவிலே அந்த நூற்பாலை இருக்கின்றது. அதிலே கட்டடம் உள்ள பகுதி 15 ஏக்கர்தான். மீதமுள்ள பகுதியிலே ஆயத்த ஆடைகள் பூங்கா அமைத்தால், அது நெசவாளர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். சேலம் மாவட்டத்தைச் சுற்றிலும் தினமும் ஏறக்குறைய 5 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயத்த ஆடைகள், டெல்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு, சென்னை போன்ற பெருநகரங்களுக்கு குறைந்த இலாபத்திற்கு அனுப்புகின்றார்கள். அங்குள்ள பெருவியாபாரிகள் ஆயத்த ஆடைகளாக உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நிறைய இலாபம் சம்பாதிக்கிறார்கள்.

ஆகவே, நெசவாளர்கள் நலன் கருதி அந்தக் கூட்டுறவு நூற்பாலையிலே 900 தொழிலாளர்களில் ஏறக்குறைய அனைவருக்கும் வைப்பு நிதி செட்டில் செய்யப்பட்டுவிட்டது. இன்னும் 226 தொழிலாளர்களுக்கு மட்டும்தான் அந்த வைப்பு

2013 ஏப்ரல் 4]

நிதி செட்டில்மென்ட் செய்யப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து, அந்தக் கூட்டுறவு நூற்பாலை வளாகத்திலே ஆயத்த ஆடைப் பூங்கா அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமாக 31.68 ஏக்கர் நிலம் உள்ளது. இது சேலம் மாநகரின் மத்தியில் உள்ளது. இக்கூட்டுறவு ஆலை, பல ஆண்டு காலமாக மூடிக்கிடக்கின்றது. இந்த மூடப்பட்ட ஆலையினுடைய கடன்கள், Sales Tax பஞ்சு வியாபாரிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகை மற்றும் இதர வகை செலவினங்கள், குவிந்த நட்டம் 87.52 கோடி ரூபாயாக இருக்கிறது. இது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தலைமைச் செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அந்த உயர்மட்டக் குழு 31–5–2012 அன்று கூட்டப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுமட்டுமல்லாமல், துறை ரீதியாக திறனாய்வுக் கூட்டம் 12–3–2013 அன்று ஆரம்பிக்கப்பட்டு அறிக்கை கேட்டு தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அங்கே இடம் இருக்கிறதே தவிர, ஆயத்த ஆடைப் பூங்கா அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், தமிழகத்தில் ஏற்கெனவே திருப்பூர் மாவட்டத்தில் நேதாஜி ஆயத்த ஆடைப் பூங்கா 17.62 கோடி ரூபாய் அளவிலும், ஸ்ரீபெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டையில் ஆயத்த ஆடைப் பூங்கா 26.70 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலும் செயல்பட்டு வருகிறது. இப்போது இருக்கின்ற ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தில் திருப்பூர் மாவட்டம்–பல்லடம், நாமக்கல் மாவட்டம்–குமாரபாளையம், மதுரை மாவட்டம்–வாடிப்பட்டி ஆகிய இடங்களில் ஆயத்த ஆடைப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு பலருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இங்கே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொள்கை அடிப்படையில்

[2013 ஏப்ரல் 4

ஆராய்ந்து முடிவெடுக்கவிருக்கிறார்கள் எவ்வாறு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன; இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் எதிர்காலத்தில் எவ்வாறு செயல்பட இருக்கின்றன என்பது குறித்து அந்த கொள்கை முடிவு இருக்கும்.

ஆகவே, அந்த இடத்தில் அந்த குவிந்த நட்டத்தை ஈடு செய்கின்ற வகையில், திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்த குவிந்த நட்டத்தைக் கட்டிவிட்டு, இதுபோன்ற இடங்களில் என்னென்ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் ஆராய்ந்து, எதிர்காலத்தில் தமிழகத்தில் நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காக திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரில் மட்டுமல்ல; சேலம் மாநகரைச் சுற்றியுள்ள சேலம் மாவட்டத்தில் நெசவாளர்கள் பெருமளவில் வசிக்கின்றார்கள். ஆகவே, இந்தக் கோரிக்கையை பரிசீலித்து, ஆயத்த ஆடைப் பூங்கா அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பூங்கா திட்டமும், உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமும் சேர்ந்து இன்றையதினம் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம் என்று ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் இருக்கின்ற 40 ஜவுளிப் பூங்காக்களில் 10 ஜவுளிப் பூங்காக்கள் நம்முடைய தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கேயுள்ள தொழில் முனைவோர்களின் உதவியோடு இதுபோன்ற ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்பினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலித்து, அந்தப் பகுதியில் உள்ள

2013 ஏப்ரல் 4]

நெசவாளர்களுக்கு, வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்வரும் என்பதை இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

பேருந்து வசதி

***17316—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செட்டிபாளையம், வடசித்தூர், செஞ்சேரிமலை வழியாக கோயம்புத்தூரிலிருந்து உடுமலைப்பேட்டை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்னும் இலட்சிய நோக்கத்தோடு மக்கள் ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, கோயம்புத்தூரிலிருந்து செட்டிபாளையம், வடசித்தூர், செஞ்சேரிமலை வழியாக உடுமலைப்பேட்டை வரை பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

[2013 ஏப்ரல் 4

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் ஆட்சித் தத்துவத்தின் மாண்பினை உயர்த்தி, இவ்வுலகிற்கு வழிகாட்டி மட்டில்லா திட்டங்கள்மூலம் ஏழை எளியோர்களின் இதயக் கமலங்களில் நீங்காத இடம் பெற்றுள்ள நாளைய இந்தியாவின் இதயத் துடிப்பாக இருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். ஆட்சிப் பொறுப்பேற்ற குறுகிய காலத்தில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல புதிய பேருந்துகளையும், வழித் தடங்களையும் கொடுத்து, மக்கள் ஏக்கம் போக்கியும், இப்போது மக்களின் நீண்டநாள் கோரிக்கையை கேட்ட உடனேயே, நிறைவேற்றி கொடுத்து வாழும் வள்ளலாய், மக்கள் போற்றும் மாதரசியாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அப்பகுதி மக்களின் சார்பாகவும் மற்றும் எனது சார்பாகவும் கோடானுகோடி நன்றியினைக் காணிக்கையாக்கி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

146—

நினைவு இல்லம்

***4998—திரு. பழ. கருப்பையா:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறைமுகம் தொகுதியிலுள்ள இராமலிங்க அடிகளாரின் வீட்டை நினைவில்லமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2013 ஏப்ரல் 4]

(அ) மற்றும் (ஆ) அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளார் அவர்களுடைய புகழ் விளங்கும் வகையில் சென்னையில் அவர் வாழ்ந்து வந்த ஏழுகிணறு தங்கசாலைப் பகுதி அவருடைய பெயரில் "வள்ளலார் நகர்" என வழங்கி வருகிறது. வள்ளலார் பிறந்த இடமான சிதம்பரம் மாவட்டத்தில் அமைந்துள்ள மருதூர் இல்லம், அவர் வாழ்ந்த இடமான நெய்வேலி அருகே உள்ள கருங்குழி கிராம இல்லம், வள்ளலாரால் அமைக்கப்பட்டதும், அருட்பெரும் ஜோதியாய் அவர் முக்தி பெற்ற இடமுமான சிதம்பரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வடலூரின் சுத்த சன்மார்க்க சபை மற்றும் மேட்டுக்குப்பம் கிராமத்தில் அமைக்கப்பட்ட சித்தி வளாகம் ஆகியன தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், சென்னை ஏழுகிணறுப் பகுதியில் உள்ள அருட்பிரகாச வள்ளலார் வாழ்ந்த வீட்டினை நினைவுச் சின்னமாக்குவது குறித்த கருத்துரு தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

147—

மாணவர் விடுதி

***21066—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, இலால்பேட்டை பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவில் தொகுதி, இலால்பேட்டை பேரூராட்சியில் இருந்து 10 கி.மீ. தொலைவில் குமாரட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதியும், 6 கி.மீ. தொலைவில் காட்டுமன்னார்கோவிலில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதியும் இயங்கி வருகின்றன. எனவே, இலால்பேட்டையில் பிற்படுத்தப்பட்டோர் நலப்பள்ளி மாணவர் விடுதி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற வள்ளுவப் பேராசான் வாக்கிற்கு இலக்கணமாக வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையைத் தந்து, நீதிநெறி தவறாமல் மக்கள் மனம் குளிர நல்லாட்சி நடத்துகிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களின் இதயங்களில் தெய்வமாக வீற்றிருக்கின்ற, என்னை வாழ வைத்த தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமைபொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் இலால்பேட்டையில் அமைந்திருக்கின்ற அரசு மேல்நிலைப் பள்ளி பழமைவாய்ந்த பள்ளி. அந்தப் பேரூராட்சி இஸ்லாமியப் பெருமக்கள் அதிகம் வசிக்கக்கூடிய பேரூராட்சி. அந்தப் பள்ளி வளாகத்திலேயே இடம் இருக்கிறது. அப்பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

2013 ஏப்ரல் 4]

சிறுபான்மையினர் மக்களின் நலன் கருதி, அங்கே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் விடுதியினை கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்கவேண்டும், தமிழர்களின் வாழ்வாதாரம் முன்னேறவேண்டும், குழந்தைகளின் கல்வி கற்றலுக்கு தடை ஏதும் இருக்கக்கூடாது என கல்வி கற்கும் மாணவ மாணவியர்களுக்கு அனைத்து வசதிகளையும், அற்புதமான திட்டங்களை இந்தியாவிலேயே முதன்முதலாக, தமிழ்நாட்டிலேயே அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்தவரும் எங்கள் சாதனைத் தலைவி தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று ஒரு சில மாதங்களிலேயே 56 விடுதிகளை இந்தத் துறைக்கு வழங்கி சாதனை படைத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு’

என்ற வள்ளுவப் பேராசானின் வாக்கிற்கு இலக்கணமாக, பரிசீலனை செய்யப்படும் என்று சொன்ன மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு

[2013 ஏப்ரல் 4

அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில், கீரப்பாளையம் மற்றும் கம்மாபுரம் ஒன்றியங்களைப் பிரித்து, திருமுட்டம் என்கின்ற புதிய ஒன்றியத்தை உருவாக்கித் தந்த, காவேரியை மீட்டுத்தந்த காவியத் தாய், பொன்னியின் செல்வி, (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியை அவருடைய மலர்ப் பாதங்களில் தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

148—

குடமுழுக்கு

***25692—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கீழப்பழையார் ஊராட்சி, அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கீழப்பழையார் அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயில் சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலின் உப கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் துணை ஆணையர், செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இத்திருக்கோயில் புராதனமான சோழர் காலத்து கலைநயம் மிக்க சிற்பங்கள் மிகுந்த திருக்கோயிலாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும், சைவம் வளர்த்த நங்கையும், மணிமுடிச் சோழனின் மகளும், கூன்பாண்டியனின் மனைவியுமான மங்கையர்கரசியார் தோன்றி வாழ்ந்த இத்தலத்தில்தான் இத்திருக்கோயிலுக்கு, இதற்கு முன்னர்

2013 ஏப்ரல் 4]

6–6–1962 இல் குடமுழுக்கு நடைபெற்றது. தற்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இத்திருக்கோயிலின் திருப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கீழப்பழையார் அருள்மிகு சோமகமலாம்பிகை உடனாய அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயில் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த தேவாரப் பாடல் இடம்பெற்றது. அங்கு பிறந்து வாழ்ந்த மணிமுடிச் சோழனின் மகள் மங்கையர்கரசி அம்மையார் பெரிதும் வழிபட்ட திருக்கோயில் என்று சொல்லப்படுகிறது. கீழ்ப்பழையாரை சோழ மன்னர்களின் தலைநகரங்களில் ஒன்றாகவும், சோழர்கள் வாழ்ந்த இடம் சோழர் மாளிகை என்ற பெயரோடு இன்றும் விளங்குகிறது. அதேபகுதியில் பம்பை படைவீடு, ஆரிய படைவீடு, முளையூர், உடையாளூர் போன்ற ஊர்கள் மன்னர் வாழ்ந்த அந்தப் பகுதிகள் இன்றும் உள்ளன. 6–6–1962 இல் திரு. உத்தண்டராயப்பிள்ளை அவர்கள் ஆணையராக இருந்த காலத்தில் குடமுழுக்கு நடைபெற்றது என்று கல்வெட்டு உள்ளது. மிகவும் பழமையான திருக்கோயிலை, பின்னர் குலோத்துங்க சோழன் காலத்தில் இராஜகோபுரம் சுமார் 40 அடி உயரத்தில் கட்டப்பட்டு பாதியிலேயே நின்றுவிட்டது என்று தெரிகிறது. தற்போது தரை தளமும், நடு கோபுரமும், மேற்கு மதிற் சுவரும் கட்டப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகப் பழமையான திருக்கோயிலுக்கு சற்று கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து, அப்பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி, மீதிப் பணியையும் விரைவுபடுத்தி, குடமுழுக்கு செய்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டையும், நாட்டு மக்களையும் காக்கின்ற*

[2013 ஏப்ரல் 4

ஆலயங்களுக்கு கருணை உள்ளத்தோடு வாரி வழங்கும் வள்ளல் (மேசையைத் தட்டும் ஒலி) பூலோக வைகுந்தம் தந்திட்ட புத்துலகு சிற்பி, மங்காப் புகழ் கொண்ட மனிதம் போற்றும் புனிதம், காவேரியை மீட்டெடுத்து, தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டிய சாதனைச் சரித்திரம். (மேசையைத் தட்டும் ஒலி) பரந்து, விரிந்த பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த அன்னை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றவுடன், வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மை வாய்ந்த புராதன ஆலயங்களை அதன் தொன்மையும் மாறாமல் புனரமைப்பதற்காக, 12–வது நிதி ஆணையத்திற்கு ரூ.22.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி இத்திருக்கோயில், அம்மன் சன்னதியும், மேல் தளம் பழுதுபார்த்து புதுப்பித்தல், தென்கிழக்கில் புதிதாக மதில்சுவர் கட்டுதல், உட்பிரகாரம், பேவர் பிளாக் தரைதளம் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு 12–வது நிதி ஆணையத்தின் மூலமாக ரூ.15 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மேலும் மதில் சுவர், நவக்கிரகங்களின் சன்னதி, அம்மன் சன்னதி, பின்புறம் கருங்கல் பிரித்து மீண்டும் பொருத்துதல், 2 ஆம் நிலை, 3 ஆம் நிலை கோபுரங்கள் பழுதுபார்த்துப் புதுப்பித்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர, மூலவர் சன்னதி பழுதுபார்த்தல், சுப்பிரமணியர் சன்னதி புதியதாகக் கட்டுதல், வினாயகர் சன்னதி புதியதாகக் கட்டுதல், சோமகமலாம்பிகை சன்னதி பழுதுபார்த்தல், சண்டிகேஸ்வரர் சன்னதி கட்டுதல், நவக்கிரக மணடபம் கட்டுதல், மடப்பள்ளி மற்றும் store room கட்டுதல். இரண்டாம் பிரகாரம் கருங்கல் தளவரிசை மற்றும் நந்தவனம் அமைத்தல். முதல் பிரகாரம் வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு கருங்கல் மதில் சுவர் பிரித்துக் கட்டும் பணிகள் உள்ளிட்ட பணிகளுக்கு அரசு மானியமாக ரூ.8.25 இலட்சமும், ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூபாய் 30.45 இலட்சமும், திருக்கோயில் நிதியிலிருந்து ரூபாய் 85.85 இலட்சமும் ஆகமொத்தம் ரூபாய்

2013 ஏப்ரல் 4]

124.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிருவாக அனுமதி அளிக்கப்பட்டு, விரைவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான அனுமதியுடன் பணிகள் துவங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக அந்தக் கோயிலில் குடமுழுக்கு செய்து முடித்து, அங்குள்ள பக்தர்கள் மனம் குளிர உதவினால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு குடந்தை மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிவேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

தரம் உயர்த்துதல்

***2048—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மங்களாம்பட்டி, பள்ளப்பட்டி, தெற்குத் தெரு, தும்பைப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

முதல் கேள்விக்குப் பதிலளிக்கக்கூடிய வாய்ப்பை இந்த எளியவன் பெற்றிருக்கிறேன். இந்த வாய்ப்பு, அரிய சந்தர்ப்பம்,

[2013 ஏப்ரல் 4

இந்தச் சூழல், இந்த இருக்கை எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டது. எத்தனையோ என்னைச் சுற்றி மாற்றங்கள். சுமந்து செல்லும் வாகனம், அதில் மேல் சுழலும் சிவப்பு விளக்கு, பட்டொளி வீசிப் பறக்கும் தேசியக் கொடி, பணிகளைச் செய்யக் காத்திருக்கும் உதவியாளர்கள், கடமையைச் செய்யக் காத்திருக்கும் கடைநிலை ஊழியர்கள், பாதுகாக்க மெய்க்காப்பாளர்கள் என என்னைச் சுற்றி எத்தனையோ மாற்றங்கள். இவைகளெல்லாம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களால் வாய்க்கப் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

முகம் இருந்தும் முகவரி இல்லாத எனக்கு முகவரி தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். விறகாய் இருந்த என்னை வீணையாக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். சரிந்து விழுந்து, சருகாய் விழுந்த மூங்கிலைப் புல்லாங்குழலாக மாற்றியவர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். இவை எல்லாம் எப்படி வாய்த்தன? இவைகள் எல்லாம் எப்படி வழங்கப்பட்டன என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் தியாகத்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் விடா முயற்சியால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அர்ப்பணிப்பால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய போர்க்குணத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அஞ்சாமைத் திறனால், உழைப்பால், நேர்மைத் திறத்தால் வாய்க்கப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

நள்ளிரவு கடந்தும் உழைக்கின்ற உன்னதமாய்த் திகழ்கிறவர் மாண்புமிகு அம்மா அவர்கள். நள்ளிரவு கடந்த நிலையில் உடல் சோர்வின் காரணமாக ஓய்வுக்கு அழைக்க, உள்ளமோ இன்னும் உழைக்க வேண்டும், ஏழையெளியவர்களை உயர்த்த வேண்டும் என்று உழைப்புக்கு அழைக்க (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வுக் கதவு மூடப்பட்டு, உழைப்புக் கதவு திறக்கப்பட்டு, உழைக்கிற உன்னதத்தின் மாண்பை இதய தெய்வம் அம்மா அவர்களுடைய தியாகத்தின் சாட்சியாகத் திகழும் அவர்களுடைய இமைகளுக்குக் கீழே சுவடுகளைப் பார்க்கலாம். அந்தச் சுவடுகளால்தான், அந்தத் தியாகத்தால்தான், இந்த வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய தியாகத்தைக் கண்டு கண்களில் இருந்து கண்ணீர் குற்றாலத்தில் இருந்து வெளிவரும் தண்ணீரைப் போலப் பெருக்கெடுக்கிறது. பிறருக்காக விடும் கண்ணீர்தான் உலகத்தில் விலை மதிக்க முடியாத பரிசு என்பார்கள். தாய்ப் பாலும்,

2013 ஏப்ரல் 4]

கண்ணீரும் கடையில் கிடைக்காது. கண்ணீரால் தங்கள் பாதங்களை நன்றியோடு நனைக்கின்றேன் தாயே!

இராம காதையில் கம்பன் மிக அழகாக ஒற்றை வார்த்தையில் உலகத்தை அளந்து சொல்லுவான். அந்த ஒற்றை வார்த்தை என்னவென்று கேட்டால், இராமன் சோகத்தில், வாயுப் புத்திரன் அனுமன் வேகத்தில், இலக்குவனன் துயரத்தில், சீதையோ கண்ணீரில் இருந்தபொழுது இராமபிரானை நோக்கி வாயுப் புத்திரன் அனுமன் ஓடோடி வந்து சொன்னான். கண்டேன் சீதையை என்றுரைப்பான். அதைப்போல இன்று தமிழர்களுக்கு விடியலாகவும், ஈழத் தமிழர்களினுடைய விடுதலைக்காகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்த்து (மேசையைத் தட்டும் ஒலி) கம்பன் இருந்திருந்தால் ஒற்றை வரியில் உலகத்திற்குப் பறைசாற்றியிருப்பான்; கண்டேன் தமிழ்த் தாயை என்று சொல்லியிருப்பான். (மேசையைத் தட்டும் ஒலி) பெற்றதாயினும் ஆயின செய்யும் நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன். தமிழ்த் தாயை வணங்குகிறேன். வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசிவரையும் புரட்சித் தலைவியின் பாதங்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முதல் கேள்விக்குப் பதிலைத் தொடங்குகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மேலூர் தொகுதி, மங்களாம்பட்டி, பள்ளப்பட்டி, தெற்குத் தெரு மற்றும் தும்பைப்பட்டி ஆகிய நான்கு கிராமங்களிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்த கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார்கள். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிப்பார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ ஒரே கல்லில் நான்கு மாங்காய்களை வீழ்த்திவிட வேண்டுமென்று ஆசைப்பட்டிருக்கிறார். அவருடைய ஆசையில் ஒன்றும் தவறில்லை, ஆனால், குறி தவறி இரண்டு மாங்காய்கள்தான் விழுந்திருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தெற்குத் தெரு மற்றும் தும்பைப்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களில் உள்ள அரசு உயர் நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்திலே பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 ஏப்ரல் 4

மங்களாம்பட்டி மற்றும் பள்ளப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப் பொதுமக்களின் பங்குத் தொகை செலுத்தப்படவில்லை. அத்தொகை செலுத்தப்பட்டு, கருத்துரு அனுப்பினால், 2013–2014 ஆம் கல்வியாண்டில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியிலுள்ள மங்களாம்பட்டி, பள்ளப்பட்டி, தெற்குத் தெரு மற்றும் தும்பைப்பட்டியிலுள்ள அரசு உயர் நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொல்லி கேள்வி கேட்டு, அந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் அவையில் பதில் சொல்வதற்கு முன்பாகவே, தெற்குத் தெரு, தும்பைப்பட்டி ஆகிய இரண்டு பள்ளிகளையும் தரம் உயர்த்த ஆணையிட்ட, இந்திய நாட்டிற்கே ஒரு எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டிலே கல்விப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருந்த மேலூர் தொகுதியில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலங்களிலே அம்மா அவர்களுடைய கருணைப் பார்வையால் 100 சதவிகிதம் மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இன்றைக்கு, மேல்நிலைப் பள்ளிகளை தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்ட அனைத்து ஊர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது மேலூர் தொகுதியில் மூன்று பள்ளிகள்தான் தரம் உயர்த்தப்பட வேண்டியிருக்கிறது. அதாவது, பொட்டப்பட்டி, பள்ளப்பட்டி

2013 ஏப்ரல் 4]

மற்றும் மங்களாம்பட்டி ஆகிய மூன்று ஊர்களிலும் உள்ள பள்ளிகளைத் தரம் உயர்த்திக் கொடுத்தால், என்னுடைய மேலூர் தொகுதிக்கு இனிமேல் 100 ஆண்டுக் காலத்திற்கு தரம் உயர்த்த வேண்டிய அவசியமே இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொட்டப்பட்டி என்கிற கிராமம் திருச்சி மாவட்டத்தை ஒட்டியுள்ள கடைசிப் பகுதியாக இருக்கிறது. அந்த ஊர் பொதுமக்கள் பள்ளி தரமுயர்த்தப்படுவதற்குத் தேவையான பங்களிப்புப் பணத்தை அரசிற்கு செலுத்தியுள்ளார்கள், அதேபோல் மங்களாம்பட்டி மக்களும் அரசிற்குப் பணம் செலுத்தி அனுப்பியுள்ளார்கள். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பொட்டப்பட்டி, பள்ளப்பட்டி மற்றும் மங்களாம்பட்டி ஆகிய மூன்று உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் எதிர்காலம் வகுப்பறையில் உருவாக்கப்படுகிறது என்பதை அறிந்து மிகத் தீர்க்கமாகவும், தொலைநோக்குச் சிந்தனையோடும் சிந்திக்கின்றவர் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதனடிப்படையில்தான் 16 ஆயிரத்து 965.30 கோடி ரூபாயை மிக உயர்ந்த ஒதுக்கீடாக நம்முடைய பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள்.

தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற இந்தக் கோரிக்கை பொட்டப்பட்டி, பள்ளப்பட்டி மற்றும் மங்களாம்பட்டி ஆகிய ஊர்களிலுள்ள அரசு உயர் நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவது சம்பந்தமாக மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய முறையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத்

[2013 ஏப்ரல் 4

தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது, பார்க்கலாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு வரும்போது, ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், என்ன? சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்கிற அடிப்படையிலேதான் கூட்டுறவுத் தேர்தல் சம்பந்தமாகவும், வினாத்தாள் காணாமல் போனது சம்பந்தமாகவும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி விளக்கமாகப் பேச வேண்டாம், நான் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். அரசிடமிருந்து பதில் வர, வர எடுத்துக்கொள்வோம், உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன? டாக்டர் க. கிருஷ்ணசாமி, சொல்லுங்கள்.

முற்பகல் 11–10

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் நிலத்தடி நீர் எடுப்பது சம்பந்தமாக அரசு ஏற்கெனவே தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கமாக எதுவும் பேசாதீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது, பிறகு பேசலாம்.

2013 ஏப்ரல் 4]

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) மதுரையில், துணைக் கோள் நகரம் அமைத்தல், வீட்டுவசதி வாரியம், குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டும் மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமானதாக விளங்கும் உறைவிடத் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், குறிப்பாக ஏழை எளிய மக்கள் எண்ணற்ற பயன்களைப் பெறும் வகையிலும், தேவையான அனைத்துத் திட்டங்களையும் வடிவமைத்து, ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வீட்டு வசதி வளர்ச்சியினை எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தி வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

மதுரை மாவட்டத்தில், தற்போது பெருகிவரும் வீட்டு வசதித் தேவையைக் கருத்தில்கொண்டு மதுரையிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் விமான நிலையத்திற்கு அருகில் மதுரை–திருநெல்வேலி நான்கு வழிப் பாதையில் தோப்பூர் மற்றும் உச்சப்பட்டி கிராமங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 586.86 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரம் ஒன்று உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துணைக்கோள் நகரத்தில் 19,500 மனைகள் உருவாக்கப்படும். இதில், 14,300 மனைகள் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கும், 2,500 மனைகள் மத்திய வருவாய்ப் பிரிவினருக்கும், 750 மனைகள் உயர் வருவாய் பிரிவினருக்கும் 1,950 மனைகள் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த புதிய துணைக்கோள் நகரத்தில் அடிப்படை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 ஏப்ரல் 4

வசதிகளான, சாலைகள், குடிநீர் வசதி, கழிவுநீர் வடிகால் வசதி, தெரு விளக்குகள், மழைநீர் சேகரிப்புத் திட்டம் மற்றும் பூங்காக்கள் ஆகியவைகள் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இங்கு குடியேறும் மக்களின் நலனுக்காக பள்ளி வளாகம், வணிக மனைகள், காவல் நிலையம், அஞ்சலகம், ஆரம்ப சுகாதார வசதி, தீயணைப்பு நிலையம் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் என சமுதாயத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளும் இங்கே உருவாக்கப்படும். இந்தத் துணைக்கோள் நகரம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

இதேபோன்று, சென்னைக்கு அருகிலுள்ள சோழிங்கநல்லூர் பகுதியில் தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கைவசம் உள்ள நிலத்தில் முன்கட்டுமானத் தொழில்நுட்பம், அதாவது, pre-fab technology என்ற நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுமார் 612 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,500 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள் (மேசையைத் தட்டும் ஒலி) சுயநிதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குடியிருப்புகள் 10 மாடிகளைக் கொண்டதாக இருக்கும். இந்தத் திட்டத்தின்கீழ், குறைந்த வருவாய்ப் பிரிவு, மத்திய தர வருவாய்ப் பிரிவு, உயர் தர வருவாய்ப் பிரிவினர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படும்.

டெல்லி, மும்பை, பெங்களூரு மற்றும் ஐதராபாத் போன்ற நகரங்களில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள இந்த முன்கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன்மூலம் கட்டுமானத்தின் காலம் 25 விழுக்காடு குறைவதோடு, கட்டுமானச் செலவும் 10 முதல் 15 விழுக்காடு வரை குறையும். கட்டட பாகங்களான, தூண், உத்திரம், மாடிப்படி, கூரை ஆகியவைகள், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டு உபயோகத்திற்குக் கொண்டு செல்வதற்கு முன் தண்ணீர்மூலம் curing செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்படும். கட்டுமானப் பாகங்கள் தயாரிக்கப்பட்டபின் அவைகள் கட்டுமான இடத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அதற்குரிய இடங்களில் இயந்திரங்கள்மூலம் நிலை நிறுத்தப்பட்டு, கலக்கப்பட்ட திண்காரை கலவைமூலம் இணைக்கப்படும். 24 மாடிகள் கொண்ட உயர் அடுக்குமாடிக் கட்டடங்களை இத்தொழில்நுட்பத்தின்மூலம் 24 மாதங்களில் கட்டலாம். கட்டுமானப் பாகங்கள் தொழிற்சாலையில் உற்பத்தி

2013 ஏப்ரல் 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

செய்யப்படுவதால் கட்டடம் பார்ப்பதற்கு மிக நேர்த்தியாகவும், அழகாகவும் இருக்கும்.

முற்பகல் 11–15

இவை மட்டுமல்லாமல் சென்னை, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், விருதுநகர், திண்டுக்கல் மற்றும் திருச்சி ஆகிய 9 மாவட்டங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தில் 1,630 தனி வீடுகள் மற்றும் 2,792 அடுக்குமாடிக் குடியிருப்புகள் சுமார் 918 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) சுயநிதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் என்பதையும், மேலும் 32 மனைகள் மேம்படுத்தப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள 7 இடங்களில் 13.80 ஏக்கர் நிலத்தில் 844 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 371 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரத்தில் இரண்டு இடங்களில் 22.70 ஏக்கர் நிலத்தில் 1,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 32 மேம்படுத்தப்படும் மனைகள் 303 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரண்டு இடங்களில் 3.90 ஏக்கர் நிலத்தில் 344 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 50 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில் 2 இடங்களில் 12.15 ஏக்கர் நிலத்தில் 468 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 59 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டத்தில் 36.20 ஏக்கர் நிலத்தில் 120 வீடுகள் 13 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10.50 ஏக்கர் நிலத்தில் 258 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டத்தில் 3 இடங்களில் 32.50 ஏக்கர் நிலத்தில் 722 வீடுகள் 73 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் இரண்டு இடங்களில் 1.03 ஏக்கர் நிலத்தில் 35 வீடுகள் 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் திருச்சி மாவட்டத்தில் 2 இடங்களில் 3.09 ஏக்கர் நிலத்தில் 104 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 27 வீடுகள், 25 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் 4,454 அலகுகள் நடப்பு ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 24 மாதங்களில் முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 ஏப்ரல் 4

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் இதுவரை 1.29 இலட்சம் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில், சுனாமியால் பாதிக்கப்பட்ட 6,620 வீடுகள் தவிர, மீதமுள்ள அனைத்து குடியிருப்புகளும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாறுபட்ட தட்ப வெப்ப நிலை, குடியிருப்புகளை உபயோகித்தல், சுற்றுப்புற சூழல், அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடியிருப்புதாரர்களால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள், குடியிருப்புகளைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள் போன்ற காரணங்களினால் பல குடியிருப்புகளின் கட்டமைப்புகள் மிகவும் பழுதடைந்து வலு குறைந்துள்ளன. இக்குடியிருப்புகளின் கட்டமைப்பு வலுவிழந்துள்ளதுடன், தளங்களில் உள்ள கம்பிகள் காற்றிலுள்ள உப்புத் தன்மை காரணமாக துருப்பிடித்துள்ளன. இத்தகைய குடியிருப்புகளில் வாழும் ஏழை, எளிய மக்கள் மழைக் காலங்களில் தொடர்ந்து அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இக்குடியிருப்புகளுக்கான சராசரி ஆயுட்காலம் 70 ஆண்டுகள் என்றிருந்தாலும், பெரும்பாலான குடியிருப்புகள் வலு குறைந்து அவற்றின் ஆயுட்காலம் முடியும் முன்னரே தகுதியற்றவைகளாக ஆகிவிடுகின்றன. எனவே, வலுவிழந்த கட்டடங்களை இடித்துவிட்டு புது வீடுகள் கட்ட எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதன் முதற்கட்டமாக சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் மிகவும் பழுதடைந்த 3,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 2013–2014 ஆம் ஆண்டில் மீண்டும் 3,500 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் 280 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் ரங்கநாதபுரம் திட்டத்தின்கீழ் 480 குடியிருப்புகளும், பார்த்தசாரதி நகர் திட்டத்தின்கீழ் 120 குடியிருப்புகளும், பெரம்பூர் தொகுதியில், சத்தியவாணி முத்து நகர் திட்டத்தின்கீழ் 392 குடியிருப்புகளும், எழும்பூர் தொகுதியில் நேரு பார்க் திட்டத்தின்கீழ் 288 குடியிருப்புகளும், பிள்ளையார் கோயில் தெரு திட்டத்தின்கீழ் 32 குடியிருப்புகளும், சேப்பாக்கம் தொகுதியில் லாக் நகர் (நாவலர் நகர்) திட்டத்தின்கீழ் 304 குடியிருப்புகளும், அயோத்தியா குப்பம் திட்டத்தின்கீழ் 708 குடியிருப்புகளும், சைதாப்பேட்டை

2013 ஏப்ரல் 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தொகுதியில், கோட்டூர்புரம் திட்டத்தின்கீழ் 136 குடியிருப்புகளும், மயிலாப்பூர் தொகுதியில், ஆண்டிமான்ய தோட்டம் திட்டத்தின்கீழ் 42 குடியிருப்புகளும், பல்லக்குமான்யம் திட்டத்தின்கீழ் 48 குடியிருப்புகளும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆடுதொட்டி திட்டத்தின்கீழ் 246 குடியிருப்புகளும், திருச்சி மாவட்டம், திருச்சி–பீச்சான்குளம் திட்டத்தின்கீழ் 587 குடியிருப்புகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகை கூடை முடைவோர் காலனி திட்டத்தின்கீழ் 117 குடியிருப்புகளும் என ஆக மொத்தம் 3,500 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்காணும் அரசின் நடவடிக்கைகள் தமிழக மக்களின் வீட்டு வசதித் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் அணைக்கட்டுகள் மற்றும் நீர்வழங்கு ஆதாரங்களைப் புனரமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்கு உணவினைத் தந்து, நல் வளங்களைத் தந்து, வீட்டினை ஒளியுடையதாக்கி, நாட்டைக் காக்கும் நற்செயல்களைச் செய்து வரும் நீர்வள அமைப்புகளான அணைக்கட்டுகள், ஏரிகள் ஆகியவற்றைப் பராமரிப்பது மிக மிக அவசியம் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, பாசன உள்கட்டமைப்புகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தும் வகையில், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் IAMWARM, உலக வங்கி நிதியுதவியுடன் 2005 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் உப வடிநில கட்டமைப்பு, அதாவது Sub-Basin Framework முறையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின்மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவது ஆகும். இந்தத் திட்டத்திற்கான மொத்த திருத்திய மதிப்பீடு 2,816 கோடி ரூபாய் ஆகும். இந்த நிதியிலிருந்து சுமார் 6.69 இலட்சம் ஹெக்டேர் பாசன நிலங்கள்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 ஏப்ரல் 4

பயனடையும் வகையில் அணைக்கட்டுகள் முறைசார் மற்றும் முறைசாரா ஏரிகள் மற்றும் அதன் நீர்வழங்கு வாய்க்கால்களைப் புனரமைத்து நவீனப்படுத்த நீர்வள ஆதாரத் துறைக்கு 2,082 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எஞ்சிய நிதி பிற துறைகளுக்கு ஒதுக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 25 மாவட்டங்களில் 4,910 ஏரிகள், 662 அணைக்கட்டுகள் மற்றும் அதன் 8,071 கிலோ மீட்டர் நீர்வழங்கு வாய்க்கால்கள் ஆகியவற்றைப் புனரமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் பெரும்பாலான பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

இந்தத் திட்டத்தின்கீழ், மேலும் சில பாசன அமைப்புகளைப் புனரமைக்க வேண்டியிருப்பதால் தமிழக அரசின் வேண்டுகோளை அடுத்து, இந்தத் திட்டத்தின் கால அளவை 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை நீட்டித்து உலக வங்கி அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதனையடுத்து, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், இந்த ஆண்டில் 17 மாவட்டங்களில் 26 உபவடி நிலங்களில் உள்ள 310 ஏரிகள், 63 அணைக்கட்டுகள் மற்றும் அதன் நீர்வழங்கு வாய்க்கால்களைப் புனரமைத்து, நீர் வழங்கும் திறனை மேம்படுத்துதல் மற்றும் மத்திய மண்டலத் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் 258 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ், ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளையும், தற்பொழுது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ள பணிகளையும் செய்து முடிப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்ட கால அளவு 1–4–2013 முதல் 30–9–2014 வரை 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

இதுமட்டுமல்லாமல், வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின்போது மருதையாறு நதியில் மிகக் குறுகிய காலத்தில் அதிக அளவில் வரப்பெறும் நீரை உரிய முறையில் பாசனத்திற்குப்

2013 ஏப்ரல் 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பயன்படுத்தும் வகையில் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகில் மருதையாற்றின் குறுக்கே 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக மருதையாறு நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மருதையாறு நீர்த்தேக்கத் திட்டம் 211.58 மில்லியன் கன அடி நீர் கொள்ளளவு கொண்டதாக அமையும்.

இத்திட்டத்தைச் செயலாக்குவதன்மூலம் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை, ஆதனூர், கூத்தூர், புஜங்கராயநல்லூர், நொச்சிக்குளம், தொண்டப்பாடி, அழகிரிபாளையம், கூடலூர், சாத்தனூர் ஆகிய 10 கிராமங்களிலுள்ள 4,194 ஏக்கர் புன்செய் நிலங்கள் புதிதாக பாசன வசதி பெறும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள்மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்க ஏதுவாக பாசனத்திற்குத் தேவையான நீர் கிடைப்பதுடன், அப்பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டமும் உயர வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. மதுரை, துணைக்கோள் நகரம் அமைத்தல், வீட்டுவசதி வாரியம், குடிசைப் பகுதி மாற்று வாரியம்மூலம், குடியிருப்புகள் கட்டுதல், தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் அணைக்கட்டுகள் மற்றும் நீர்வழங்கு ஆதாரங்களைப் புனரமைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முத்தாய்ப்பான, நாட்டிற்கு மிகத் தேவையான அரிய திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு விதி 110–ன்கீழ் அறிக்கைகளாகத் தந்திருக்கிறார்கள். ஒரு இலையிலே விருந்தளித்தால் தயாரித்திருக்கிற பலகாரங்களுக்கு இடம் போதாது என்கிற வகையிலே இரட்டை இலையிலே விருந்தளித்து தமிழகத்திலே வெற்றிக்கொடி நாட்டி வருகிற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

விதி 110-ன்கீழ் முதலமைச்சரின்
அறிவிப்புகளுக்கு நன்றி

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 ஏப்ரல் 4

இன்றைக்கு அப்படியொரு இரட்டைச் சிறப்புமிக்க நலத் திட்டங்களை 110 விதியின்கீழே தந்திருக்கிறார்கள்.

குருவிக்குக்கூட ஒரு கூடு இருக்கிறது, ஆனால் குடியிருப்பதற்கு ஒரு வீடு கட்ட முடியாமல் தமிழகத்திலே பல இலட்சம் மக்கள் வேதனையிலே தவித்துக் கொண்டிருக்கிறார்கள். வீடு கட்டுவதை ஒரு இலட்சியமாகவே கொண்டு வாழ்கிறார்கள். வீடுபேறு கிடைக்கிறதோ இல்லையோ, வாழும் காலத்திலே குடியிருக்க ஒரு வீடு கூட இல்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கிற அந்த மக்களின் ஏக்கத்தை இன்றைக்குத் தீர்த்து வைக்கிற, நாம் கண் முன்னே காணுகிற ஒரு தெய்வமாகத் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வீடுபேறை ஏழையெளிய மக்களுக்கு, மத்தியத் தர மக்களுக்கு தருகிற வகையிலே அற்புதமான ஒரு திட்டத்தை இன்றைக்கு அவர்கள் தந்திருக்கிறார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திரைப்படத்திலே பாடினார். "ஆளுக்கொரு வீடு கட்டுவோம், அதிலே ஆயக் கலைகள் அத்தனையும் வளர்ப்போம் என்று." அப்படி ஆளுக்கொரு வீட்டை தமிழகத்திலே இருக்கிற மத்திய தர மற்றும் ஏழையெளியவர்கள் என வீடு கட்டித் தருகிற வகையிலே அனைத்து மக்களுக்கும் ஏற்கெனவே 1 கோடியே 60 இலட்சம் குடியிருப்புகள் கட்ட வழிவகுத்துத் தந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மதுரையிலே 19,500 மனைகளையும், அதையொட்டி தமிழகத்தின் சென்னை பகுதியானாலும், சென்னையை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளானாலும், அதற்கு மேலே புறநகர் மாவட்டங்களானாலும் மத்திய தர மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளையும், ஏழையெளிய மக்களுக்கு நீண்ட நாளாக பராமரிக்கப்படாமல் இருந்த குடிசை மாற்று வீடுகளை ஏறக்குறைய 3,500 குடியிருப்புகளை இன்றைக்குத் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் புனரமைக்கிற இந்தத் திட்டங்களைத் தந்திருக்கிறார்கள் என்கிறபோது, ஏழையெளிய, அடித்தட்டு மக்களின் வாழ்விலே ஒளியேற்றியதை நான் வாயார, மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, நீர் வளம், நில வளம் மேம்படுவதற்காக ஏற்கெனவே 'வான் பொய்த்தாலும் தான் பொய்யாத காவேரி' என்று கி.பி. ஐந்தாவது நூற்றாண்டிலே பட்டினப் பாலையிலே

கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடினார். ஆனால், அப்படி பொய்த்துப் போனதைக்கூட இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏறக்குறைய ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து–இன்றைக்கு 21–வது நூற்றாண்டு என்றால் 1,500 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு பொய்த்துப் போன காவேரியை மீட்டுத் தந்த பெருமை (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் பல நூறு ஆண்டுக் காலத்திற்குப் பிறகும் நிலைத்து நிற்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி)–ஐந்தாம் நூற்றாண்டிலே தான் பொய்யாத காவேரியை, பொய்த்துப் போன காவேரியை இன்றைக்கு மீண்டும் நிலைநிறுத்தியிருக்கிற தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தஞ்சை மண்டலம் மட்டுமல்லாமல், அனைத்து மாவட்ட விவசாயிகளினுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிற வகையிலே நீர் வளத்திற்காகவும், நில வளத்திற்காகவும் ரூ.250 கோடிக்கு மேல் ஒதுக்கி பெரம்பலூரிலே ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டுவதற்கு வழி வகுத்திருக்கிறார்கள். ஆக, இந்த இரண்டு நல்ல திட்டங்களை தமிழக மக்களுக்கு ஈந்து உவந்தளித்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி நன்றி கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகிற மானுட சமூகத்தினுடைய அடர்த்தியைக் கருதி மக்கள் நகரங்களை நோக்கி வருகிறார்கள்; இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் கிராமப்புறங்களிலிருந்து அதிகமான மக்கள் நகரங்களை நோக்கி குடியேறுகிறார்கள்; அதனால் நகரங்களில் நெருக்கடியும், இடவசதியும், குடியிருப்பு வசதிக்கும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து 'தொலைநோக்குத் திட்டம்–2023' கனவுத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீட்டியிருக்கிறார்கள். அவர் வைத்திருக்கிற இலக்கை நிர்ணயித்ததற்கான எடுத்துக்காட்டாய், திட்டமாய் இன்று விதி 110–ன்கீழ் உறைவிடத் தேவையைக் கருத்தில்கொண்டு, மதுரை மாநகரத்தையொட்டியிருக்கிற தோப்பூர் மற்றும் உச்சப்பட்டியிலே 500 ஏக்கருக்கும் மேற்பட்ட இடத்தில் புதிய துணைக்கோள் நகரம் அறிவிக்கப்பட்டிகிகிறது. அதாவது, இந்தியாவிலேயே அக்காலக்கட்டத்தில் புதிய நவீன வாய்ப்பு வசதிகளோடு

உருவாக்கப்பட்ட ஒரு நகரம் புதுடில்லி என்று சொல்வார்கள். அந்த வகையில் தமிழகத்திலே மதுரை நகரத்திற்கு அருகிலே ஒரு புதிய நகரத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 120 கோடி ரூபாய் மதிப்பில் பலதரப்பட்ட மக்களை ஒரே பகுதியிலே, அவர்களுக்கு எற்ற வகையிலே வகை வகையான வீடுகளைக் கட்டித் தந்திடவும், அந்த நகரத்திலே குடியேறுகிற மக்களுக்குத் தேவையான தீயணைப்பு நிலையம், காவல் நிலையம், தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் தந்திடவும், ஒரு புதிய நகரத்தை உருவாக்குவதற்கான முதல் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று அறிவித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, சோழிங்கநல்லூரிலே ரூ.612 கோடி மதிப்பில் நவீன தொழில்நுட்பத்தில் நேர்த்தியான, செம்மையான குடியிருப்புக் கட்டடங்கள்–நகரத்தைச் சுற்றியிருக்கிற மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்கு மிகப்பெரிய தொகையை இன்று விடுவித்து ஏழையெளிய, சாமானிய, வீடற்ற மக்களுக்கு வீடுகளை, உறைவிடத்தைத் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரங்களுக்கு மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற அனைத்து மாவட்டங்களில் இருக்கிற, வீடு அவசியப்படுகின்ற மக்களுக்கெல்லாம் வீடுகளைப் புதிதாகக் கட்ட ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை இன்று அள்ளித் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்–பழுதடைந்த வலுவிழந்த வீடுகளை–நம்முடைய மேம்பாட்டு நிதியிலிருந்து அல்லது பல்வேறு நிதிகளிலிருந்துகூட–70 ஆண்டுகள் என்று அத்தகைய பழுதடைந்த வீடுகளின் ஆயுட்காலத்தை நிர்ணயித்து இருந்தாலும்—அங்கு குடியிருப்பதற்குத் தகுதியான வீடுகள் இல்லையென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தபோதுகூட, அவைகளையெல்லாம் கனிவோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்று, வலுவிழந்த வீடுகளை இடித்துவிட்டு 3,500 புதிய அடுக்குமாடிக் கட்டடங்கள் ரூ.250 கோடி மதிப்பில் புதிதாக தரமான வீடுகளாகக் கட்டித் தருவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். தமிழகத்தின் அரசியல் நிர்வாக வரலாற்றில், குடியிருப்பு வீடுகளை உருவாக்குகிற வரலாற்றில் ஒரு புதிய சாதனையை, மைல்கல்லை மாண்புமிகு

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்று, நீர் வள, நில வள ஆதாரங்கள்–மக்களுடைய உணவுத் தேவையை பெருக்குவதற்கும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குத் தேவையான சிதறாமல், சேதம் இல்லாமல் சரியாக, வேகமாகச் சென்று சேர வேண்டுமென்பதற்காகவும், நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காக அணைக்கட்டுகள், குளங்கள், ஏரிகள் செம்மைப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, உரிய முறையிலே நீர் வழித்தடங்கள் பாதுகாக்கப்பட்டு, பராமரிப்பதற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதியை அள்ளித் தந்து, விவசாயிகளுடைய நீண்டகால கோரிக்கைகளை ஏற்று கடைசி குக்கிராமத்தில் இருக்கிற சாதாரண விவசாயிகள்கூட உரிய நீரைப் பாதுகாப்போடு பெற்று, விவசாயத்தைச் செய்து, உணவைப் பெருக்குவதற்காகவும், விவசாயிகளுடைய வாழ்வு மலரவும், நீர் வள ஆதாரத்திற்காகவும், நில வள ஆதாரத்திற்காகவும் இந்தத் திட்டத்தை 2014 வரை நீட்டித்து அதற்காக கோடிக்கணக்கான ரூபாய் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மிகுந்து பாராட்டி, வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி அமைகிறேன், வணக்கம்.

(முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான இரண்டு திட்டங்களை இங்கு அறிவித்திருப்பது பாராட்டத்தக்கது. ஜன நெருக்கடியை மனதில் கொண்டு துணை நகரங்கள் உருவாக்குவது மிக மிக அவசியம் என்பதைச் சிறப்பாகப் புரிந்துகொண்டு, சிறப்பான அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

Urban population – சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை 58 சதவீதமாக உயர்ந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. Reverse migration நடைபெற வேண்டுமென்று

அனைவரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். Reverse migration என்பது Urban–லிருந்து Rural area–க்கு, அதாவது, நகர்ப்புறத்திலிருந்து மக்கள் கிராமப்புறத்திற்குச் செல்ல வேண்டிய ஒரு கட்டாயம், ஏனென்றால், ஜன நெருக்கடிகள் அதிகமாகி, போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படும்போது, இதுபோன்ற துணை நகரங்கள் உருவானால், அது நிச்சயமாக சிறப்பாக இருக்கும் என்பதை சிறந்த ஒரு தொலைநோக்குப் பார்வையுடன், தொலைநோக்குச் சிந்தனையுடன், அனைத்தையும் சிந்திக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதையும் சிறப்பாக சிந்தித்து இந்த துணைக்கோள் நகரத்தை உருவாக்கியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. அதை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் வரவேற்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த பன்மாடிக் கட்டடங்கள் Pre-fab technology என்ற அந்த நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எவ்வளவு வேகமாக, துரிதமாக அதை எப்படி கட்டி முடிக்கலாம் என்பதை எடுத்துச் கூறியிருக்கிறார்கள். சுற்றுச்சூழலை மனதில் கொண்டு, சுகாதார அடிப்படையில் அனைத்துப் பிரிவினரும் தங்குவதுபோல, அதிக வருமானம் பெறுபவர்களாக இருந்தாலும்சரி, மத்திய வருமானம் பெறுபவர்களாக இருந்தாலும்சரி, ஏழை எளிய மக்களாக இருந்தாலும்சரி, அவர்கள் சிறப்பாக இருக்க வேண்டுமென்று, இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்று சொல்வதைப்போல உணவுக்கு இங்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதை உணர்ந்து, விவசாயத்தைச் சிறப்பாகப் பெருக்க வேண்டும்; நீர்நிலைகள் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவே ஒரு திட்டத்தை அறிவித்திருகிறார்கள். திட்டத்தை பொருளாதார அடிப்படையில் இந்தியா உயர்ந்து கொண்டு போகிறது என்று சிலர் சொல்கின்ற சூழ்நிலையிலும்கூட, உயர்ந்து கொண்டிருக்கிற பொருளாதாரத்தில் நாளை தங்கத் தட்டு இருக்கும், உண்பதற்கு உணவு இல்லாமல் போய்விடக்கூடாது என்ற அடிப்படையிலே விவசாயம் மிக மிக அவசியம் என்பதையும் உணர்ந்து அந்த நீர்வளங்களையெல்லாம் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, சிறப்பாக இருக்க வேண்டுமென்று, அதற்காக பல கோடி ரூபாய் செலவு செய்து, அதற்காக அறிவிக்கப்பட்ட இரண்டு திட்டங்களும், நிச்சயமாக தொலைநோக்குச் சிந்தனையுடன், 'A Leader should think about the people'; ஆனால், இந்த Leader, இந்தத் தலைவி மக்களைப்பற்றியே

சிந்தித்துக்கொண்டிருக்கிற ஒரு தலைவராக இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரத்தை சிறப்பான மாநகரம் மாநகமாக ஆக்குவது மட்டுமல்ல, பல மாநகரத்தின் நகர்ப்புறத்திற்கு நெருக்கடி ஏற்படுத்துவதை உணர்ந்து 9 மாவட்டங்களுக்கும் இதுபோன்ற திட்டங்கள் உருவாகும் என்று சொல்லி இருக்கின்றார்கள். அதனால் தமிழகமே ஒரு சிங்காரத் தமிழகமாக உருவாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற விதமாக இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்திலே விமான நிலையம் அருகிலே அனைத்துப் பிரிவினரும் தங்கும் வகையில் 19500 குடியிருப்புகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த துணைக் கோள் நகரம், அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்தப் பகுதியிலே அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளுக்காக வேண்டியும் கூடுதலாக ரூ.120 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதற்காக மனிய நேய மக்கள் கட்சியின் சார்பாக மனதாரப் பாராட்டுகிறோம்.

அதேபோல, மதுரைக்கு மட்டுமா என்று சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்திலே, புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 9 மாவட்டங்களிலே 4,550 யூனிட்டுகள் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, "நீரின்றி அமையாது இவ்வுலகம்" என்பதைப்போல, நீர்வள ஆதாரத் துறைக்கு மேலும் பல கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறுகின்ற வகையிலும் இன்றைக்கு ஒரு சிறப்பான திட்டத்தை அறிவித்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மீண்டும் ஒரு முறை மனதார நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளமான தமிழகம் மட்டுமல்ல, வலிமையான பாரதத்தை உருவாக்க வேண்டும், எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலைமை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கண் துஞ்சாமல் பணியாற்றிக் கொண்டுவரும்

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற வள்ளுவனின் வழியில் நடந்து கொண்டிருக்கின்ற இங்கிருப்பது 'இறையோ' என்று எண்ணுகின்ற வகையிலே செயலாற்றிக்கொண்டிருக்கின்ற 'காவேரித் தாய்' அம்மா அவர்கள், மக்கள் வேண்டுவதை மட்டுமல்ல, மக்கள் என்ன எண்ணுகிறார்களோ அதைத் திட்டங்களாக நிறைவேற்றுகின்ற ஆற்றல் பெற்றிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா மக்களை வறட்சியிலிருந்து மீட்க காவேரியை மீட்டு காப்பாற்றியதுபோல, பெரம்பலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று, அந்த மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வளர்ச்சி கண்டிடவும், தமிழக மக்கள் எல்லா வளமும் நிறைந்து வாழவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை இந்த அவையிலே அறிவித்திருக்கின்றார்கள். இன்றைக்கு இரண்டு முக்கியமான திட்டங்களை விதி 110–ன்கீழ் முன்மொழிந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம்.

இந்த நாட்டு குடிமக்களாக இருந்தாலும்கூட, அவர்கள் வாழ்வதற்கு ஒரு வீடில்லாத சூழ்நிலையில், மனமுருகி ஏக்கத்தோடு

வாழ்கிற மக்களின் வாட்டத்தைப் போக்கிடும் வகையில், கிராமப் பகுதிகளில் மக்கள் வீடு கட்டி வாழுகின்ற வகையில் பல திட்டங்களை ஏற்கெனவே அறிவித்திருக்கின்றார்கள். நகர்ப்புறத்திலே வாழுகின்ற மக்கள் சாதாரண மக்கள், அடித்தட்டில் இருக்கிறவர்கள். நகர்ப்புறத்தில் வீடற்ற முறையிலே நரகத்தில் வாழ்வதைப்போல வாழ்ந்து கொண்டிருக்கிற சூழ்நிலையில், உங்களுக்கு ஆதரவாக நாங்கள் இருக்கிறோம்; நிச்சயமாக தமிழகத்திலிருக்கிற அனைத்து மக்களுக்கும், நகர்ப்புற மக்களுக்கும் நாங்கள் வீடு கட்டித்தருவதோடு, அவர்களுடைய வளர்ச்சிக்கும் இந்தத் தமிழக அரசு நல்ல திட்டங்களை வகுக்கும் என்ற ஓர் ஆதரவைக் காட்டி, சாதாரண மக்களுக்கு, அடித்தட்டு மக்களுக்கு, நலிவுற்ற மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, சற்று வளர்ந்திருக்கிற மக்களுக்கு மற்றும் பல தரப்பினருக்கும் வீடுகளைக் கட்டியிருக்கிற ஒரு பாங்கை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்க கடமைப்பட்டிருக்கிறோம். மதுரையிலே 'துணைக்கோள் நகரம்' அமைப்பதோடு ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகள் பழுதுபட்டுப் போயிருக்கும் சூழ்நிலையில், அந்த மக்களின் மனம் மகிழ்ச்சியடைகின்ற வகையிலே அனைத்து வீடுகளையும் புதுப்பிப்பதற்கான திட்டமும் இதில் வகுக்கப்பட்டிருக்கிறது.

நிலத்தடி நீரைப் பெருக்கவும், நீர் வளத்தைப் பெருக்கவும், பாசனத்திற்கு நீராதாரத்தை உருவாக்கவும், ஏரிகளையும், அணைகளையும் இன்னும் நீர்வரத்துப் பகுதிகளையும் மேம்படுத்தும் வகையில், தமிழகத்திலே உணவுப் பெருக்கத்திற்கு வழி வகுத்திருக்கிற இந்தத் திட்டத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்று, நன்றி கூறி அமைகிறோம். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் நல்மொழிக்கேற்ப, 'அரசைத் தேடி மக்கள் அல்ல, மக்களைத் தேடி அரசு' என்று நல்லாட்சி நடத்துகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு முத்தான அறிவிப்புகளை அறிவித்திருக்கின்றார்கள். ஒரு நல்ல அரசினுடைய செயல்பாடுகள்; குடிமக்களுக்கு உண்ண உணவு; உடுக்க உடை; இருக்க வீடு

ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். உண்ண உணவு: விலையில்லா அரிசி 20 கிலோ கொடுத்து, அதற்கு உத்தரவாத்தைக் கொடுத்தவர் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உடுக்க உடை, பெரியவர்கள் மற்றும் தாய்மார்களுக்கு இலவச வேட்டி–சேலை; பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 4 வகையான சீருடைகள் கொடுத்து, உடுக்கும் உடைக்கு உத்தரவாதம் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

அதேபோல் பசுமை வீடுகள் திட்டம். 1,80,000 ரூபாயில் 300 சதுர அடியில் இந்திரா நினைவுக் குடியிருப்புகள் ஒரு இலட்சம். எந்த மாநிலத்திலும் இந்திரா நினைவுக் குடியிருப்பிற்கு ஒரு இலட்சம் ரூபாய் அல்ல. மாநில அரசு நிதியை இரண்டு மடங்காகக் கொடுத்து—பெயர்தான் அதற்கு இந்திரா நினைவுக் குடியிருப்பு; அது இன்றைக்கு 'அம்மா குடியிருப்பாக' மாறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 'தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பார்கள்.தமிழ்நாட்டில் நல்லாட்சி செய்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் நீங்கள் தட்டவும் வேண்டாம்; கேட்கவும் வேண்டாம். நான் கொடுத்துக் கொண்டேயிருப்பேன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று மதுரைக்கு அருகில், தோப்பூர் மற்றும் உச்சப்பட்டி கிராமங்களில் ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரம், பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள், குறைந்த வருமானம் பெறுபவர்கள், நடுத்தர வருமானம் பெறுபவர்கள், உயர் வருமானம் பெறுபவர்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறுகின்ற வகையில், எல்லா வசதிகளும், மருத்துவ வசதி, பள்ளி வசதி, தீயணைப்பு வசதி, காவல் நிலையம், விளையாட்டுத் திடல், இப்படி எல்லா வசதிகளும் நிறைந்த ஓர் அருமையான துணைக்கோள் நகரத்தை அமைக்கிறேன் என்று இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோன்று, சோழிங்கநல்லூரில் முன்கட்டுமானத் தொழில்நுட்பத்தின்மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள்; அதேபோல், தமிழ்நாடு முழுவதும் மற்ற நகரங்களில் கிட்டத்தட்ட 4,454 அலகுகள் கொண்ட வீடுகளும், குடிசை மாற்று வாரியத்தின் 3,500 பழுதடைந்த வீடுகள் இடிக்கப்பட்டு, 280 கோடி ரூபாய் செலவில் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

பொற்பாதங்களில் எனது நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அக்காலத்தில் காவேரியிலே அடிக்கடி பெருவெள்ளம் வருமாம்; கடல் அலை நம் கால்களைத் தழுவும்போது, மண்ணரிப்பு ஏற்பட்டு மண்ணுக்குள் கால்கள் புதைவதை அடிப்படையாகக் கொண்டு, அன்றைய தமிழன் காவேரி ஆற்றிலே பெரிய பாறைகளைப் போட்டு, கல்லணை உருவானதாக வரலாறு. சங்க காலத்தைச் சேர்ந்த கரிகால் சோழன் கல்லணையைக் கட்டி நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு வழிவகுத்தான். பாசன உட்கட்டமைப்புகளை மேம்படுத்தி பல்வேறு அறிவிப்புகளை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். கரிகால் சோழன்போல, அம்மா, உங்கள் செயல் சரித்திரத்திலே நிலைத்து நிற்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

புழு, பூச்சிகளே தனக்கென கூடு அமைத்துக்கொள்கையில், எம்மக்களுக்கு இல்லம் அமைத்துத் தருவேன் என குடியிருப்புகள் கட்டுவதற்கான அறிவிப்புகளை தமிழக மக்களின் துயரைத் துடைத்திட, வாழ்வை உயர்த்திட சிறப்பாக வெளியிட்டமைக்கு, தமிழக மக்களின் விழிகளிலே காவேரியே ஆனந்தமாக ழிந்தோட, அம்மா, உங்களை வாழ்த்தும் வாழ்த்துக்களோடு என்னுடைய நன்றியையும் இணைத்துக்கொள்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

5. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013–2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,985,75,55,000/–, மூலதனக்

கணக்கில் ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 64, திரு. ஜேஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 332, திருமதி ர. சுபா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 898, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 810, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 865, திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2013 ஏப்ரல் 4] [திரு. டி. இராமச்சந்திரன்]

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1302, திரு. ப. டில்லி பாபு.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 15, திரு. சு. குணசேரகன்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் நன்கொடைகள், கூடுதல் கட்டணம் வசூலிப்பதைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 215, திரு. ர.ம. பாபு முருகவேல்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் மொழியை வளர்க்கும் விதமாக அனைத்து*

[திரு. ர.ம. பாபு முருகவேல்] [2013 ஏப்ரல் 4

தனியார் கல்லூரிகளிலும் தமிழ் இளங்கலை மற்றும் முதுகலைப் பாடங்களைக் கட்டாயப் பிரிவாகச் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 225, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலுமுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 317, திரு. இரா. அண்ணாதுரை.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரையில் ஆண்கள் அரசுக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 399, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 468, திரு. எம். ஆறுமுகம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள், தனியார் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் அனைவருக்கும் மடிக் கணினி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 540, திரு. நா. இராமகிருஷ்ணன்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுயநிதிக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 633, திரு. க. பீம்ராவ்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 692, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் காலியாகவுள்ள நூலகர், உடற்கல்வி இயக்குநர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 750, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் அரசு தொழில் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 770, திரு. ஏ. லாசர்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் நகரத்தில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்கிட, நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து"

2013 ஏப்ரல் 4] [திரு. ஏ. லாசர்]

விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 805, திரு. க. அன்பழகன்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணத்தில் புதிதாக கல்வியியற் கல்லூரி (B.Ed.,) தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 956, டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பொறியியல் கல்லூரி நிருவாகத்தினர் ஒருசிலர் பொறியியல் மாணவர்கள்மீது பொய் வழக்கு போட்டு, அவர்களின் எதிர்கால வாழ்க்கையைச் சீரழித்து வருவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 973, திரு. கே. உலகநாதன்.*

[2013 ஏப்ரல் 4

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் உள்ள கல்லூரி ஆதி திராவிடர் மாணவ, மாணவியருக்கு விடுதி கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1059, திரு. க. பாலகிருஷ்ணன்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் கலைக் கல்லூரியில் மாணவர்களுக்குத் தேவையான பெஞ்ச் மற்றும் டெஸ்க்குகள் மற்றும் தேவையான பரிசோதனைக் கூடங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1085, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் அரசு மகளிர் கலை, அறிவியல் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1144, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் அனைத்துப் பல்கலைக்கழங்களிலும் செனட் மற்றும் சிண்டிகேட் உறுப்பினர்களாக முஸ்லிம்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1205, திரு. ம. கலை அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1219, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல்லில் பெண்களுக்கான அரசு பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1237, திரு. ஆர். ராமமூர்த்தி.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் அரசுக் கலைக் கல்லூரியிலுள்ள பேராசிரியர், உதவிப் பேராசிரியர் மற்றும் கலைக் கல்லூரியிலுள்ள காலிப் பணியிடங்களை அரசு நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1335, திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் அரசுக் கலைக் கல்லூரி திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1354, திரு. க. பாண்டியராஜன்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகரில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம்மூலம் நடத்தப்படும் அரசுப் பணியாளர்களுக்கான தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி மையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1394, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

2013 ஏப்ரல் 4]

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதியில் அரசு உயர் கல்வி நிறுவனம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013–2014 ஆம் ஆண்டு உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

@ 517 முதல் 610 வரையிலான பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[2013 ஏப்ரல் 4

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய அன்புத் தலைவர் கேப்டன் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைக் குழுவில் பேசுவதையெல்லாம் இங்கே பேசக் கூடாது. அதுபற்றி இங்கே பேச முடியாது. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீது மட்டும் பேசுங்கள். இதை நான் அனுமதிக்க முடியாது.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இதை நான் அனுமதிக்க முடியாது. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் மட்டும் பேசுங்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூரில், 2006–2007 ஆம் கல்வி ஆண்டில் தொடங்கப்பட்ட பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் தற்போது ஏறத்தாழ 1,100 மாணவ–மாணவிகள் பயில்கிறார்கள்; அந்தக் கல்லூரியில் 7 இளங்கலை பட்டப்படிப்பும்,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 ஏப்ரல் 4] [திரு. எஸ்.ஆர். பார்த்திபன்]

1 முதுகலை பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பல்கலைக்கழகத்தால், அந்தக் கல்லூரிக்கு நிரந்தர முதல்வர், நிரந்தர உதவிப் பேராசிரியர் மற்றும் நிரந்தர அலுவலகப் பணியாளர்கள் இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை. பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர், அந்தக் கல்லூரிக்கு பொறுப்பு முதல்வராக பணிபுரிகிறார்; மற்ற ஆசிரியர்கள் அனைவரும் தொகுப்பூதியம் பெறும் உதவிப் பேராசிரியர்களாகவும், கௌரவ விரிவுரையாளர்களாகவும் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, நிரந்தரப் பணியிடங்களை நிரப்புவதற்கு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் மேட்டூரில் தொடங்கப்பட்டிருக்கின்ற அந்தக் கல்லூரி, பல்கலைக் கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி. அது 2006 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது. ஒரு உறுப்புக் கல்லூரி தொடங்கப்படும்போது, உறுப்புக் கல்லூரிக்கு, 5 ஆண்டுகளுக்கு மட்டும் சம்பளம் மற்றும் தேவையானவற்றை அரசு வழங்கும். 5 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தப் பல்கலைக்கழகமே, உறுப்புக் கல்லூரியில் பணிபுரிபவர்களுக்கு சம்பளம் வழங்கும். ஆகவே, 2006 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தக் கல்லூரிக்கு, நிரந்தரப் பணியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையை அந்தப் பல்கலைக்கழகமே மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், அந்தக் கல்லூரி அதிகப்படியான பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதியிலே அமைந்திருக்கின்றது. கடந்த காலத்திலே, அந்தக் கல்லூரி கட்டப்பட்டுள்ள வருவாய்த் துறைக்குச் சொந்தமான அரசுப் புறம்போக்கு நிலமாகும். அந்த நிலத்தை, சில ஆக்கிரமிப்பாளர்கள் தங்களுடைய நிலம் என்று உரிமை*

[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்] [2013 ஏப்ரல் 4

கொண்டாடி, உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்திருப்பதால், அந்தக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர், கழிப்பறை வசதி, விளையாட்டுத் திடல், நிருவாகக் கட்டடம் போன்ற கட்டுமானப் பணிகள் நடைபெறாமல் தடை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு இந்த வழக்கை விரைவாக நடத்தி, கல்லூரிக்கு நிலத்தை மீட்டுத் தர இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2010–2011 ஆம் ஆண்டில் 6,09,915 ஆக இருந்த உயர் கல்வி மாணவ–மாணவிகளின் சேர்க்கை, 2012–2013 ஆம் ஆண்டில் 6,51,807 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட, மாணவ–மாணவிகளின் சேர்க்கை உயர்ந்திருப்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் 5 மண்டலங்கள் உட்பட, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, மாணவ–மாணவிகளை தேர்வு செய்ய பல முன்னணி நிறுவனங்கள் அம்முகாம்களில் பங்கேற்றனர். இதன்மூலம், அரசுக் கல்லூரிகளைச் சார்ந்த 1,521 மாணவர்களும், 80 அரசு உதவி பெறும் கல்லூரிகளைச் சார்ந்த 10,687 மாணவர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், படித்தவர்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருகின்ற வேளையில், படிக்கின்ற மாணவர்களுக்கு படிப்போடு சேர்ந்து வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலுள்ள அனைத்து தனியார் பொறியியல் கல்லூரிகளில் கல்லூரி நிருவாகச் சீட்டுகளை, Management Quota—வில், மாணவ–மாணவிகளைச் சேர்க்கின்றபோது வரைமுறையில்லாமல் பெற்றோர்களை பல்வேறு மன உளைச்சல்களுக்கு ஆளாக்குகிறார்கள். அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட நன்கொடை என்ற பெயரிலே பல மடங்கு கட்டணம் வசூல் செய்யப்படும் கல்லூரிகளின்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு, கடந்த 2011 ஆம் ஆண்டு அரசு கலைக் . .

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் அரசு நிர்ணயித்த கட்டணங்களைவிட அதிகமாக அங்கே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதற்காகத்தான் கட்டாய நன்கொடை வசூலைத் தடை செய்யும் சட்டம் ஒன்று 1992 ஆம் ஆண்டு, அதாவது, தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வராக இருந்தபோது 3 நபர்களைக்கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அது போன்ற ஒரு குழு இப்பொழுதும் செயல்படுகிறது. அந்தக் குழு இதுபோன்ற பிரச்சினைகள் குறித்து மாணவர்கள் மத்தியிலே இருந்தும், கல்லூரிகள் அல்லது பெற்றோர்களிடமிருந்தும் மனுக்கள் வரப்பெற்றால், அதன்மீது உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பெற்றோர்கள், மாணவர்களிடத்திலேயிருந்து புகார்கள் வந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குத் தமிழகத்திலே நடப்பது என்ன என்று சொன்னால், இங்கே உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். பெரும்பாலான தனியார் கல்லூரிகள் அந்தக் கல்லூரிகள் அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட பல மடங்கு நன்கொடை என்ற பெயரிலே கட்டாய நன்கொடைகள் வசூல் செய்கிறார்கள். அப்படி வசூல் செய்யும் அந்தக் கல்லூரிகள்மீது புகார்களைத் தெரிவித்தால், அந்த மாணவரை அந்தக் கல்லூரி நிர்வாகம் பழிவாங்கும் நோக்கத்தோடு, அவர் படிக்கின்ற அந்தக் காலங்களிலே பல்வேறு தொல்லைகளையும், இடையூறுகளையும் செய்து அவர்களை மிரட்டி வருவது வேதனைக்குரிய விஷயமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறபோது அதற்கு ஆதாரம் இருக்க வேண்டும். நீங்கள் பொத்தாம் பொதுவாக ஏதோ

அங்கே புகார் சொல்கிறார்கள், அங்கே மனு கொடுக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது. அப்படி ஏதாவது யாராவது ஒரு மாணவர் பாதிக்கப்பட்டிருந்தால், அப்படி ஏதாவது ஒரு கல்லூரிமீது நீங்கள் குற்றம் சொல்கிறீர்கள் என்று சொன்னால், இந்தக் கல்லூரியால் இந்த மாணவர் பாதிக்கப்பட்டார் என்று தெளிவாகத் தெரிவிக்கவேண்டும். இதுபோன்ற புகார் வருகிறது என்று சொன்னால் அதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். இதுவரையில் அதுபோன்ற புகார்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை என்பதை நான் பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டு அரசு கலைக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் வளர்ச்சிக்காக, உள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு 100 கோடி ரூபாய் ஒதுக்கியும், இதுவரை அந்த நிதி சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்குச் சென்றடையவில்லை என்பதை அரசின் கவனத்திற்கு நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்ற பின்பு தமிழக வரலாற்றிலே அரசு கலைக் கல்லூரிகளின் மறு சீரமைப்பிற்காக 100 கோடி ரூபாய் ஒட்டுமொத்தமாக நிதி ஒதுக்கிய வரலாறே கிடையாது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான். முதன் முதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாக ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், புதியதாகக் கட்டடம் கட்டுவதற்குதான் நிதி ஒதுக்குவது வழக்கம். ஆனால், நம்முடைய அரசுக் கல்லூரிகளில் இருக்கக்கூடிய மாணவர்கள் உலகத் தரம் வாய்ந்த உள் கட்டமைப்பு வசதிகள் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இதுவரையில் இல்லாத அளவிற்கு 100 கோடி ரூபாய் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின் மூலமாக அந்தக் கல்லூரிக்கு, அந்த மாணவர்களுக்கு

பலகை அமைப்பது, பெஞ்ச், டேபிள்கள் வழங்குவது, பெண்களுக்கு, குறிப்பாக, மகளிருக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பது, இதுபோன்ற வசதிகளை, சாதாரண அரசுக் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களும் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிற்கு விவர அறிக்கை, தமிழகத்திலே இருக்கக்கூடிய 62 கலைக் கல்லூரிகளிலும், 35 உறுப்புக் கல்லூரிகளிலும், 7 கல்வியியல் கல்லூரிகளையும் சேர்த்து மொத்தம் 93 கல்லூரிகளுக்கான அந்த விவர அறிக்கை தற்போது அரசுக்கு வந்திருக்கிறது. கூடிய விரைவில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பரிசீலனைக்குப்பின் அதுபோன்ற திட்டங்களை மாணவர்கள் பயன்பெறுகிற வகையிலே உத்தரவுகள் விரைவிலே போய்ச் சேரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கல்விக்காக பல கோடி ரூபாய் ஒதுக்குவதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஒதுக்குகின்ற அந்த நிதி வேகமாகவும், சரியான நேரத்திலே சென்றடைய வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சொல்கிறேன். 2011-லே ஒதுக்கப்பட்ட அந்த நிதி இதுவரை வேகமாகச் சென்றடையவில்லை என்ற தகவலைத்தான் சொன்னேனேயொழிய, நிதி ஒதுக்கப்படவில்லை என்று நான் சொல்லவில்லை.

நண்பகல் 12–00

அதற்கு அடுத்தபடியாக, 2012–2013 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே 2011–2012 ஆம் ஆண்டு இலவசக் கல்வியில் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 10 ஆயிரத்து 620 என குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலே 47.4% மகளிர் என பிரித்து காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், 2013–2014 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் 2012–2013 ஆம் ஆண்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இலவச கல்வியில்

[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்] [2013 ஏப்ரல் 4

பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 4,51,878 என குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம் என்னவென்றும், மேலும், இந்த ஆண்டு மாணவர்களின் தேர்ச்சி விகிதம் என்னவென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக தமிழகத்தில் உள்ள அனைத்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவைப் பொறுத்தவரையில் உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை, (Gross Enrolment Ratio) அதாவது 18 வயது முதல் 23 வரையிலான இளைஞர்கள், பள்ளிப் படிப்பு முடிந்து, கல்லூரியில் சேருவது அதாவது உயர் கல்வியில் போய்ச் சேருகின்ற அந்த விகிதத்தை, பொறுத்தவரையில், இந்திய அளவில், இன்றைக்கு 13 சதவிகிதமாக இருக்கிறது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், அதாவது சென்றமுறை நாம் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிட்டு இருக்கிறோம். அதாவது 11–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 18 சதவிகிதம் என்று நாம் குறிப்பிட்டு இருக்கிறோம். ஆனால், இன்றைய காலக்கட்டத்தில் இன்றைக்கு நாம் பார்க்கின்றபோது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் எடுத்து வருகின்ற இதுபோன்ற நல்ல நடவடிக்கைகள் காரணமாக, அதாவது, புதிய புதிய கல்லூரிகளைக் கொடுப்பது, புதிய பாடப் பிரிவுகளைக் கொடுப்பது, இதுபோன்று எடுத்து வருகின்ற சீரிய முயற்சியின் காரணமாக 18 சதவிகிதமாக இருந்தது 1 சதவிகிதம் உயர்ந்து 19 சதவிகிதமாகி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது பக்கத்து மாநிலங்களான கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, தென் இந்தியாவில் இது முதலிடம் பெற்றிருக்கிறது. நமது இந்தியாவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது Gross Enrolment Ratio–ன்படி, அதாவது உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை விகிதம் நமது மாநிலத்தில் 19 சதவிகிதமாக இருக்கிறது. இந்திய அளவில் நம்முடைய மாநிலம் இன்றைக்கு இரண்டாவது இடத்தில் உள்ளது. (மேசையைத் தட்டும்

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

ஒலி) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற தொலைநோக்கு திட்டம், 2023 போன்றவற்றால் பத்து ஆண்டுகளுக்கு பின்பு உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை நமது மாநிலத்தில் 25 சதவிகிதமாக இருக்கும் நிச்சயமாக கூடிய விரைவில் குறிப்பிட்ட அந்த ஆண்டுக்கு முன்னாலேயே நிச்சயமாக அது நிறைவேறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் அனைத்து அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், கலை, அறிவியல், பொறியியல் மற்றும் பல்தொழில் நுட்ப பட்டயக் கல்லூரிகளில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச மடிக்கணினிகள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. தற்போது அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு சரியாக மடிக் கணினிகள் வழங்கப்படவில்லை என்று மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களிலும், சாலை மறியல்களிலும் ஈடுபட்டது அனைவரும் அறிவோம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் நெஞ்சைத் தொட்டுச் சொல்ல வேண்டும். அதாவது நான் என்ன கேட்கிறேன் என்றால், இந்தியாவிலேயே மடிக்கணினிகள் வழங்குகிற ஒரே ஒரு மாநிலம் தமிழகம் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. இது ஒரு அற்புதமான, உன்னதமான திட்டம். இதனை இந்திய மக்கள் பாராட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் எடுத்து வருகிற இந்த நல்ல நடவடிக்கைகளின் காரணமாக, நம்முடைய முதல்வர் அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் திட்டம் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் மட்டும் அல்ல, பக்கத்து மாநிலத்திலும் இதை கடைப்பிடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலத்தில்

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய நாட்டில் உள்ள அனைத்து மக்களும் இதுபோன்ற திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் காலம் நிச்சயமாக வரும்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போன்று எந்தவிதமான குற்றச்சாட்டும் கிடையாது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், நிச்சயமாக கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு, ஏன் மேல் நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்குக்கூட மடிக் கணினிகள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் கல்வியைப் பொறுத்தவரையில், முதலாம் ஆண்டு படிக்கக்கூடிய மாணவர்கள், இரண்டாம் ஆண்டு படிக்கக்கூடிய மாணவர்கள், மூன்றாம் ஆண்டு படிக்கக்கூடிய மாணவர்கள், பொறியியல் கல்லூரியில் நான்கு ஆண்டு இருக்கிறது. நான்காம் ஆண்டு படிக்கும் மாணவர்கள், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் அத்தனைப் பேருக்கும், ஒருவரையும் விட்டு விடாமல் மடிக்கணினி வழங்கிய ஒரே ஒரு அரசு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை இங்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரே ஒரு கேள்வியைக் கேட்டவுடன், உரையை முடித்துவிடுங்கள், உட்காருங்கள் என்று சொல்லிவிடுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகிவிட்டது. ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மடிக்கணினி வழங்கப்படவில்லை என்று சொல்லவில்லை. தேர்தல் அறிக்கையிலே, தெளிவாக அனைத்து கல்லூரிகளுக்கும், அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் கலை, அறிவியல், பொறியியல் கல்லூரிகள், தொழில், பட்டய . . .

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கல்லூரி, அரசு உதவி பெறும் கல்லூரி என்றுதான் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் அதைச் சரியாகப் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள். வேறு subject–க்கு போகாதீர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியாகப் பார்த்துச் சொல்லச் சொன்னார். தேர்தல் அறிக்கையை நான் கையில் வைத்திருக்கிறேன். அதில் 18–வது பாயின்ட்டில் 'அனைத்து அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், அரசு கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகள்' என இருக்கிறது. எல்லா மாணவர்களுக்கும் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், வேறு subject-க்கு போகாதீர்கள். நேரமாகிக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாணவர்களுக்கும் சென்றடைந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பதுதான் எங்கள் கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்து படித்துப் பார்த்துச் சொல்ல வேண்டும். நான் என்ன சொல்கிறேனென்று சொன்னால், அரசு உதவி பெறுகிற தனியார் கல்லூரி, அதைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறார்களேயொழிய, நீங்கள் சொல்லியதுபோல தனியார் கல்லூரி என்று சொல்லவில்லை.

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், புதிய சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள். உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க அடுத்த சப்ஜெக்ட்டுக்கு நான் போகிறேன். உயர் கல்வியைப் பொறுத்தவரையில், தமிழகத்திலுள்ள அனைத்து சமுதாயக் கல்லூரிகளையும் Community Colleges–யை ஒருங்கிணைத்து ஒரு திறன் சார் பல்கலைக்கழகம் அமைத்திட மத்திய அரசின் திறன் வளர்த்தல் திட்டத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், நன்றி சொல்லி உட்காருங்கள். நேரமாகிவிட்டது.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடம். மத்திய அரசினுடைய திறன் வளர்த்தல் திட்டத்தில் Skill Development Mission–ன்கீழ் நிதி பெற வாய்ப்புள்ளது. அதேபோல, இதை விரைவாகச் செயல்படுத்த அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஆரணி தொகுதியில் அண்ணா பல்கலைக்கழகத்தின்மூலம் கட்டப்பட்டு வரும் பொறியியல் கல்லூரி கடந்த பிப்ரவரி 2012 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படும் என்று அப்பணியினுடைய ஒப்பந்ததாரர் 2011 நவம்பர் மாதம் மனுக்கள் குழு ஆய்வின்போது தெரிவித்தார். ஆனால், கட்டடப் பணி மந்த நிலையிலே இருப்பதால் அதனைக் கருத்தில் கொண்டு அப்போதைய மாவட்ட ஆட்சியர் அவர்கள் அந்த ஒப்பந்ததாருக்கு ரூ. 2 இலட்சம் அபராதம் விதித்தார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சொல்லப்படுகிற ஆரணியில் இருக்கக்கூடிய அந்தக் கல்லூரி என்பது பல்கலைக்கழத்தினுடைய உறுப்புக் கல்லூரி, பொறியியல் கல்லூரி. அந்தக் கல்லூரியில் கட்டடப் பணிகள் கட்டுவதற்காக 26 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் சென்ற முறை கேள்வி கேட்டார். அதற்கு அப்போதே நான் பதில் சொன்னேன்.

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

இன்றைக்கு அந்தக் கல்லூரியின் கட்டுமானப் பணிகள் அத்தனையும் முடிக்கப்பட்டு அதாவது பெண்கள் விடுதி, ஆண்கள் விடுதி, Administrative Block இதுபோன்ற கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு தயாராக உள்ளது. கூடியவிரைவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகிற இந்தியாவிலேயே இல்லாத ஒரு அற்புதமான உன்னதமான திட்டமான மடிக்கணினி வழங்கும் திட்டத்தை நீங்கள் மட்டுமல்ல, இந்த தமிழக மக்கள் மட்டுமல்ல, உலகத்திலே இருக்கக்கூடிய அத்தனை மக்களும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசுக் கல்லூரியிலே படிக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் வெளிநாட்டிலே சென்று படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் பிரிட்டிஷ் கவுன்சிலோடு ஒரு ஒப்பந்தம் போட்டார்கள். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே நாங்கள் சமீபத்திலே ஏற்படுத்தும் வகையில் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு London சென்றிருந்தோம். அங்கு சென்றிருந்தபோது அங்கு Holloway College என்று இருக்கிறது. அந்த கல்லூரி என்பது heart of the City, London–க்கு பக்கத்திலே இருக்கிறது. அது ஒரு பழமை வாய்ந்த கல்லூரி. அந்தக் கல்லூரியிலே படிப்பதற்கு இங்கிருக்கக்கூடிய மாணவர்களைப் போய் சேர்க்க வேண்டுமென்ற ஒரு உத்தரவை நம்முடைய முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அப்படிச் சென்று அந்தக் கல்லூரியிலே பார்க்கிறபோது அந்தக் கல்லூரியிலே நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த மெரைனா என்ற ஒரு பெண் அங்கே எம்.பி.ஏ. படித்துக் கொண்டு வருகிறார். அங்கே படித்துக்கொண்டிருந்த நேரத்தில்

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

அவரை அங்கே சந்திக்கிற ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. இங்கே கிறித்தவக் கல்லூரியில் படித்த அந்த மாணவி சொல்கிறார்; அவருடைய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் மத்தியிலும், எங்கள் மத்தியிலும் அந்த மாணவி சொல்கிறபோது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிற மடிக்கணினியை இங்கே நான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார், (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது நம்முடைய முதல்வர் அம்மா அவர்களுடைய சிறப்பு நீங்கள் சொல்கிற இங்கல்ல; லண்டனிலே பெருமையோடு சொல்லப்படுகிறதென்று சொன்னால் இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு வரவேற்பு இருக்கிறது என்பதை உண்மையிலேயே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அங்கே போய்ப் பார்க்கிறபோது உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தேன். பூரிப்படைந்தேன். ஆனந்தக் கண்ணீர் விட்டேன். அப்பேர்ப்பட்ட ஒரு அற்புதமான திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ குறை சொல்ல வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தைப் பாராட்டாமல் அங்கு வரவில்லையே, இங்கு வரவில்லையே என்று சொல்வது என்பது ஒரு தவறான செய்தி. 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த நிதிநிலை அறிக்கையை சற்று படித்துப் பார்க்க வேண்டும். பக்கம் 54–ல் அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் அனைத்து பிளஸ் 1, பிளஸ் 2 மாணவ, மாணவிகளுக்கும் அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இலவசமாக மடிக்கணினி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். இந்நாட்டு இங்கர்சால் என்றும், தென்னாட்டு பெர்னாட்ஷா என்றும் போற்றப்பெறும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த பொன்னான செப்டம்பர் 15 ஆம் நாளன்று, இத்திட்டம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்படும் என்று அந்த நேரத்திலே தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 4]

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், உரையை முடியுங்கள். புது சப்ஜெக்ட்டுக்குப் போனால் allow பண்ணமாட்டேன். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடிக்கணினி கொடுப்பதைப் பற்றி நான் தப்பு சொல்லவில்லை. எல்லா இடத்திலும் வரவேற்கிறோம். மக்களிடத்தில் நல்ல வரவேற்பு இருக்கிறது. அது எல்லா இடத்திற்கும் போய்ச் சேரவேண்டும் என்று சொல்கிறோம். இன்னொரு விஷயம் என்னவென்றால் நான் தேர்தல் அறிக்கையினைப் படிக்கச் சொன்னால் அவர்கள் நிதிநிலை அறிக்கையினைப் படிக்கிறார்கள். நான் என்ன செய்வது (மணியடிக்கப்பெற்றது) அடுத்தபடியாக, தமிழகத்தில் உள்ள...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உட்காருங்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: ஒரே ஒரு விஷயம். தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்களாக. . . (குறுக்கீடு) எனது தொகுதி பிரச்சினைகள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்ற தொகுதியில் வாழ்கின்ற சுமார் 4 இலட்சம் மக்கள் குடிநீருக்காக பல காலகட்டங்களில் தொடர்ந்து போராடி வருகிறார்கள். மேட்டூர் அணை எனது தொகுதியில் இருந்தும் எனது தொகுதி மக்களுக்கு குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் இருப்பது வேதனைக்குரியதாகும். மேட்டூர் அணையில் உள்ள தண்ணீர் பல மாவட்ட மக்களுக்கு பல கோடி செலவில் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தி குடிநீர் வழங்கப்படுகிறது. அதேபோல் தொழிற்சாலைகளுக்கும் தினமும் பல கோடி லிட்டர் தண்ணீரை அரசு வழங்குகிறது. ஆனால் இந்த தொகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு குடிதண்ணீருக்காக எந்தச் சிறப்புத் திட்டமும் இல்லை என்பது வேதனையாகும். நான் சட்டமன்றத்திலே மேச்சேரி குடிநீர்த் திட்டம், கோனூர், கொளத்தூர் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களை தனியாக அறிவிக்க வேண்டி பலமுறை பேசி

[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்] [2013 ஏப்ரல் 4

இருக்கிறேன். அதன் அடிப்படையில் மேச்சேரி தனி குடிநீர்த் திட்டத்தையும், கோனூருக்கு நங்கவல்லி குடிநீர்த் திட்டம் விடுபட்டு இருப்பதை அரசு கவனத்தில் கொண்டு இந்த ஆண்டே அரசாணையாக வெளியிட வேண்டுகிறேன். மேலும், மேற்படி அறிவித்த மேச்சேரி குடிநீர்த் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் நகரத்தில் வசிக்கின்ற மக்கள் பல ஆண்டு காலமாக பட்டா வேண்டி போராடி வருகிறார்கள். மேட்டூர் நகராட்சி பெரும்பாலான பகுதிகள் பொதுப் பணித் துறையின் இடமாகவும், நகராட்சிக்குச் சம்பந்தப்பட்டதாகவும் உள்ளன. சில இடங்களில் ஆயிரக்கணக்கான குடும்பத்தினர் மாடி வீடுகள் கட்டி, சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக பல வசதிகளோடு மின் இணைப்பு, நகராட்சிச் குடிநீர் இணைப்பு வரி ரசீது போன்றவற்றைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அந்த மக்கள் தங்கள் வீட்டுக் கடன் பெறுவதற்கோ, வேறு ஏதாவது அடமானம் வைப்பதற்கோ பட்டா தேவைப்படுகிறது. மேற்படி, அனைத்து ஆவணங்கள் இருந்தும் அரசு பொதுப் பணித் துறையில் உள்ள சட்டங்களைத் தளர்த்தி மக்களுக்குப் பட்டா கிடைக்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்கு உட்பட்ட மேச்சேரி ஒன்றியம் வெள்ளாறு பஞ்சாயத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை வரும் கல்வியாண்டு முதல் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2 ஆண்டுகளாக மேட்டூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் விதவை பென்சன் மனு, முதியோர் உதவித் தொகை மனு, மாற்றுத் திறனாளிகள் சலுகைகள் கோரும் மனு, புதிய ரேசன் கார்டு கேட்டு கொடுக்கப்பட்ட மனுக்களை சம்பந்தப்பட்ட உரிய அரசு அதிகாரிகளிடம் சமர்ப்பித்தும் இதுவரை எந்த ஒரு விசாரணையும்கூட தொடங்கப்படவில்லை. ஏழையெளிய மக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதி. இந்த மக்களுக்கு அரசு வழங்குகின்ற உதவித் தொகைகள் முறையாகச் செல்லவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

2013 ஏப்ரல் 4] [திரு. எஸ்.ஆர். பார்த்திபன்]

மேட்டூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தினமும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். போதிய மருத்துவர்கள் கிடையாது. எனவே, அனைத்துத் துறைகளிலும் பணிபுரிந்திடும் வகையில் மருத்துவர்களை நியமித்தும், காலியாக உள்ள மருத்துவர் அல்லாத பணியிடங்களை நிரப்பிட வேண்டியும் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதிக்கு உட்பட்ட மேச்சேரி ஸ்ரீஅருள்மிகு பத்ரகாளி அம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டது சிறப்பாகும். மேலும், ஸ்ரீஅருள்மிகு பத்ரகாளி அம்மன் திருக்கோயிலுக்கு தினமும் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களைச் சேர்ந்த பக்தர்களும், தமிழகத்தைச் சேர்ந்த பக்தர்களும் தினமும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கிறார்கள். எனவே, மேற்படி பத்ரகாளியம்மன் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவித்து ஸ்ரீபத்ரகாளியம்மன் திருக்கோயிலுக்கு தங்கத் தேர் செய்வதற்கு சிறப்பு அனுமதி கிடைத்திட மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் அணை தமிழ்நாட்டு மக்களின் ஜீவாதாரமாகவும், உயிர்நாடியாகவும் இருந்து வருகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க மேட்டூர் அணையில் இருந்து வெளியேறும் நீரை தமிழகத்தின் பல மாவட்ட மக்கள் டெல்டா பாசனத்திற்கும், குடிநீருக்காகவும் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, மேட்டூர் அணையை முழுமையாகப் பாதுகாப்பது அரசின் கடமையாகும். அணை கட்டப்பட்டு 79 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை மேட்டூர் அணை தூர் வாரப்படவில்லை. தற்பொழுது அணையின் நீர்மட்டம் 26 அடியாக உள்ளது. இதில் 20 அடி வரை சேறும், சகதியும்தான் நிறைந்திருக்கும். எனவே, மேட்டூர் அணையைத் தூர் வாருவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக உள்ளது. பொதுப் பணித் துறை விவசாயிகளை அழைத்து விவசாய விளைநிலங்களுக்குத் தூர் வாரப்படும் மண்ணை எடுத்துச் சென்று பயன்படுத்திக்கொள்ள சிறப்பு அனுமதி கொடுத்தால் அரசுக்கு எந்தச் செலவும் இல்லாமல் தூர் வாரப்படும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்] [2013 ஏப்ரல் 4

மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் தொப்பூரில் இருந்து மேட்டூர் வரை உள்ள சாலை ஒரு வழிச் சாலையாக உள்ளது. இந்தச் சாலையில் தினமும் ஆயிரக்கணக்கான லாரிகள், வாகனங்கள் வந்து செல்கின்றன. மேட்டூர் அணையைச் சுற்றிப் பார்க்க சுற்றுலாப் பயணிகளும் அதிக அளவில் வந்து செல்வதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதும், சாலை விபத்துகள் அதிக அளவில் நடந்து உயிரிழப்பும், படுகாயங்களும் ஏற்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே தொப்பூரில் இருந்து மேட்டூர் வரை நான்கு வழிச் சாலையாக மாற்ற, நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் உரையை முடிப்பதுபோல் தெரியவில்லை. (குறுக்கீடுகள்)

***திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எங்களது C.M. ஆக இருக்கும், நாளைய இந்தியாவின் P.M.–ஆக வழிநடத்த இருக்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஆலயத்தின் ஆராதனைக்குரிய தெய்வமே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேச ஆரம்பித்துவிட்டார். உட்காருங்கள். 20 நிமிடத்திற்கு மேல் கொடுத்துவிட்டோம் உரையை முடிக்காமல் இருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் பேச ஆரம்பித்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேச ஆரம்பித்த பிறகு, 1 நிமிடம்தான் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அவர் பேச ஆரம்பித்துவிட்டார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பில்லை உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேச ஆரம்பித்துவிட்டார். இப்போது அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) நன்றி எல்லாம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். இப்போது உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. பார்த்திபன். உங்களுக்கு வாய்ப்பு இல்லை. திரு. கார்த்திக் தொண்டைமான், தொடர்ந்து பேசுங்கள்.

2013 ஏப்ரல் 4]

திரு. கார்த்திக் தொண்டைமான்: தாய்மை, வாய்மை, நேர்மை இவற்றின் முழு வடிவமாகத் திகழும் அன்புத் தாயே, தொண்டனுக்கு பரிபூரணத்தை நாளும் வழங்கும் எங்களின் அட்சயப் பாத்திரமே, கோடானுகோடி தமிழனுக்கு காலம் தந்த கொடையாக விளங்கும் எங்களின் அன்புத் தெய்வமே! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை முதன்முதலாக புதுக்கோட்டை கழகத்தின் மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணித் தலைவராகவும், அதன் பின்பு புதுக்கோட்டை நகர் மன்றத் தலைவராகவும், இன்று புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்தப் பாரம்பரியமிக்க மாமன்றத்தில் எளியவனாகிய என்னையும் அமரவைத்து அழகு பார்த்த அன்னையே, தங்களுக்கு எனது கோடானுகோடி நன்றியைத் தங்களது பாதம் பணிந்து சமர்ப்பிக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்று வாக்களித்த புதுக்கோட்டை தொகுதி அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும், மற்றும் தேர்தல் பணியில் ஈடுபட்ட அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது உளங்கனிந்த அன்பையும், பணிவையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா நீங்கள் எங்களுக்குக் கற்றுக்கொடுத்த பாடம் என்ன தெரியுமா? உண்மையை விரும்பு; அது நம்பிக்கையைக் கொடுக்கும்; உழைப்பை விரும்பு; அது வசதியைக் கொடுக்கும்; திறமையை விரும்பு, அது உறுதியைக் கொடுக்கும்; வாழ்க்கையை விரும்பு; அது வசந்தத்தைக் கொடுக்கும். பிறருக்குக் கொடுத்துக்கொண்டே இரு, அது வரலாற்றைக் கொடுக்கும்; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயின் புகழை எப்படிச் எடுத்துச்சொல்வது, வார்த்தைகளே இல்லை, அம்மா மக்களைக் காப்பதில் நீங்கள் விஷ்ணு, அநீதிகளை அழிப்பதில் நீங்கள் ஈசன், மாற்றுத் திறனாளிகளுக்குத் திட்டங்கள் தருவதில் நீங்கள் பிரம்மா, பிள்ளைகளுக்குக் கல்வி கொடுப்பதில் நீங்கள் சரஸ்வதி, தீயவைகளை அடக்குவதில் நீங்கள் பராசக்தி. மொத்தத்தில் நாங்கள் வணங்கும் எங்கள் குலதெய்வமே. நீங்கள் தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த உயர் கல்வி மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்குக்

[திரு. கார்த்திக் தொண்டைமான்] [2013 ஏப்ரல் 4

கோடானுகோடி நன்றிகளை பாதம் பணிந்து சமர்ப்பிக்கிறேன். பாரம்பரியம், பண்பாடு மிக்க புதுக்கோட்டை மாநகருக்கு, பொன் விழா கண்ட நகராட்சிக்கு ரூ.50 கோடி வாரி வழங்கிய ஒன்பதாவது வள்ளலே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை நாளும் வழிநடத்தும் தாயே, உங்களுக்கு நன்றி சொல்வதற்கு எத்தனை சாதனைப் பட்டியல்கள் தெரியுமா தாயே! புதுக்கோட்டைக்கு கூட்டுக் குடிநீர் திட்டம், பேருந்து நிலைய விரிவாக்கம், சுற்று வட்டச்சாலை, வருவாய்க் கோட்டத்தை மூன்றாகப் பிரித்தது போன்ற சாதனைகளால் புதுக்கோட்டையை புகழ் கோட்டையாக மாற்றியிருக்கிறீர்கள் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை 2013–2014–ல் 90 பக்கங்களையும் முழுமையாக வாசித்தபோது மெய்சிலிர்த்துப் போனேன் தாயே! இந்தியாவிலேயே வரியில்லா பட்ஜெட் தந்த, மண்ணும் விண்ணும் போற்றும் மகத்தான தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாத் துறைகளிலும் தனது நேரிய பார்வையை செலுத்தி நிகரில்லாத் திட்டங்களை வாரி வழங்கிய இதய தெய்வமே, இன்றைக்கு கல்வி கற்க சிறந்த சூழ்நிலையை உருவாக்கித் தந்து மாநிலங்களில் தமிழகம் முதல் மாநிலம் என்று உலகமே இன்று வியக்கிறது அன்புத் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளி மாணவருக்கு படிப்பு முடித்து வீடு திரும்பும் வரை விலையில்லா பொருட்கள் பலவற்றைத் தந்து வீடுதோறும் கல்வி விளக்கேற்றிய எங்கள் சரஸ்வதியே, உயர் கல்வித் துறையில் இன்றைக்கு சரித்திர சாதனை படைத்திருக்கும் தங்கத் தலைவியே. எங்கு நோக்கினும் கல்லூரிமயம். எதைக் கேட்டாலும் கல்விமயம். இது அம்மா தந்த கொடை என்கிறது அகிலமே. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

அம்மா நான் சற்று பின்னோக்கிப் பார்க்கின்றேன். 19–12–1991 ஆம் நாளில் சென்னை பல்கலைக்கழகம் தங்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கியபோது தங்களைப் பாராட்டிய வார்த்தைகளான, 'உள்ள உறுதி, மதிநுட்பம், அரசியல் தெளிவு, பழமைக்கும் புதுமைக்கும் பாலமான பழுத்த சிந்தனை, சமுதாய உணர்வு, சமநோக்கு மற்றும் சான்றான்மை' என்று பட்டியல் போட்டார்கள். அதற்கு கட்டியம் கூறும் வகையில் இன்றைக்கு மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறீர்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

2013 ஏப்ரல் 4] [திரு. கார்த்திக் தொண்டைமான்]

விவசாயிகளின் வாழ்வு வளம்பெற காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடச் செய்து, உழவர்களின் உயிர்காத்த காவேரி தந்த பொன்னியின் செல்வியே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மீனவர்களின் நலனுக்காக கச்சத் தீவை மீட்டெடுக்கும் ஜான்சிராணியே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் பசுமைப் புரட்சி தந்த பாசத்தாயே. புலிக்குட்டிக்கு பெயர் சூட்டிய எங்கள் கழகத்தின் சிங்கமே! (மேசையைத் தட்டும் ஒலி) அன்பும், அறிவும் ஒருங்கேபெற்ற உலகின் ஒப்பற்ற தலைவியே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்த புதுக்கோட்டை தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை மக்கள் துயர்துடைக்கும் மகத்தான தாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

புதுக்கோட்டை தொகுதியில் ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்தியாவின் முதல் பெண் மருத்துவர், மரியாதைக்குரிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் பிறந்த மண்ணுக்கு மணம் சேர்க்கும் வகையில், ஒரு மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி அமைத்துத்தர பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை–திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் – தங்கத் தேர் பணியை விரைவாக முடித்து தேரோட்டம் நடத்த ஆவன செய்ய பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை தொகுதியில், ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில், மருத்துவக் கல்லூரி, அரசு பொறியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் உறுப்புக் கல்லூரி அமைக்க ஆவன செய்ய பணிவோடு வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையை விரிவாக்கம் செய்து தரம் உயர்த்திட பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை நகரில் பழமை வாய்ந்த வாரச் சந்தையில் வெளியில் உள்ள அனைத்து மார்க்கெட்டுகளையும் ஒருங்கிணைந்த தினசரி மார்க்கெட்டாக அமைத்துத்தர ஆவன செய்யப் பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை நகரில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து அரசு அலுவலகங்களையும் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ஒருங்கிணைந்து இயங்க ஆவன செய்யப் பணிவோடு வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை நகரில் அதிகரிக்கும் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு அவர்களின் தேவைக்கேற்ப புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகில் கட்டுமாவடி கடல் பகுதியிலிருந்து கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்தைச் செயல்படுத்தப் பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை தொகுதியிலுள்ள அனைத்துக் குளங்களையும் தூர்வாரி விவசாயிகளின் நீர் ஆதாரத்தை சேமித்து வைக்க வேண்டுமென்று நலனுக்காக பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை தொகுதியில் தென்னை விவசாயம் அதிகமாக இருப்பதால் தென்னை நார்களைக் கொண்டு ஒரு கூட்டுறவு தொழிற்சாலை அமைத்துக்கொடுக்கப் பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை தொகுதியில் முந்திரி சாகுபடி அதிகம் உள்ளதால், அதைக்கொண்டு முந்திரி தொழிற்சாலை அமைத்துக் கொடுக்கப் பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை தொகுதியில் கரும்புத் தோகை, சவுக்கு மற்றும் யூகலிப்டஸ் மரங்கள் அதிகம் உள்ளதால் அதைக்கொண்டு காகிதத் தொழிற்சாலை அமைத்துக் கொடுக்கப் பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டையில் கற்பாறைகள் அதிக அளவில் இருப்பதால், அதை மையமாகக் கொண்டு சிற்பக்கூட தொழிற்சாலை அமைத்துத்தரப் பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை நகரிலுள்ள கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்தி பால் உற்பத்தியைப் பெருக்கிக் கொடுக்க பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவின் நிறுவனம் தற்பொழுது திருச்சியோடு இணைக்கப்பட்டுள்ளது. அதை மாற்றி, புதுக்கோட்டை மாவட்டத்திற்கென்று தனியாக ஆவின் குளிரூட்டு நிலையம் அமைத்துக் கொடுக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 4] [திரு. கார்த்திக் தொண்டைமான்]

புதுக்கோட்டை நகரிலுள்ள அரசு கூட்டுறவு அச்சகம் மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளது. அந்தக் கூட்டுறவு அச்சகத்திற்கு புதிய இயந்திரங்களை வழங்கி, அச்சகம் நல்ல முறையில் இயங்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை நகரில் பாரம்பரியமிக்க அரசு மாமன்னர் கல்லூரியின் மையக் கட்டடம் பழுதுடைந்துள்ளது. அதைச் சீர்செய்து கொடுக்கப் பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை நகரில் உள்ள அரசு மாமன்னர் கல்லூரி மற்றும் அரசு பெண்கள் கலைக் கல்லூரிகளில் மாணவ, மாணவியர்களின் தேவைக்கேற்ப கூடுதல் வகுப்பறை வசதிகள் செய்துகொடுக்கப் பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை நகரில் பூங்கா நகர், சத்தியமூர்த்தி மற்றும் ஆலங்குளம் ஹவுசிங் யூனிட்டுகளிலுள்ள அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் பழுதடைந்துள்ளதால், அதை இடித்துவிட்டு புதிதாக வாடகைக் குடியிருப்புகள் கட்டித்தர பணிவுடன் வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை அருகில் உள்ள வெள்ளாற்றில் மழைக் காலங்களில் வீணாகக் கடலில் கலக்கும் நீரைச் சேமிக்க ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட ஆவன செய்யப் பணிவுடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கன்னிப் பேச்சை ஒரு செய்தியோடு நிறைவு செய்கின்றேன்.

பிரம்மன் ஒரு உயிரை படைத்துக்கொண்டிருந்தான். அங்கு வந்த பராசக்தி தன்னிடம் உள்ள அன்பையெல்லாம் அந்த உயிருக்கு அருளி ஆசீர்வதித்தாள். இதை அறிந்த மகாலட்சுமி விரைந்து வந்து தன்னிடம் உள்ள அழகையெல்லாம் அந்த உயிருக்கு வழங்கினாள். அவற்றையெல்லாம் கண்ட சரஸ்வதி தேவி ஓடோடிவந்து தனது அறிவையெல்லாம் அந்த உயிருக்கு முழுமையாக வழங்கி பெருமைப்பட்டாள். அந்த உயிரின் தலையில் அந்த உயிர் அன்னை சந்தியா வயிற்றில் பிறக்கும் குழந்தை, புதிய பாரதத்தைப் படைக்கும் என்று எழுதினார் பிரம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அது யாராக இருக்க முடியும். இன்றைக்குத் தமிழகத்தை மூன்றாம் முறையாக ஆட்சி புரிந்துகொண்டு நாளைய பாரதத்தை வழிநடத்தவிருக்கும் எங்கள் அன்னையே நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இந்த

[திரு. கார்த்திக் தொண்டைமான்] [2013 ஏப்ரல் 4

நல்ல வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கின்றேன் அம்மா. நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

எட்டு திசையும் புகழ் பரப்புகின்ற பெருமை பெற்ற பேரறிஞர் அண்ணாவின் பெயரில் அண்ணா பல்கலைக்கழகம் துவக்கப்பட்டு, தமிழகத்தின் கடைக்கோடி மாவட்டம், கன்னியாகுமரி பகுதியில், கிராமப்புறங்களில் இருந்துகூட பொறியியல் கல்வி பயில வேண்டுமென்று வருகின்ற மாணவர்கள் சென்னைக்குத்தான் வரவேண்டுமென்ற நிலைமையை மாற்றி, அறிஞர் அண்ணாவினுடைய புகழ் நாடு முழுவதும் பரப்பிட வேண்டுமென்ற நோக்கத்திலும், நிருவாகச் சீர்கேட்டைத் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்திலும், பொறியியல் கல்லூரி மாணவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில் அண்ணா பல்கலைக்கழகத்தை தனித் தனி பல்கலைக்கழகங்களாக மதுரை, நெல்லை, கோவை, திருச்சி எனப் பிரித்து, பெருமை சேர்த்து, அதிகமான பல்கலைக்கழகங்கள் ஒரு மாநிலத்தில் இருந்தால் மத்திய அரசினுடைய யுஜிசி. நிதி, தொகுப்பு நிதி, அதிகம் கிட்டிட வேண்டுமென்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டது அந்தப் பல்கலைக்கழகம் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இன்று, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஆய்வுகளுக்கென்றே பிற கல்லூரிகளுக்குச் செல்வதற்கான காலமும், நேரமும்தான் ஆகிறதே தவிர, மாணவர்களுடைய கல்வித் தரம் எதிர்பார்க்கின்ற அளவில் இல்லை என்று மாணவர்கள் சொல்வதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு அன்றைக்கு

முதலமைச்சராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். அவர்கள், சென்னையில் இருக்கக்கூடிய கிண்டி பொறியியல் கல்லூரி, School of Architecture அழகப்பா கல்லூரி இதுபோன்ற கல்லூரிகளை ஒன்றிணைத்து அண்ணா பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்.

அதற்குப் பின்பு, அண்ணா பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்க்கவேண்டுமென்றும், அதற்குப் புகழை சேர்க்கவேண்டும் என்றும், இதை ஒரு பாரம்பரியமிக்க பல்கலைக்கழகமாக உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் எந்தெந்தக் கல்லூரி, எந்தெந்தப் பல்கலைக்கழகத்தோடு பொறியியல் கல்லூரிகள் எல்லாம் இருந்ததோ, அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு குடையின்கீழ் கொண்டுவந்த பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சேரும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் சொல்லலாம், பல்கலைக்கழகத்தை உருவாக்குவது என்பது பெரியது அல்ல. உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகத்தை ஒரு தரம்மிக்க பல்கலைக்கழகமாக, அதை சர்வதேச அளவிலே அதற்கென்று பெருமை சேர்க்கக்கூடிய பல்கலைக்கழகமாக, தரமான மாணவர்களை உருவாக்குகின்ற பல்கலைக்கழகமாக மாற்றவேண்டும். ஆனால், நீங்கள் உருவாக்கிய பல்கலைக்கழகங்கள் எல்லாம் தரத்தோடு இருந்தனவா? அதற்கான இடம்கூட இல்லை. மதுரையில் சொல்கிறீர்கள், அதற்கான இடம் இல்லை, கட்டடங்கள் இல்லை. அதேபோல் கோயம்புத்தூரில் சொல்கிறீர்கள் கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய ஒரு பல்கலைக்கழகம் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு கம்பெனியில், பஞ்சாலையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. பல்கலைகக்கழம் என்று சொன்னால் அதற்குத் தரமான கட்டடம் வேண்டும், உட்கட்டமைப்பு வசதிகள் வேண்டும், பார்ப்பதற்கு நல்லமுறையில் இருக்கவேண்டும், அங்கு கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய ஆண்கள், பெண்கள் போன்ற மாணவர்கள் நல்லமுறையில் பயன்பெறுகின்ற வகையில் இருக்கவேண்டும். ஆகவே, நீங்கள் தொடங்கிய பல்கலைக்கழகம் என்பது ஏதோ சுயநல நோக்கத்தோடு தொடங்கப்பட்டு இருக்கிறதே தவிர, தரம் காக்கப்படுகின்ற பல்கலைக்கழகம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

ஒரு காலத்தில் அண்ணா பல்கலைக்கழகம் என்று சொன்னால், உலகத்திலேயே இருக்கக்கூடிய 8,500 பல்கலைக்கழகங்களில் முதல் 200–க்குள் இருந்தது (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் இருந்தது. ஆனால், நீங்கள் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு இருந்த பெருமையையெல்லாம் குலைக்கின்ற வகையிலே, சிதறடித்து, சீரழித்து, நிரந்தரக் கட்டடம் இல்லாமல், நிரந்தர பேராசிரியர் இல்லாமல் இருந்த காரணத்தினால் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு இருந்த பெருமையே இன்று போயிருக்கிறது. மீண்டும் அந்தப் பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும். வெளிநாடு சென்றால்கூட, பன்னாட்டுக்குச் சென்றால்கூட, அந்த மாணவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தில் படித்தால் அதற்குப் பெருமை இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அங்கே இதுபோன்ற பல்கலைக்கழகத்தை தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை கல்லூரிகளையும் ஒன்றாக இணைத்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருச்சியைத் தவிர, வேறு எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் கட்டடம் கிடையாது. இட வசதிகள், ஆய்வு வசதிகள் போன்ற வசதிகளே கொடுக்கமுடியாத அரசு உங்களுடைய அரசு என்பதை நான் இந்த நேரத்தில் பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகம் பிரிக்கப்பட்டது ஏதோ ஒரு சுயநலத்திற்காகத்தான் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சுய நலத்திற்காகப் பிரிக்கப்பட்டது அல்ல. அதற்காக மரியாதைக்குரிய புகழ்பெற்ற திரு. குழந்தைசாமி, திரு. அனந்தகிருஷ்ணன் போன்ற கல்வியாளர்களைக் கொண்ட ஒரு கல்விக் குழுவை, நியமித்து அந்தக்குழு அரசுக்கு அறிக்கை தந்து, அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட நிலையில்—ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு தொடர்ந்து வருகிற ஆட்சியாளர்கள்தான் அதை தகுதிவாய்ந்த பல்கலைக்கழகமாக

2013 ஏப்ரல் 4] [முனைவர் கோவி. செழியன்]

மாற்றுகின்ற முயற்சியிலே இறங்கவேண்டுமே தவிர, திறந்து இருக்கிற பல்கலைக்கழகங்களை, செயல்படுகிற பல்கலைக்கழகங்களை ஒன்றிணைத்துக் கொண்டுவருவது என்பது அனைத்துத் தரப்பு மாணவர்களும் பாதிப்புக்குள்ளாகிற விஷயம் என்பதுதான் அரசின் கவனத்திற்கு நான் சொல்ல வருகிற செய்தி. இது குறையாகவோ, குற்றச்சாட்டாகவோ.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பல்கலைக்கழகத்தைப் பிரிக்கின்றபோது பொறியியல் கல்லூரி என்று சொன்னால் அதை—வேலைவாய்ப்புப் பெறக்கூடிய வகையிலே பொறியியல் கல்லூரியில் பாடம் படிக்கவேண்டும். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிப்பது என்பது வேறு. பொறியியல் கல்லூரியில் சேரவேண்டும் என்று சொன்னால், வேலைவாய்ப்பு நோக்கத்தோடு படித்து வேலை பெறவேண்டும். பன்னாட்டு வேலைக்குச் செல்கின்ற நோக்கத்தோடுதான் பொறியியல் கல்லூரி நடத்தப்படுகிறது. ஆகவே, பல்கலைக்கழகங்களைப் பிரிக்கின்றபோது அண்ணா பல்கலைக்கழகத்தில் இருக்கக்கூடிய தரம், அங்கே இருந்த பல்கலைக்கழகங்களில் இருந்ததா என்று ஒப்பிட்டுப் பார்த்தால் அது நிச்சயமாக இல்லை. இந்தப் பல்கலைக்கழகத்திற்குரிய பாடத் திட்டங்கள், இங்கு இருக்கக்கூடிய பயிற்சித் திட்டங்கள், கல்வி முறைகள் இதுபோன்ற அங்கு புதியதாக உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே, அண்ணா பல்கலைக்கழகத்தில் கிடைக்கக்கூடிய கல்வி, தரம் அத்தனைப் பல்கலைக்கழகத்திற்கும் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கப் பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தரம் உயர்த்தவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருங்கிணைத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

[2013 ஏப்ரல் 4

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கொடுத்த விளக்கத்தை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம். அவ்வளவு புகழ்பெற்ற அண்ணா பல்கலைக்கழகத்தில் தற்சமயம் துணைவேந்தர் பொறுப்பு காலியாக இருக்கிறது என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகம், தமிழகத்திலே இருக்கக்கூடிய சிதைந்து இருந்த பல்கலைக்கழகங்களையெல்லாம் இப்போது ஒன்றாக்கியிருக்கிறோம். ஒரு துணை வேந்தரை நியமிக்க வேண்டுமென்று சொன்னால், மூன்று பேர் கொண்ட ஒரு Search Committee இருக்கிறது; தேடுதல் குழு இருக்கிறது. அந்தத் தேடுதல் குழு என்பது, இப்பொழுது நம்முடைய Government nominee மூலமாக ஒரு பிரதிநிதியும், Governor nominee ஆக ஒரு பிரதிநிதியும், Syndicate nominee ஆக ஒரு பிரதிநிதியும் ஏற்கப்படவேண்டும். அந்தக் குழுமூலம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிடம் விண்ணப்பித்திருக்கிறார்கள். அந்தக் குழு முறையானவர்களை, தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து பல்கலைக்கழகத்திற்கு கூடிய விரைவிலே துணை வேந்தர் நியமிக்கப்படுவார் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: பகுத்தறிவு சுடரொளி, இனமான தந்தை பெரியார் அவர்கள் கிராமப்புறம் முன்னேற வேண்டுமானால், சமத்துவம் சமதர்ம நிலையில் நிலைக்க வேண்டுமேயானால், கல்வியால் மட்டும்தான் முடியும் என்று தன் 97 வயது வரை பிரச்சாரத்தில் ஈடுபட்டவர். அந்தப் பாதச் சுவடுகள் உள்ளடங்கிய இந்தத் தமிழகத்தில், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, சென்னை போன்ற இடங்களில்தான் கலை மற்றும் அறிவியில் கல்லூரிகள் இருந்த நிலைமையை மாற்றி, அனைத்து ஊர்களிலும் மாவட்டத் தலைநகரம் மற்றும்

2013 ஏப்ரல் 4] [முனைவர் கோவி. செழியன்]

நகராட்சிகளில் கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான், குறிப்பாக 1971 முதல் 1976 வரை பல்வேறுபட்ட கல்லூரிகளைத் திறந்து, உயர் கல்விக்கான வழிவகையைத் திறந்து வைத்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருந்தன்மையோடு பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தை இங்கே பதிய வைக்க விரும்புகிறார். கடந்த முறை, அதாவது சென்ற முறை மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட மொத்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் எவ்வளவு என்று உங்களால் சொல்ல முடியுமா? நீங்கள் தொடங்கியதே மொத்தம் 10 கல்லூரிகள் மட்டும்தான். ஆனால், இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்த இரண்டே ஆண்டுகளுக்குள்ளாக (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற முறை 22 கல்லூரிகளையும், இந்த முறை, நடந்து முடிந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தின் வாயிலாக 8 கல்லூரிகளையும், இதுவரையில் 30 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். இரண்டே ஆண்டுகளில் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு காரணம், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள்—இந்தக் கல்லூரியை நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், இதுவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் அரசு கலைக் கல்லூரி இருந்தது கிடையாது. இப்படி எந்தெந்த மாவட்டங்களில் எல்லாம் அரசு சார்ந்த கலைக் கல்லூரி இல்லையோ அந்த மாவட்டங்களில் எல்லாம் கண்ணுங்கருத்துமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே நேரடிக் கட்டுப்பாட்டில் எந்தெந்த இடத்தில் இதுபோன்று மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்து உயர் கல்வி கொடுக்க

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதுவரையில் வரலாற்றிலே இல்லாத அளவிற்கு கல்லூரிகளைத் திறந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்ற கல்லூரிகளைத் தொடங்கியதன் மூலமாகத்தான், இன்றைக்கு நம்முடைய Gross Enrolment Ratio இந்திய அளவிலே உயர்ந்திருக்கிறது. 19 சதவீதத்திற்கு வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடங்கப்பட்ட கல்லூரிகளினுடைய எண்ணிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலும் நாங்களும் படித்தோம். ஆனால், கல்லூரிகளை கிராமப்புறங்களில், தலைநகரங்களில், மாவட்டத் தலைநகரங்களில் என்று பெரும் பெரும் நகரங்களில் இருந்ததை மாற்றி, பரவலாக பல கல்லூரிகளைத் திறந்தது என்பதுதான் என்னுடைய செய்தியே தவிர, வேறு மாற்று செய்தியைச் சொல்ல விரும்பவில்லை. அது 71 ஆம் ஆண்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நகர்ப்புறங்களில் கல்லூரிகள் திறக்கப்படுவதாகத் தெரிவித்தார். இதுவரையிலே நகர்ப்புறத்திலே, சென்னையிலே ஒரு கல்லூரிகூட நாம் திறக்கவில்லை. கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மாணவர்கள், பொருளாதாரத்திலே பின்தங்கிய மாணவர்கள், குறிப்பாக ஏழையெளிய மாணவர்கள் அத்தனை பேர்களும் கல்வி கற்க வேண்டுமென்று சொல்லித்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை கல்லூரிகளும் கிராமப்புறங்களிலேதான் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. உரையை முடியுங்கள். நான் அவையை நடத்தி முடிக்க வேண்டும். உரையை முடியுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செய்திதான் இருக்கிறது. குடும்பத்திற்கு ஒரு பட்டதாரி தேவை. ஏழையெளிய மக்களுடைய பிள்ளைகள் அந்தப் பொறியாளர் பட்டம் கிடைக்காமல் கிடந்து தவிக்கிறானே எனக்கருகி, உலகத்திலேயே முதன்முறையாக நாங்கள் பல செய்திகளைச் சொன்னோம், செய்தோம் என்று இந்த அவையின் பாராட்டுதலை இந்த அரசு பெற்றிருந்தாலும்கூட, பட்டதாரி இல்லாத குடும்பத்தில், முதல் பட்டதாரிக்கு பொறியியல் கல்லூரியில் இடம் தந்து, அதற்குரிய கல்விக் கட்டணத்தையும் தந்தது கழக அரசு, தி.மு.க. அரசு, டாக்டர் கலைஞர் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதைத் தொடர்ந்து இந்த ஆண்டும், இந்த அரசு அதற்கென ஒரு நிதியை, 518 கோடி ரூபாய் அளவில் ஒதுக்கியிருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிபிடப்பட்டிருக்கிறது. அதை இன்னும் கூடுதலாக தந்து கலைஞருடைய திட்டத்தைப் பலப்படுத்துமாறும் இந்த அரசைப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–30

அதைப்போல இட ஒதுக்கீட்டு முறையில் மாணவர் சேர்க்கை செயல்படுத்தப்படவில்லை என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து. பொது quota OC என்று சொல்லுகிற இடத்தில் தகுதி படைத்த ஆதி திராவிட மாணவன் SC quota–வைச் சார்ந்தவர் அல்லது BC quota–வைச் சார்ந்தவர் அல்லது MBC quota–வைச் சார்ந்தவர், தன்னுடைய அறிவால், பயிற்சியால், பெற்ற பாடக் கல்வியால், பொதுக் கேள்வியில், பொதுத் தேர்வில் அவன் தேர்ச்சி பெற்றுவிட்டால் அவன் சார்ந்திருக்கிற கோட்டாவில் அந்த இடம் குறைக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இங்கே

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு 523 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இத்திட்டத்திற்காக மட்டும் இந்த ஆண்டு 673 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இட ஒதுக்கீட்டு முறையில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார். அது முற்றிலும் தவறானது. தமிழகத்திலே அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் இட ஒதுக்கீடு என்னென்ன முறையில் வகுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அடிப்படையில்தான், சிறப்பான முறையிலே மாணவர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அண்ணா தொழிலநுட்பப் பல்கலைக்கழகத்தில் V.I.P. Quota என்ற முறையில், தகுதி மதிப்பெண் இல்லாத மாணவர்களுக்கு எல்லாம் இடம் ஒதுக்கப்பட்டு, ஓர் ஆண்டிற்கு கிட்டத்தட்ட 200, 300 என்ற வகையில் இடம் ஒதுக்கப்பட்டது. இவற்றையெல்லாம் மாற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், தகுதியுடைய மதிப்பெண் பெற்றிருந்த மாணவர்களுக்கு மட்டும்தான் இடம் ஒதுக்கவேண்டும் என்ற நிலையை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) V.I.P. Quota–வை முழுவதுமாக இரத்து செய்து, உரிய மதிப்பெண் பெற்றிருந்தால் அவர்களுக்கு உரிய இடம் கிடைப்பதற்கு வழிவகை செய்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதனை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த முறை நீங்கள் ஆட்சியில் இருந்தபோதுகூட, நாங்கள் அந்தக் குற்றச்சாட்டை இங்கே வைத்தோம். தகுதி இல்லாத, திரு. ஆற்காடு நா. வீராசாமியினுடைய பேரனுக்குக்கூட அங்கே இடமளிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையெல்லாம் நாங்கள் சொன்னோம் என்பதை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். நான் உங்களை அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) இல்லை, நான் உங்களை அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களை அனுமதிக்கவில்லை, இப்போது நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? நான் முனைவர் கோவி. செழியன் அவர்களைப் பேச அழைத்தேன். முனைவர் கோவி. செழியன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் இந்தமாதிரி பேசாதீர்கள், உட்காருங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு நடந்தபொழுது, மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் அதற்கு முன் அ.இ.அ.தி.மு.க. அரசு ஆண்டபொழுது எந்த நிலையில் இருந்ததோ, அதை 5 ஆண்டுக் காலம் ஆண்ட தி.மு.க. அரசு மாணவர்களுக்கு உயர்த்தாமல், மாணவர்களைப் பாதுகாத்தது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் என்ற கல்விக் கட்டணத்தை அதிகரித்தது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் நிர்ணயிப்பது என்பது அரசு கிடையாது. தனியார் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் நிர்ணயிப்பது அதற்கென கட்டணக் கல்விக் குழு இருக்கிறது. ஓய்வுபெற்ற நீதிபதி திரு. பாலசுப்பிரமணியன் தலைமையிலே ஒரு கட்டணக் கமிட்டி இருக்கிறது. கட்டணத்தை நிர்ணயிக்கக் கூடிய அந்தக் கல்விக் குழுவின் மூலமாக அந்தக் கல்லூரியில் மனு செய்திருந்து, 10 ஆண்டுகளாக இந்தக் கட்டணம் உயர்த்தப்படவில்லை, இதை உயர்த்தியாக வேண்டும், தற்போது இருக்கக்கூடிய சம்பள விகிதம், கல்லூரி பேராசிரியர்கள் சம்பள விகிதம் மாறியிருக்கிறது என்று அவர் கோரிக்கை வைத்திருக்கிறார். அதனப்படையிலேதான் அதற்கென இருக்கக்கூடிய கல்விக் கட்டணக் குழுதான் இதை நிர்ணயிக்கிறதேயொழிய, அரசு இதை நிர்ணயிப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அரசுக் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கு ஏற்கெனவே என்ன கட்டணம் இருந்ததோ, அந்தக் கட்டணத்தைத்தான் இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், உரையை ஒரு நிமிடத்தில் முடியுங்கள். 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையில்லா மடிக்கணினி மாணவர்களுக்கு வழங்கப்படும் என்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகள் அல்லது மருத்துவக் கல்லூரிகளில் ஆதி திராவிடர், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள் படிக்கிறார்கள். அவர்கள் படிக்கிற காலக்கட்டத்தில் அவர்களுடைய வருவாய் குறைந்திருக்கக்கூடிய சில நேரங்களிலே உயர் கல்வியில் சேர்ந்தால்கூட, பண வசதி இல்லாததன் காரணமாக பாதியிலே நிற்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதை அறிந்துதான் உயர் கல்வியில் சேர்ந்திருக்கக்கூடிய மாணவர்கள் தொடர்ந்து படிக்க வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும், பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற ஓர் அடிப்படையை மையமாக வைத்துக்கொண்டுதான், இந்தியாவிலே இல்லாத அளவிற்கு முதல் முறையாக பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கக்கூடிய ஏழையெளிய ஆதி திராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிறிஸ்தவ ஆதி திராவிட மாணவ, மாணவிகளின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் இரண்டு இலட்சம் ரூபாய் அளவில் குறைவாக இருந்தால் அவர்களுக்கு முழுக் கட்டணம். அதாவது, அரசுக் கல்லூரியில் மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் கல்லூரிகளில்கூட அரசு ஒதுக்கீடாகச் சென்றாலும் சரி அல்லது மேனேஜ்மென்ட் கோட்டாவில் சென்றாலும் சரி, அவர்களுக்குக்கூட முழுக் கட்டணத்தை வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

பிற்பகல் 12–35

ஆகவே, என்றைக்குமே வழங்குகிறோமோ மாணவர்களுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களை—எப்படி மடிக்கணினி வழங்குகிறோமோ, எப்படி ஸ்காலர்ஷிப் வழங்குகிறோமோ, எப்படி ஊக்கத் தொகை வழங்குகிறோமோ இதுபோன்ற பல்வேறுபட்ட சலுகைகளை வழங்குகிற ஒரே ஓர் அரசு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களைப் பாதுகாத்தது அவர்களுடைய தி.மு.க. அரசு என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது மாணவர்களை எந்த லட்சணத்தில் அந்த தி.மு.க. அரசு காத்தது என்பதை அனைவரும் அறிவோம்.

இங்கே, சென்னை சட்டக் கல்லூரியில் மாணவர்களைவிட்டே மாணவர்களை அடிக்க வைத்து, காவல் துறையினரை வேடிக்கை பார்க்க வைத்து செயல்படவிடாமல், மாணவர்கள் கிட்டத்தட்ட குற்றுயிரும், குலையுயிருமாகக் கிடந்து, உயிரே போகின்ற அளவுக்கு அவர்களை அடிக்க வைத்தது இவர்களுடைய அரசு. அந்த லட்சணத்தில்தான் இவர்கள் மாணவர்களைப் பாதுகாத்தார்கள்; எப்படிப் பாதுகாத்தார்கள் என்பதை இந்த நாடே தொலைக்காட்சியில் பார்த்தது, பத்திரிகையில் பார்த்தது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்து உட்காருங்கள்; இல்லையென்றால் நான் வேறு உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும்.

முனைவர் கோவி. செழியன்: கடைசி செய்தியாக ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். குற்றச்சாட்டுகள் இல்லாமல், கவனப்படுத்த வேண்டிய செய்திகளைத்தான் நாங்களும் பக்குவமாகச் சொல்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அரசுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முனைவர் கோவி. செழியன்] [2013 ஏப்ரல் 4

விலையில்லா மடிக்கணினி எல்லா மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்கிற அறிவிப்புக்கிணங்க, லண்டனில்கூட ஒரு மாணவி முதல்வரைப் பாராட்டினார் என்ற செய்திகளையெல்லாம் சொன்னார்கள். அது தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிற பெருமைதான். ஆனால், கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் எங்கள் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் எ.வ. வேலு அவர்கள் உரையாற்றும்போது. மடிக்கணினி மாணவர்களுக்கு சரியாக விநியோகிக்கவில்லை என்று பேச ஆரம்பித்த நேரத்தில். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுந்து குறுக்கிட்டு, உலகளாவிய, தரம் வாய்ந்த ஒப்பந்தம் கோரப்பட்டு அதற்குரிய விவரப்படி மடிக்கணினி வழங்கப்படுமென்று இந்த அவையிலே கடந்த ஆண்டு அறிவித்தார்கள். இப்போதும், மாமன்ற உறுப்பினர் பேசும்போது. அதே கருத்தை அமைச்சர் அவர்களும் தெரிவித்தார்கள். ஆனால், திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி கிடைக்கவில்லையென்று வீதியில் நின்று போராடுகிற சம்பவத்தையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகள் இவற்றில் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு மடிக்கணினி வழங்கப்படுமென்று இந்த அரசு அறிவித்தது, அதுதான் இந்த அரசினுடைய திட்டம்.

அனைத்து மாணவ மாணவியருக்கும் ஒரே சமயத்தில், ஒரே நேரத்தில் மடிக்கணினி வழங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால், சப்ளை செய்வதற்கு அந்த அளவிற்கு டெண்டர் விடுகின்ற கம்பெனிகளுக்குச் சக்தியில்லை. இந்த மடிக் கணினிகளை அரசு உற்பத்திச் செய்யவில்லை. டெண்டர் விடுகிறோம். இந்த டெண்டரில் பங்குகொள்ளும் நிறுவனங்களுக்கு ஆர்டர் வழங்கப்படுகிறது. ஆகவே, படிப்படியாகத்தான் இந்த டெண்டர் எடுக்கும் கம்பெனிகளால், ஆர்டர் கொடுக்கப்படும் கம்பெனிகளால் சப்ளை செய்ய முடிகிறது. இதில் கடந்த ஆண்டு தைவான் நாட்டில் இருந்துதான் இந்த கம்பெனிகள் அனைத்துமே

hard disk எனப்படும் அந்தப் பொருளை வரவழைக்கின்றனர். அந்த hard disk-ஐ வைத்துதான் கம்ப்யூட்டரே செய்யப்படுகிறது. ஆகவே, அங்கே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், தொழிற்சாலைக்குள் வெள்ளநீர் புகுந்துவிட்டதால் பல மாதங்களுக்கு தைவான் நாட்டில் hard disk உற்பத்தி செய்யவே முடியவில்லை. ஆகவே, காலதாமதம் ஏற்பட்டது. எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஒரே நேரத்தில் மடிக்கணினி வழங்குவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) விருப்பம் இருக்கிறது. வழங்குவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், சப்ளை செய்கின்ற நிறுவனங்களால் படிப்படியாகத்தான் சப்ளை செய்ய முடிகிறது. ஆகவே, நமக்கு மடிக்கணினிகள் வர, வர சப்ளை செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். 20 நிமிடங்களுக்குமேல் ஆகிவிட்டன. நேரமில்லை. புதிய சப்ஜெக்ட்டுக்குச் செல்லாதீர்கள், உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12–40

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் 14 ஆண்டுகாலமாக பணிபுரிகின்ற ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கின்ற கோரிக்கையை . . . (குறுக்கீடு) என் தொகுதி கோரிக்கையைச் சொல்லி முடித்துவிடுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், உரையை முடியுங்கள். இல்லையென்றால் நான் வேறு உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கின்ற பணியாளர்களுக்கு அரசு கருணை காட்டி பணி நிரந்தரம் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது திருவிடைமருதூர் சட்டப் பேரவைத் தொகுதியில் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 4

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒரு கருத்தை நான் கூற விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த சமூகம் மேம்படுவதற்காக பல்வேறு திட்டங்களின் வாயிலாக கொடுக்கின்ற பொருள்களை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விமர்சனம் செய்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்திலே, தொலைக்காட்சிப் பெட்டியைக் கொடுத்தார்களே, அந்த தொலைக்காட்சிப் பெட்டி போட்டவுடனேயே வெடித்ததே– அப்படிப்பட்ட பொருள்களையா நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இலட்சக்கணக்கான குழந்தைகள், மடிக்கணினியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்க? கோடிக்கணக்கான ஏழை எளிய சகோதரிகள் விலையில்லாமல் கொடுக்கக்கூடிய மிக்ஸி, கிரைண்டர், ஃபேன் – இவற்றையெல்லாம் எடுத்துச்சென்று (மேசையைத் தட்டும் ஒலி) மருமகன் வருகின்றான் என்று வைத்துக்கொள்ளுங்கள், மருமகனுக்கு அழகான அறுசுவை உணவை ஒரு மணி நேரத்திலேயே செய்து, அந்த அன்புச் சகோதரி எவ்வளவு மகிழ்ச்சியாக உணவு பரிமாறுகிறார். அந்தச் சகோதரிகளுக்குக் கொடுக்கப்பட்ட பொருள்கள் உத்தரவாதத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவர்கள் கொடுத்த பொருளைப்போல, வைத்தவுடனேயே வெடிக்கின்ற பொருள் எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்த பொருள்கள் அல்ல. அவை சமுதாயத்திலே அவர்கள் மேம்படுவதற்காக கொடுக்கப்படுகின்ற பொருள்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் எழுந்திருக்கக் கூடாது. உட்காருங்கள். முனைவர் கோவி. செழியன், நீங்கள் ஒரு நிமிடத்தில் முடிக்கின்றீர்களா, இல்லையா? வேறு சப்ஜெக்ட்டுக்குப் போகக் கூடாது. வேறு சப்ஜெக்ட்டுக்குப் போவதாக இருந்தால் பேச முடியாது. இப்போது உரையை முடியுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாணவர்களுடைய போராட்டத்திற்குப்

2013 ஏப்ரல் 4] [முனைவர் கோவி. செழியன்]

பிறகு பொறியியல் கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தேர்விற்கான கால அட்டவணையையும் அறிவித்திருக்கின்றார்கள். படிக்கின்ற மாணவர்கள் 85 நாட்கள் முதல் 95 நாட்கள் வரை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், நீங்கள் உரையை முடியுங்கள். நேரம் அதிகமாகிக்கொண்டிருக்கின்றது, நான் 2–00 மணிக்குள் அவையை முடிக்க வேண்டும்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் போராட்டத்தைக் கருதி, தேர்வை சற்றுத் தள்ளி வைத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குப் பயனாக இருக்கும். அதன்மூலம் அரசு இன்னும் பெருமைபெறும் என்பதற்கான யோசனையைத்தான் சொல்ல வருகிறோம். நாங்கள் தவறோ, குற்றச்சாட்டோ சொல்லவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பருவ முறைகளில் கல்லூரிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. முதல் பருவம், இரண்டாம் பருவம். முதல் பருவத்திற்கு 90 நாட்கள் மாணவர் வருகை இருக்க வேண்டும். அதேபோல இரண்டாம் பருவத்திற்கு 90 நாட்கள் மாணவர்கள் வருகை இருக்க வேண்டும். அது தற்போது இந்த மாணவர்களின் போராட்டத்தால் 5 அல்லது 6 நாட்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிகமான நாட்கள் பாதிக்கப்படவில்லை. ஆகவே, பல்கலைக்கழக நிருவாகங்கள் அந்த பாதிக்கப்பட்ட நாட்களைக் கணக்கில்கொண்டு, சனி மற்றும் ஞாயிறு நாட்களில்கூட–நேரம் எவ்வளவு இருக்கின்றதோ, அதைப் பயன்படுத்தி தேர்வு பாதிக்கப்படாத வண்ணம், எதிர்காலத்தில் மாணவர்கள் மேல்படிப்புக்குச் செல்லக்கூடிய வண்ணம் இந்த தேர்வுகள் நடத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, மாணவர்கள் இதனால் நிச்சயமாக பாதிக்கப்படமாட்டார்கள். குறிப்பிட்ட காலகட்டத்தில், அந்த நாட்களைச் சரிசெய்து, தேர்வு நடத்தி, மாணவர்கள் வெற்றி பெற்று மேல்படிப்பிற்குச் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பை அரசு உருவாக்கித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், நீங்கள் உரையை முடிப்பதாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், உங்கள் தொகுதி கோரிக்கைகளை எழுதிக்கொடுங்கள், அவற்றை record செய்துகொள்ளலாம். (குறுக்கீடு) எழுதிக்கொடுங்கள், நான் record பண்ணிக்கொள்ளச் சொல்கிறேன். திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே (குறுக்கீடு) என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் பேச ஆரம்பித்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள். திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி மானியக் கோரிக்கையின்மீது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், நீங்கள் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுவீர்களா? உரையைக் முடிக்கின்றீர்களா? (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியைப் பற்றி சொல்ல விழைகிறேன். மற்றபடி வேறு ஒன்றுமில்லை. திருவிடைமருதூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட மாணவர்கள் கல்லூரிப் படிப்பை படிக்க வேண்டுமானால், கும்பகோணம் அல்லது மயிலாடுதுறை அல்லது மன்னார்குடி இல்லையென்றால் அரியலூர் என்று 40–50 கிலோ

2013 ஏப்ரல் 4] [முனைவர் கோவி. செழியன்]

மீட்டர் தாண்டித்தான் செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அது 15 கிலோ மீட்டர். எனவே, ஒரு கல்லூரியை எனது தொகுதியில் அமைத்துத்தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன். 90 பக்கம் கொண்ட இந்த நிதிநிலை அறிக்கை புத்தகத்தை படித்துப் படித்துப் பார்த்தேன். உயர் கல்விக்கு இந்த அரசு தருகின்ற . . .

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் புதியதாக வேறு ஏதோ சப்ஜெக்ட்டுக்குள் போகிறீர்கள். உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புக் கொடுத்ததை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: எனவே, 90 பக்கம் கொண்ட அந்த நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் உயர் கல்விக்கு இந்த அரசு தந்திருக்கின்ற அங்கீகாரமும், பெருமையும் வெறும் 17 வரிகள் மட்டும் என்பதைச் சொல்லி, என் கருத்தை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

*__திரு. க. பாலகிருஷ்ணன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கருத்துகளை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். உயர் கல்வியிலே தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும் என்ற நோக்கத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், ஓர் அரசுக் கல்லூரியையும் திறந்தது மட்டுமல்லாமல், மேலும், 10 தொழில்நுட்பக் கல்லூரிகளையும், இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகளையும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறுகிய காலத்தில் இந்த அளவிற்குக் கல்லூரிகளைத் திறந்திருப்பது நல்ல செய்தி என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 ஏப்ரல் 4

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல ஆண்டுகாலமாக இப்படிப்பட்ட அணுகுமுறை இல்லாத காரணத்தினால், அரசுக் கல்லூரிகள், அரசு உதவிபெறும் கல்லூரிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து, தனியார் சுயநிதிக் கல்லூரிகள்தான் இன்றைக்குத் தமிழகத்தில் மிக அதிகமான எண்ணிக்கையிலே இருக்கின்றன என்ற விவரங்கள் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. நான் விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. எனவே, சுயநிதிக் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபொழுது, அதில் படிக்கின்ற மாணவர்கள் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவழித்துத்தான் படிக்கவேண்டும் என்ற நிலைமையை, அந்த சிரமத்தை வரக்கூடிய ஆண்டுகளிலாவது போக்க வேண்டும். கல்வி என்பது இன்றைக்குத் தனியார்மயமாகின்ற . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளில் தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார். அவை பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக இருந்தாலும் சரி, அரசுக் கல்லூரியாக இருந்தாலும் சரி, கல்லூரிக் கட்டணம் இல்லாத வகையில்தான் இந்தக் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், நமது சட்டமன்ற உறுப்பினர்கூட அடிக்கடி சொல்லி வருகிறார்–அரசு உறுப்புக் கல்லூரியாக அல்லாமல் அரசுக் கல்லூரியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அதுமட்டுமல்ல, திறக்கப்படும் கல்லூரிகளில் மாணவர்கள் நலன் கருதி கட்டணம் இல்லாமல் கல்வி வழங்கவேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் சமீபத்தில் நடந்து முடிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள்

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

கூட்டத்திலே 8 அரசுக் கல்லூரிகளைத் தொடங்கவிருப்பதாக அறிவித்தார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக தமிழகத்திலே இப்படிப்பட்ட அணுகுமுறை இல்லாத காரணத்தினால்தான், அரசுக் கல்லூரிகள், அரசு உதவிபெறும் கல்லூரிகளின் எண்ணிக்கை குறைந்து, சுயநிதிக் கல்லூரிகள் மிக அதிகமாக உயர்ந்திருக்கின்ற விவரங்கள் அறிக்கையிலேயே இருக்கின்றன. எனவே, வரக்கூடிய காலங்களில் அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த மானியக் கோரிக்கையில் கல்லூரிகளின் உட்கட்டமைப்பை வலுப்படுத்துகின்ற முறையில் சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சிதம்பரம் அரசு கலைக் கல்லூரிக்கு வகுப்பறைகள் கட்டுவதற்காக 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு பல்வேறு துறைகளில் இந்த நாட்டை எப்படி நாசமாக்குகின்றதோ, அதேபோன்று கல்வித் துறையிலும், கல்விக் கொள்கைகளிலும் நாசகரமான கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. குறிப்பாக, இன்றையதினம் நீங்கள் பார்த்தீர்களானால், நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்ற ஒன்றை உருவாக்கி, அந்தப் பல்கலைக் கழகத்திலே யாருமே தலையிட முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி, அங்கே என்ன நடைபெறுகிறது என்பதைப் பற்றி மாநில அரசும் கவலைப்பட முடியாமல், மாநில அரசுக்குச் சம்பந்தமே இல்லாத நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களே அனுமதி கொடுத்த 16 நிகர்நிலை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி இரத்து செய்யப்பட்டு, அது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் இருந்துகொண்டிருக்கின்றன.

பிற்பகல் 12–50

இப்போது, 'உயர்நிலைக் கல்விச் சீர்திருத்தக் குழு' என்கிற ஒரு குழுவை உருவாக்கி, துணைவேந்தர்களைக்கூட இன்றைக்கு

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 ஏப்ரல் 4

அந்தக் குழுதான் நியமிக்கும் என்ற அளவுக்கு ஒரு மசோதாவைக் கொண்டுவரவிருக்கிறார்கள். எனவே, தமிழக அரசு மத்திய அரசினுடைய பல்வேறு திட்டங்களை எதிர்ப்பதைப்போல, இந்தக் கல்விக் கொள்கையை எதிர்ப்பது மட்டுமல்ல, இந்தக் கல்விக் கொள்கையை எதிர்ப்பதோடு, நாட்டிலே பல்வேறு மாநிலங்களிலே இப்படி இருக்கிற எதிர்ப்புக் கருத்துகளையெல்லாம் ஒருங்கிணைத்து, ஒரு ஒட்டுமொத்தமான எதிர்ப்பினை மத்திய அரசுக்கு உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நீண்ட நெடிய வரலாறு கொண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பிரச்சினையிலே தலையிட்டு நடவடிக்கை எடுப்பதற்காக அங்கே இருக்கிற 15,000–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், ஊழியர்களின் சார்பிலே சிதம்பரம் பகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய நிருவாகத்தினுடைய தவறான நிதி ஒழுங்கீனத்தின் காரணமாக நிதி நெருக்கடி ஏற்பட்டு, இன்றைக்கு ஆசிரியர்கள், ஊழியர்கள் பாதிக்கப்படுவார்கள் என்கிற கவலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை முன்னுக்கு வந்தவுடன், தமிழக அரசு தலையிட்டு ஒரு தணிக்கைக் குழுவை அமைத்து, அந்தத் தணிக்கைக் குழுவினுடைய அறிக்கையைப் பெற்று, அந்த அறிக்கையின் அடிப்படையிலே நம்முடைய உயர் கல்வித் துறையினுடைய முதன்மைச் செயலாளர் அவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு 12 அம்சங்களைக் கொண்ட ஒரு கடிதத்தை எழுதி, இதன்மீது சென்ட், சின்டிகேட் என்கிற அவர்களுடைய கருத்துகளைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களும் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கடிதத்திலே மிக அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கண்ட தவறான malpractices—ஒழுங்கீனங்கள் எல்லாம் பல்கலைக்கழகத்தினுடைய Founder–க்கு வழங்கப்பட்டிருக்கிற நிதி அதிகார துஷ்பிரயோகத்தின் மூலமாக நடைபெற்றிருக்கிறதென்பதை முதன்மைச் செயலாளர் குறிப்பிட்டிருக்கிறார். இவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு, Founder–க்கு வழங்கப்பட்டிருக்கிற அந்த அதிகாரங்களைத் திருத்துகிற முறையிலே சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்கிற விவரங்களையும் அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இன்றைக்கு மாண்புமிகு தமிழக

2013 ஏப்ரல் 4] [திரு. க. பாலகிருஷ்ணன்]

முதல்வரைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், 15,000–க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், ஊழியர்கள், ஏறக்குறைய ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தொலைதூரக் கல்வியில் அங்கே படிக்கிற மாணவர்கள், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சிதம்பரம் நகர மக்களுடைய வாழ்வாதாரமாக இருக்கிற அந்தப் பல்கலைக்கழகத்தைப் பாதுகாக்க வேண்டிய மிக முக்கியமான கடமையும், பொறுப்பும் நமக்கு இருக்கிறது. புகழ் பெற்ற அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய புகழை மேலும் உயர்த்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த வகையில் அந்தக் கடிதத்திலே சொல்லியிருக்கிற அடிப்படையிலே, எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் இணையான நிருவாக அமைப்பை உருவாக்கிற வகையில் அந்தப் பல்கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், கடைநிலை ஊழியர்களுடைய நலன் பாதிக்காத வகையிலே, அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய நிதி நிலையைச் சரிசெய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடுதலான நிதியைக்கூட ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, கோவையிலே இருக்கிற பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு 1982 ஆம் ஆண்டு 994 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. அதற்கு இதுவரையிலே நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை. 2007 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பிறகும்கூட, 6 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே நஷ்ட ஈடு வழங்காத காரணத்தினால் அந்த நிலத்தைக் கொடுத்த விவசாயிகள் 30 ஆண்டுக் காலமாக நஷ்ட ஈடு இல்லாமல் கஷ்டத்திலே இருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு அந்த விவசாயிகளைப் பாதுகாக்கக்கூடிய முறையில், அவர்களுக்கு நஷ்ட ஈட்டைக் கொடுத்து அந்த விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத சூழ்நிலையிலே இருப்பவர்களுக்குத்தான் தமிழக அரசு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், 1984 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார். அப்பொழுது அந்தப் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான நிலங்களை எடுப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது. அப்போது அரசு அந்த இடத்திலே, அந்த நிலத்திற்கு என்ன value இருந்ததோ அந்த value-வை fix செய்து, அவர்களுக்குப் பணம் வழங்கப்பட்டது. சிலர், தங்கள் நிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிற நிதி போதவில்லை என்று சொல்லி, நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகு, நீண்ட காலமாக நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருந்தது. இந்தச் சூழ்நிலையில் இதற்கு உரிய இழப்பீட்டுத் தொகை வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே இன்றைக்கு நம்முடைய அரசின் கவனத்திற்கு வந்த பின்பு, நில உரிமையாளர்களின் கோரிக்கைகளை ஆய்ந்து, மேற்படி வழக்குகள் தொடர்பான விவரங்களுடன் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உயர் இழப்பீட்டுத் தொகையினைக் கணக்கிட்டு உரிய கணக்கீட்டு தாள்களுடன் முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர் மூலமாக உடன் அரசுக்கு அனுப்ப கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

பிற்பகல் 12–55

இந்நேர்வு தொடர்பான கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கை முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர்மூலம் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, மேற்படி 20 வழக்குகளில் உள்ள நில உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கும், மேல் முறையீட்டு மனுக்கள்மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியும் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியிருந்தார். அதனை நிதித் துறையுடன் கலந்து ஆய்வு செய்து, உடன் உரிய அரசாணை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்மேல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், அவ்வழக்கில் தொடர்புடைய நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

2 கோடியே 21 இலட்சத்து 4 ஆயிரத்து 771 ரூபாயை வழங்கியும், ஒருவரைத் தவிர மீதமுள்ள மற்ற 19 வழக்குகளுக்கு 40 கோடியே 20 இலட்சத்து 47 ஆயிரத்து 754 ரூபாய் வழங்கியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி தொகை பாரதியார் பல்கலைக்கழகம்மூலம் உரிய நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து, அந்த நீதிமன்றம்மூலம் நில உரிமையாளர்களுக்கு கூடிய விரைவில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்குவதற்கு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளைப் பற்றி அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீதமிருக்கிற அனைத்து விவசாயிகளுக்கும்கூட அதை உடனடியாக வழங்கி, அந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது P & A.R. Department மூலம் வழங்கப்பட்ட அரசாணை எண் 107–ல், இந்த திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின்மூலம் பட்டம் பெறுகிறவர்களுக்கு அரசுப் பணியில் சேருவதற்குத் தடை விதித்து, பணியிலேயிருந்தால் அவர்களுக்குப் பதவி உயர்வு கிடையாது என்கிற அடிப்படையிலே உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு எல்லாத் தகுதியும் உண்டு என்று அந்த அரசாணை வழங்கியிருக்கிறார்கள். எனவே, அந்த அரசாணை 107 என்பதை இரத்து செய்து, (மணியடிக்கப்பெற்றது) திறந்தவெளிப் பல்கலைக்கழகத்திலே நம்முடைய இப்போதைய முதலமைச்சர், கடந்த ஆட்சியின்போது போட்ட அந்த ஆணையின் அடிப்படையில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தை

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

2002 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே தொடங்கினார்கள். அது இந்தியாவிலே தொடங்கப்பட்ட பத்தாவது திறந்தநிலைப் பல்கலைக்கழகமாகும். இந்தப் பல்கலைக்கழகம் திறந்ததன் காரணம் என்னவென்று சொன்னால், கிராமப்புறங்களிலே வறுமையின் காரணமாகவோ அல்லது குடும்பச் சூழ்நிலையின் காரணமாகவோ படிக்க முடியாதவர்கள் தொடர்ந்து உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்தப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அங்கே சில சட்ட திட்டங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. கல்வியைப் பொறுத்தவரையில் நாம் இரண்டு முறைகளில் கல்வியைப் பெறுகிறோம். ஒன்று formal முறை. அதாவது regular–ஆக படிக்கக்கூடியது. 10 ஆம் வகுப்பு முடிந்து, 12 ஆம் வகுப்பு முடிந்து பின்பு கல்லூரிப் படிப்பில் சேர்வது. மற்றொன்று, இடையிலே யாராவது படிக்கவில்லை என்று சொன்னால், அவர்கள் 10 ஆம் வகுப்பு படிக்கவில்லை என்று சொன்னால்கூட, 8 ஆம் வகுப்பு படிக்கக்கூடியவர்கள்கூட மேற்கல்வி படிக்க வேண்டும், பட்டப் படிப்பு அல்லது பட்ட மேற்படிப்பிற்கான கல்வி கற்க வேண்டுமென்று நோக்கம் இருந்தால், அவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பம் செய்து, இடையிலே பிரிட்ஜ் கோர்ஸ் என்று சொல்வார்கள்–ஒரு தேர்வு நடத்தி அதன்மூலம் அங்கே தேர்வு பெறுகிற வாய்ப்பு. இவற்றைப் பொறுத்தவரையில் முதன்முதலாக இதுபோன்ற non formal method–ல்கூட படிக்கிற மாணவர்களுக்கு ஒரு காலத்தில் வேலைவாய்ப்பு இருந்தது. அது இடையிலே பணி மூப்புவருகிற காலகட்டத்திலும் அல்லது புதிதாக வேலைவாய்ப்புக்குச் செல்கிற காலகட்டத்திலும், ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்று இந்தக் கல்வி பொருந்துமா என்று கேட்டபோது, அதற்கு அந்த நேரத்தில் தகுதிச் சான்று வழங்கக்கூடியவர்கள் formal method, regular–ஆக பத்தாம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு முடித்து பட்டம் படிப்பவர்களுக்கு மட்டும் இது தகுதியிலே இருக்கும். unformal–ஆக படிக்கக்கூடியவர்கள், அதாவது, 8 ஆம் வகுப்பிலிருந்து நேரடியாகப் பட்டப் படிப்பு படிக்கிறவர்களுக்கு இதுபோன்ற தகுதி இருக்காது. பட்டம் வேண்டுமானால் பெற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு நிலையில் அன்றைக்குத் தீர்ப்பு வந்தது. அன்றைக்கு மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அன்றைக்கு இருந்த அமைச்சர் அவர்கள் அரசாணை எண் 107 என்ற ஒரு ஆணையை

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

வெளியிட்டு இதன்மூலம் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை, பொருந்தாது என்று கூறினார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, வாய்ப்பு இருக்கிறபட்சத்தில் அதிலே மற்ற திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களில் இதுபோன்ற அரசு விதிமுறைகள் இருந்தால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு அரசாணை இந்த மாநிலத்தில் பிறப்பிக்கப்பட்டதால்தான் பாதிப்பு இருக்கிறது. என்வே, அதை முடிந்தவரையிலே சீக்கிரமாக சரி செய்து, 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுடைய வாழ்வைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய இந்த அரசு ஏறக்குறைய அரசுக் கல்லூரி, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பேராசிரியர்களைப் பணியமர்த்துவதற்கான உத்தரவைப் போட்டிருக்கிறது; ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக கல்லூரிகளிலே பணியாற்றுகிற (குறுக்கீடு) கல்லூரிகளிலே இன்றைக்கு. . . (குறுக்கீடு)

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் உரையை முடிக்கட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன? சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: பெரும்பாலான மாணவர்கள், நூற்றுக்கு 99.9 சதவிகித மாணவர்கள், L.K.G.-யிலிருந்து தொடர்ந்து படித்து 8–வது, 9–வது, 10–வது, 11–வது, 12–வது வகுப்பு என்று படித்து உயர் கல்வி படிக்கிறார்கள். இடையிலே சிலபேர் 8–வது வகுப்பிலே இடைநின்றவர்கள் திடீரென்று எம்.ஏ., பட்டம் பெற்று

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2013 ஏப்ரல் 4

அவர்களும் கல்லூரிகளில் சென்று முறையாகப் படிக்கின்றவர்களுக்கு சமமான அந்தஸ்து பெறவேண்டுமென்பது எந்தவிதத்திலும் சரியானது அல்ல. அது உயர் கல்வியினுடைய நோக்கத்தையே சீரழிக்கக்கூடிய ஒன்று. அதுபோன்ற எண்ணமே இருக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் ணைத் தலைவர் அவர்களே, நாம் செய்திருக்கிறோம் என்று சொல்லவில்லை. இருக்கிற பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் சொல்லியிருக்கிறார். அதனை ஆராய்ந்து பார்த்து, முடிவு எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். அதைச் செய்கிறோம் என்று நான் சொல்லவில்லை. இதற்கு ஏற்கெனவே தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தடையின் மூலமாக இதுபோன்று நியமனங்களைச் செய்வது இல்லை. யாருக்கும் வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. அவர் கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவருடைய கருத்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சாத்தியம் இருந்தால், வாய்ப்பு இருந்தால், ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்கப்படும் என்ற கருத்தைத்தான் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களை நியமனம் செய்வதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னும்கூட அந்தப் பணி முழுமை பெறாமல் மிக மந்தமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்களை . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய பொறியியல் கல்லூரிகளில் காலியாக இருக்கக்கூடிய உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நியமனத்திற்காகவும், தமிழகத்தில் இருக்கக்கூடிய பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் காலியாக

இருக்கக்கூடிய விரிவுரையாளர் பணியிடங்கள் நியமனத்திற்காகவும், தமிழகத்தில் இருக்கக்கூடிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக இருக்கக்கூடிய உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நியமனத்திற்காகவும் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில், சமீபத்தில் பொறியியல் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாகத் தேர்வு பெற்றவர்களுக்குத் தேர்வு ஆணையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய பொற்கரங்களால் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும் ஆணைகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களுடைய பொற்கரங்களால் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே தேர்வுப் பணிக்காக நியமிக்கப்படவிருக்கும் உதவிப் பேராசிரியர்கள் விரைந்து நியமிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

பொதுவாக, உதவிப் பேராசிரியர் நியமனம் என்பது ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் நடைபெறுகிறது. தேர்வு வாரியத்தின்மூலம் நடைபெற்றாலும்கூட, UGC-University Grants Commission சில விதிமுறைகளை வைத்திருக்கிறது. அந்த விதிமுறைகளின்படிதான் உதவிப் பேராசிரியர்கள் தேர்வு நடைபெற்று வருகிறது. ஒருவர் பட்டம் பெற்றிருக்கிற படிப்பில் 55 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும். இதுபோன்ற விதிமுறைகளை வைத்து, அவர்கள் தகுதித் தேர்வான, SLET, NET, அதாவது State Level Eligibility Test, National Eligibility Test போன்ற தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டுமென்ற சில விதிமுறைகளையும் வைத்திருக்கிறார்கள். அதனடிப்படையில் தற்போது நியமனம் செய்யப்பட்டு இருக்கிறது.

அதோடுமட்டுமல்ல, கல்லூரி உதவிப் பேராசிரியர்களாக வரக்கூடியவர்கள் நன்றாகப் பேசக்கூடியவர்களாக, நல்ல முறையிலே கல்வி போதிக்கத் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக அதற்கும் தேர்வு நடத்தி, நேர்க்காணல்

நடத்தி, அவற்றிற்கெல்லாம் மதிப்பெண்கள் கொடுத்து இங்கே வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. சென்ற முறை கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நேர்காணலுக்கு 39 மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டது. அந்த 39 மதிப்பெண்களில் அவர் பி.எச்டி., முடித்திருந்தால் அதற்கு சில மதிப்பெண்களும், அவர் SLET தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால் அதற்கு சில மதிப்பெண்களும் வழங்கப்பட்டன. அந்த நேரத்தில் அவர் ஏதாவது ஓர் ஆராய்ச்சி படிப்பில் paper publish செய்திருந்தால், அதற்கு 5 மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, எதிர்காலத்தில், அந்த paper publish செய்யும்போது சில தவறான நடைமுறைகள் இருக்கும் என்று TRB கருதியிருக்கிறது. அதனை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்று, பரிசீலித்து, அந்த 5 மதிப்பெண்கள் மட்டும்—Thesis submit செய்கிற அந்தப் பகுதியை மட்டும் எடுத்துவிட்டு, அதற்கு 34 மதிப்பெண்கள்– அதாவது பி.எச்டி., முடித்திருந்தால், அதற்கு 9 மதிப்பெண்களும், அவர் ஏதோ ஒரு கல்லூரியில் பணியாற்றிய அனுபவம் இருந்தால், ஆண்டிற்கு 2 மதிப்பெண்கள் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக 15 மதிப்பெண்களும் வழங்கப்பட்டன. இதுபோன்ற மதிப்பெண்கள் அளிக்கப்பட்டு, அவர்களுக்கு அந்தப் பதவிகளுக்குத் தேவையான தகுதியிருக்கிறதா என்று பார்த்து, இதுபோன்று மதிப்பெண்களை வழங்கி, உதவிப் பேராசிரியர்கள் பணியில் கூடிய விரையில் நியமிக்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். நீங்கள் பேசத் தொடங்கி 19 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. க. பாலகிருஷ்ணன்: நான் பேசவே இல்லை. நீங்கள் பேச வேண்டாம் என்றால், நான் உட்கார்ந்து விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அப்பொழுது நான் குறுக்கிட முடியுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம்

2013 ஏப்ரல் 4] [பேரவைத் துணைத் தலைவர்]

சொன்னார்கள். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பேராசிரியர்கள் நியமனத்தை விரைவுபடுத்தவேண்டும். அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணியமர்த்துகிறபோது, எங்கேயாவது முறைகேடுகள் நடந்தால் அதை அரசு தடுத்து நிறுத்தவேண்டும். ஆசிரியரல்லாத ஊழியர்கள் பணியமர்த்தப்படுகின்ற பணியையும் (குறுக்கீடு) எல்லாவற்றுக்கும் நீங்கள் இப்படி பதில் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? மாண்புமிகு அமைச்சர் உங்கள் பதிலுரையில் இதற்கு பதில் சொல்லலாமல்லவா?

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உதவி பெறும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் நியமிப்பதை விரைவுபடுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதாவது, 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை தமிழகத்திலே அரசு உதவி பெறுகிற கல்லூரிகளில் 3,120 பணியிடங்கள் காலியாக இருந்தன. இதனை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் எந்தெந்தக் கல்லூரிகளில் பணியிடங்கள் காலியாக இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் நிரப்புவதற்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். அப்படி ஆணை வழங்கியிருக்கின்ற காலகட்டத்தில், அந்தக் காலிப் பணியிடம் எவ்வாறு ஏற்பட்டது, அதாவது இறப்பினால் ஏற்பட்டதா அல்லது resign செய்ததால் ஏற்பட்டதா அல்லது ஓய்வு பெற்றதால் ஏற்பட்டதா என்பதை ஆராய்வதற்காக கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் மட்டத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு ஒவ்வொரு கல்லூரியாகச் சென்று ஆய்வு செய்து, இப்போது அறிக்கை அனுப்பி வைத்திருக்கின்றது. தற்போது ஆசிரியர்களை நியமிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

[2013 ஏப்ரல் 4

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, ஆசிரியரல்லாத ஊழியர்களின் காலிப் பணியிடங்களையும் பூர்த்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கவுரவ விரிவுரையாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களை அந்தப் பணியிலே அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும்.

உடற்கல்வி இயக்குநர்கள், நூலகர் போன்ற பதவிகள் பல்வேறு கலைக் கல்லூரிகளிலும், அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் காலியாக இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவுரவ விரிவுரையாளர்கள் பணியை நிரந்தரப்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். முன்பு கவுரவ விரிவுரையாளர்கள் வெறும் 6,000 ரூபாய்தான் பெற்று வந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான் அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும்; சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, முதன்முதலாக கவுரவ விரிவுரையாளர்களுக்கு 10,000 ரூபாய் வழங்கிய அரசு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே கலைக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அனைத்து கவுரவ விரிவுரையாளர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு 10,000 ரூபாய் வழங்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவுரவ விரிவுரையாளர்களுக்கு இந்த ஆட்சியிலே 10,000 ரூபாய் வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது. இருந்தாலும், 10 ஆண்டுகளுக்கு மேலே தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ஆண்டுகள் பணியாற்றினால் அவர்களை நிரந்தரப்படுத்துவது என்பது முக்கியமல்ல. கல்லூரி உதவிப் பேராசிரியர்களைப் பொறுத்தவரையில், University Grants Commission ஒரு விதிமுறை வைத்திருக்கிறது. அந்த விதிமுறையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், ஒரு கல்லூரி உதவிப் பேராசிரியராகப் பணியாற்ற வேண்டும். நிரந்தரமாகப் பணியாற்ற வேண்டுமென்று சொன்னால், தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மாநில அளவிலே நடத்தக்கூடிய தகுதித் தேர்விலும் அல்லது மத்திய அரசாங்கத்தின் மூலமாக நடத்தப்படுகிற தகுதித் தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதோடு, அவர் பட்டப் படிப்பில் 55 சதவீதம் மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டுமென்று சொன்னால், இட ஒதுக்கீட்டை நாம் கடைப்பிடிக்க முடியாது. பல்வேறு வகுப்பைச் சார்ந்தவர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் என்பது பணியாளர்களை நியமிக்கிறபோது இட ஒதுக்கீட்டு முறையிலேதான் அவர்களை நிரந்தரப்படுத்த முடியும். ஆகவே, அதற்கு வாய்ப்பு இல்லை. தேவையான முறையில் அவர்கள் அந்தத் தேர்வை எழுதி வெற்றிபெற்று, தேர்வாணையம் மூலமாகவே அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிக்காக அரசு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறது. ஆனால், பல்வேறு அரசுக் கல்லூரிகளில் இன்றைக்கு மாணவ, மாணவிகளுக்கு, ஆசிரியர்களுக்குக் கழிப்பறை வசதிகூட இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே, இந்த உட்கட்டமைப்பு வசதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியை அதிகப்படுத்தி மேலும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 ஏப்ரல் 4

அதேபோல, இன்றைக்கு சங்கரன்கோவிலில் இருக்கக்கூடிய உறுப்புக் கல்லூரியான மனோ கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதற்கான இடத்தைக் கையகப்படுத்தி, கட்டடத்தைக் கட்டுவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இக்கல்லூரிக்கும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. அதிலே காலதாமதம் ஏற்படுவதால் கட்டடம் கட்டும் பணி நடைபெறவில்லை. அதைச் செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கணினிப் பயிற்சியாளர்கள் 279 பேர் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலக்கட்டத்தில் அவர்களோடு பள்ளிக்கூடத்திலே கணினிப் பயிற்சியாளர்களாகப் பணியில் சேர்ந்தவர்கள் நிரந்தரம் செய்யப்பட்டு விட்டார்கள். கல்லூரியிலே இருப்பவர்கள் இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களையும் Computer Programmer பணியில் நிரந்தரம் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

மடிக்கணினி வழங்குகிற நல்ல திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. அது பாராட்டுக்குரியது. உறுப்புக் கல்லூரியிலே படிக்கும் மாணவர்களுக்கும் அதை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசு கலைக் கல்லூரிகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 1–10

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே மனோ கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் மடிக்கணினி வழங்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. மனோ கல்லூரி

என்பது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி. அது அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி அல்ல. இருந்தாலும்கூட, அது அரசு சார்ந்த கல்லூரியாக இருப்பதால், அதுபோன்று மதுரையிலே இருக்கக்கூடிய ஓர் உறுப்புக் கல்லூரிக்கும், அன்னை தெரசா பல்கலைக்கழகத்தில் இருக்கக்கூடிய ஓர் உறுப்புக் கல்லூரிக்கும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 6 உறுப்புக் கல்லூரிகளுக்கும், ஆக மொத்தம் 8 உறுப்புக் கல்லூரிகளுக்கும் மடிக்கணினி வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வந்ததையடுத்து, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு அதை எடுத்துச் சென்ற பின்பு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இந்த ஆண்டு அவர்களுக்கும் வழங்கலாம் என்ற ஒரு நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகள் எல்லாம் அநேகமாக இலவச கல்வி என்கிற நிலையிலேதான் இருக்கின்றன. ஏற்கெனவே கல்விக் கட்டணம் ரூ.500/– என்று தீர்மானித்திருந்தார்கள். அதையும்கூட அரசே செலுத்திவிடும் என்று பிறகு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், பல அரசு உதவி பெறுகிற கல்லூரிகளில் ரூ.10,000/–, ரூ.15,000/–, ரூ.18,000/– என்று கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதை முறைப்படுத்திட வேண்டும். அதுப்பற்றிய விவரங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். லயோலா, G.V.N. கல்லூரிகளில் விசாரணைக் குழுவே போட்டு, அந்த விசாரணைக் குழு அறிக்கையிலேயே வந்திருக்கிற விவரங்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, அரசு உதவி பெறுகிற கல்லூரிகளில் வரைமுறைகளுக்கு அதிகமாக கட்டணங்களை வசூலிப்பதை அரசு தலையிட்டு, தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் அரசே கல்விக் கட்டணத்தைச் செலுத்துகின்ற

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 ஏப்ரல் 4

அரசாணை வெளியிடப்பட்டிருப்பதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள். ஆனால், நடைமுறைச் சிக்கல் என்னவென்று சொன்னால், மாணவர்கள் கல்லூரியிலே பணத்தைக் கட்டிவிட்டு, பிறகு அந்த நிருவாகம் அரசாங்கத்திடமிருந்து அந்தப் பணத்தைப் பெற்று கொண்ட பிறகுதான், அவர்கள் பணத்தைத் திரும்பப் பெற வேண்டியிருக்கிறது. அதனால் பல மாணவர்களுக்கு அதைத் திரும்பப் பெறுவதிலே பெருத்த சிக்கல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறான கருத்து. அந்தத் திட்டத்தை நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஏழையெளிய மாணவர்கள், ஆதி திராவிட மாணவர்கள் உயர் கல்வி பெறுகிறபொழுது, குறிப்பாக பொறியியல் கல்லூரிகள் என்று வரும்பொழுது மாணவர்கள் பாதிக்கப்படக்கூடாது, இடையிலே நிற்கக்கூடாது என்பதற்காகத்தான், இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு முதன்முதலாக இந்தத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, தனியார் பொறியியல் கல்லூரிகள் அரசிடமிருந்து பணம் வருகிற வரை நீங்கள் கட்டியாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற நடவடிக்கை இருக்கக் கூடாது என்பதை அறிந்து, ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகவே அந்தக் கல்லூரிகளுக்கு எல்லாம் அரசு ஆணை வழங்கியிருக்கிறது. இதற்காக தனி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரசு ஒதுக்கீட்டில் வருகிற மாணவர்களாக இருந்தாலும் சரி, அரசு Management கோட்டாவில் வருகிற மாணவர்களாக இருந்தாலும் சரி, ஆதி திராவிட மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கின்றவர்களுக்கு நீங்கள் கட்டணத்தை வசூலிக்கக் கூடாதென்று அரசு ஆணையே வெளியிட்டிருக்கிறது. அதுபோன்று ஏதாவது ஒரு கல்லூரியில் பணம் வசூலிக்கிறார்கள் என்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்தக்

கல்லூரியின்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கும் அத்தகைய ஆணை இருக்கிறது. அவர்களுக்கும் அதேபோன்ற உத்தரவை வழங்கி, அவர்கள் கட்டணம் கட்டாமலேயே கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பொழுது பல்கலைக்கழகங்கள் பல புதிய புதிய வகுப்புகளை, பிரிவுகளை உருவாக்குகிறார்கள். ஆனால், அந்த வகுப்புகளுக்கு T.R.B.–யிலே அங்கீகாரம் இல்லையென்று சொல்லி, இணை சான்றிதழ் வாங்கிக் கொடுத்தால்கூட, அவர்களைப் பணியில் சேர்ப்பதற்கு பணி ஆணை வழங்க மறுக்கப்படுகிறது. எனவே, அப்படிப்பட்ட புதிய பாடப் பிரிவுகளுக்கு T.R.B.–யிலே அங்கீகாரம் வழங்குவதற்கான நடவடிக்கையை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு சுயநிதிக் கல்லூரிகளில் ஏராளமான ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்டு சம்பளமோ அல்லது மற்ற ஊதியங்களோ வழங்குவதற்கு எந்த ஏற்பாடும் இல்லை. எனவே, அவர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயித்து அவர்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: இன்றைக்குப் பல்கலைக்கழக செனட்டுகளில் ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கிறது. ஆனால், பல்கலைக்கழகங்களில் பணியாற்றக்கூடிய ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை. அதை வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: உரையை முடித்துவிடுகிறேன்.

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகத்தில் செனட் அல்லது சிண்டிகேட்டில் மாணவர்களுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பொதுவாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஒரு தனி சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டதிட்டத்தை அவர்களே வகுத்திருக்கிறார்கள். பல்கலைக்கழகத்திற்கென்று தனி சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் இந்த பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க.பாலகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1–15

திரு. க. பாலகிருஷ்ணன்: ஒரு நிமிடம்தான், அதற்கு மேல் இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு) ஆகவே, அவர்களை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) புதிது புதிதாகப் பிரச்சினையைக் கிளப்பிக் கொண்டேயிருந்தால், விவாதம் போய்க் கொண்டேயிருக்கும். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** நடைபெறுகின்றன என்று ஒரு தவறான கருத்தை மாண்புமிகு உறுப்பினர் பதிய வைத்திருக்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். அதுபோன்ற நிகழ்வு எந்தக் கல்லூரியிலும் நடைபெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அதுபோல பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உறுப்பினர், நீங்கள் உரையை முடியுங்கள். 30 நிமிடங்களுக்கும் மேலாகப் பேசியிருக்கிறீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 ஏப்ரல் 4]

திரு. க. பாலகிருஷ்ணன்: கடைசியாக நான் இங்கே குறிப்பிட விரும்புவது. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உரையை முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: நான் அரை நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். இன்றைக்குப் பல்வேறு புதிய தேவைகளுக்கேற்ப, நவீன தேவைகளுக்கேற்ப புதிய பாடப் பிரிவுகள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேசி, அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. க. பாலகிருஷ்ணன்: இல்லை, அதுபோன்று பிரச்சினை வராது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கு மேலே என்ன வரவேண்டியிருக்கிறது? எல்லாவற்றையும் பேசிவிட்டீர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: ஆகவே, இன்றைக்குப் புதிய பாடப் பிரிவுகள் நிறைய தொடங்க வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே, நம்முடைய அரசு நிறைய பிரிவுகளைத் தொடங்கியிருக்கிறது. ஏறக்குறைய 399–க்கும் மேற்பட்ட புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கூடுதலான புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்க வேண்டுமென்று மாணவர்கள் விரும்புகிறார்கள். வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய அப்படிப்பட்ட பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் தொகுதியைப் பொறுத்தவரையில், மகளிர் கல்லூரி ஒன்று தொடங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பரிசீலித்து, அங்கே ஒரு மகளிர் கல்லூரியைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

[2013 ஏப்ரல் 4

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் அடித்துச் செல்ல முடியாத செல்வம்; தீயினால் தீண்ட முடியாத செல்வம்; காற்றால் கரைக்க முடியாத செல்வம்; ஒருவர் ஒரு பிறப்பில் பெற்ற செல்வம், அவருக்கு ஏழு பிறப்பிலும் அழியாது துணை நிற்கும் செல்வமாக விளங்குகின்ற கல்விச் செல்வம் என்னும் முதன்மைச் செல்வத்தை தமிழக மக்களுக்குத் தடையில்லாமல் வழங்கும் உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் உரையாற்றுகின்ற உயர்ந்த வாய்ப்பினைத் தந்த உலகத் தமிழர்களின் ஒரே செல்வம்; உழைக்கின்ற ஏழைத் தொண்டனை உயர்த்துகின்ற செல்வம்; தழைக்கின்ற தமிழகத்தின் முதல்வர் என்னும் முதற்செல்வம்; இன்றைய தமிழகத்தின் தலைமைச் செல்வம்; நாளைய பாரதத்தின் முதன்மைச் செல்வம்; (மேசையைத் தட்டும் ஒலி) கழகக் காவல் தெய்வம், காவேரியை மீட்டுத் தந்த காவிரித் தாய், பொன்னியின் செல்வி, பொன்மனத் தலைவி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், வாழும் மனித தெய்வம், என்னை வாழவைத்த தெய்வம், எங்கள் குடும்ப தெய்வம், இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

‘அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னவாயினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்’

என்று பாடியவன் கவிஞன் பாரதி. ஆனால், அன்னசத்திரமும் அமைத்து, ஆலயமும் காத்து, ஏழையெளியோருக்கு உயர் கல்வியும் தந்து, உலகத்தை ஆள மடிக் கணினியையும் வழங்கி, கல்விப் புரட்சி செய்தது எங்கள் அன்னைத் திருமகளின் அன்புள்ளம் கொண்ட அரசுதான்.

கல்லாமையைப் போக்கினால் இல்லாமை போய்விடும். கல்லாமை, இல்லாமை இந்த இரண்டையும் நீக்கினால், வேறு இல்லாமை போய்விடும். ஆனால், இந்த இரண்டு ஆமைகளையும் சேர்த்து, மூன்றாவது ஆமையாக ‘மு.க.’–வையும் நீக்கி புரட்சி புரிந்திருப்பது நம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான். ‘கம்பன் பிறந்த தமிழ்நாடு; உயர் கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்னும் வைர வரிகளுக்கு வடிவம் கொடுத்திருப்பது நம் வாஞ்சை கொண்ட தாய் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

2013 ஏப்ரல் 4] [திரு. மு. முருகன்]

நம் தாய்த் திருநாட்டில் தமிழகமே தலைசிறந்த மாநிலம் என்னும் சரித்திர சாதனைகளுக்குச் சாட்சியாக நிற்கிறது உயர் கல்வித் துறை. அம்மா உங்களது சீரிய புத்தி, அது கூரிய கத்தி; அதன் வீரிய சக்தி, விளைவிக்கும் காரிய சித்தி; கபட நாடகம் ஆடிய திருவாரூர் தீயசக்தி அழியும் காலம் இது. வரும் தமிழ் விஜய வருடம் நம் தாய்நாடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வல்லரசு ஆகும். இன்றைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வரும் தமிழ் விஜய வருடத்தில் பிரதமராவது நிச்சயம், நிச்சயம்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் 22 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், ஒரு பொறியியல் கல்லூரி தொடங்கியும், 10 பாலிடெக்னிக் கல்லூரிகள், 2 பொறியியல் கல்லூரிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்தும்; 2013–2014 ஆம் ஆண்டு 8 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என மொத்தம் 30 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 பொறியியல் கல்லூரிகள், 10 பாலிடெக்னிக் கல்லூரிகள் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உயர் கல்வித் துறையின் சாதனைகளை பறைசாற்றுகிறது.

பிற்பகல் 1–20

2013–2014 ஆம் ஆண்டு 8 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், திருவாடானை தொகுதியில் ஒன்றும், முதுகுளத்தூர் தொகுதியிலுள்ள கடலாடி பகுதியில் ஒன்றும்; முதுகுளத்தூர் பகுதியில் ஒன்றும் என இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் 3 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றியினை காணிக்கையாக்குகிறேன் தாயே!

கடந்த இரண்டு ஆண்டுகளில் 51,757 ஆசிரியர்கள் நியமனம், 7,275 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் என பள்ளிக் கல்வித் துறையில் நியமனம், 2010–2011 ஆம் ஆண்டுகளில், 6,09,915 ஆக இருந்த மாணவ–மாணவிகளின் சேர்க்கை எண்ணிக்கையை, 2012–2013 ஆம் ஆண்டுகளில், 6,51,807 ஆக உயர்ந்திருப்பது உயர் கல்வித் துறையின் சாதனையை எடுத்துக்காட்டுகிறது. 5 இலட்சத்து 65 ஆயிரம் மடிக்கணினிகள் வாங்க ரூ.1,500 கோடி ஒதுக்கீடு, நேரு

[திரு. மு. முருகன்] [2013 ஏப்ரல் 4

உள் விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்த ரூ.40 கோடி ஒதுக்கீடு, 2013–2014 ஆம் ஆண்டு, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்விக் கட்டணம் அளிக்கும் திட்டத்திற்கு ரூ.673 கோடி ஒதுக்கீடு என திட்டங்கள் தந்திருப்பது, இந்தியாவிலேயே தமிழகம் உயர் கல்வியில் சிறந்து விளங்குகிறது என்பதற்கு இதுவே சான்றாகும்.

எனது தொகுதிக்கு செய்து கொடுத்த திட்டங்களுக்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதுகுளத்தூர், கடலாடி, கமுதி ஆகிய தாலுகாக்களில் விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான வைகை நதியில், மழைக் காலங்களில் வீணாகக் கடலில் கலக்கும் மழை நீரை பரலைக் கால்வாயில் இணைக்கும் திட்டத்திற்கு ரூ.36 கோடியில் திட்டம் தந்து, விவசாயிகளின் துயர் துடைத்த தாயே! முதுகுளத்தூர் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க ஆணையிட்ட எங்கள் அன்னையே! ஏங்கி நிற்கும் ஏழைகளை, தாங்கி நிற்கும் இதய தெய்வமே! எனது முதுகுளத்தூர் தொகுதி மக்களின் சார்பாக தங்களுக்கு கோடானுகோடி நன்றியினை காணிக்கையாக்குகிறேன் தாயே!

இராமநாதபுரம் மாவட்டத்தின் சார்பாக சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். இராமநாதபுரத்தில், மைனாரிட்டி தி.மு.க. அரசு வெறும் அறிவிப்போடு மட்டும் விட்டுச்சென்ற மருத்துவக் கல்லூரியை, தாயே! எப்படியாவது எங்கள் மாவட்டத்தில் அமைத்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடியில் ஓர் அரசு பொறியியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

கடலாடி ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரிய பஞ்சாயத்துகளைக் கொண்ட ஒன்றியம்; அந்த ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, அந்த அறிவிப்பில் சிக்கல் பகுதிக்குப் பதிலாக, ஒன்றியத்தின் மையப் பகுதியாக உள்ள சாயல்குடி பகுதியை ஒன்றியத்தின் தலைமையிடமாகக் கொண்டு பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

2013 ஏப்ரல் 4]

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக மாணவ–மாணவியருக்கு உலகத் தரம் வாய்ந்த உயர் கல்வியைத் தர வேண்டுமென்ற உயர்ந்த நோக்கோடு, தலைசிறந்த கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு, மேம்படுத்தப்பட்ட பல்வேறு வசதிகளுடன்கூடிய உயர் கல்வியை தமிழக மாணவ–மாணவிகளுக்கு வழங்கிட மாநில அரசு முயன்று வருவதைப் பாராட்டுகின்றோம்.

தமிழகத்தில் ஏழ்மை நிலையில் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ–மாணவியருக்கும், கிராமப்புற மாணவ–மாணவியருக்கும் தரமான உயர் கல்வி கிடைத்திட அரசு எடுத்து வரும் முயற்சிகளை வரவேற்கிறோம். மேலும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகத்தில் உயர் கல்வி கற்கும் மாணவ–மாணவியரின் சதவீதத்தை உயர்த்த வேண்டுமென்ற ஒரே நோக்கோடு செயலாற்றி வருவதையும் காண முடிகிறது. அதனுடைய வெளிப்பாடுதான் தற்போது மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் ஆண், பெண் விகிதாச்சாரம் கூடுதலாக உள்ளது. இதை மேலும் அதிகப்படுத்துகின்ற வகையிலும், நமது முதலவர் அவர்களால் தீட்டப்பட்ட 'தொலைநோக்குப் பார்வை 2023'–ன் முழுமையான நோக்கம் நிறைவேறிட, நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், பொறியியல் கல்லூரிகளையும், தொழில்நுட்பக் கல்லூரிகளையும் திறக்க வேண்டும்.

பிற்பகல் 1–25

உலகளவில் தமிழக மாணவ, மாணவியர்கள் உயர் கல்வியில் தலைசிறந்து விளங்கிட தமிழக அரசு இன்றைக்குச் செயல்படுத்திவரும் மடிக்கணினித் திட்டம் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. உலகளவில் பல்வேறு புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் விதத்தில் இணையதள நெட் இணைப்புகளுடன் தரம் வாய்ந்த மடிக்கணினிகளை அரசுக் கல்லூரி மாணவர்களுக்கும், தனியார் கல்லூரி மாணவர்களுக்கும் பாகுபாடு இல்லாமல் வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும். தற்போது சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படவில்லை என்ற நிலையை மாற்றி அவர்களுக்கும்,

[திரு. வெ. பொன்னுப்பாண்டி][2013 ஏப்ரல் 4

அவர்களும் இந்தச் சமுதாயத்தினுடைய மேன்மைக்கு வேண்டி கல்வி கற்கின்றவர்கள் என்பதை உணர்ந்து, சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் தமிழகத்தில் மடிக்கணினி வழங்கிடும் திட்டத்தை உருவாக்கிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் படித்து உயர் கல்வி பெற்று வெளி நாடு செல்லும் மாணவர்களுக்கு அரசு உதவியுடன் கடன்களை வழங்கிட வேண்டும். அப்போதுதான் அறிவுத் திறன் உள்ள மாணவர்களால், அதற்கான கல்வியைப் பெற முடியும். நமது தமிழக மாணவர்களின் திறமையையும் வெளிக் கொணர முடியும். பெரும்பாலான பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும் உருவாக்கிட வேண்டும் என்ற எண்ணத்தில் கல்லூரிகளில் சேர்க்கின்றனர். கல்லூரிப் படிப்பை முடிக்கும் மாணவர்களுக்குத் தகுந்தாற்போல் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்றவற்றில் காலிப் பணியிடங்களை உடனடியாக அரசு நிரப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மிகப் பெரிய முறைகேடு நடைபெற்றுள்ளது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள், அமைதியாக அவை நடவடிக்கைகளை கவனியுங்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாணவர் சேர்க்கையிலும், ஆசிரியர் நியமனத்திலும் முறைகேடு நடைபெற்றுள்ளது. இதனால் மாணவர்களுடைய கல்வித் தரமும், ஆசிரியர்களுடைய வேலைவாய்ப்பும் கேள்விக்குறியாகின்ற நிலை உள்ளது. எனவே, இந்தப் பல்கலைக்கழகத்தினை அரசே ஏற்று நடத்த வேண்டும். மேலும், தற்போதுள்ள துணை வேந்தரை மாற்றி, புதிய துணை வேந்தரை நியமிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகப் பல்கலைக்கழகங்களில் கணிதம் மற்றும் இணையதள மையங்கள் ஓரிரு பல்கலைக்கழகங்களில்தான் உள்ளது. அதுவும் பெயரளவில்தான் உள்ளது. இதற்கு நேரடி இணையதள இணைப்புகளை உருவாக்கிட வேண்டும்.

2013 ஏப்ரல் 4] [திரு. வெ. பொன்னுப்பாண்டி]

தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிடவும், பல்கலைக்கழகச் செயல்பாட்டிற்கு தற்போது மின்வெட்டிலிருந்து மீள, சூரிய ஒளியுடன்கூடிய மின் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்றிடவும், அரசு இதற்கென கூடுதல் நிதியை ஒதுக்கிட வேண்டும்.

தமிழகத்தில் உள்ள 55 அரசுக் கல்லூரிகளில் கடந்த ஆண்டு 399 பாடப் பிரிவுகளைத் துவக்கி, இதற்கென 899 ஆசிரியர்களை நியமித்துள்ளது. இது வரவேற்கக்கூடிய நடவடிக்கையாகும். ஆனால், கடந்த ஆண்டு அரசுக் கல்லூரிகளில் உள் கட்டுமான வசதி மேம்பாட்டுக்காக ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டு, இந்த நிதி இது வரை கல்லூரிகளுக்கு விடுவிக்கப்படாமல் உள்ளதால், . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது தமிழகத்தில் இருக்கக்கூடிய 55 அரசு கலைக் கல்லூரி என்று சொன்னார். தமிழகத்திலே 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிறபோது, உள் கட்டமைப்பு வசதியை சிறப்புடன் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாய் இன்னும் சரியாக போய்ச் சேரவில்லை என்ற ஒரு கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள். ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, தமிழகத்திலே இருக்கக்கூடிய 62 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளோடு சேர்த்து, 7 கல்வியியல் கல்லூரிகளையும் சேர்த்து, தமிழகத்திலே இருக்கக்கூடிய 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைச் சேர்த்து மொத்தம் 93 கல்லூரிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை, அந்த மாணவர்களுக்குத் தேவையான கழிவறை வசதி, கணினி வசதிகள், மேசை, நாற்காலிகள், புத்தகங்கள், நூலக வசதி, இதுபோன்ற வசதிகளை சிறப்பான முறையிலே செய்ய வேணடுமென்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதுவரையில் இல்லாத அளவிற்கு 100 கோடி ரூபாயை ஒட்டுமொத்தமாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த நிதி என்பது தற்போது அதற்காக என்னென்ன பொருட்கள் தேவை, ஒவ்வொரு கல்லூரிக்கும் எவ்வளவு, எவ்வளவு தேவை என்று கணக்கிட்டுப் பார்த்து, குழு அமைத்து, அந்தக் குழு அறிக்கை

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின்பேரிலே கூடிய விரைவில் இதுபோன்ற பொருட்கள் அந்தக் கல்லூரிக்குப் போய்ச் சேரும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப் பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள தனியார் மற்றும் அரசுக் கல்லூரிகளிலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் தண்ணீர் வசதி, கழிவறை வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணத்தில் உள்ள தூய இருதய ஆண்டவர் நர்சிங் கல்லூரியில் படிக்கின்ற மாணவியர்களுக்கு தொடர்ச்சியாக பாலியல் துன்புறுத்தல் இழைக்கப்பட்டு வருகின்றது. அந்தக் கல்லூரியில் படித்த மாணவி ராஜலெஷ்மி என்பவர் மூன்று மாதங்களுக்கு முன்பாக அங்கே மரணம் அடைந்தார். நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அதன் காரணமாக நடைபெற்ற பல்வேறு போராட்டங்களில் பங்கேற்ற, 8 மாணவிகள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அந்த மாணவிகள் இன்றைக்குக் கல்லூரியில் சேர முடியாத ஒரு நிலைமை நீடித்துக் கொண்டிருக்கின்றது. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அந்தக் கல்லூரிமீதும், கல்லூரி முதல்வர்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாநில அரசு உரிமைகளில் தொடர்ந்து தலையிட்டு வரும் மத்திய அரசு—இந்தியா முழுவதும் தொழிற் படிப்பிற்கான நுழைவுத் தேர்வுகளை நடத்த தேசிய தேர்வு முகமை என்ற ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்த மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் முடிவு செய்துள்ளதை உடனடியாகக் கைவிட வேண்டும். இந்தப் போக்கை ஆரம்ப நிலையிலேயே மாநில அரசு எதிர்த்துள்ளதையும் முழு மனதோடு வரவேற்கிறோம்.

2013 ஏப்ரல் 4] [திரு. வெ. பொன்னுப்பாண்டி.]

இந்திய அளவில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசு முயலும் அதேவேளையில், தமிழக கிராமப்புற ஏழையெளிய குடும்ப பின்னணியை உடைய மாணவர்கள், உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பினைப் பறிக்கும் இந்த நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழகத்தில் தொழில் கல்விகளுக்கு நுழைவுத் தேர்வுகள் தேவையில்லை என்று தமிழக சட்டமன்றத்தில் ஏற்கெனவே தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில், மத்திய அரசு பின்பற்றும் இதுபோன்ற நடவடிக்கைகள், மாநில அரசினுடைய உரிமையைப் பறிப்பதாகும். எனவே, கல்வி உரிமையைப் பற்றி மாநில அரசுகளே முடிவு மேற்கொள்ளும்வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2012 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் தமிழகத்தில் உள்ள அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 3,120 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் 1,799 ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு வெளியிட்டும், 2011 அக்டோபரில் அரசுக் கல்லூரிகளில் 1,025 உதவிப் பேராசிரியர்கள் பணியிடம் நிரப்பப்படும் என்ற அறிவிப்பும் இதுவரை நிறைவுபெறாமல் உள்ளது. மேற்படி காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசுக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவிகள், பணிபுரியும் பெண் பேராசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பெண் ஊழியர்கள் அனைவருக்கும் எதிரான பாலியல் கொடுமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும்பொருட்டு, தகுந்த தற்காப்புப் பயிற்சிகளைக் கொடுக்க உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், அரசுக் கல்லூரிகளில் பல புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், போதிய வகுப்பறைகள் இல்லாமல், மாணவர்கள் இன்றைக்குச் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். எனவே, அரசுக் கல்லூரிகளில் தேவைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து அரசுக் கல்லூரிகளிலும், குறிப்பாக இருபாலர் பயிலும் கல்லூரிகளிலும் மாணவியர்களுக்குப் போதிய அளவில்

ஓய்வறையும், நவீன வசதியுள்ள கழிப்பறையும் கட்ட அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் அரசுக் கல்லூரிகள் இல்லாத அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், அரசு கலை மற்றும் அறிவியல், தொழில்நுட்பக் கல்லூரிகளைத் திறந்திட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, உங்கள் உரையை முடித்துவிடுங்கள். வேறொரு நாளில் பேசிக்கொள்ளலாம். மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை இருக்கிறது. இன்னும் ஓர் உறுப்பினர் பேசவேண்டும். சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அரசு கல்வியியல் கல்லூரிகள் ஏழு மட்டுமே உள்ளன. ஏழையெளிய மாணவர்கள், சுயநிதிக் கல்லூரிகளில் அதிக அளவிலான கல்விக் கட்டணங்களைச் செலுத்தி, பி.எட்., எம்.எட்., பாடங்களைப் படிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, ஏழையெளிய மாணவர்கள், பயன்பெறும் வகையில் அரசு புதிய அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி பாரம்பரியமிக்க தொகுதி. ஆண்டாள் அவதரித்த அந்தப் புண்ணிய பூமியில் இன்றைக்கு அரசு உதவி பெறும் கல்லூரிகளோ, அரசுக் கல்லூரிகளோ இல்லாத நிலை இருந்து வருகின்றது. எனவே, தமிழகத்தில் உயர் கல்வியில் தொடர்ச்சியாக முதலிடம் பெறுகின்ற ஸ்ரீவில்லிப்புத்தூர் கல்வி மாவட்டத்தில், அரசுக் கல்லூரிகள் அல்லது அரசு பொறியியல் கல்லூரிகள் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். நீங்கள் ஐந்து நிமிடங்களில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது. சீக்கிரம் உங்கள் உரையை முடித்துவிடுங்கள். நேரம் இல்லை. இப்போதே மணி 1–34 ஆகி விட்டது. ஐந்து நிமிடங்களில் உங்கள் உரையை முடித்து விடுங்கள்.

2013 ஏப்ரல் 4]

பிற்பகல் 1–35

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரிமையைப் பறிக்காதீர்கள். உயர் கல்வி மானியக் கோரிக்கையிலே மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக கருத்துகளைப் பதிவு செய்ய அனுமதி அளித்தமைக்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உலக அளவிலே உயர் கல்வி, அதாவது 18 வயது முதல் 23 வயது வரையில் உள்ளவர்களுடைய கல்வி விகிதம் 23 சதவீதமாக இருக்கின்றது. இந்திய அளவிலே 13 சதவீதமாக மட்டுமே இருக்கக்கூடிய நிலையிலே, நம்முடைய தமிழகத்திலே அது 19 சதவீதமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு சற்றேறக்குறைய இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் உயர் கல்வியிலே சேரக்கூடியவர்களுடைய எண்ணிக்கை 6.8 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக உயர் கல்வித் துறை எடுத்து வரக்கூடிய முயற்சிகளை முதலிலே மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன். இப்போது 19 விழுக்காடாக இருக்கின்ற உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை விகிதம் 2016–இல் 25, 30 விழுக்காடாக உயர்வதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக நாம் எடுக்க வேண்டும். இந்தத் துறை எடுக்குமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அது தொடர்பாக சில ஆலோசனைகளையும், கோரிக்கைகளையும் நான் இங்கே வைக்க விரும்புகின்றேன்.

அரசு இட ஒதுக்கீட்டில் பொறியியல் கல்லூரிகளுக்குச் செல்லும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இதேபோன்று, Management Quota–விலே செல்லக்கூடிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இந்தச் சலுகையை வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, சுயநிதிக் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையிலே பாராட்டக்கூடிய ஒரு விஷயம். அதேபோல, சமூக நிலையிலே பின்தங்கியிருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் சுயநிதிக் கல்லூரிகளிலே

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 ஏப்ரல் 4

படிக்கக்கூடியவர்களுக்கும் Scholarship வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நிச்சயமாக மடிக்கணினி திட்டம் இந்தியாவிலே தமிழக அரசு அ.தி.மு.க. அரசு கொண்டு வந்த முதன்மையான திட்டம், மெச்சத்தக்க திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் இருவேறு கருத்துக்கு இடமிருக்க முடியாது. மாணவர்கள் சிறப்பான முறையிலே அதனால் பயனடைந்திருக்கிறார்கள். என்னுடைய கோரிக்கை என்னவென்றால், இந்த மடிக்கணினியினுடைய பயன்பாடு M.Phil., Ph.D., படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் மிக அதிகமாகத் தேவைப்படுகிறது. அவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவுதான். M.Phil., Ph.D., படிக்கக்கூடிய மாணவர்களுக்கு வேறு சலுகைகள் கொடுத்திருப்பதை எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலே நான் படித்தேன். அரசுக் கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் M.Phil., Ph.D., படிக்கக்கூடிய அந்த Research Scholars, ஆய்வாளர்களுக்கும் மடிக்கணினி வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே M.Phil., Ph.D., போன்ற படிப்புகள் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் மடிக்கணினி வழங்கப்பட வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இங்கே தொடங்கியிருக்கிறார். அதன்படி பார்த்தால் இப்போது சென்ற ஆண்டு மூன்றாம் ஆண்டு பட்டப் படிப்பை முடித்து முதுகலை பட்ட மேற்படிப்பு படிக்கச் செல்லும் மாணவர்களுக்கு மடிக்கணினி ஏற்கெனவே வழக்கப்பட்டிருக்கும். ஒரு நாட்டில் முதன்முதலாக ஒரு திட்டத்தை வகுக்கிறபோது, அது மாணவர்களுக்கு இடையிலே போய்ச் சேரும். பின்பு படிப்படியாக மேற்படிப்பு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இந்த ஆண்டு நிச்சயமாக போய்ச் சேரும். பொதுவாக இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மேல்நிலைக் கல்வியிலே நாம் கொடுத்து வருகிறோம். பிளஸ் 2–விலே இந்த மடிக்கணினியை நாம் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு பார்ப்போம் என்று

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

சொன்னால், கல்லூரியிலே சென்று படிக்கிற மாணவர்களுக்கு அவ்வளவாக நாம் மடிக்கணினி வழங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. ஏனென்று சொன்னால் அவர்கள் பிளஸ் 2 படிக்கிற காலகட்டத்திலேயே அந்த மடிக்கணினியைப் பெற்றுவிடுகிறார்கள். முதன்முதலாக செயல்படுத்தும்போதுதான் இதற்காக முதலாண்டு 1,000 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்தார்கள். இரண்டாம் ஆண்டு 1,500 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்தார்கள். இந்த ஆண்டும் 1,500 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இதுவரையில் மடிக் கணினி திட்டத்திற்காக மட்டும் ரூபாய் 4,000 கோடி ரூபாய் அளவிற்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு பட்ட மேற்படிப்பில் முதலாண்டு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு நிச்சயமாக அவர்கள் கையிலே மடிக்கணினி இருக்கும். ஆகவே, எதிர்காலத்தில் இதே மாணவர்கள் M.Phil., Ph.D., படிக்கிறபோது அனைத்து மாணவர்களுக்கும் அந்தக் கோரிக்கை நிறைவேறும். ஆகவே, வருகிற காலகட்டங்களில் நீங்கள் சொல்வதைப் போன்ற நிலை நிச்சயமாக ஏற்படாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மக்கள் நலனிலே மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் S.I.E.T. கல்லூரியில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சியில் பங்குகொண்டபோதுதான், தமிழ்நாட்டில் இந்தியாவிலே பிறந்த மொழியாக இருக்கக்கூடிய உருது மொழிக்கு தமிழ்நாடு உருது அகாடமியை ஆரம்பித்தார்கள். அது உயர் கல்வித் துறையின்கீழ்தான் வருகிறது. ஆனால் அந்த உருது அகாடமிக்கு ஒரு Vice-President — துணைத் தலைவர் மற்றும் 15 உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். அந்த உறுப்பினர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல உருது அகாடமி அமைப்பதற்கு தற்போது தலைவர், துணைத் தலைவர் மற்றும் 15 பேர் கொண்ட கமிட்டி அமைப்பதற்கான பணியை அரசு விரைவாக நடைமுறைப்படுத்தி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கூடிய விரைவில் இந்த அகாடமிக்கு தலைவர், துணைத் தலைவர் போன்ற பதவிகளுக்கு உரிய நபர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அத்துடன் அந்த உருது அகாடமிக்கு தனியாக ஓர் அலுவலகமும், முழுநேரப் பதிவாளரும் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் நடத்தக்கூடிய கல்லூரிகளாக இருக்கட்டும், பள்ளிக்கூடங்களாக இருக்கட்டும் அதற்கு சிறுபான்மைச் சான்றிதழ் (Minority Certificate) பெறுவது மிகுந்த சிரமத்திற்குண்டானதாக உள்ளது. 2002–ல் TKVTSS Medical and Charitable Trust Vs Tamil Nadu Government என்ற வழக்கில் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பில் நீதிபதி அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், மைனாரிட்டிச் சான்றிதழ் ஒரு முறை கொடுத்தால் அதைத் திரும்ப புதுப்பிக்கத் தேவையில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். Driving Licence-ஐ புதுப்பிப்பது போன்று மைனாரிட்டிச் சான்றிதழைப் புதுப்பிக்கத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அது புதுப்பிக்கப்பட வேண்டும் என்று சென்ற ஆட்சியிலிருந்தே அந்த உத்தரவு தொடர்கிறது. இந்த நடைமுறையை மாற்றி மைனாரிட்டிக் சான்றிதழ் ஒரு கல்வி நிறுவனத்திற்கு கொடுத்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை கல்லூரிகளுக்கு சிறுபான்மை தகுதிச் சான்றிதழ் வழங்குவதில் இங்கே நடைமுறை சிக்கல்கள்

இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே, அதனை நாம் ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய ஒரு காலகட்டம் இருந்தது. ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கவேண்டும் என்பதை மாற்றி, நிரந்தரமாக அந்த சிறுபான்மைத் தகுதி வழங்க வேண்டும் என்று சிறுபான்மை கல்லூரியினைச் சார்ந்தவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடர்ந்தார்கள். ஆண்டுக்கு ஒரு முறை என்பதை மாற்றி, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்தத் தகுதியை நீங்கள் புதுப்பித்துக்கொண்டால் போதுமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது. அதற்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், அந்த சிறுபான்மைத் தகுதி அந்தக் கல்லூரியில் கடைப்பிடிக்கப்படுகிறதா? சிறுபான்மையினருக்கான மாணவர்கள் அங்கு சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? சிறுபான்மையினர் தொடர்ந்து அங்கே உறுப்பினர்களாக இருக்கிறார்களா என்று 5 ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும். அந்த அடிப்படையிலேதான் நீங்கள் புதுப்பிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் சிறுபான்மையினருக்கான தகுதியை இன்றைக்கு அரசு கொடுத்துக்கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மணியைப் பாருங்கள், 1-45 ஆகிறது. அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது. உரையை முடியுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கல்லூரிகள் எல்லாம் இப்போதுதான் திறந்திருக்கின்றன என்கிற ஒரு சூழலைப் பற்றி சற்றுமுன்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். வருகின்ற ஏப்ரல் 6 ஆம் தேதி அன்று TANCET பரீட்சை நடைபெறவிருக்கின்றது. சென்ற ஆண்டு ஒரு இலட்சம் மாணவர்கள் இந்தத் தேர்வை எழுதியிருக்கிறார்கள். எம்.பி.ஏ., எம்.சி.ஏ., போன்ற வகுப்புகளுக்கான ஒரு நுழைவுத் தேர்வு. ஆனால், சில சுய ஆட்சி (Autonomous) கல்லூரிகளில் அதே 6 ஆம் தேதியன்று அவர்களுடைய தேர்வை வைத்திருக்கிறார்கள். TANCET தேர்வினை எழுத

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 ஏப்ரல் 4

தமிழகத்திலிருந்தும், வெளியிலிருந்தும் மாணவர்கள் வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அந்தத் தேர்வினைத் தள்ளிப்போட முடியாது. ஆனால், அரசு தன்னாட்சிக் கல்லூரிகளில் மாணவர்கள் TANCET தேர்வினை எழுதுவதற்கு வசதியாக கல்லூரித் தேர்வை நடத்தக்கூடாது என்று அரசு உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்களில் நூலகர்கள், அவர்கள்தான் அந்தத் துறையினுடைய தலைவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் பி.எச்டி., போன்ற தகுதிகளையெல்லாம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், தேவையில்லாமல் ஒரு பேராசிரியரை பல்கலைக்கழகங்களின் நூலகத்திற்கான incharge–ஆக, பொறுப்பாக அமைத்திருக்கிறார்கள். இது தேவையில்லாத ஒரு நடைமுறை. நூலகர்களே அதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, உரையை முடியுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அதுபோல் இன்றைக்கு தமிழ்நாட்டில் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களாக சிறுபான்மையினத்தைச் சார்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் யாரும் இல்லை என்ற ஒரு சூழல் இருக்கின்றது. வருங்காலத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நாம் அவர்களை நியமிப்பதில்லை. அதற்கென்று தனியாக ஒரு கமிட்டி இருக்கின்றது.

பிற்பகல் 1–45

சிறந்த கல்வியாளர்கள் அல்லது தாம் கற்ற கல்வியை இந்த நாட்டிற்குப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அறிவார்ந்த கல்வியாளர்களைத் தேர்வு செய்வதுதான் முறை. இதுவொரு தலைமைப் பணி. இது இட ஒதுக்கீட்டிலே நியமிக்கப்படுகின்ற ஆசிரியர் பணியோ அல்லது அதுபோன்ற

பணிகளோ கிடையாது. இதுவொரு தலைமைப் பண்புள்ள பணி. எனவே, தலைமைப் பண்புள்ள பணியில் நியமிப்பதற்கு இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க முடியாது. அவர்களுக்குத் தகுதியை மட்டுமே கடைப்பிடிக்க முடியும். ஆகவே, உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தகுதிபடைத்தவர்களாக இருந்தால் அவர்கள் வருவதற்கு நிச்சயமாக வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களாக யாரும் நியமிக்கப் படுவதில்லை என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, உரையை முடியுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன்.

நான் அந்த அடிப்படையிலேதான் சொன்னேன். தகுதியுடைய தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் துணை வேந்தர்களாக வரவேண்டும். என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளிலே ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நீங்களும் விளக்கம் அளித்தீர்கள். என்னுடைய கோரிக்கை என்னவென்றால் பள்ளிக் கல்வித் துறையிலே இருக்கும் அரசு உதவி பெறக்கூடிய பள்ளியிலே ஆசிரியர் பணியிடம் காலியாக இருக்கும்போது அந்த பள்ளிக் கல்வி இயக்குநரே அவற்றை நிரப்பக்கூடிய நடைமுறை இருக்கிறது. அப்படி நிரப்பினால் நீண்ட இடைவெளி ஏற்படுவதில்லை. இந்த 3,120 ஆசிரியர் பணியிடங்களைப் பார்த்தால் நீண்ட காலமாக தொடர்ந்து நிரப்பப் படாமல் வந்த பணியிடங்கள் என்று தெரிகிறது. அதேபோல ஆசிரியரல்லாத பணியிடங்கள் 2008–லிருந்து காலியாக இருக்கின்றன. எனவே கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரத்தை வழங்கவேண்டுமென்று சொல்லி, இறுதியாக நம்முடைய தமிழ்நாட்டிலே இன்னும் தகுதியான பேராசிரியர்கள் உருவாகவேண்டும். அவர்களுக்காக அரசு சார்பிலே ஒரு State Level Staff Development Institute for Higher Education—உயர் கல்விக்கான ஆசிரியர் மேம்பாட்டிற்கான ஒரு கல்வி நிறுவனம்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 ஏப்ரல் 4

ஏற்படுத்தப்பட்டு அதில் கல்லூரி ஆசிரியர்களாக செல்லக்கூடியவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஒரு நிலையை இந்த அரசு எடுத்தால் உயர் கல்வியினுடைய தரம் உயரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, உரையை முடியுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: இந்த வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. சு. குணசேகரன். வாய்ப்பு இல்லை. தற்போது மணி ஒன்றே முக்கால் ஆகிறது. (குறுக்கீடுகள்) இப்போது வாய்ப்பு கிடையாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். அமைச்சர் பேசி முடிக்கட்டும், பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களுக்காகவும், ஏழரைக் கோடி தமிழக மக்களுக்காகவும், (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. குணசேகரன், பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசி முடித்த பிறகு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, B.A.C. முடிவின்படிதான் இங்கே அலுவல்களை எடுத்துக்கொள்கிறோம். நீங்கள் உங்கள் சௌகரியத்திற்கு வந்து கேட்டால் நேரம் தரமுடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அதுபோன்று தரமுடியாது. B.A.C. எடுத்த முடிவின்படிதான் செய்கிறோம். எதுவாக இருந்தாலும் என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். சபையிலே கேட்டால் சரியாக இருக்காது. (குறுக்கீடு) B.A.C. எடுத்த முடிவைத்தான் இங்கு செயல்படுத்துகிறோம். (குறுக்கீடுகள்) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேசுவது எதுவுமே அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரைக் கோடி கழகத்

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

தொண்டர்களுக்காகவும், ஏழரைக் கோடி தமிழக மக்களுக்காகவும், உண்ணாமல், உறங்காமல், கண் துஞ்சாமல் கண்ணும் கருத்துமாய் அல்லும் பகலும் தமிழகத்தின் நலன் ஒன்றே பெரிதென்று தன் வாழ்கையை அர்ப்பணித்து, தியாகம் செய்து, ஓயாது உழைத்து, நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நாட்டுமக்களின் முன்னேற்றத்திற்கு சீரிய முறையில் பணியாற்றிவரும் இந்த வேளையில், எங்கோவொரு கடைக்கோடி கிராமத்தில், ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒரு ஏழைத் தொண்டனாகிய என்னையும் அடையாளம் கண்டு, கழகத்தில் கிளைக் கழகம் முதல் தலைமைக் கழகம்வரை கழகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பினை வழங்கி, இரண்டாம் முறையாக சட்டமன்ற உறுப்பினர் ஆக்கியதோடு மட்டுமல்லாமல், உயர் கல்வித் துறையின் அமைச்சராக்கி, மூன்றாம் முறையாக இந்த மானியக் கோரிக்கையை இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கின்ற ஒரு மாபெரும் வாய்ப்பினை வழங்கி என்னை வாழவைத்துக்கொண்டிருக்கின்ற என்றைக்கும் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாய், நாளைய பாரதத்தின் வழிகாட்டியாய் விளங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் வணங்கும் இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, அவர்கள் பொற்பாதம் தொட்டு வணங்கி என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையும், மக்களின் எதிர்பார்ப்புகளையும் எந்த நிலையில் தடைகள் வந்தாலும், அது எந்த ரூபத்தில் வந்தாலும், அனைத்துத் தடைகளையும் உடைத்தெறிந்து நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் என்பதை நாமும் அறிவோம், நாடும் அறியும்.

பிற்பகல் 1–50

மாநிலத்தில் நிதி நிலைமையை சீர்படுத்தி, மேம்படுத்தி, மக்களின் தேவைகளை அறிந்து, வளம் மிக்க மாநிலமாக, கண்ணியமான வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் எல்லோருக்கும் வழங்கும் மாநிலமாக, வறுமையும், ஏழ்மையும் ஒழிக்கப்பட்ட மாநிலமாக, வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இல்லாத மாநிலமாக, ஒடுக்கப்பட்டோர் உள்ளிட்டோர்

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

அனைவரின் வாழ்வுரிமையை அனைத்து வகையிலும் உறுதி செய்யும் மாநிலமாக, ஏழை எளியோர், வரியோர், அனாதைகள், ஊனமுற்றோர், பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரின் கண்ணீரையும் துடைக்கக்கூடிய மாநிலமாக தமிழகத்தை உருவாக்கவேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய நோக்கம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னோடியாக மாற்றுவதே மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் இலட்சியம் ஆகும். இதன் அடிப்படையில்தான் 'VISION 2023' என்ற தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரித்து வழங்கியிருக்கிறார். இந்தத் தொலைநோக்குத் திட்டத்தில் பத்து முக்கிய அம்சங்களை, அதாவது பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, தொழில், உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற அம்சங்களோடு கல்வித் துறையும் ஒரு முக்கிய அம்சமாக சேர்த்து தொலைநோக்குச் சிந்தனையுடன் அடுத்து வரும் பத்து ஆண்டுகளில் தமிழகம் எப்படி இருக்கவேண்டும் என்பதை இப்போதே சிந்தித்துத் தெளிவான திட்டத்தை வகுத்துத் தந்திருக்கிறார்.

தொலைநோக்குச் சிந்தனை என்பது கடந்து வந்த பாதையும், கடக்கவேண்டிய தூரத்தையும் கருத்தில்கொண்டு செயல்படுவதாகும். கல்வியில் நாம் கடந்து வந்த பாதை என்பது மிகவும் தொன்மையானது. கற்பிக்கும் முறையிலும் சரி, கற்பதிலும் சரி நமக்கு என்று தனி வழிமுறை உண்டு, தனி பண்பாடும் உண்டு. பாரம்பரியச் சிறப்பும், வரலாற்றுப் புகழும் கொண்ட நமது கல்வி முறையை நவீனப்படுத்தி உலகமே வியக்கும் வண்ணம் பல மாற்றங்களைத் தந்திருக்கிறார்கள்.

கல்வியால் அறிவு விரிகிறது, அறிவே ஆற்றலாக மாறுகிறது. ஆற்றல்மிக்க மனிதனால் மட்டுமே வளமான வசதி படைத்த சமூகத்தை உருவாக்க முடியும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய நம்பிக்கை. ஒரு மனிதனை முழு மனிதனாக உருவாக்குவது கல்விதான். கல்வியின் மூலமே நாம் அனைத்துத் துறைகளிலும் நிலையான நீடித்த வளர்ச்சியைக் காணமுடியும். ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது மனித வளத்தைக் குறிப்பிடுகிறது. மனித வளத்தின் குறியீட்டு அளவு அதிகரிப்பதன்மூலம் நாட்டின் வளர்ச்சி முன்னேற்றம் அடையும்.

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே Human Development Index மனித வளத்தின் குறியீடு என்று சொல்கிறோம். குறிப்பாகச் சொன்னால் HDI என்று சொல்கிறோம். மனித வளக் குறியீடு என்பது கல்வி, சுகாதரம் மற்றும் தனி நபர் வருவாய் ஆகியவற்றை அடையாளமாகக் கொண்டு கணக்கிடப்படுவதாகும். 'VISION 2023'–ல் தமிழகத்தின் மனித வளக் குறியீடு, வளர்ந்த நாடுகளுக்கு இணையாக உருவாக்கப்படவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

உலக நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் இந்தியா 136–வது இடத்திலும், பக்கத்து நாடான பாகிஸ்தான் நாடு 146–வது இடத்திலும், இன்னொரு பக்கத்து நாடான சீனா 101–வது இடத்திலும், உலகத்திலேயே நார்வே நாடு முதல் இடத்திலும், அமெரிக்கா மூன்றாவது இடத்திலும், பிரிட்டன் 26–வது இடத்திலும், ரஷ்யா 55–வது இடத்திலும் உள்ளன. உலக நாடுகளின் சராசரி HDI 0.694 ஆகும். இந்தியாவினுடைய சராசரி HDI 0.554 ஆகும். தமிழகத்தினுடைய சராசரி 0.570 ஆகும். தமிழ்நாட்டினுடைய HDI இந்தியாவின் சராசரியைவிட அதிகமாக இருப்பினும், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக வருவதே மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனவு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது கல்வியையே அடித்தளமாகக்கொண்டு அமைகிறது. கல்வியால் சுகாதாரம் மேன்மை அடையும் தனிநபர் வருவாய் சீராக்கும். ஆதலால் உயர் கல்வி இதற்கு உறுதுணையாக விளங்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி என்பது பள்ளிப் படிப்பை முடித்து, பட்ட மேற்படிப்பை கல்லூரிகளிலோ அல்லது பல்கலைக்கழகத்திலோ சேர்ந்து படிப்பது என்பது அனைவரும் அறிந்ததே. உயர் கல்வியைப் பொறுத்தவரையில் இந்தியாவின் Knowledge Capital அதாவது அறிவுசார் தலைமையிடமாகவும், Innovation Hub அதாவது புதுமைகளைப் படைக்கும் மையமாகவும், தமிழகத்தை உருவாக்கும் நோக்கில்தான் உயர் கல்விக்கான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள். இதனுடைய அடிப்படையில்தான் உயர் கல்வியில் ஐந்து முதன்மை அம்சங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

பொதுவாக higher education to all-அதாவது எல்லோருக்கும் உயர் கல்வி, inclusive higher education-அதாவது அனைவரையும் உள்ளடக்கிய உயர் கல்வி, World Class Education உலகத் தரத்திலான உயர் கல்வி, நவீன தொழில்நுட்ப உதவியோடு சேர்ந்த உயர் கல்வி, உலகத் தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கு ஏற்ற பாடத் திட்டங்கள் மற்றும் வேலைத்திறன் பயிற்சி அளிப்பது இதுபோன்ற முக்கியமான ஐந்து அம்சங்களை வைத்துத்தான் உயர் கல்வியை முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பல நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியில் சேருவதற்கு தகுதியானவர்கள் அனைவருக்குமே வாய்ப்புத் தர வேண்டும். கிராமப்புறத்தைச் சார்ந்தவர்கள், நகர்ப்புறத்தைச் சார்ந்தவர்கள், ஏழையெளியவர்கள், வசதி படைத்தவர்கள், மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்கள், மாற்றுத் திறனாளிகள், ஆண்கள், பெண்கள் என்று அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை வழங்குவதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய முக்கிய நோக்கமாகும். இதைத்தான் அனைவரையும் ஒருங்கிணைக்கிற கல்வி 'Inclusive Education' என்று நாம் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம், அதாவது Gross Enrolment Ratio என்பது 18 வயது முதல் 23 வயதிற்குட்பட்டவர்களில், உயர் கல்வியில் சேருபவர்களுடைய எண்ணிக்கை விகிதமாகும். 2011 ஆம் ஆண்டு census படி இந்தியாவின் மக்கட்தொகை 121 கோடி ஆகும். இதில் 18 வயது முதல் 23 வயதுக்குட்பட்டவர்கள் 13.8 கோடி பேர் இருக்கிறார்கள். அதாவது, 13.8 கோடி மாணவ, மாணவியர் உயர் கல்வியில் சேர்ந்திருக்க வேண்டும். ஆனால், இந்திய அளவில் 2.7 கோடி பேர்தான் உயர் கல்வியில் சேர்ந்திருக்கிறார்கள். அதாவது, இந்திய அளவில் இந்த விகிதம் 15 சதவிகிதமாக மட்டுமே உள்ளது. இதில் ஆண்கள் என்று எடுத்துக்கொண்டால் 17.1 சதவிகிதமாக இருக்கிறார்கள்; பெண்கள் என்று எடுத்துக்கொண்டால் 12.7 சதவிகிதமாக இருக்கிறார்கள். உலக அளவில் இந்த Gross Enrolment

Ratio என்பது 23 சதவிகிதமாக இருக்கிறது. ஆனால், அதையே வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்த சதவிகிதம் 54 சதவிகிதமாக இருக்கிறது. குறிப்பாக, அமெரிக்காவில் 83 சதவிகிதம் இருக்கிறது, ரஷ்யாவில் 77 சதவிகிதம் இருக்கிறது, பிரிட்டனில் 57 சதவிகிதம் இருக்கிறது, நம் அண்டை நாடான சீனாவில் 23 சதவிகிதம் இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 2011 ஆம் ஆண்டு census படி மக்கட்தொகை 7.2 கோடி ஆகும். இதில் உயர் கல்விக்குத் தகுதியானவர்கள், அதாவது 18 வயது முதல் 23 வயதிற்குட்பட்டவர்கள் 72 இலட்சம் பேர் ஆவார்கள். தற்போதைய நிலையில், தமிழ்நாட்டில் 13.8 இலட்சம் பேர் உயர் கல்வியில் சேர்ந்துள்ளனர். இதன் Gross Enrolment Ratio விகிதம் 19 சதவிகிதமாக உள்ளது. இதில் ஆண்கள் 20.7 சதவிகிதமும், பெண்கள் 17.2 சதவிகிதமாகவும் உள்ளனர். நமது பக்கத்து மாநிலங்களான கேரளா 13.1 சதவிகிதமும், கர்நாடகம் 18.1 சதவிகிதமும், ஆந்திரா 12.3 சதவிகிதமாகவும் உள்ளது. தென்னிந்திய மாநிலங்களில் தமிழகம்தான் இந்த Gross Enrolment Ratio–வில் முதன்மை இடத்தில் உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய பக்கத்து மாநிலங்களை மட்டும் ஒப்பிட்டுப் பார்க்காமல், வட மாநிலங்களில் இருக்கக்கூடிய மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், பீகாரில் 11 சதவிகிதமாகவும், குஜராத் மாநிலத்தில் 15.9 சதவிகிதமாகவும், இராஜஸ்தானில் 9.6 சதவிகிதமாகவும், உத்திரப் பிரதேசத்தில் 10.9 சதவிகிதமாகவும், மேற்கு வங்கத்தில் 11.9 சதவிகிதமாகவும் உள்ளது. இந்திய மக்கட்தொகையில், தமிழ்நாடு ஏழாவது இடத்தில் உள்ளது. மக்கட்தொகை அதிகம் உள்ள மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, தமிழ்நாட்டின் Gross Enrolment Ratio இரண்டாவது இடத்தில் உள்ளது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் கடந்த 11 ஆவது ஐந்தாண்டு காலக் கட்டத்தில் Gross Enrolment Ratio 18 சதவிகிதமாக இருந்தது என்று சென்றமுறை கொள்கை விளக்கக் குறிப்பிலே நாம் குறிப்பிட்டிருந்தோம். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த இரண்டாண்டு ஆட்சிக் காலத்தில் இதனை உயர்த்த மேற்கொண்ட நடவடிக்கைகளின்

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

காரணமாக ஒரு சதவிகிதம் உயர்ந்து, தற்போது தமிழகத்தினுடைய Gross Enrolment Ratio 19 சதவிகிதமாக அதிகரித்துள்ளது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும், 'VISION 2023' இல் முதல்வர் அம்மா அவர்களால் குறிப்பிடப்பட்டதைப்போல, அதாவது 2025 இல் 25 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த எண்ணிக்கையை உயர்த்துகிற வகையில் நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி Gross Enrolment Ratio–ஐ உயர்த்த நாம் செய்ய வேண்டியது என்னவென்று சொன்னால், ஒன்று கல்லூரியை அதிகமாக உருவாக்க வேண்டும் அல்லது ஏற்கெனவே இருக்கக்கூடிய கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனடிப்படையிலேதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த இரண்டே ஆண்டுகளுக்குள்ளாக இதுவரையில் 43 புதிய கல்லூரிகளை நமக்குத் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக 23–ம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக 7–ம், பொறியியல் கல்லூரியாக 3–ம், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, பாலிடெக்னிக் காலேஜ்–ஆக 10–ம், ஆக மொத்தம் இதுவரையில் 43 புதிய கல்லூரிகளை சேர்த்து, தமிழகத்தின் இந்த Gross Enrolment Ratio அதிகரிக்கும் விதத்தில் தந்திருக்கிறார்கள். இதன்மூலமாக 11,400 மாணவர்கள் கூடுதலாக உயர் கல்வி கற்கும் வகையில் கல்லூரிகளில் இடம் பெறுவதற்கான ஒரு வாய்ப்பு அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

அவர்களே, அதோடு மட்டுமல்ல, இப்படி புதிய கல்லூரிகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் 5 மாவட்டங்களில் முதுகலைப் பட்ட மேற்படிப்பு மையங்களையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு பெரம்பலூர் மாவட்டம், ஈரோடு மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், விருதுநகர் மாவட்டம், தருமபுரி மாவட்டம் ஆகிய 5 மாவட்டங்களில் புதிய முதுகலை பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தப் பட்ட மேற்படிப்பு மையங்களில் முதுகலைப் பட்டப் படிப்புகளை வழங்குவதுடன் மாணவ மாணவிகளுடைய ஆராய்ச்சிப் படிப்புக் கனவை நிறைவேற்றும் வகையில், ஆராய்ச்சிப் படிப்புகளுக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதற்காக ஆய்வுக்கூடங்கள், நூலக மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையங்கள் உருவாக்கியதன் காரணமாக உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் கொண்டு வந்ததே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 2002 ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழகத்தை மிகக் குறுகிய காலத்தில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்து, இதன்மூலமாக 4½ இலட்சம் மாணவ மாணவிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தில் கல்விச் சேர்க்கை அளித்து வருகிறது. இந்நிலையை மேலும் விரிவுபடுத்துகிற வகையில், மாணவ மாணவிகளுடைய வசிப்பிடங்களுக்கு அருகிலேயே உயர் கல்வி பெறும் வாய்ப்பாக திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்திலே ஒரு மண்டல மையமும், கோயம்புத்தூரிலே ஒரு மண்டல மையமும் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இதன்மூலமாக மாணவர்களுடைய சேர்க்கை விகிதம் நிச்சயம் உயரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, தகவல் தொழில்நுட்ப நிறுவனம், அதாவது IIIT-Indian Institute of Information Technology இதுபோன்ற ஒரு நிறுவனத்தை நம்முடைய திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதியிலே உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்த நிறுவனம்

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

உலகத் தரத்திலான கல்வியை வழங்கும்பொருட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுகாவில், அதாவது சேதுராப்பட்டியில் 56.37 ஏக்கர் நிலம் தமிழக அரசின் சார்பில் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக இந்த நிறுவனம் திருச்சி, பாரதிதாசன் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவன வளாகத்தில் இந்த ஆண்டு, அதாவது, 2013–2014 ஆம் கல்வி ஆண்டு முதல் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குத் தேவைப்படும் ஒட்டுமொத்த நிதி 120 கோடி ரூபாய். இதில் மாநில அரசினுடைய பங்கு, மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் பங்கு, தனியார் தொழில் நிறுவனத்தின் பங்கு இடம்பெற்றிருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு இதிலே தன்னை உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டுள்ளன. டேக் சொலூசன்ஸ் லிமிடெட் சென்னை காக்னிசன்ட் டெக்னாலஜி சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், பிரதிக்சா இன்ஃபோசிஸ் லிமிடெட், டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் லிமிடெட் மும்பை, ராம்கோ சிஸ்டம் சென்னை ஆகிய 5 தொழில் நிறுவனங்களும் தங்களுடைய முதலீடுகளை இந்த நிறுவனத்தில் செலுத்தியுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கூடுதலாக எல்காட் நிறுவனம் 10 கோடி ரூபாய் தன்னுடைய பங்காகச் செலுத்தியுள்ளது. இதனால் உலகத் தரத்திலான தொழில்நுட்பக் கல்வி கிடைப்பதுடன் Gross Enrolment Ratio உயர்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, ஏற்கெனவே சொன்னதைப் போல புதிய கல்லூரிகளைத் திறந்ததோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே இருக்கக்கூடிய அரசுக் கல்லூரியில் புதியதாக பாடப் பிரிவுகளைத் தொடங்கியதன் காரணமாக, உயர் கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன. இப்புதிய கல்லூரிகள் தொடங்குவதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே தமிழகத்திலுள்ள 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள், அதாவது கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளில் 400 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அது

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த புதிய பாடப் பிரிவுகள் மூலமாக, மேலும் கூடுதலாக 7,400 பேர் உயர் கல்வி பெற முடியும் அந்த எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 290 புதிய பாடப் பிரிவுகள் மட்டுமே தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, பள்ளிக் கல்வி முதல் உயர் கல்வி வரை from School Education to Higher Education வரை அதாவது உயர் கல்வியில் சேர வேண்டுமென்று சொன்னால் சில தகுதிகள் இருக்கின்றன. மாணவர்கள் உயர் கல்விக்கு வரவேண்டுமென்றால் சில அடிப்படைத் தகுதிகள் தேவை. இந்தத் தகுதிகளை அடைய வறுமை, ஏழ்மை ஒரு இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் உயர் கல்வி பெறுகிற தகுதியை அதாவது பள்ளிக் கல்வியோடு இடைநிற்காமல் அவர்கள் கல்லூரிப் படிப்பில் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பள்ளிக் கல்வியிலே scholarship, incentive கொடுப்பதோடு மடிக்கணினி போன்ற பொருட்களையெல்லாம் வழங்கி அவர்கள் எந்த வகையிலும் பாதிக்காத வகையில், உயர் கல்வியில் சேருகிற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மாநில அரசின் 10 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட கல்வி உதவித் திட்டம் ஏழையெளிய மாணவர்களுக்கு என நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள், பொறியியல் கல்வியில் சேருகிற, மருத்துவக் கல்வியில் சேருகிற மாணவ மாணவிகளின் பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் 2 இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக இருக்குமானால் அவர்களின் கல்விக் கட்டணம் முழுவதையும் அரசாங்கமே கட்டிக்கொள்ளும் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறோம். இது இந்தியாவில் இல்லாத ஒரு முதன்மையான திட்டத்தை நம்முடைய முதல்வர் அம்மா அவர்களே கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்மூலமாக மட்டும் இதுவரையில் 20 ஆயிரத்து 855 பேர் பயனடைந்திருக்கிறார்கள். அதில் பொறியியல் கல்லூரியில் மட்டும் 16 ஆயிரத்து 90 பேர் இதன்மூலமாக பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

பிற்பகல் 2–05

அடுத்து, சிறப்புக் கவனத் திட்டம். கல்லூரியிலே நாம் மாணவர்களைச் சேர்த்துவிடுகிறோம். சிலர், அதிக மதிப்பெண்கள் பெற்று அந்தக் கல்லூரியில் சேர்ந்திருக்கலாம். சிலர், குறைவான மதிப்பெண்கள் பெற்று கல்லூரியில் சேர்ந்திருக்கலாம். அதே நேரத்தில், குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்கள் அதிகமான மதிப்பெண்கள் பெற்றவர்களோடு போட்டிப் போடமுடியாமல், அந்த மாணவர்களைப் போன்று கற்க முடியாமல், சிலருக்கு மனவருத்தம் ஏற்படும், சிலருக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்படும். அந்தத் தாழ்வு மனப்பான்மை ஏற்படக்கூடிய மாணவர்களை நல்ல முறையிலே படிக்கக்கூடிய மாணவர்களோடு ஒன்றாகச் சேர்த்து ஒரு குழு அமைத்து, அந்தக் குழு மூலமாக அவர்களுடைய கல்வித் தரம் பாதிக்காத வகையில் கல்லூரிகளில் மெதுவாகக் கற்பிக்கப்படும் ஒரு சிறப்பான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, Inclusive Education இல் சொன்னதைப்போல மாற்றுத் திறனாளிகளுக்கும் கல்வி வசதிகள். அதாவது, பல்வடிவக் கருவிகள் தயாரிக்கும் மையம் Multi Model Material Production Centre for Differently Abled இந்த மையத்தின்மூலமாக கண் பார்வையற்றோர்களுக்கு கணினிமூலம் Braille புத்தகம் தயாரிக்கப்படுகின்றன. தொட்டு உணரும் கற்றல் கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. கண் பார்வை குறைந்தவர்களுக்கு பெரிதாக்கப்பட்ட எழுத்துமுறை, கற்றல் புத்தகங்கள் கணினிமூலம் தயாரிக்கப்படுகின்றன.

பேசும் திறன் குறைந்தவர்களுக்கு நவீன மின் ஒலிக் கருவிகளைப் பயன்படுத்தி கல்வி கற்பிக்கப்படுகிறது. இதற்காக, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் 50 இலட்சம் ரூபாய் அந்தப் பல்கலைக்கழகத்திருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 10 பல்கலைக்கழகங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி கற்பிப்பதற்காக, Braille system கற்பதற்காக, இதுபோன்ற வசதிகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

இன்றைக்கு, மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரையில், மாற்றுத் திறனாளிகளைச் சந்திக்கின்றபோது, அது இரயில் பயணமாக இருந்தாலும் சரி, பேருந்து பயணமாக இருந்தாலும் சரி அல்லது நாம் பாதையில் கடந்து செல்கின்றபோதுகூட மாற்றுத் திறனாளிகளைப் பார்க்கும்போது, உடல் ஊனமுற்றவர்களைப் பார்க்கிறபோது, அவர்களுக்கு உதவுகிற ஒரு எண்ணம் நமக்கு இருக்கும். அப்படி எண்ணம் இருந்தாலும்கூட, மனதளவிலேயே அந்த எண்ணம் நின்றுவிடும், சென்று உதவ முடியாது. ஆனால், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாற்றுத் திறனாகளின் வாழ்வில் முன்னேற்றம் காணும் வகையிலும், நம்பிக்கை ஏற்படுத்துகின்ற வகையிலும், அவர்களுக்காகவே இந்தச் சிறப்பானத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே இருக்கக்கூடிய 10 பல்கலைக்கழகங்களில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி கல்வியிலே மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துகிற வகையிலே ஆண்களும், பெண்களும் சமமாகப் படிக்க வேண்டும். ஆண்களோடு, பெண்களும் அதிகமாகச் சேர்ந்து படிக்க வேண்டும். அதாவது, Gender equity-பாலினச் சமன்மை என்று சொல்கிறோம். இந்தப் பாலினச் சமன்மை பற்றி பேசுவோமென்று சொன்னால், ஆண்கள் எந்த அளவுக்குப் படிக்கிறார்களோ அந்தளவுக்கு பெண்களையும் நாம் படிக்க வைக்க வேண்டும். இதுபோன்ற ஒரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியிருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நாம் தாலிக்குத் தங்கம் கொடுக்கிறோம்—தாலிக்குத் தங்கம் என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் நோக்கம்; வறுமையிலே இருக்கக்கூடிய ஏழைப் பெண்களுக்கு, வறுமையினால் திருமணம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, இந்தத் தாலிக்கு தங்கம் வழங்குகிற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஒன்று, அந்த ஏழைப் பெண்களுக்கு உதவ வேண்டும் என்பது, மற்றொன்று அவர்கள் பட்டம் படித்தால், அந்தப் பெண்கள் பட்டதாரிகளாக

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

இருந்தால் 50 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெண் குழந்தை பட்டம் படிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே நான் குறிப்பிட்டதைப்போன்று, வறுமையை ஒழிப்பதற்காகவும், அந்தப் பெண்களுக்கு உதவுவதற்காகவும் கொண்டு வந்திருக்கிற திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நேற்று நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; தமிழகத்தில் இதுவரை 2 இலட்சத்து 80 ஆயிரம் பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். ஆக, இவ்வளவு பேர் பயன் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இதைப் பார்த்து எதிர்காலத்திலுள்ள பெண்களும் தாங்களும் பட்டம் படித்தால் இதுபோன்ற சலுகை நமக்கு கிடைக்கும், நம்முடைய வாழ்க்கைத் தரம் உயரும் என்ற நோக்கத்தோடு படிப்பார்கள் என்பதால் தான் இந்த உன்னதமான திட்டத்தை இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இதன்மூலமாக, ஆண்களுக்குச் சமமாக பெண்களும் கல்வி கற்கக்கூடிய வாய்ப்பு உருவாகும். இதன்மூலமாக, ஒருங்கிணைக்கப்பட்ட கல்வியை, பெண்களும் ஆண்களுக்குச் சமமாகக் கல்வியைப் பெற்று, அந்த Gross Enrolment Ratio உயர்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும், இது ஒரு முன்னோடித் திட்டம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி, Gross Enrolment Ratio-வை உயர்த்துவதற்கு, உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு புதிய, புதிய கல்லூரிகளைத் தொடங்குதல், புதிய முதுகலைப் பட்ட மேற்படிப்புகளைத் தொடங்குதல், மண்டல மையங்களைத் தொடங்குதல், இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் அமைத்தல், இதோடு 400 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்குதல், பள்ளிக் கல்வி முறையை உயர் கல்வி வரை உயர்த்துதல் என அடுக்கடுக்கான பல சலுகைகளை வழங்குதல், 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட கல்வி உதவித் தொகை திட்டம், மெதுவாகக் கற்கும் மாணவர்கள்மீது சிறப்புக் கவனம், மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குக் கல்வி வசதிகள், பாலினச் சமன்மை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், ஆக, இத்தனை சிறப்புகள்

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

மூலமாக தமிழகத்தில் Gross Enrolment Ratio, உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை விகிதம் நிச்சயமாக உயரும். மாண்புமிகு அம்மா அவர்கள் VISION *2023* இல் சொன்னதைப்போன்று, இந்த நிலையை கூடிய விரைவில் அடைவோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

இரண்டாவதாக, உலகத் தரத்திலான உயர் கல்வி. நம்முடைய கல்வி உலகத் தரத்து அளவிற்கு உயர வேண்டும்–World Class Higher Education. உலக அளவில் உள்ள மிகச் சிறப்பான கல்வி முறைகளையும், புதுமைகளையும் ஏற்று உலகளாவிய வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில், கல்வி வழங்குவதே உலகத் தரத்திலான கல்வி என்று சொல்கிறோம். இதன் அடிப்படையிலே பார்த்தால், நம்முடைய உயர் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறுபட்ட கொள்கைகளை வகுத்துத் தந்திருக்கின்றார்கள்.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல தரம் காக்க அண்ணா பல்கலைக்கழகத்தை இணைத்திருக்கின்றார்கள். பல்கலைக்கழக இணையதளங்களை இணைத்தல், நூலகங்களை இணைத்தல், காணொலிக் காட்சி வசதியுடன்கூடிய சிறப்பு வகுப்பறைகள், வெளிநாட்டுப் பேராசிரியர்களை அழைத்து வந்து இங்கே பயிற்சி அளித்தல், curriculum development - கலைத் திட்ட உருவாக்க மையம், மாணவர்கள் ஆசிரியர்களிடம் சென்று படித்தல் என்று எல்லா வகையிலும் உலகத் தரத்திலான கல்வியை வழங்குகின்ற திட்டத்தை இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், நான் சொன்னதைப்போல் இன்றைக்கு அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய தரத்தைக் காக்கின்ற வகையிலும், அதனுடைய உலகப் புகழைக் காக்கின்ற வகையிலும், மாணவர்கள் வெளிநாட்டிற்குச் சென்றால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலும், ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளும் வகையிலும் இந்தப் பல்கலைக்கழகத்தை இன்றைக்கு ஒன்றாக இணைத்து அதற்கு மீண்டும் ஒரு பெருமையைச் சேர்த்திருக்கின்றார் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இணையதளத்தின் மூலமாக

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

நம்முடைய தமிழகத்திலே, கிராமப் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்கள்கூட உலகத் தரத்திலான கல்வியைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல, பல்கலைக்கழக இணைய தள இணைவு– ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து மற்றொரு பல்கலைக்கழகத்தை இணைய தளத்தில் நாம் இணைக்க வேண்டும். இதன்மூலமாக ஒரு நல்ல சிறந்த பல்கலைக்கழகத்திலே இருக்கக்கூடிய ஆராய்ச்சிப் படிப்பு, சாதாரணமாக இருக்கக்கூடிய அந்தக் கல்லூரி மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த முறையை இங்கே கொண்டுவந்திருக்கின்றோம்.

அத்துடன், நூலகங்களை இணைத்தல் – நான் ஏற்கெனவே சொன்னது பல்கலைக்கழகத்தையும், பல்கலைக்கழகத்தையும் இணைத்தல். இப்போது சொல்வது பல்கலைக்கழகங்களிலே இருக்கக்கூடிய நூலகங்களை இணைத்தல். இணைய தளத்தில் இன்று பல்வேறுபட்ட நூலகங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண்மை, உடற்கல்வி, கால்நடை பராமரிப்பு உட்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். பொறியியல் கல்லூரியை இணைக்கின்ற பொறுப்பு அண்ணா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. மற்ற பல்கலைக்கழகங்களில் உள்ள நூலகங்களை இணைக்கின்ற பொறுப்பு நம்முடைய உயர் கல்வித் துறையைச் சார்ந்த Science City–அறிவியல் நகரத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, இதன்மூலம் கிராமப்புறங்களில் உள்ள கல்வி நிலையங்களும், நகர்ப்புறங்களில் உள்ள கல்வி நிலையங்களும் நூலக வசதிகளைப் பெற முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணொலிக் காட்சி வசதியுடன் கூடிய சிறப்பு வகுப்பறைகள். அதாவது உலகக் கல்வியைப் பெற வேண்டுமென்று சொன்னால், வெளிநாடுகளில் கிடைக்கக்கூடிய கல்வி நம்முடைய மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும். ஒரு தலைசிறந்த பேராசிரியரோ அல்லது ஒரு வல்லுநரோ ஒரு இடத்திலிருந்து பாடம் நடத்தினால், LCD Projector மூலமாக, ஒரு பெரிய திரையின் வாயிலாக நாம் பார்க்க முடியும்,

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

கேட்க முடியும். நம்முடைய மாணவர்களுக்கு ஏதாவது ஒரு சந்தேகம் ஏற்பட்டால்கூட, அதன்மூலமாக கேள்வி கேட்டு அவர்களுடைய சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள முடியும். இதன்மூலமாக தரமான உயர் கல்வியை நாம் பெற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் திட்டத்திற்கு 10 பல்கலைக்கழகங்களுக்கு ரூபாய் 20 இலட்சம் வீதம், இரண்டு கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கித் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பேராசிரியர்களை அழைத்து வந்து இங்கே பயிற்சி அளித்தல் – நான் முன்பு சொன்ன Video Conferencing மூலம் என்பது ஒரு வல்லுநர் அங்கிருந்தே பாடம் நடத்தலாம்; இங்கே நாம் தெரிந்துகொள்ளலாம். இப்பொழுது சொல்வது – வெளிநாட்டிலே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய தலைசிறந்த பேராசிரியர்களை நம்முடைய பல்கலைக்கழகத்திற்கு வரவழைப்பது; அவர்கள் இங்கே தங்க வைத்து, பாடம் எடுப்பது, நம்முடைய மாணவர்களுக்கு வேண்டிய வசதிகளை உருவாக்கிக் கொடுப்பது; இங்கே ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வது, இதுபோன்ற பணி இன்றைக்கு ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும், நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் 10 இலட்சம் ரூபாய் வீதம் இன்றைக்கு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கிக் தந்திருக்கின்றார்கள். இது மாணவர்கள் மத்தியிலே ஒரு சிறந்த பாராட்டைப் பெற்றிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைத் திட்டம் உருவாக்குதல். கலைத் திட்டம் என்று சொன்னால், பாடத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் வேலைவாய்ப்பைப் பெருக்கக்கூடிய வகையிலே திட்டங்கள் அமைய வேண்டும், பாடங்கள் அமைய வேண்டும். நம்முடைய மாணவர்கள் வெளிநாட்டிற்குச் சென்றாலும் சரி, அல்லது நம்முடைய நாட்டிலே ஏதாவது வேலை பார்க்க வேண்டும் என்று சொன்னாலும்கூட, அவர்கள் வேலையைப் பெறக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்திற்காக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஒரு பல்கலைக்கழகத்திற்கு ஒரு கோடி ரூபாய் வீதம் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 10

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

பல்கலைக்கழகங்களுக்கு 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாணவர்கள், ஆசிரியர்கள் வெளிநாட்டிற்குச் சென்று படித்தல் – Study Abroad Programme for faculty and students –அதாவது, நம்முடைய இந்தியாவிலே இது போன்ற திட்டம் இதுவரை எங்கும் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பிரிட்டிஷ் கவுன்சிலோடு நம்முடைய மாநில உயர் கல்வி மன்றத்தையும் ஒருங்கிணைத்து, ஒரு ஒப்பந்தம் போட்டு, இதன்மூலமாக தமிழ்நாட்டில் அரசுக் கல்லூரியில் படிக்கக்கூடிய 25 மாணவ, மாணவியர்களையும், 5 பேராசிரியர்களையும் தேர்வு செய்து, லண்டனுக்குச் சென்று படிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி, லண்டனிலே சிறந்த 5 பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் படிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே சில தேர்வுகள் வைத்து, அந்த தேர்வுகளில் மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். 25 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டவர்கள் என்று சொன்னால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 23 பேர் பெண்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, 5 ஆசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்படி 30 பேரும் வெளிநாடு சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்வதற்காக இந்த திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். இதற்கு ஒரு மாணவருக்கு எவ்வளவு செலவு என்று சொன்னால், 15 இலட்சம் ரூபாய். இப்படி ஒரு நபருக்கு 15 இலட்சம் ரூபாய் வீதம் 30 பேருக்கும் ஆகும் செலவை மாண்புமிகு அம்மாவின் அரசே ஏற்றுக்கொள்கிறது. அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் எந்தச் செலவும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதில்கூட மாணவர்களைச் சேர்ப்பதில் சில விதிமுறைகளை வைத்திருக்கிறோம். பொருளாதாரத்தில் நலிந்த மாணவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்குள்ளாக இருக்க வேண்டும். அவர்கள் தரமான மதிப்பெண்களைப் பெற்றிருக்க வேண்டும். இதில் P.G. என்று சொல்லக்கூடிய பட்ட மேற்படிப்புக்கு இரண்டாண்டு படிக்க

வேண்டும். 4 பருவத் தேர்வுகள் இருக்கின்றன. மூன்றாம் பருவத் தேர்வை வெளிநாடு சென்று படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு. இந்த வாய்ப்பை ஏற்படுத்தினால் வெளிநாட்டு மாணவர்களுடன் கலந்து பேசுவதற்கும், அங்கிருக்கக்கூடிய தரமான கல்வி நம்முடைய மாணவர்களுக்கும் கிடைப்பதற்கு வாய்ப்பாக அமையும். இது இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு அற்புதமான திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) முதன் முதலாக அம்மா அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து நவீனத் தொழில்நுட்பத்தோடு கூடிய உயர் கல்வி. நவீனத் தொழில்நுட்பம் என்று சொன்னால், நாம் ஏற்கெனவே சொன்னதைப்போல, மடிக் கணினி வழங்கும் திட்டம் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. முதல்வர் அம்மா அவர்கள்தான் முதன் முதலாக நவீனத் தொழில்நுட்பத்தோடு கூடிய கல்வியை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறார்கள். உயர் கல்வியைப் பொறுத்தவரையில் இன்று தமிழகத்திலே உள்ள அரசுக் கல்லூரிகளிலும், அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவர்கள் அத்தனை பேருக்கும் மடிக் கணினி வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதில் ஒரு கருத்து என்னவென்று சொன்னால், யு.ஜி.சி. 2008 ஆம் ஆண்டு அறிக்கையின்படி 229 மாணவர்களுக்கு ஒரு மடிக் கணினி இருக்கிறது என்று ஒரு புள்ளிவிவரம் சொல்கிறது. ஏ.ஐ.சி.டி.இ. (All India Council for Technical Education) norms-ன்படி ஒரு புதிய கல்லூரியை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் அந்தக் கல்லூரியில் சில அடிப்படை வசதிகளை நாம் பூர்த்தி செய்ய வேண்டும். அப்படி அந்தப் புதிய கல்லூரிக்கு வருகிறபோது 4 மாணவர்களுக்கு ஒரு கம்ப்யூட்டர் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அதுகூட, சென்ற ஆண்டுவரை 7 மாணவர்களுக்கு ஒரு கம்ப்யூட்டர் என்ற விதி இருந்தது. ஆனால், இந்த ஆண்டுதான் ஏ.ஐ.சி.டி.இ. அந்தக் கொள்கையை மாற்றியிருக்கிறது. அதாவது ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், 4 மாணவர்களுக்கு ஒரு கம்ப்யூட்டர் இருக்க வேண்டுமென்று ஒரு புள்ளிவிவரம் சொல்கிறது. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கும்

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

இந்தத் திட்டத்தால், ஏ.ஐ.சி.டி.இ.–யின் கொள்கையை மீறி, யு.ஜி.சி.–யின் கணிப்பையும் மீறி, ஒரு மாணவனுக்கு ஒரு கம்ப்யூட்டர் என்ற நிலையைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவது, அவர்களுக்கு தரமான கல்வியைக் கொடுப்பது, அவர்களுக்கு தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வியை வழங்குவது, மட்டுமல்லாமல் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டும், infrastructure–ஐ develop செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், ஏற்கெனவே உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சுதந்திரம் பெற்று இவ்வளவு ஆண்டுகளாகியும்கூட இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு, அரசுக் கல்லூரிக்கென ஒட்டுமொத்தமாக மறுசீரமைப்புக்கென 100 கோடி ரூபாய் வழங்கியதே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதுபோன்ற நல்லதொரு நிதியை வழங்கி, அங்கு இருக்கக்கூடிய மாணவர்களுக்கு மேசை, நாற்காலிகள், அலமாரிகள், நவீன கரும்பலகைகள், மொழி ஆய்வகங்களுக்குத் தேவையான கம்ப்யூட்டர்கள், நூலகப் புத்தகங்கள், நூலகங்களுக்குத் தேவையான கணினிகள், ஆய்வுக்கூடங்களை நவீனப்படுத்துதல், விடுதி வசதிகளை ஏற்படுத்துதல், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின்விளக்கு வசதி, மின்விசிறி வசதி, இதுபோன்ற வசதிகளை உருவாக்குவதற்காக நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்கட்டமைப்பு வசதியைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஏற்கெனவே இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கு 100 கோடி ரூபாய். அதோடு மட்டுமல்ல, புதியதாக தொடங்கப்பட்ட கல்லூரிகளுக்கு, அதாவது சென்ற இரண்டு ஆண்டுகளில் 22 கல்லூரிகள் தொடங்கியிருக்கிறோம். ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டவேண்டுமென்று சொன்னால், அதற்கு 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இதோடு மட்டுமல்ல, பொறியியல் கல்லூரிக்கும் நிதி வழங்கப்பட்டு, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி 10 கல்லூரிகளுக்கும் சேர்ந்து

ஒட்டுமொத்தமாக இதுவரையில் 133 கோடி ரூபாய் கொடுத்து, கட்டடங்கள் கட்டுவதற்காக மட்டும் இதுவரை 442 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாவதாக, பாடத் திட்டங்களை மாற்றியமைத்து வேலைத் திறன் பேச்சளிப்பது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட தெரிவித்ததுபோல அவர்கள் வேலைக்குச் சேரும் வகையில் உயர் கல்வியில் பயிற்சி அளிக்க வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அயலக மொழியை Foreign Language கற்றுக் கொள்வதற்காக இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம், தொழில் நிறுவனங்கள் கூட்டின் மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 2–20

அதோடு மட்டுமல்ல, தொழில்நுட்பம் மற்றும் கல்வி சார்ந்த எழுத்துப் பயிற்சி உருவாக்குவதற்கு எழுத்துப் பயிற்சி மையங்களை உருவாக்கித் தந்திருக்கிறோம். அதோடு மட்டுமல்ல, மென்திறன் மையங்கள், இதுபோன்ற நிலைகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

சமுதாயக் கல்லூரிகள். அதாவது சமுதாயக் கல்லூரிகள் என்று சொன்னால், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் அந்தந்த கிராமங்களிலே என்னென்ன தொழில் செய்கிறார்களோ அவர்களுக்கு ஏற்றவாறு கல்வியை வழங்கி, அந்தக் கல்வியின் மூலமாக அவர்கள் வேலை செய்வதற்கான ஒரு வாய்ப்பு, அவர்களுக்கு மென் திறன் பயிற்சி ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு, இதுபோன்ற நிலைகளையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களைப் பொறுத்தவரையில் 'Vision 2023' என்ற ஆவணத்தை வெளியிடும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள், In my dream I envision a Tamil Nadu where no youth remains unemployed என்று சொன்னார்கள். அதாவது, 'என் கனவில் நான் காண்பதெல்லாம், தமிழகத்தில் ஒரு இளைஞன்கூட வேலை இல்லாமல் இருக்கக்கூடாது' என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், 'I am confident that

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

Tamil Nadu will be able to increase the per capita income at today's prices by six times to reach Rs.*4,50,000/-* or 10,000 dollars in *2023'* என்று சொல்லியிருக்கிறார்கள். Tamil Nadu *2023–ல், இன்றைய தனி நபர் வருவாய் மதிப்பீட்டிலிருந்து 6 மடங்காக அல்லது 10,000 அமெரிக்க டாலராக (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, நான்கரை இலட்சம் ரூபாயாக உயரும் என்று நம்புகிறேன்* என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

இதன்மூலமாகத்தான் இன்றைக்கு கல்வியில் தொழில் நிறுவனங்களை இணைத்து, உலகளவில் வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்யும் வகையில் பாடத் திட்டங்களை வழங்குகிற அற்புதமான திட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு பல்கலைக்கழகம்–தொழில் நிறுவனங்களுடைய கூட்டு இணைவு, அதாவது கல்வி நிறுவனங்களுக்கும், மாணவர்களுக்கும் இந்த மையங்கள் ஒரு பாலமாக அமையும். மாணவ–மாணவிகளுக்கிடையே புதைந்துள்ள புதிய உத்திகளை, அவர்களுடைய திறமைகளை உருவாக்கும் திறன் வகையில் இம்மையங்கள் செயல்படும். மாணவ, மாணவிகளுடைய சிந்தனைகள், திட்டங்கள், கருத்துகள் இம்மையத்தில் பதிவு செய்யப்படும். உரிய தொழில் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு, கூட்டமைப்பை ஏற்படுத்தி, மாணவ–மாணவிகள் பயன்பெற வழிவகை செய்யப்படும். கல்வி நிறுவனங்கள், கல்வி கற்பிக்கும் நிறுவனங்களாக மட்டுமல்லாது, அவர்களுடைய திறன்களை சமூகப் பயன் பெறும் வகையில் மேற்கொண்டு வரும் வகையில் இந்த மையங்கள் செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொரு அம்சமான திட்டம், தொழில்நுட்பம் அடைகாக்கும் மற்றும் பகிர்ந்தளிக்கும் மையங்கள்—ஒரு கோழி இருக்கிறது, அது முட்டைகளை எப்படிப் பாதுகாத்து அது குஞ்சாகப் பொரித்து, தன்னுடைய வாரிசுகளாக உருவாக்குகிறதோ, அதேபோல, ஒவ்வொரு மாணவனிடமும் ஒரு திறமை இருக்கும். ஆனால், அவருக்கு வசதி இருக்காது. அந்தத் திறமையை நாம் அடைகாத்து, ஒரு பல்கலைக்கழகத்திற்கு அவரை அழைத்து வந்து தொழில் முனையும் திறன்/தொழில்நுட்பத்தை வளர்ப்பதற்கு அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, அடைகாத்து, அவரை நல்ல ஒரு தொழில் முனைவோராக மாற்றி அமைப்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். இதுபோன்ற திட்டம் நம்முடைய

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லை. ஒரு அற்புதமான திட்டத்தை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, மென் திறன் மையங்கள்–Creation of Soft Skill Centres மாணவ மாணவிகளை வேலைக்குத் தயார்படுத்தும் வகையில் Personality Skills, ஆளுமைத் திறன், Communication Skills, தொடர்புத் திறன், Team Work Skills குழுப் பணித் திறன் போன்ற மென் திறன்களைக் கற்பிக்க மென் திறன் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மென் திறன்களால் வேலைவாய்ப்பை எளிதாகப் பெறமுடியும். வேலையில் வரவிருக்கக்கூடிய நன்னடத்தைப் பண்புகளை மேற்கொள்ள முடிகிறது. குழுவாக இணைந்து நல்ல முறையில் செயல்பட ஒரு வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

60 விதமான அடிப்படைத் திறன்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கல்லூரியிலும் 500 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். முதற்கட்டமாக 30 கல்லூரிகளில் ரூ. 135 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறதென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

Community Colleges. சமுதாயக் கல்லூரிகளைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல, தொழில் முனைவோர் மற்றும் மேம்பாட்டு மையங்கள். நமது இளைஞர்கள் வேலை தேடுபவர்களாக மட்டுமல்லாமல் வேலை கொடுப்பவர்களாகவும் இருக்க வேண்டும். இதன் அடிப்படையில் தொழில் திறனை மேம்படுத்தி மாணவர்கள் தொழில் தொடங்க ஆலோசனை வழங்குவதற்காக பல்கலைக்கழகங்களில் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. தொழில் தொடங்கும் ஆர்வத்தைத் தூண்டி பயிற்சியளித்தல், பல்வேறு நிலைகளில் தொழில் திறன் பயிற்சி அளித்தல், தொழில் முனைவோர்களாக மாற்ற வழிகாட்டுதல், தொழிற் திட்டங்கள் தயாரித்து வழங்குதல், கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி, கருத்தரங்குகள் நடத்துதல், இதுபோன்ற பணிகளைச் செய்வதற்காக 10 பல்கலைக்கழகங்களுக்கு தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் இரண்டு கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

நம்முடைய உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், 2006–2011 ஆம் ஆண்டு வரையில் 5 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி என்பது ரூ.6,414 கோடி மட்டுமே. ஆனால் இந்த இரண்டு ஆண்டுகளில், இந்த மூன்றாம் ஆண்டையும் சேர்த்து, அதாவது 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் நம்முடைய உயர் கல்வித் துறைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ரூ.7,923 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குச் சிந்தனையோடு, உலகத் தரத்தினால் உயர் கல்வி வழங்கும் விதமாக எல்லோருக்கும் உயர் கல்வி, அனைவரையும் உள்ளடக்கிய உயர் கல்வி, உலகத் தரத்திலான உயர் கல்வி, நவீனத் தொழில்நுட்ப உதவியோடு உயர் கல்வி, உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதியோடு உயர் கல்வி, வேலைவாய்ப்புக்கு ஏற்ற பாடத் திட்டங்களுடன் வேலைத் திறன் பயிற்சி அளித்தல் போன்ற உயர்ந்த திட்டங்களின் அடிப்படையிலும் Gross enrolment ratio–ஐ உயர்த்தும் நோக்கிலும் புதிய கல்லூரிகள், முதுநிலைப் பட்டப் படிப்பு மையங்கள், I.I.I.T. போன்ற புதிய பாடப் பிரிவுகள் ஏற்படுத்தியதோடு மெதுவாகக் கற்கும் மாணவர்களுக்கும், மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும் தங்குதடையின்றி கல்வி கற்க வகை செய்யப்பட்டுள்ளது. ஏழையெளிய மாணவர்களும் வெளிநாடு சென்று படிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியதுடன் உலகத் தரத்திலான கல்வி தமிழகத்தில் கிடைக்க வழி செய்து, உயர் கல்வியில் மிகப் பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலில் நூறு நூறு முகங்கள் இருந்தாலும், மொத்த இந்தியாவும் எதிர்பார்க்கும் ஒரு முகம் அம்மா உங்கள் திருமுகம் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தேசத்தில் இன்று அத்தனை தலைவர்களுக்கும் தேவைப்படுகிறது உங்கள் அறிமுகம். தொலைநோக்குச் சிந்தனையோடு நாடாளும் அம்மா அவர்களின் ஆளுமை அறிந்து நாடாளுமன்றமே இப்பொழுது அம்மா அவர்களை நாடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2013 ஏப்ரல் 4] [திரு. பி. பழனியப்பன்]

வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற வரலாற்றை மாற்றியவர் நம்முடைய அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது அம்மா அவர்களின் வருகைக்கு வடம் இழுக்க வடக்கும் காத்திருக்கிறது. வடம் இழுக்கப் போகும் கோடானு கோடி தொண்டர்களில் நானும் ஒருவன் என்ற உண்மையோடு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அனுமதியோடு இங்கே அறிவிப்புகளை வெளியிட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

1. திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயிற்சி மையம் மற்றும் பெண்களுக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துடன் கூடிய சுய வேலைவாய்ப்பு மையம் அமைத்தல்

மாற்றுத் திறனாளிகள் குறித்த பார்வை, சமூகத்தினரிடையே சமீபகாலங்களில் மேம்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள், பிறரைப்போல சமமான கல்வி, வேலைவாய்ப்பு பெற, தேவையான அணுகுமுறை உத்திகளுடன், தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திறன் சார்ந்த பயிற்சிகளைப் பெறுவதற்கு தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயிற்சி மையமும், தகவல் தொழில்நுட்பம்மூலம் பெறப்படும் சேவைகள் மற்றும் பயன்பாடுகள், அவற்றைக் கையாளும் முறைகள் அனைத்திலும் பெண்களுக்குப் பயிற்சி அளித்து, சமுதாய மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பை வலிமைப்படுத்த, பெண்களுக்கான தொழில் முனைவோர் பயிற்சி மையமும் முறையே ரூ.11,40,000/– மற்றும் ரூ.11,80,000/– செலவில் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சுற்றுலா மற்றும் உணவக மேலாண்மை மையம் அமைத்தல்

உலகில் மிக வேகமாகவும், பெரியளவிலும், அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற, மறைமுக மற்றும் நேர்முக வேலைவாய்ப்பினை உருவாக்குகின்ற, பன்முக பரிமாணங்களைக் கொண்ட சுற்றுலாத்

துறை, போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் உணவகம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக விளங்குகிறது. சுற்றுலா மற்றும் உணவகத் துறைகள் ஒன்றையொன்று சார்ந்துள்ளதாலும், இத்துறைகள் மக்களிடையே அதிக வரவேற்பைப் பெற்று வருவதாலும், மாணவச் செல்வங்களுக்கு சுற்றுலா மற்றும் உணவக மேலாண்மைத் துறையில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ரூ.3.5 கோடி செலவில் சுற்றுலா மற்றும் உணவக மேலாண்மை மையம் அமைத்து, அதன் மூலமாக 2013–2014 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு சுற்றுலா மற்றும் உணவக மேலாண்மை படிப்பை (முதுகலை படிப்பு) தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தினை பசுமை வளாகமாக மாற்றுதல்

மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள குடியிருப்புகளை குறைத்து, மாசு ஏற்படுத்தும் ஆழலைத் தவிர்த்து, நீர் மற்றும் குப்பைகளை மறு சுழற்சி முறையில் பயன்படுத்தி, சூரிய சக்திமூலம் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்து, திடக் கழிவுகளை உரமாக மாற்றி, தெரு விளக்குகளில் LED விளக்குகள் பொருத்தியும், பல்கலைக்கழக வளாகத்தினை ரூ.2.90 கோடி செலவில் பசுமை வளாகமாக மாற்றுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் தமிழ் கணினி மையம் அமைத்தல்

பெரும்பாலான கணினி நிரலாக்க மொழிகள், ஆங்கிலத்திலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன. இனி பணியமர்த்தப்படவுள்ள அரசுப் பள்ளி கணினி அறிவியல் ஆசிரியர்களுக்கு தமிழ் கணினி அறிவு மிகவும் அவசியம் என்பதனை இவ்வரசு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, இவ்வாசிரியர்களுக்கு சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் தமிழ் கணினி பயிற்சி மையம் அமைக்கப்பட உள்ளது. அரசுப் பள்ளி கணினி அறிவியல் ஆசிரியர்களுக்கு தமிழ் கணினி பயிற்சி அளிப்பதன்மூலம் மாணவர்கள் தமிழ் வழியில் கணினி நிரலாக்க மொழியை கற்க வழிவகை செய்யப்பட

உள்ளது. இம்மையத்தினை ரூ.25 இலட்சம் செலவில் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கல்வி மையம் அமைத்தல்

தற்போதைய சூழலில் பசுமையான சுற்றுச்சூழல் மற்றும் ஆற்றல் ஆதாரங்களின் தேவை மிகவும் அவசியமானது என்பதைக் கருத்தில் கொண்டு சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கல்வி மையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இம்மையத்தில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான ஆராய்ச்சி பாடப் பிரிவுகள் தொடங்கப்படும். மேலும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் ஆற்றல் மாற்றத் துறைகளில், மேலாண்மை மற்றும் தொழில் ஆலோசனைகள் வழங்கவும், தொழில் பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளவும் கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இம்மையத்தை ரூ.25 இலட்சம் செலவில் அமைப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–30

6. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் 3 மண்டல மையங்களை சென்னை, மதுரை மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் உருவாக்குதல்

2012–2013 ஆம் ஆண்டில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் சேர்க்கையினைக் கருத்தில்கொண்டு, அவர்களின் கற்றல் தேவையை நிறைவேற்றி, ஊக்கப்படுத்தும் வகையில், ஸ்ரீரங்கம் மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு மையங்கள் நிறுவப்பட்டன. தற்போது மாணவர்களின் சேர்க்கை மேலும் அதிகரிக்கும் என்ற நிலையில், மாணவர்களின் கற்றல் தேவைக்காக மூன்று மண்டல மையங்களை சென்னை, மதுரை மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் ரூ. 65.15 இலட்சம் செலவில் அமைப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் மாணவர்கள் திறந்தநிலை பல்கலைக்கழகத் தலைமையிடத்தை அணுக வேண்டிய நிலை தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்துதல்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக அளவில் மாணவர்கள் சேருவதைக் கருத்திற்கொண்டும், 2025 ஆம் ஆண்டில் உயர் கல்வியில் 25 சதவிகித மொத்த சேர்க்கை விகித குறியீட்டை அடையும் நோக்கிலும், இன்றைய தேவைக்கு ஏற்பவும், இக்கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப இக்கல்வி ஆண்டில் 51 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 398 புதிய பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்தவும், இதற்கென 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு 827 புதிய உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கவும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

8. அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் நியமனம்

அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் ஓய்வு பெற்றதினால் ஏற்பட்ட காலிப் பணியிடங்களையும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடப் பிரிவுகளைக் கற்பிப்பதற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பணியிடங்களையும் நிரப்புவதென அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, 530 உதவிப் பேராசிரியர்களை ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தெரிவு செய்து இக்கல்லூரிகளில் பணி நியமனம் செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்குவதற்கும், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கும் வழிவகை ஏற்படும்.

9. அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் நியமனம்

அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பல்வேறு பாடப் பிரிவுகளில் காலியாகவுள்ள 61 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் மற்றும் 351 விரிவுரையாளர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பிட மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை களையப்படுவதோடு மாணவர்களுக்குச் சிறந்த தரமான தொழிற்கல்வியும் கிடைக்கப்பெறும்.

10. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மூலம் சமுதாய முன்னேற்றம்

தமிழ்நாட்டில் உள்ள பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி, கிராமப்புற மக்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தத் தேவையான தொழில்நுட்ப அறிவைப் பரப்பவும், தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான சேவைகளை அளிக்கவும், தொழில்நுட்ப வளர்ச்சிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் இதன்மூலம் கிராமப்புற மக்களின் வறுமை, வேலையின்மையைப் போக்கி, அவர்களின் வாழ்வில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தவும், ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 8 இலட்சம் வீதம் 52 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மொத்தம் ரூ. 4.16 கோடி வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் 120 வெட்டுத் தீர்மானங்கள் தந்துள்ளார்கள். உறுப்பினர்களின் வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னுடைய பதில் ஓரளவிற்கு திருப்திகரமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். எனவே,

[திரு. பி. பழனியப்பன்] [2013 ஏப்ரல் 4

மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,985,75,55,000/–, மூலதனக் கணக்கில் ரூ.238,34,68,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5–4–2013) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

59. மின்சக்தியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிற மின்னாக்கிகளின் விற்பனையின்மீது யாதொரு வணிகரால் செலுத்த வேண்டிய விற்பனை வரி விகிதத்தை குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 8–12–2012 ஆம் நாளிட்ட 154 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

60. உயர் மின்னழுத்த நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படும் மின்னாக்கிகளில் பயன்படுத்தப்படும் எரிஉலை எண்ணெய் விற்பனையின் மீது யாதொரு வணிகரால் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 8–12–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 155–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

61. (i) *1–3–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வ.வ.ப./90(k-3)/2011 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாக, யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மாநில காவல் துறை கேண்டீன்களுக்கு யாதொரு பொருட்களின் (பெட்ரோல், டீசல், சிமிட்டி, மது பானங்கள் நீங்கலாக) விற்பனையின்மீது செலுத்த வேண்டிய வரியை, அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களித்தது குறித்தும்;* (ii) *1–3–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வ.வ.ப./90(k—4)/2011 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாக, அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மாநில காவல் துறை கேண்டீன்களால் செலுத்த வேண்டிய வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, விலக்களித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 11–9–2012 ஆம் நாளிட்ட 121 ஆம் எண் அரசாணையில்*

வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

78. மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

79. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013–2014. (தமிழ்)

80. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013–2014. (தமிழ்)

****

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

(409 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வி

கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014

முன்னுரை

"போதிய பயிற்சித்திறனும், சமச்சீரான பணித்திறனுமின்றி எந்தப் பொருளாதாரமும் அதன் வளவாய்ப்பினை எய்த இயலாது. 2023 ஆம் ஆண்டு தொலைநோக்குத் திட்டமானது, அதன் கல்வி மற்றும் திறன்கள் செயல்முறைத் திட்டங்களின்கீழ், வலுவான மனிதவள ஆதாரத் தொடரினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது."

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023

1.1 தமிழ்நாடு கல்வி, சுகாதாரம், தொழில், சமூக நலம் போன்ற துறைகளில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு வழிகாட்டுதலுக்கு நன்றிக் கடப்பாடு உள்ளவர்களாக இருப்போம். தமிழ்நாட்டில், உயர் கல்வித் துறை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில், இந்நூற்றாண்டின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் விரைவாகவும், உறுதியாகவும் முன்னேறி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப தமிழ்நாட்டை புதிய கண்டுபிடிப்புகளின் மையமாக, இந்தியாவின் அறிவுசார் தலைநகரமாக, உயர்ந்த வளர்ச்சிப் பாதையில் நிலைநிறுத்த உயர் கல்வித் துறை நமது இளைஞர்களுக்கு சமவாய்ப்பு, உலகத்தரம் வாய்ந்த கல்வி ஆகியவை கிடைக்க உறுதி செய்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயரிய நோக்கத்திற்கேற்ப, மாணவர் சேர்க்கையை அதிகரிக்க, பல்வேறு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளை அரசு தொடங்கியுள்ளது.

மேலும், உயர் கல்வித் துறை முன்னோக்கிச் செல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமை, புதிய உத்வேகத்தையும், நெறிப்படுத்துதலையும் வழங்கியுள்ளது.

தொலைநோக்குப் பார்வை

- உயர் கல்வி நிறுவனங்களைப் புதுமைகள் நிறைந்த நேர்த்தியான மேம்பாட்டு மையங்களாக உருவாக்குதல்.
- உலகத்தரம்வாய்ந்த கல்வியினை, குறிப்பாக கிராமப்புற, பின்தங்கிய பகுதிகள் மற்றும் அடித்தட்டுக் குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு வழங்குதல், இளைஞர்களிடம் உள்ள திறமை மற்றும் செயல்திறன்களை மேம்படுத்துதல், அங்கீகரித்தல் மற்றும் அதிகரித்தல்.
- இந்நூற்றாண்டில் எழுகின்ற அறைகூவல்கள் மற்றும் தேவைகளை இளைஞர்கள் எதிர்கொள்வதற்கான உரிய தகுதிகளை உயர் கல்வியில் புகுத்த முக்கியத்துவம் தருதல்.

உயரிய நோக்கம்

"தன்னார்வ ஊக்குவிப்புடன் செயல்படும் நிறுவனங்கள் வாயிலாக மனிதவள மேம்பாட்டினை வளர்ப்பதும், பண்பாடும், சால்பும் கொண்ட வல்லுநர்களை உருவாக்கி, மாநிலத்தையும் நாட்டையும் செழுமைப்படுத்துவதும், உலகளாவிய நிலையில் ஒப்பற்ற மாணவர்களை ஈர்க்கும் பல்கலைக்கழகக் கல்வியினை வழங்கும் உன்னதமான இடமாகத் தமிழ்நாட்டை உருவாக்குவதும்" உயர் கல்வித் துறையின் நோக்கமாகும்.

1.2 நோக்கங்கள்

- சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களின்மூலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் கல்வித் தரத்தினை உலகத்தரத்திற்கு உயர்த்துதல்.
- ஆராய்ச்சிக்காகவும், தொழில்முனைவு கலாச்சாரத்தை புகட்டுவதற்காகவும், இலாபகரமான வேலை வாய்ப்பிற்காகவும், தொழிற்சாலை-கல்வி நிறுவனம் இணைப்பு மூலம் அறிவு சார்ந்த மற்றும் செயல்திறன் மிக்க மனித ஆற்றலை ஏற்படுத்துதல்.
- பொதுமக்களைச் சென்றடையும் வகையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினைப் பரவலாக்குதல்.

2013 ஏப்ரல் 4]

1.3 உயர் சிறப்பு நிலை நோக்கி சிறப்பு முயற்சிகள்

- *வளர்ந்து வரும் அறிவு தளங்களில் கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 'பல்கலைக்கழகங்கள் இணைப்பு' மற்றும் கல்லூரிகளின் கூட்டிணைவினை ஏற்படுத்துதல்.*

- *உயர் கல்வி நிறுவனங்களில் மிகச் சிறப்பு வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்து, வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்களில் கற்றல்/கற்பித்தலுக்கான தற்கால நவீனத் தொழில்நுட்பப் பயன்பாடுகளுடன்கூடிய வசதிகளை வழங்கி, உயர் கல்வி நிறுவனங்களுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் புத்துயிர் அளித்தல்.*

- *சிறப்புத் திட்டங்கள்மூலம் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பன்னாட்டு அறிமுகத்தையும், பட்டறிவையும் வழங்குதல்.*

- *உயர் கல்வி நிறுவனங்களில் கற்பித்தல் தரத்தினை, மேம்படுத்துவதற்காக குறிப்பான பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.*

- *புதிய கல்விசார் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் நிருவாகத்தில் கொள்கைச் சீர்திருத்தங்களை மேம்படுத்துதல்.*

- *வேகமான, நிலையான, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாய வளர்ச்சியினை அடைதல், மக்களின் தேவைகளுக்கு ஏற்ப கல்விச் செயல்பாடுகளை மாற்றியமைத்தல், மாற்றுத் திறனாளிகளுக்கு சுய முன்னேற்ற ஆற்றலை அளிக்கவல்ல தரத்தை உள்ளடக்கிய கல்வியினை வழங்குதல்.*

திட்டங்கள்

1.4 *பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் கல்வித் தரத்தினை உயர்த்துவதற்கான தேவைகளை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டம், 2023-ன்படி உயர் கல்வித் துறையில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-*

i. *காணொலிக் காட்சியுடன்கூடிய செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள் ரூ.2 கோடி செலவில் 10 பல்கலைக்*

[2013 ஏப்ரல் 4

கழகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த உயர் தொழில்நுட்ப வசதிகளால், வகுப்பறை கற்பித்தல் மேம்பட்டுள்ளது.

ii. மாணவர்களின் மொழித்திறன்களை உயர்த்தி அவர்களை உலகச் சந்தையில் போட்டியிட தயார்படுத்தும்வண்ணம் ஆங்கிலம், சீனம், ஜப்பான், ஜெர்மன் போன்ற அயல்நாட்டு மொழிகளைக் கற்பதற்கான ஆய்வகங்கள் ரூ.1.5 கோடி செலவில் 10 பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்டுள்ளன.

iii. மாணவர்களின் தொழில் முனைவுத் திறன்களை மேம்படுத்தி அவர்களிடம் உள்ள படைப்பாற்றலை வெளிக் கொணர்ந்து, அவ்வகை தொழில் நிறுவனங்களை உருவாக்கவும், வேலை வாய்ப்புச் சந்தையில் அவர்களுக்கேற்ற நல்லதொரு வாய்ப்பினைப் பெறவும் தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள் 10 பல்கலைக்கழகங்களில் ரூ.2 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

iv. புகழ்பெற்ற வெளிநாட்டுப் பேராசிரியர்களை வரவழைக்கும் திட்டமானது 10 பல்கலைக்கழகங்களில் ரூ.1 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் நமது கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் கற்பித்தல் மற்றும் கற்றலில் பன்னாட்டு செயல்திறன் நுட்பங்களை அறிந்து கொள்வதுடன், அப்பேராசிரியர்களின் சிறப்பு அறிவினைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பினையும் பெறுகிறார்கள்.

v. தொழில் மற்றும் பிற வணிக நிறுவனங்கள் விரும்பும் தேவைக்கேற்ற பணித்திறன் கொண்டவர்களை உலகத் தரத்திற்கு இணையாக உருவாக்க ஏதுவான பாடத் திட்டங்களை மறுசீரமைக்கும் பொருட்டு 10 பல்கலைக்கழகங்களில் ரூ.10 கோடி செலவில் பாடத் திட்ட வளர்ச்சி மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

vi. வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையாக, 2011-2012 ஆம் ஆண்டில் 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் முறையே ஸ்ரீரங்கம், அரூர், பாப்பிரெட்டிபட்டி, சாத்தூர், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், நன்னிலம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, நாகலாபுரம் மற்றும் நெம்மேலி ஆகிய இடங்களிலும், 2012-2013 ஆம் ஆண்டில் 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை முறையே எடப்பாடி,

2013 ஏப்ரல் 4]

கன்னியாகுமரி, வேடசந்தூர், மொடக்குறிச்சி, திருமங்கலம், திருவொற்றியூர், பரமக்குடி, கடையநல்லூர், அருப்புக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களிலும் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

vii. அதேபோன்று, தொழில்நுட்பக் கல்வித் துறையில் 10 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் முறையே ஸ்ரீரங்கம், கந்தர்வக்கோட்டை, சங்கராபுரம், பெருந்துறை, அரியலூர், ஊத்தங்கரை, ஜோலார்பேட்டை, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி மற்றும் செக்கானூரணி ஆகிய இடங்களிலும், 2 பொறியியல் கல்லூரிகள் முறையே தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியிலும், தருமபுரி மாவட்டம் செட்டிக்கரையிலும் தொடங்கப்படவுள்ளன. 2012-2013 ஆம் ஆண்டில் போடிநாயக்கனூரில் ஒரு பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டு 267 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது.

viii. பல்கலைக்கழக வணிகக் கூட்டிணைவு மையம் சென்னை பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மற்றும் அழகப்பா பல்கலைக்கழகம் ஆகிய 6 பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்கள் தமிழ்நாடு, இந்தியா மற்றும் வெளிநாட்டில் உள்ள முன்னணி தொழிற்சாலைகள் மற்றும் பிற வணிக நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் முகமைகளாகச் செயல்படும். தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் தொடர்பு மையமாகச் செயல்படும்.

ix. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வெளிநாடு சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகளில் படிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது, குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள பகுதிகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மேலும், நிருவாகிகள்,

[2013 ஏப்ரல் 4

கல்வியாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களிடையே இத்திட்டம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் செப்டம்பர் 2013 முதல் ஜனவரி 2014 வரையிலான ஒரு பருவத்தை படிப்பதற்காக 25 மாணவர்களும், 5 ஆசிரியர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

x. தொழில்நுட்ப மற்றும் கல்விசார் எழுத்துப் பயிற்சி மையம் சென்னை பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆகிய 9 பல்கலைக்கழகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் மாணவர்களின் கல்விசார் அறிக்கைகளை எழுதுதல் மற்றும் இதர எழுத்துத் திறன்களை வளர்க்கும்.

xi. தொழில்நுட்ப அடைகாப்பு மற்றும் பகிர்ந்தளிக்கும் மையம் சென்னை பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆகிய 9 பல்கலைக்கழகங்களில் அமைக்கப் பட்டுள்ளன. "அடைகாப்பு செயல்பாடுகள்" நவீனத் தொழில்நுட்பங்களை மக்களுக்குப் பயன்படும் வகையில் நடைமுறைப்படுத்துதல் மற்றும் படைப்பாற்றல் கருத்துக்களை வணிகத்திற்கு உகந்த பொருட்களாக மாற்றுதல் ஆகியவை இம்மையங்களின் நோக்கமாகும்.

xii. மாற்றுத் திறனாளிகளுக்கான பலவடிவ கருவிகள் தயாரிக்கும் மையம் சென்னை பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், மதுரை காமராஜர்

2013 ஏப்ரல் 4]

பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம் ஆகிய 10 பல்கலைக்கழகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குத் தேவைப்படும் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பல்வேறு தலைப்புகள் மற்றும் பாடங்களுக்கான தொடுஉணர் வரைகலை (Tactile Graphics) இடம்பெற்றுள்ள மற்றும் இடம் பெறாத பிரெய்லி புத்தகங்களை, இம்மையங்கள் வழங்கும். இந்த மையங்கள் அதிவேகமாகச் செயல்படும் பொருட்டு உயர் அழுத்த பிரெய்லி அச்சுப்பொறியும், தகவல் வங்கியை உருவாக்குவதற்காக தனிநபர் கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன. கற்றலில் திறன் குறைந்த மாணவர்களுக்கு உதவும் வண்ணம் பல்ஊடகம் சார்ந்த கணினி உதவிப் பெட்டகமும் அளிக்கப்படும்.

xiii. சென்னை பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆகிய 10 பல்கலைக்கழகங்களில் உயர் சிறப்பு வாய்ந்த முதுநிலை பட்ட மையங்கள் உயர்தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்களுடன் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த உயர் தொழில்நுட்பம் அறிவுசார் தகவல்களை உடனுக்குடன் சுலபமாகப் பெற உதவும்.

xiv. அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அறிவியல் நகரம் சேர்ந்து பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள அனைத்து நூலகங்களையும் இணைத்து, இணையதளத்தின் மூலமாக, மாணவர்கள், புத்தகங்கள், பருவகால இதழ்கள், மேற்கோள் நூல்கள் போன்றவற்றைப் படிக்க வாய்ப்பளிக்கப்படும்.

xv. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்கள் மற்றும் மெதுவாக கற்போர்/சராசரிக்கும் குறைவாக கற்கும் மாணவர்களின் இடைநிற்றலைத் தடுத்து கல்வியில் மற்றவர்களுக்கு

[2013 ஏப்ரல் 4

இணையானவர்களாகடா தகுதிபடுத்தவும் சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

xvi. சென்னைப்பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆகிய 5 பல்கலைக்கழகங்களின் கீழுள்ள 30 கல்லூரிகளில் மென்திறன் மையம் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் மாணவர்களின் வாழ்க்கைத் திறனையும், அவர்களின் ஆளுமை திறனையும் வளர்க்க பயிற்சிகளை அளிக்கின்றன.

xvii. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம், தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களிலும் சமுதாயக் கல்லூரிகளை அமைக்கவிருக்கிறது. முதற்கட்டமாக, 2012-2013 ஆம் ஆண்டில் சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் 5 சமுதாயக் கல்லூரிகள் அமைக்கப்பட்டன. இச்சமுதாயக் கல்லூரிகள் உள்ளூர் சமுதாயத்தினருக்கு தொழிற்கல்வி பயிலும் வாய்ப்பினையும், வேலைவாய்ப்பினையும் ஏற்படுத்தித் தருகிறது.

xviii. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கான மண்டல மையங்கள் ஸ்ரீரங்கம் மற்றும் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள்மூலம் மாணவர்கள் தங்களுடைய வசிப்பிடத்திற்கு மிக அருகிலிருந்து தங்களுக்குத் தேவையான தகவல்கள் அடங்கிய ஆவணங்களை பெற முடியும்.

xix. முதுநிலை கல்வி விரிவாக்க மையங்களை பெரம்பலூர், ஈரோடு, கன்னியாகுமரி, தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள்மூலம் திறந்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இம்மையங்களில் முதுகலை பட்டப் படிப்புகள் வழங்கப்படும். மாணவர்கள் அதிநவீனத் தொழில்நுட்பத்துடன்கூடிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இம்மையங்கள் உதவும். குறிப்பாக, கிராமப்புற மாணவர்கள் பெருமளவில் பயன்பெற்று நகர்ப்புறத்தில் இருப்பவர்களைப் போன்று தேவையான திறன்களை அடைவார்கள். உயர்தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்களைக் கொண்டுள்ள இம்மையங்கள், கிராமப்புற மற்றும்

2013 ஏப்ரல் 4]

பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்கள் முதுநிலை மற்றும் தரமான ஆராய்ச்சிக் கல்வி பெறுவதை உறுதி செய்கின்றன.

xx. 2012-2013ஆம் ஆண்டில் 51 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 299 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டதுடன், 841 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் 2012-2013 முதல் 2014-2015 வரை 3 ஆண்டுகளுக்கு ஒப்பளிக்கப்பட்டன. இதன்மூலம் ஏறத்தாழ 5,500 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

xxi. அரசு, அரசு உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரிகள்/ பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்/பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினிகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. மாணவர்களுக்கு 3,35,086 விலையில்லா மடிக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. சிறந்த தரத்திலான கல்வியின் பலன்களை இளைஞர்கள் பெறுவதற்கும், நம் மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு செயல்வடிவம் அளிக்கவும் மேற்கண்ட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

xxii. தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் உயர் கல்வியில் 1,352 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை 'தொழில் துறை-தயார் நிலைக்கு' உயர்த்தி வேலைவாய்ப்பு பெற தயார்படுத்துகிறார்கள்.

xxiii. அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்க சட்டமியற்றப்பட்டு, அச்சட்டம் 1-8-2012 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தற்போது, தொழில்நுட்பக் கல்வியின் ஒருங்கிணைந்த மற்றும் ஒத்திசைவான வளர்ச்சிக்காக மாநிலத்திலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளும் ஒரு குடையின்கீழ் வந்துள்ளன.

அறிவுசார் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கேற்ப, இளைஞர்கள்,

[2013 ஏப்ரல் 4

பெண்கள் மற்றும் பொதுமக்களின் முனைப்பான விருப்பங்களை நிறைவு செய்ய உயர் கல்வியில் பல உத்திகளை மேற்கொண்டுள்ளோம். உயர் கல்வியில் தமிழக அரசின் கொள்கை சீர்திருத்தமானது, உலகளவில் ஏற்பட்டுள்ள புதுமையான மாற்றங்கள் மற்றும் தேசிய அளவில் குறிப்பிடப்படும் வாய்ப்பு, சமநிலை மற்றும் தரத்தை உள்ளடக்கியது. அயல்நாட்டு கல்வி வழங்குவோரிடமிருந்து கல்விசார்ந்த கருத்துக்களைப் பெறுவதற்கு வழிவகை செய்யும்போது, கல்வியினைப் பரவலாக்குவதோடு மட்டுமின்றி உயர் கல்வியின் தரமும் மேம்படுத்தப்படுகிறது.

ஒரு முழுமையான முயற்சியின் வாயிலாக சமுதாயத்தில் பின்தங்கிய சாதாரண மக்களுக்கு தரமான மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கல்வியினை அளிப்பதே மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. இத்தகைய புதிய திட்டங்கள் மற்றும் முக்கிய துறைகளில் எடுக்கப்பட்ட முயற்சிகள் வாயிலாக தமிழ்நாடு எழுச்சிமிக்க உயர் கல்வித் துறையினைப் பெற்றுள்ளது. உயர் கல்வித் துறையின் செயல் திட்டங்கள் அனைத்தும் தொலைநோக்குத் திட்டம் 2023 இன் இலக்குகளையும் நோக்கங்களையும் எய்துகிற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ல் குறிப்பிட்டுள்ளபடி இச்செயல்பாடுகள், "சாதாரண குடிமக்களின் வாழ்க்கையில் இயன்ற அளவில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தி-அதிக வருமானத்தை அளிக்கக்கூடிய பயனுள்ள வேலைவாய்ப்புகள், உயர்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதி மற்றும் சேவைகள் மூலமாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், மாநிலம் போட்டியிடத்தக்க வாய்ப்புகளைப் பெற்றுள்ள துறைகளில் ஒருமுகமான வளர்ச்சி, சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு அமைதியும், வளமும் பாதுகாப்பும் செறிந்த வாழ்க்கை ஆகியவற்றுக்கு வகை செய்யும்".

நிதி ஒதுக்கீடு, 2013–2014

மானியக் கோரிக்கை எண் 20, உயர் கல்வித் துறை என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.3,224.10 கோடி ஆகும். இதில் ரூ.1,100.60 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். ரூ.2,123.50 கோடி திட்டத்தில் சேராத செலவினமாகும்.

2013 ஏப்ரல் 4]

நிதி ஒதுக்கீடு, 2013–2014

கணக்குத் தலைப்பு		திட்டப் பணி	திட்டத்தில் சேராதது	மொத்தம்
		ரூபாய் இலட்சத்தில்		
2059	பொதுப் பணி பராமரித்தலும் செப்பனிடுதலும்	-	2596.49	2596.49
2202	பொதுக்கல்வி பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும்	10709.62	168978.52	179688.14
2203	தொழில்நுட்பக் கல்வி	79392.69	33780.03	113172.72
2204	போட்டி விளையாட்டுகளும் மற்றும் இளைஞர் நலப் பணிகளும்	1296.84	-	1296.84
2205 104	கலையும் பண்பாடும் ஆவணக் காப்பகங்கள்	10.00	690.08	700.08
2235	சமூகப் பாதுகாப்பும் நலனும்	-	60.16	60.16
2251	தலைமைச் செயலகம் சமூகப் பணிகள்	-	369.12	369.12
3425	இதர அறிவியல் ஆராய்ச்சி	637.32	-	637.32

[2013 ஏப்ரல் 4

கணக்குத் தலைப்பு		திட்டப் பணி	திட்டத்தில் சேராதது	மொத்தம்
		ரூபாய் இலட்சத்தில்		
3454	மக்கள் தொகை புள்ளிவிவரங்கள் முழுக் கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளிவிவரம், விவரச் சுவடியும், புள்ளிவிவரக் குறிப்பேடுகளும்	—	54.70	54.70
4202	கல்வி, போட்டி விளையாட்டு கலை மற்றும் பண்பாடு குறித்த மூலதனத் செலவு	18013.71	5820.97	23834.68
7610	அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள்	—	0.01	0.01
	மொத்தம்	110060.18	212350.08	322410.26

2013–2014 ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டங்கள்

ரூபாய் இலட்சத்தில்

வ எண்	திட்டங்களின் விவரம்	இறுதி நிலை செலவு	2013-2014 செலவு
I -	தலைமைச் செயலகம்		
1.	துறையினை கணினி மயமாக்குதல்	34.75	34.75
II. -	கல்லூரிக் கல்வி		
	தொகுப்பு - I		
2.	சிதம்பரம், அரசு கலைக் கல்லூரிக்கு 7 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்	70.00	70.00

2013 ஏப்ரல் 4]

வ எண்.	திட்டங்களின் விவரம்	இறுதி நிலை செலவு	2013-14 செலவு
3.	கும்பகோணம், அரசு கலை கல்லூரியில் (தன்னாட்சி) விக்டோரியா மாணவர் விடுதி கட்டுதல்	100.00	100.00
	மொத்தம்	170.00	170.00
III - தொழில்நுட்பக் கல்வி			
	தொகுப்பு-I		
4.	4 அரசினர் பொறியியல் கல்லூரிகளில் 16 ஆய்வகங்கள் கட்டுதல்	120.00	120.00
5.	5 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைத்தல்	50.00	50.00
6.	8 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் வளாக இணைப்பை ஏற்படுத்துதல்	128.00	128.00
	மொத்தம்	298.00	298.00
IV - ஆவணக் காப்பகம்			
7.	நுண்பட சுருள்களைப் பாதுகாக்க சேமிப்புப் பெட்டிகள் வாங்குதல்	10.00	10.00
	மொத்தம்	10.00	10.00
V - அறிவியல் தொழில்நுட்ப மையம்			
	தொகுப்பு-II		
8.	தூத்துக்குடியில் மாவட்ட அறிவியல் மையம் அமைத்தல்	50.00	50.00

[2013 ஏப்ரல் 4

வ எண்	திட்டங்களின் விவரம்	இறுதி நிலை செலவு	2013-14 செலவு
9.	சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள முப்பரிமாண திரையரங்கத்தை நவீனப்படுத்துதல்	23.00	23.00
	மொத்தம்	73.00	73.00
VI - அறிவியல் நகரம்			
	தொகுப்பு - I		
10.	10 கிலோ வாட் சூரிய மின்சக்தி கலம் அமைத்தல்	15.00	15.00
	தொகுப்பு - II		
11.	மின் உற்பத்தி / மாற்று ஆதாரத்திலிருந்து மின்சக்தி (காற்றுமின்சக்தி) பெறுதல்	10.00	10.00
12.	மின் உற்பத்தி / மாற்று ஆதாரத்திலிருந்து மின்சக்தி (நீர் மின்சக்தி) பெறுத	15.00	15.00
	மொத்தம்	40.00	40.00
	ஆக மொத்தம்	625.75	625.75

2. கல்லூரிக் கல்வி

2.1 பெரும்பான்மையான மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் சார்ந்த பாடங்களில் சேர்வதற்கே முன்னுரிமை அளிப்பதால், உயர் கல்வித் துறையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

2.2 கல்லூரிக் கல்வித் துறையை தனியாக நிருவகிக்கும் நோக்கத்தில், முன்னதாகச் செயல்பட்டு வந்த பொது தகவல் இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் என பிரிக்கப்பட்டு, 1965 ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்வி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது.

2013 ஏப்ரல் 4]

2.3 தற்போது, கல்லூரிக் கல்வி இயக்கக நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 அரசு கல்வியியல் கல்லூரிகள், 162 அரசு உதவி பெறும் கல்லூரிகள் (அவை 133 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 உடற்கல்வி கல்லூரிகள், 10 கீழ்திசை கல்லூரிகள், 2 சமூகப் பணிக் கல்லூரிகள் மற்றும் 14 கல்வியியல் கல்லூரிகள்), 446 சுயநிதிக் கல்லூரிகள் (அவை 438 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 8 உடற்கல்வி கல்லூரிகள்) மற்றும் 651 சுயநிதிக் கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு கல்லூரிகளில் 1,55,898 மாணவர்களும், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 3,55,953 மாணவர்களும், சுயநிதிக் கல்லூரிகளில் 3,72,664 மாணவர்களும் பயின்று வருகின்றனர். இவை தவிர 35 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 20,006 மாணவர்களும் பயில்கின்றனர்.

அரசு கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் துவங்குதல்

2.4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் பெருமளவு உயர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு, 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் கல்வியாண்டுகளில் 400 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட புதிய பாடப் பிரிவுகளைப் பயிற்றுவிக்க, மூன்று ஆண்டுகளுக்கும் மொத்தம் 986 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பாடப் பிரிவுகள் மற்றும் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளமை, கல்வியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்றுள்ளது.

இலவசக் கல்வி

2.5 சமூகத்தின் அடித்தளத்திலிருந்து வரும் மாணவர்களின் மீதான அக்கறை மற்றும் நலனை கருத்தில் கொண்டும், அப்பிரிவைச் சார்ந்த மாணவர்கள் உயர் கல்வியை தொடர்வதை ஊக்குவிக்கும் வகையிலும் அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. அனைத்து அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 1,54,003 மாணவர்கள் அரசுக் கல்லூரிகளிலும், 2,97,875 மாணவர்கள் அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் இத்திட்டத்தால் பயன்பெற்றுள்ளனர்.

[2013 ஏப்ரல் 4

அரசு கல்வியியல் கல்லூரிகளில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு முதுகலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில், இதே பிரிவினர்களுக்கு இச்சலுகை, இளநிலை பட்டப்படிப்பு வரை அளிக்கப்படுகிறது.

கல்லூரி மாணவர்களுக்கான இலவச பேருந்து பயண அட்டை

2.6 இத்திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் கல்வியாண்டில் 1,99,923 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

மகளிர் மேம்பாடு

2.7 சென்னை, இராணிமேரி கல்லூரியிலும், மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரியிலும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு மற்றும் பிற மத்திய பணிகளுக்கான தேர்வுகளுக்கு மகளிருக்கென தனியே இலவசப் பயிற்சி வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 57 மாணவியர் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

பட்டப்படிப்புடன் பட்டயப்படிப்பு/சான்றிதழ் படிப்பு பயிலுதல்

2.8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நடத்தப்பெறும் பல்கலைக்கழக மானியக் குழுவின் 'இணைப்புப் படிப்பு' திட்டம், வேலைவாய்ப்பு சார்ந்த பாடப்பிரிவுகளில் சான்றிதழ்/பட்டயங்களை மாணவர்கள் அந்தந்த கல்லூரிகளிலேயே பெற வழிவகை செய்கிறது. மேலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்லூரி நேரத்திற்குப் பிறகு கூடுதல் வேலைவாய்ப்பு வழங்கும் குறுகியகால சான்றிதழ் படிப்புகள் மேற்கொள்வதற்கான வாய்ப்பு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் வழங்கப்படுகின்றன.

ஆங்கில மொழி அறிஞர் திட்டம்

2.9 ஆங்கில மொழிப் பயிற்சி திட்டத்தின்கீழ், அமெரிக்க தூதரகத்தால் அனுப்பப்பட்ட மொழியியல் வல்லுநர் ஒருவரால் அரசு கல்லூரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 20 ஆசிரியர்களுக்கு தலைமை பயிற்றுநர்கள் (Master Trainers) பயிற்சி அளிக்கப்பட்டது. அம்மொழியியல் வல்லுநர் மற்றும் பயிற்சி பெற்ற தலைமை பயிற்றுநர்களால் 12 மண்டலங்களில் பயிற்சிப்பட்டறைகள்

2013 ஏப்ரல் 4]

நடத்தப்பட்டு, 297 ஆசிரியர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சித் திட்டத்திற்கு, சென்னையிலுள்ள 4 அரசு தன்னாட்சிக் கல்லூரிகள் ரூ.6,60,000/- வழங்கியுள்ளன.

திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்

2.10 இன்போசிஸ் (BPO) நிறுவனத்தால் நடத்தப்படும் புராஜக்ட் ஜெனிசிஸ் திட்டத்தின்மூலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் 204 உதவிப் பேராசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக பயிற்சி பெற்ற உதவிப் பேராசிரியர்கள் 5 மையங்களில் 11 வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தியுள்ளனர். இம்மையங்களில் நடத்தப்பட்ட வளாக நேர்காணல்கள்மூலம் 196 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு முகாம்

2.11 கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் ஐந்து மண்டலங்களுக்கு உட்பட்ட அரசு/அரசு உதவிபெறும் கல்லூரிகளில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. மாணவர்களைத் தேர்வு செய்ய பல முன்னணி நிறுவனங்கள் அம்முகாம்களில் பங்கேற்றன. இதன்மூலம், 36 அரசு கல்லூரிகளைச் சார்ந்த 1,521 மாணவர்களும், 80 அரசு உதவி பெறும் கல்லூரிகளைச் சார்ந்த 10,687 மாணவர்களும் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ் வழி பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகை

2.12 அரசுக் கல்லூரிகளில் தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊக்கத் தொகை திட்டத்திற்கு 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.1.35 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டு, 33,164 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள்

2.13 அரசு கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியின மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவர்கள், ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் எதிர்கொள்ளும் ஆரம்ப நிலை சிரமங்களைப் போக்கும்

வகையில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அம்மாணவர்கள் நம்பிக்கை பெறும்வகையில் வகுப்பு நேரத்திற்குப் பின்னரும், வார இறுதி நாட்களிலும், இச்சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்காக ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், 2012-2013 ஆம் ஆண்டில் 10,867 மாணவர்கள் பயனடைந்தனர்.

ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகை

2.14 அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பல்வேறு பாடப் பிரிவுகளில் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவர்கள், ஆண்டுக்கு ரூ.36,000/- வீதம் படிப்புதவித் தொகையினைப் பெறுகின்றனர். இத்திட்டத்தின்மூலம், 130 ஆராய்ச்சி படிப்பு மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக, ரூ.46.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இடமாறுதலுக்கான கலந்தாய்வு

2.15 கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அரசு கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான வெளிப்படையான கலந்தாய்வுமூலம் பணியிடமாறுதல் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. 2012-2013 ஆம் ஆண்டுக்கான இடமாறுதல் கலந்தாய்வில், 335 ஆசிரியர்களும், 41 ஆசிரியரல்லாத பணியாளர்களும் பயனடைந்துள்ளனர்.

உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

2.16 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என மொத்தம் 93 கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த அரசு ரூ.100 கோடி நிர்வாக ஒப்புதலை அளித்துள்ளது. இத்தொகையிலிருந்து, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மேசைகள் மற்றும் நாற்காலிகள், வகுப்பறைகளில் நவீன கரும்பலகைகள் மற்றும் அறிவிப்புப் பலகைகள் பொருத்துதல், மொழி ஆய்வகங்களுக்கான கணினி மேசை மற்றும் நாற்காலிகள், கல்லூரிகளில் உள்ள துறை

2013 ஏப்ரல் 4]

நூலகங்களுக்குத் தேவையான மேசைகள் மற்றும் நாற்காலிகள், புத்தகங்கள் வைப்பதற்கான அலமாரிகள், நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்குதல், நூலகங்களைக் கணினிமயமாக்குதல், புதிய ஆய்வகம் மற்றும் ஆய்வக உபகரணங்கள், அறிவியல் சம்பந்தப்பட்ட துறைகளுக்கான மேசைகள் வாங்குதல், பணி மேசைகள், தண்ணீர்க் குழாய்கள் மற்றும் வாயு குழாய்கள் அமைத்தல், ஒளியுருப்படிவுக் கருவி (over head projector), மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சுகாதாரமான குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருதல், மாணவர் விடுதிகளில் சமையலறை மற்றும் உணவுக் கூடங்களை மேம்படுத்துதல், கழிப்பறை வசதிகள், குப்பை அகற்றும் கூடைகள், விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் வகுப்பறை உபபொருட்கள், நூலகம், ஆசிரியர்களின் ஓய்வறைகள் மற்றும் உணவறைக் கூடங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். மேற்கண்ட உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டு நலப் பணித் திட்டம்

2.17 நாட்டு நலப் பணித் திட்டம். இத்திட்டம் தொடங்கப்பட்ட செப்டம்பர் 1969 ஆம் ஆண்டு முதல், தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, 3,70,018 மாணவத் தன்னார்வலர்களுடன் இத்திட்டம் கல்வி பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

2.18 மாணவ தன்னார்வலர்களின் தலைமைப் பண்பை வளர்த்தல், யோகா மற்றும் தியானம், வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டுதல், மென்திறன் வளர்த்தல், பேரிடர் மேலாண்மை, முதலுதவிப் பயிற்சி, சுற்றுச்சூழல் வளமாக்கும் திட்டம், சாலைப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல், பள்ளிப் படிப்பினை இடையில் நிறுத்தியவர்களுக்கு உதவுதல், இரத்த தானம், இரத்த வகைப்படுத்துதல் மற்றும் இரத்த தானம் செய்பவர்களின் விவரத்திரட்டைப் பராமரித்தல் ஆகியவை நாட்டு நலப் பணித் திட்டச் செயல்பாடுகளாக உள்ளன. பலவகையான நல்வாழ்வு முகாம்கள், அதாவது தொழுநோய், கண், பல் மருத்துவம், மார்பகப் புற்றுநோயை முற்றிலுமாக ஒழித்தல், இதயநலன், தாய்சேய் நலன், எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு மற்றும் பொது மருத்துவ முகாம்கள் தொடர்ந்து

நடத்தப்படுகின்றன. சமூக நல்லுணர்வுகளை ஏற்படுத்துவது மற்றும் சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு தொடர்பாக பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

2.19 *ஓசோன் படலத்தைப் பாதுகாத்திடவும், சுற்றுச்சூழலோடு இணைந்து செல்லவும் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. நெகிழி மற்றும் பாலிதீன் பயன்பாட்டினை ஒழிப்பது மற்றும் சுற்றுச் சூழல் குழுக்களை உருவாக்குவது இதன்பிற செயல்பாடுகள் ஆகும். தன்னார்வலர்கள், கிராமத்திலுள்ள இளைஞர்களுடன் இணைந்து பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய அடிப்படை வசதிகளான கழிப்பிடம், தண்ணீர்த் தொட்டிகள், சமூகக் கூடங்கள், சுற்றுச் சுவர் கட்டுதல், விளையாட்டு மைதானங்கள் மேம்படுத்துதல் மற்றும் சாலை அமைத்தல் போன்ற நிலையான சொத்துக்களை உருவாக்குவதில் உதவி செய்கின்றனர்.*

2.20 *நாட்டு நலப் பணித் திட்ட மாணவ தன்னார்வலர்களின் கீழ்க்கண்ட சாதனைகள் அவர்களின் சமூக விழிப்புணர்வை நிரூபிக்கின்றன:-*

1. *மாணவ தன்னார்வலர்கள் 1,00,505 அலகுகள் குருதி கொடையினை வழங்கியுள்ளனர்.*
2. *6,98,000 மரக்கன்றுகளை தன்னார்வலர்கள் நட்டுள்ளனர்.*
3. *நாட்டு நலப் பணித் திட்ட தன்னார்வலர்கள் மேற்கொண்ட சிரிய முயற்சியால் எழுத்தறிவில்லா சுமார் 95,000 நபர்கள், எழுத்தறிவு பெற்றுள்ளனர்.*

விளையாட்டு

2.21 *கல்வியின் ஒரு பகுதியான விளையாட்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர். கிரிக்கெட், கபடி, கோ-கோ, கால்பந்து, பூப்பந்து, கைப்பந்து, பளுத்தூக்குதல் மற்றும் தடகளம் போன்ற போட்டிகளில் மாநில மற்றும் தேசிய அளவில் பதக்கங்கள் மற்றும் பரிசுகளை வென்றுள்ளனர்.*

3. தொழில்நுட்பக் கல்வி

3.1 *1957 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் தேதி*

2013 ஏப்ரல் 4]

நிறுவப்பட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், தொழில்நுட்பக் கல்வித் துறையில் பட்டம் மற்றும் பட்டயம் ஆகிய இரு நிலைகளிலும் புதிய கொள்கைகளை வகுக்கவும், ஒருங்கிணைந்த வளர்ச்சியை மேம்படுத்தவும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தற்சமயம், 7 அரசு பொறியியல் கல்லூரிகளும், 3 அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளும், 18 அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும், 525 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் என மொத்தம் 553 பொறியியல் கல்லூரிகளும், 69 எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. மட்டும் பயிற்றுவிக்கும் தனிவகைக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன.

3.2 தமிழ்நாட்டில், 30 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 34 அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 5 இணைப்பு வகை மற்றும் 395 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் என மொத்தம் 464 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் நிறுவுதல்

3.3 தமிழ்நாடு அரசு, 2013-2014 ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கம் வட்டத்தில் இந்திய தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தை நிறுவ உள்ளது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது சம்பந்தமான துறைகளில் தேவையான திறனான மனித ஆற்றலை வளர்த்தலே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இந்நிறுவனமானது, இந்திய அரசு மற்றும் மாநில அரசு பங்களிப்புடன் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின்கீழ் செயல்படும். இத்திட்டத்திற்கான மொத்த மூலதனச் செலவினம் 50:35:15 (ரூ.64.00 கோடி - இந்திய அரசு, ரூ.44.80 கோடி-மாநில அரசு, ரூ.19.20 கோடி - தொழில் துறை) என்ற விகிதாச்சாரத்தில் ரூ.128.00 கோடி ஆகும். இந்நிறுவனத்தை அமைக்க, ஸ்ரீரங்கம் வட்டத்தில் சேதுராப்பட்டி கிராமத்தில் 56.37 ஏக்கர் அளவிலான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் 2013-2014 ஆம் கல்வியாண்டில், தற்காலிகமாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பாரதிதாசன் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் துவங்கப்படவுள்ளது. இந்நிறுவனம், பெருமைமிக்க முயற்சியாகவும், உலகத்தரம் வாய்ந்ததாகவும் இருக்கும்.

[2013 ஏப்ரல் 4

இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் நிறுவுதல்

3.4 தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் உள்ள அரசு பொறியியல் கல்லூரி 2012-2013 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தருமபுரி மாவட்டத்தில் செட்டிக்கரை மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் செங்கிப்பட்டி ஆகிய இடங்களில் இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் தலா ரூ.89.90 கோடி செலவில் நிறுவப்படவுள்ளன. இக்கல்லூரிகளைக் கட்டுவதற்கான நிலங்கள் கண்டறியப்பட்டு ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.14.10 கோடி செலவில் கட்டடங்கள் கட்டுவதற்காக நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பத்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவுதல்

3.5 உலக பணிச் சந்தையில் எழும் போட்டிகளை எதிர்கொள்ளத் தேவையான திறன்களை வழங்க தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, ஸ்ரீரங்கம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), கந்தர்வக் கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்), சங்கராபுரம் (விழுப்புரம் மாவட்டம்), பெருந்துறை (ஈரோடு மாவட்டம்), அரியலூர் (அரியலூர் மாவட்டம்), ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி மாவட்டம்), ஜோலார்பேட்டை (வேலூர் மாவட்டம்), ஆண்டிப்பட்டி (தேனி மாவட்டம்), உசிலம்பட்டி மற்றும் செக்கானூரணி (மதுரை மாவட்டம்) ஆகிய 10 இடங்களில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவ ஆணை வெளியிட்டுள்ளது. இக்கல்லூரிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கான நிலங்கள் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.13.30 கோடி செலவில் கட்டடங்கள் கட்டுவதற்காக நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சுயநிதி பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவுதல்

3.6 தமிழகத்தில் 2012-2013 ஆம் ஆண்டில் 27 சுயநிதி பொறியியியல் கல்லூரிகள் மற்றும் 15 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன.

2013 ஏப்ரல் 4]

இலவச பாடப் புத்தகங்கள்

3.7 சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரிலிருந்து வரும் மாணவர்களுக்கு உதவுவதற்காகவும், அவர்கள் தொழில்நுட்பக் கல்வியைத் தொடரவும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்குத் தகவல் பரிமாற்ற ஆங்கிலம் I & II, பொறியியல் கணிதம் I முதல் IV, பொறியியல் I & II மற்றும் பொறியியல் வேதியியல் I & II ஆகிய பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2012-2013 ஆம் ஆண்டில், 12,065 மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தனர். இதற்காக, ரூ.14,25,000/- செலவிடப்பட்டுள்ளது.

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறை அறிமுகம்.

3.8 14 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட சுழற்சி முறை திட்டமானது, தகுதியுள்ள, கிராமப்புறங்களிலிருந்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்கள் தொழில்நுட்பக் கல்வியில் பட்டயம் பெற உதவுகிறது. இதனால் அவர்கள் பயன்மிக்க வேலைவாய்ப்பை பெற வழி ஏற்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் 3,037 மாணவர்கள் இதன் மூலம் பயன்பெற்றுள்ளனர்.

ஒற்றைச்சாளர கலந்தாய்வு முறையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை

3.9 பொருளாதாரத்தில் நலிவடைந்த மற்றும் தகுதி வாய்ந்த மாணவர்கள், அவர்களால் செலுத்தத் தக்க கட்டணத்தில் பொறியியல் தொழில் படிப்புகளில் சேர ஏதுவாக, சிறுபான்மையினர் அல்லாத சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் இளநிலை பொறியியல் பட்டத்திற்கான 65 விழுக்காடு சேர்க்கை இடங்களும், சிறுபான்மையினர் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் இளநிலை பொறியியல் பட்டத்திற்கான 50 விழுக்காடு சேர்க்கை இடங்களும் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் ஒற்றைச்சாளர கலந்தாய்வு முறையில் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டு வருகின்றன. 2012-2013 ஆம் கல்வியாண்டில் 1,27,404 மாணவர்களுக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

[2013 ஏப்ரல் 4

முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை

3.10 வாழ்க்கையின் விளிம்பிலிருக்கும் குடும்பங்களுக்கும் தொழிற்கல்வி சென்று சேரவேண்டும் என்ற தமிழக அரசின் நோக்கமானது, ஒற்றைச்சாளர கலந்தாய்வுமூலம் அரசு ஒதுக்கீட்டின்கீழ் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கும் திட்டத்தின் மூலம் எதிரொலிக்கிறது. 2012-2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2,48,064 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். இதற்காக, ரூ.478.7 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, ஒற்றைச்சாளர கலந்தாய்வு மூலம் அரசு ஒதுக்கீட்டில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் தமிழக முகாம்களில் வாழும் இலங்கை அகதி மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு மற்றும் இலவச பேருந்து கட்டணச் சலுகை

3.11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டம், இலவச பேருந்து அட்டை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கான பயிற்சி திட்டங்கள்

3.12 பயிற்றுவிக்கும் திறன் தொடர்ந்து மேம்பாடடைந்தால் மட்டுமே, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சிகளை மாணவர்களுக்கு கொண்டு சென்று, அறைகூவல்களை எதிர்கொள்ள தயார் செய்து, அவர்களை முழுமையான தொழில் வல்லுநர்களாக ஆக்க இயலும். பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் கற்றல் மற்றும் கற்பித்தல் திறனை தற்காலத்திற்கேற்ப மேம்படுத்திக் கொள்வதற்கு தேசிய தொழில்நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம், 2012-2013 ஆம் கல்வியாண்டில் 1,430 பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2013 ஏப்ரல் 4]

தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டம் நிலை–II

3.13 இத்திட்டம் மத்திய அரசின் நிதியுதவி திட்டமாகும். இத்திட்டத்திற்கான செலவினம் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. கோயம்புத்தூர், சேலம், காரைக்குடி மற்றும் பர்கூர் ஆகிய 4 அரசு பொறியியல் கல்லூரிகளும், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலுள்ள கணினி அறிவியல் துறையும் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

3.14 ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தலா ரூ.2.00 கோடி வீதமும், மேலும் மாநில திட்ட அமலாக்கக் குழுவிற்கு ரூ.8.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.10.08 கோடி முதல் தவணையாக மே 2012-ல் வழங்கப்பட்டுள்ளது.

3.15 தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டம் II-ன் கீழ் ரூ.4.47 கோடி கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி செலவிடப்பட்டுள்ளது:-

- ஆய்வகங்கள் மற்றும் நூலகங்களை நவீனப்படுத்துவதற்கான உபகரணங்கள், இயந்திரங்கள், புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்கள் வாங்கிய வகையில் செலவினம் ரூ.2.87 கோடி.

- பொறியியலில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியினைத் தொடரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பொறியியல் முதுநிலை பட்டம் பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6000/- வீதம் 192 பேருக்கும், பொறியியல் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.12000/- வீதம் 22 பேருக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதற்கென, ரூ.52.70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

- ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்திய வகையில் செலவினம் ரூ.35.4 இலட்சம்

- இந்நிறுவனங்களில் பயிலும் நலிவுற்ற மாணவர்களின் கல்வி மற்றும் பன்முகத்திறன்களை மேம்படுத்த நடத்தப் பெறும் திட்டங்களுக்கான செலவினம் ரூ.6.4 இலட்சம்.

[2013 ஏப்ரல் 4

- *அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் மற்றும் தேசிய தர நிர்ணய வாரியம் ஆகியவற்றின் தர நிர்ணயச் சான்றிதழைப் பெறுதல் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் கல்வி சார்ந்த தன்னாட்சி தகுதியை பெறுதல் போன்ற நிறுவன மற்றும் கல்வி சார்ந்த சீர்திருத்தங்களைச் செயல்படுத்த செலவினம் ரூ.27 இலட்சம்.*

- *கல்லூரி மற்றும் தொழிற்சாலைக்கிடையேயான தொடர்பு, நிறுவனம் சார்ந்த மேலாண்மைத் திறன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் கல்லூரி சார்ந்த ஆலோசனை நடவடிக்கைகளை அதிகப்படுத்துவதற்கான செலவின வகையில் ரூ.38 இலட்சம்.*

3.16 இத்திட்டத்தின் இரண்டாம் சுற்றில், 163 ஆராய்ச்சிக் கட்டுரைகள் குறித்துரைக்கப்பட்ட தேசிய மற்றும் பன்னாட்டு பருவகால இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. தொழிற்சாலை கல்லூரித் தொடர்பு குழுக்கள் ஒவ்வொரு கல்லூரியிலும் துவக்கப்பட்டுள்ளன. 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொழிற்சாலைகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3.17 இத்திட்டத்தின் இரண்டாம் சுற்றில் சார் உறுப்பு 1.1 (கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்தி மாணவர்கள் கற்றுக் கொள்ளும் திறனை அதிகரித்தல் மற்றும் பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் திறனை அதிகப்படுத்துதல்)-க்காக மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்புப் பொறியியல் கல்லூரி (பாரதிதாசன் தொழில்நுட்ப நிறுவன வளாகம்) ஆகிய கல்லூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல் வழங்குதல்

3.18 தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வெளிப்படையான கலந்தாய்வு முறைமூலம் பணியிட மாறுதல் வழங்குதல் 2011-2012 ஆம் ஆண்டில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. 2012-2013 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்ட இம்முறை, 2013-2014 ஆம் கல்வியாண்டிற்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2013 ஏப்ரல் 4]

பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்களுக்கு நிதி உதவி வழங்குதல்

3.19 பி.இ./பி.டெக். பொறியியல் கல்வி பயிலும் பொருளாதாரத்தில் நலிவடைந்த 186 மாணவர்கள் தங்களது பொறியியல் படிப்பை தொடர்ந்து பயில வழிவகை செய்யும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25,000/- வீதம் ரூ.46,50,000/- 2012-2013 ஆம் ஆண்டில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட சலுகைகள்

3.20 தமிழ்நாட்டிலுள்ள, இலங்கைத் தமிழ் அகதிகளின் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்கள் முதல் முறையாக, 2011-2012 ஆம் கல்வியாண்டில் பி.இ./பி.டெக். இரண்டாம் ஆண்டு நேரடி பொறியியல் சேர்க்கை மற்றும் எம்.பி.ஏ./எம்.சி.ஏ./எம்.இ./எம்.டெக். போன்ற முதுகலை படிப்பு சேர்க்கைக்கான கலந்தாய்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

அரசு பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆசிரியர்கள் நியமனம்

3.21 அரசு பொறியியல் கல்லூரிகளில் 151 உதவிப் பேராசிரியர்களையும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் 134 விரிவுரையாளர்களையும் நியமனம் செய்வதற்கான ஆணையை அரசு வெளியிட்டுள்ளது.

3.22 தமிழக அரசானது, தொழில்நுட்பக் கல்வியை ஆற்றல் மிக்கதாகவும், தேவையை பூர்த்தி செய்வதாகவும், தரமானதாகவும், விரைவான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் விதமாகவும், உலகளவில் திறனுள்ள மனித ஆற்றலின் தேவைக்கேற்ப உருவாக்கவும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

4. பல்கலைக்கழகங்கள்

உயர் கல்வித் துறையின் ஆளுகையின்கீழ், பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:-

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

[2013 ஏப்ரல் 4

3. பாரதியார் பல்கலைக்கழகம்

4. பாரதிதாசன் பல்கலைக்கழகம்

5. அழகப்பா பல்கலைக்கழகம்

6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

7. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

8. பெரியார் பல்கலைக்கழகம்

9. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

11. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

13. அண்ணா பல்கலைக்கழகம்

சென்னைப் பல்கலைக்கழகம்

4.1.1 மூன்று முதன்மையான பல்கலைக்கழகங்களில் ஒன்றான சென்னைப் பல்கலைக்கழகம் 1857 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5 ஆம் நாள் நிறுவப்பட்டது. கல்கத்தா மற்றும் பம்பாய் பல்கலைக்கழகங்கள் மற்ற இரண்டு முதன்மை பல்கலைக்கழகங்களாகும். முதலில் தேர்வு அமைப்பாகத் தொடங்கப்பட்டு 1923 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ், பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மற்றும் கற்றல் பணிகள் தொடங்கப்பட்டன.

4.1.2 தற்போது, இப்பல்கலைக்கழகம் சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி, சேத்துப்பட்டு மற்றும் மதுரவாயல் (கள ஆய்வக வளாகம்) என ஆறு வளாகங்களில் இயங்கி வருகின்றது. இவையாவும் சென்னைப் பெருநகர பகுதிக்குள் உள்ளன.

4.1.3 சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத் திருத்தத்தின் விளைவாக, பல்கலைக்கழகத்தில் முன்னர் இணைவு பெற்றிருந்த சட்டம், மருத்துவம், பொறியியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள், முறையே புதிதாகத் துவக்கப்பட்ட டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு

2013 ஏப்ரல் 4]

ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின்கீழ் மாற்றப்பட்டுள்ளன. 'தன்னாட்சிக் கல்லூரிகள்' (Autonomous Colleges) எனும் கோட்பாட்டினை அறிமுகப்படுத்திய முதல் பல்கலைக்கழகம் சென்னைப் பல்கலைக்கழகமாகும். 132 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்றுள்ளன. இவற்றில் 15 அரசு, 24 அரசு நிதியுதவி, 67 சுயநிதி, 3 கீழ்திசைக் கல்லூரிகள், 5 சிறப்பு நிறுவனங்கள், 16 தனிவகை நிறுவனங்கள் மற்றும் 2 உறுப்புக் கல்லூரிகள் அடங்கும்.

4.1.4 சென்னைப் பல்கலைக்கழகத்தில் 19 புலங்களின் கீழ் 68 கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சித் துறைகள் வருகின்றன.

தொலைநிலைக் கல்வி

4.1.5 தொலைநிலைக் கல்வி நிறுவனம் 1981-ல் தொடங்கப்பட்டது. இதில் 27 இளநிலை பட்டப் படிப்புகள், 20 முதுநிலைப் பட்டப் படிப்புகள், 9 முதுநிலை அறிவியல் பாடப் பிரிவுகள் மற்றும் சுமார் 34 பிற பாடப் பிரிவுகள் வழங்கப் படுகின்றன. இதில் 1,60,000 மாணவர்கள் பதிவில் உள்ளனர்.

4.1.6 இதரச் செயல்பாடுகள்

1. வேளாண்-பொருளாதார ஆராய்ச்சி மையம் (AERC)
2. கல்விப் பணியாளர் கல்லூரி (ASC)
3. பல்கலைக்கழக பன்னாட்டுத் தொடர்பு மையம் (UCIR)
4. பல்கலைக்கழகம்-தொழில் நிறுவனம்-சமுதாயத் தொடர்பு மையம் (UICIC)
5. பல்கலைக்கழக சிறப்புத் தகுதிச் செயல்பாடுகள்
6. துறைத் திட்டங்கள்
7. ஒற்றைச்சாளர சேர்க்கை முறை
8. இணைய பல்கலைக்கழக உருவாக்கம்
9. ஆப்பிரிக்க மாணவர்களுக்கு முதுநிலை (தகவல் தொழில் நுட்பம்) மற்றும் இளங்கலை தொழில் நிர்வாகம் (BBA) இணையதளம் வழியாக வழங்கும் திட்டம்.

[2013 ஏப்ரல் 4

4.1.7 முக்கிய சாதனைகள்

1. நான்கு வளாகங்களிலும் மொழி ஆய்வகக் கூடம் நிறுவப்பட்டுள்ளது
2. பல்கலைக்கழக பன்னாட்டுத் தொடர்பு மையம் (UCIR) பல்கலைக்கழகம்-தொழில் நிறுவனம்-சமுதாயத் தொடர்பு மையம் (UCIR) மூலமாக இந்தியா மற்றும் வெளிநாட்டில் உள்ள கல்விசார், தொழில் மற்றும் நிறுவனங்கள் கூட்டிணைவு
3. அனைத்து வளாக நூலகங்களிலும் டிஜிட்டல் நூலக முயற்சிகள்
4. மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள்
5. பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை நிறைவேற்றம்
6. சென்னைப் பல்கலைக்கழகத்தின் இலவசக் கல்வித் திட்டம்
7. மாணவர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்
8. ஐந்து புதிய துறைகளின் துவக்கம்
   - (i) பெண்கள் கல்வித் துறை
   - (ii) சமூக சேவைத் துறை
   - (iii) வலைதளஅமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை
   - (iv) பொருள் அறிவியல் துறை
   - (v) உயிர் தகவலியல் துறை

9. நிறுவப்பட்ட மூன்று புதிய ஆராய்ச்சி மையங்கள்

- (i) கணினி தடயவியல் மற்றும் தகவல் பாதுகாப்புத் துறை
- (ii) நரம்பு மருத்துவ ஆராய்ச்சி தேசிய மையம்
- (iii) சிறை மற்றும் மறுவாழ்வு சார்ந்த ஆராய்ச்சி மையம் (உளவியல் துறையின் இருக்கை)

2013 ஏப்ரல் 4]

10. 2012–2013 ஆம் கல்வி ஆண்டில் விளையாட்டு சாதனைகள்

தெற்கு மண்டல பல்கலைக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற 8 போட்டிகளிலும், தேசிய அளவில் பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற 4 போட்டிகளிலும் இப்பல்கலைக்கழகம் முதலாவதாக வந்துள்ளது. தேசிய அளவிலான பல்கலைக் கழகங்களுக்கிடையேயான நீச்சல் போட்டியில் 9 பதக்கங்களும் தடகள விளையாட்டுகளில் 8 பதக்கங்களும் மற்றும் பல வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களும் இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம் தெற்கு மண்டல பல்கலைக்கழகங்களுக்கு இடையேயும் மற்றும் அனைத்திந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயும் கபடிப் போட்டிகளையும் நடத்தி உள்ளது.

4.1.8 2012–2013 ஆம் ஆண்டு செயல்பாடுகள்

1. *கிண்டி வளாகத்தில் Wi-Fi இணைப்பு*
2. *சுகாதார மையம் மற்றும் மாணவர்கள் வசதி மையம்*
3. *ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பரிமாற்றுத் திட்டம் மற்றும் Mover திட்டம்*
4. *ஆசிரியர்களுக்கு, புத்துணர்வு பயிற்சித் திட்டம் மற்றும் முனைவர் பட்ட மேற்படிப்புத் திட்டம்*
5. *ஆசிரியர்களுக்குக் கல்விசார் சாதனை விருதுகள்*
6. *ஆராய்ச்சிக் கூட்டிணைவுக்கு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தினைப் பார்வையிடுதல்*

4.1.9 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

1. *பல்கலைக்கழகச் சிறப்புத்திறன் இரண்டாவது கட்டத் திட்டம்*
2. *மற்ற வளாகங்களிலும் Wi-Fi இணைப்பு*
3. *மின்-ஆளுமை மையத்தை விரிவுபடுத்துதல்*
4. *மனித வளத்தை வலுப்படுத்துதல் (ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதவர்கள்)*

[2013 ஏப்ரல் 4

5. தமிழக அரசின் 2012-ன் சூரியஆற்றல் திட்டத்தை ஆதரிக்கும் வகையில் புதுப்பிக்கதக்க ஆற்றல், உயிர்எரிவாயு போன்றவற்றை ஆராய்ச்சி செய்வதற்கான ஒரு மையத்தை நிறுவுதல்

6. தொலைநிலைக் கல்வி நிறுவனம் மற்றும் புகழ்வாய்ந்த கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் இணைந்து தொலைநிலைக் கல்வி நிறுவனத்தில் இரட்டை திட்டங்கள் அறிமுகப்படுத்துதல்

7. விடுமுறை நாட்களில் சமூகப் பள்ளிகளுக்கு ஒருநாள் பல்கலைக்கழகச் சுற்றுலா சென்று பல்கலைக்கழகத்தால் Open House Day என்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தல்

8. விரிவாக்க செயல்பாட்டின் ஒரு பகுதியாக ஐந்து மாநகராட்சிப் பள்ளிக் கூடங்களைத் தத்தெடுத்து சென்னை குடிசைவாழ் மக்களுக்குக் கற்பிக்கவும், கற்கவும் செய்யும் திட்டத்தைப் பல்கலைக்கழகம் செயல்படுத்தும்

9. பழங்குடியினர்களுக்கு கிராமியத் தொடர்பு மற்றும் ஊடக கற்றல் திறன்மூலம் சமூக அங்கீகாரம் அளிப்பதற்கு கல்வராயன் மலையில் கள மையங்கள் ஏற்படுத்தப்படும்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

4.2.1 மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டம் 1965—ன்படி கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காக உருவாக்கப்பட்ட தலைசிறந்த நிறுவனமாகும். இது பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் சிறப்புத்தகுதி பெற்ற பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் சீரிய கற்றலுக்கென அர்ப்பணிக்கப்பட்ட 20 புலங்களுக்குள் 75 துறைகள் அமையப்பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 84 கல்லூரிகள் உள்ளன. அவற்றில் 2 அரசுக் கல்லூரிகளும், 31 உதவிபெறும் கல்லூரிகளும், 40 சுயநிதிக் கல்லூரிகளும், 6 உறுப்புக் கல்லூரிகளும், 1 பல்கலைக்கழக கல்லூரியும், 4 பல்கலைக்கழக மாலைநேரக் கல்லூரிகளும் அடங்கும். இவை தவிர 18 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களும் இப்பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படுகின்றன.

2013 ஏப்ரல் 4]

4.2.2 இப்பல்கலைக்கழகம் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான (1,10,088) மாணவர்களைக் கொண்டுள்ளது. இவை தவிர, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஒரு தொலைநிலைக் கல்வி இயக்ககத்தைக் கொண்டுள்ளது. 69,784 மாணவர்கள் பதிவில் உள்ளனர்.

கலைத்திட்ட மேம்பாடு

4.2.3 தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின் கொள்கை முடிவின்படி அரசின் நிதியுதவியினைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் கலைத்திட்ட மேம்பாட்டு மையம் இப்பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது. அவ்வப்போது பல்கலைக்கழக மானியக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. உலகளாவிய தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் மீநுண் தொழில்நுட்பம் (Nano Technology), உயிர் அணுவியல் (Genomics), பேரிடர் மேலாண்மை, மின் வணிகவியல், மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு ஆளுமை திறன் அளித்தல், மனித உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும் நிர்வாகவியல் ஆகிய பாடத் திட்டங்களுக்கு சிறப்புக் கவனம் தரப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில் மாணவர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் வகையில் 52 புதிய பாடப் பிரிவுகளுக்கான பாடத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பணி வாய்ப்புகள்

4.2.4 பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட "சிறப்புத்தகுதிப் பெற்ற பல்கலைக்கழகம்" என்ற திட்டத்தின்கீழ் 'படிக்கும்போதே ஊதிய மீட்டல்' திட்டத்தின்படி பயன்பெற்றுள்ளனர். நவீன மாணவர் சேவை மையம் ஒன்று பல்கலைக்கழக சுற்றெல்லைக்குள் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு மற்றும் சிறப்புத் தகுதி பெற்ற பல்கலைக்கழக திட்டத்தின்கீழ் மாணவர்களின் நலனுக்காக நிறுவப்பட்டுள்ளது.

விரிவாக்கச் செயல்பாடுகள்

4.2.5 இப்பல்கலைக்கழகம் அருகில் உள்ள கிராமங்களில் விரிவாக்க செயல்பாடுகளைச் செய்து வருகிறது. பள்ளிக்

குழந்தைகளுக்கு அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முறையாக நடத்தப்படுகின்றன.

இளைஞர் நலத் துறை மூலமாக நலிந்த பின்தங்கிய வகுப்பினர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுப் போட்டித் தேர்வுக்கு அவர்கள் ஆயத்தப்படுத்தப்பட்டு வருகிறார்கள். சுமார் 1,563 மாணவர்கள் இதனால் பயன் பெற்றுள்ளனர் மற்றும் 520 பெண்களுக்கு முதியோர் கல்வித் துறைமூலம் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

விருப்பார்ந்த தர மதிப்பீட்டுத் திட்டம்

4.2.6 விருப்பார்ந்த தர மதிப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இப்பல்கலைக்கழகம் முதுநிலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான கலைத் திட்டத்தில் மாற்றம் செய்து "செய்தித் தொடர்பு திறன்கள்" மற்றும் "ஆளுமைத்திறன் மேம்பாடு"ஆகிய இரண்டு பிரிவுகளைச் சேர்த்துள்ளது.

4.2.7 அரசின் உயர்கல்விக் கொள்கையின் அடிப்படையில், அரசால் வழங்கப்பட்ட ரூ.115 கோடி மதிப்பில் கீழ்க்கண்ட திட்டங்கள் பல்கலைக்கழகத்தில் புதிய முயற்சிகளாகத் தொடங்கப்பட்டன:-

(i) காணொலி காட்சியரங்கு வசதிகளுடன் கூடிய செயல்திறன் மிகு வகுப்பறைகள் நிறுவுதல், அயல்மொழி ஆய்வகங்கள், தொழில் முனைதல் மற்றும் திறன் மேம்பாட்டு மையம், கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு மற்றும் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து புகழ்பெற்ற பேராசிரியர்களை வரவழைத்தல்.

(ii) ஒரு முதுநிலைப் பட்டப்படிப்பு விரிவாக்க மையம் விருதுநகரில் நிறுவப்பட உள்ளது. அம்மையத்தில் ஐந்து தொழில் சார்ந்த பாடப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

(iii) மீநுண் தொழில்நுட்பத்தினை (Nano Technology) உபயோகிப்பதன்மூலம் எரிசக்தி நிலைப்படுத்துதல், நீர் மறுசுழற்சி மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றைச் செயல்படுத்த பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. மேலும் எரிசக்தி தணிக்கை மதிப்பீடு செய்வதற்கும் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

2013 ஏப்ரல் 4]

தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகள்

4.2.8 மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு மேலை நாடுகளில் இருந்து பேராசிரியர்கள் வருகை புரிய ஏதுவாக இப்பல்கலைக்கழகத்தின்கீழ் உள்ள அனைத்துப் பள்ளிகளும் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான கருத்தரங்குகள் நடத்தியுள்ளன. தேசிய அளவில் "பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் முதல்தர நிறுவன வசதிகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. "சுதந்திரத்திற்கு பின் முன்னேறிக் கொண்டிருக்கும் மகளிர்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் இளைஞர் நலன் கல்வித் துறையினால் 2013-ல் நடத்தப்பெற்றது.

உருவாக்கப்பட்ட புதிய பள்ளிகள்

4.2.9 அரசின் புதிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப, இளைஞர்களுக்கு ஆற்றல் வழங்கும் பள்ளி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகள் புதியதாக 2013 இல் உருவாக்கப்பட்டுள்ளன.

கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

4.2.10 புதுச்சேரியில் உள்ள ஆரோவில் நிறுவனம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக பதிவாளர் இணைந்து பரஸ்பர ஒத்துழைப்பையும், அக்கறையையும் மேம்படுத்த ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டனர்.

4.2.11 "நெட்வொர்க் ப்ரோஜக்ட் ஆன் புருசெல்லோசிஸ்" என்ற தலைப்பிலான திட்டத்திற்காக, மரபியல் துறை, உயிரி அறிவியல் பள்ளி மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறை ஆகியவற்றிற்கு ரூ.1.2 கோடி ஒப்பளிப்பினை வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் பரிசோதனைக் கருவிகள் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் மேம்படுத்தப்படும்.

4.2.12 சிறப்புத்தகுதிப் பெற்ற பல்கலைக்கழகம் என்ற தற்போதைய நிலையிலிருந்து தனிச்சிறப்பு வாய்ந்த பல்கலைக்கழகமாக நிலை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[2013 ஏப்ரல் 4

பாரதியார் பல்கலைக்கழகம்

4.3.1 பாரதியார் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் 1981-ன்கீழ், கோயம்புத்தூரில் 1982-ல் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் அதிகார எல்லை, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது. இப்பல்கலைகழகத்தில், 34 கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சித் துறைகள் உள்ளிட்ட 13 துறையகங்கள் உள்ளன. தேசிய நர நிர்ணயம் மற்றும் மதிப்பீட்டுக் குழுமம், மறுமதிப்பீட்டில், இப்பல்கலைக்கழகத்திற்கு 'A' அந்தஸ்து வழங்கியுள்ளது. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ், 7 துறைகளுக்கும், இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, அதனுடைய (FIST) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிக்கான நிதியுதவி திட்டத்தின்கீழ், 6 துறைகளுக்கும் உதவி வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 6 அரசு கல்லூரிகள், 3 உறுப்புக் கல்லூரிகள், 16 அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் 82 சுயநிதி கல்லூரிகள் உள்ளிட்ட 107 இணைவு பெற்ற கல்லூரிகள் உள்ளன. மேலும், 30 ஆராய்ச்சி நிறுவனங்களும் உள்ளன. இவ்வனைத்து நிறுவனங்களும், இப்பல்கலைக் கழகத்தின் தொலைநிலைக்கல்வி மையமும் 2,50,829 மாணாக்கர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

4.3.2 பன்னாட்டு மாணவர்கள் மையம், விருந்தினர் மாளிகை, மேலாண்மை வளாகம், தேர்வுக் கூடம், புத்தக இருப்புக் கிடங்கு, உள்விளையாட்டு அரங்கம், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம், மகளிர் விடுதி, இயற் அறிவியல் கட்டடம், கல்லூரி கல்விசார் பணியாளர் விடுதி உள்ளிட்ட கட்டடங்கள் ரூ.29.22 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

செயல் திட்டங்கள்

4.3.3 இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறையின் பல்கலைக்கழக ஆராய்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் அறிவியலைச் சிறப்புப் பெறச் செய்தல் (PURSE) என்ற திட்டத்தின்கீழ், மூன்று ஆண்டுகளுக்கு ரூ.9 கோடி வழங்கியுள்ளது. 2011 ஜூலையில், முதல் ஆண்டிற்கான நிதியாக ரூ.3 கோடி பெறப்பட்டுள்ளது. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு,

2013 ஏப்ரல் 4]

இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி மன்றம், அணுவியல் ஆராய்ச்சி வாரியம், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், உடற்கூறுவியல் மற்றும் அதுதொடர்பான அறிவியல் பாதுகாப்பு நிறுவனம், பாதுகாப்பு ஆராய்ச்சிக்கூடம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கழகம் ஆகிய பல்வேறு நிதிநல்கை முகமைகளிடமிருந்து பல்வேறு துறைகள் குறித்த இப்பல்கலைக்கழகத்தின் 32 பெரிய திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

திட்டங்கள்

4.3.4 *ஆய்வுத்திறனை மேம்படுத்தவும், உயர்தர ஆராய்ச்சி படிப்புகளை வழங்கவும் ரூ.2.5 கோடி மதிப்பில், இயற்பியல் துறையில் உயர்தர தொழில்நுட்ப ஆய்வுக் கூடங்களுடன் முதுகலை பட்ட மேற்படிப்புச் சிறப்பு மையம் அமைப்பதற்குத் தமிழக அரசு பாரதியார் பல்கலைக்கழகத்தினை அடையாளம் கண்டுள்ளது.*

4.3.5*கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு ஒரு வார கால புத்தாக்கப் பயிற்சிப் பட்டறை மற்றும் ஒரு நாள் கல்வியாளர் - தொழில்துறைச் சந்திப்புக் கூட்டங்களை நடத்தியுள்ளது. புகழ்பெற்ற பேராசிரியர்களை அழைத்து வரும் திட்டத்தின் கீழ், பிரான்சு நாட்டிலிருந்து* Dr. Willey Painiyaye *இப்பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறைக்கு வருகை புரிந்தார்.*

4.3.6 *பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், ரூ.20 கோடி மதிப்பில் உயிர் அறிவியல் ஆராய்ச்சி மையத்தினை அமைத்துள்ளது. இம்மையம் உயிர் அறிவியலில் உயர் ஆராய்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கிறது.*

விண்வெளித் திருவிழா

4.3.7 *பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கிடையே ஆராய்ச்சி விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில், ஜூலை 2012–ல்* NASA, ISRO *மற்றும்* DRDO *ஆகியவற்றின் உதவியுடன் விண்வெளித் திருவிழா ரூ40 இலட்சம் செலவில் 2012 ஜூலை 9 முதல் ஜூலை 14 ஆம் தேதி வரை மிகப்பெரிய அளவில் நடத்தப்பட்டது.*

4.3.8 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

[2013 ஏப்ரல் 4

- டெங்கு, சிக்குன்குனியா, பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், வைரஸ்கள் போன்ற நோய்களைக் கண்டறிவதற்கான உயிர்உணர்விகள் மற்றும் அந்நோய்களுக்கான மருந்துகளை மேம்படுத்துதல் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள மீநுண் மருந்தியலில் அதிநவீன ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- வளிமண்டல மாறுபாடுகள் மற்றும் புவி அறிவியல் பிரிவுகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக, புதிதாக இரண்டு புவியியல் மற்றும் புவியமைப்பியல் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிக்கான துறைகள் உருவாக்கப்படும்.
- மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய அறிவியல் கணிமை மையத்தை (Computing Centre) உருவாக்குதல்.
- உலக அளவிலான மேலாண்மையில் முதுகலை வணிக மேலாண்மை மற்றும் முதுகலை ஆங்கிலப் படிப்பு (உள்ளார்ந்த அறிவு வளர்ச்சி) போன்ற புதுமையான பாடப் பிரிவுகளை வழங்குதல்.
- எக்ஸ்ரே, பரிசோதனைக் கூடம், இதய துடிப்பு பரிசோதனை மற்றும் மருந்தகம் உள்ளடக்கிய வசதிகளைக் கொண்டு, தற்போது செயல்பட்டு வரும் மருத்துவ மையத்தினை மேம்படுத்துதல்.
- சூரிய மின் ஆற்றல் உற்பத்தியினை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் துவங்கப்பட்டுள்ளன.

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

4.4.1 பாரதிதாசன் பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரால் துவக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கச் செயல்பாடுகளில் விரைவான முன்னேற்றம் காண்கிறது. இப்பல்கலைக்கழகம் 17 பள்ளிகளையும், 57 துறைகளையும்/சிறப்பு மையங்களையும் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் 108 பாடப் பிரிவுகளை கற்பிக்கிறது. இப்பல்கலைக்கழகம் தன் ஆளுகையின்கீழ் 133 இணைவு பெற்ற கல்லூரிகளைக் கொண்டுள்ளது. இவற்றில் 17

2013 ஏப்ரல் 4]

அரசு கல்லூரிகள், 20 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 9 உறுப்புக் கல்லூரிகள், 72 சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் 15 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் அடங்கும். இக்கல்லூரிகளில் ஏறத்தாழ 2,11,500 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

4.4.2 *கடந்த இரண்டாண்டுகளில் 52 புதிய பாடப் பிரிவுகளுக்கு பாடத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வரின் 2023 தொலைநோக்கினை எய்தும் நோக்கில், தமிழக அரசு நிதியுதவியுடன் 'உலகத் தரத்திற்கு நிகரான கலைத் திட்டத்தினை நோக்கி' எனும் திட்டத்தினை செயல்படுத்த பாரதிதாசன் பல்கலைக்கழகம் உத்தேசித்துள்ளது. பல்கலைக்கழகப் பாடத் திட்ட மையத்தால் பாடத் திட்டக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு "வேலைவாய்ப்பை அதிகரிக்க இளநிலை மற்றும் முதுநிலை பாடத் திட்டத்தில் சீர்திருத்தம்" என்ற தலைப்பில் தனியே பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன. மாற்றுத் திறனாளிகளை பொது சமுதாயத்தினருடன் இணைக்கும் வகையில் சிறப்பு மையம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு அவர்களின் செயலாற்றலைக் கண்டறிவதற்கும், சுயசார்பு உடையவர்களாக இருப்பதற்கும் இம்மையம் உதவி புரிகிறது.*

4.4.3 *கிராமப்புற மக்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 2011 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நான்கு உறுப்புக் கல்லூரிகள் ஸ்ரீரங்கம், நன்னிலம், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டன. இக்கல்லூரிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள். நாகப்பட்டினத்தில் உறுப்புக் கல்லூரி ஜூன் 2012-ல் 300 முதலாமாண்டு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 9 உறுப்புக் கல்லூரிகளில் 9,631 மாணவ, மாணவியர் பயில்கின்றனர். ஸ்ரீரங்கம் மற்றும் பெரம்பலூர் பகுதிகளில் அமைந்த உறுப்புக் கல்லூரிகளில் மின்னணு தகவல் தொழில் நுட்பத்துடன்கூடிய நூலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

பல்கலைக்கழக தகவலியல் மையம்

4.4.4 *பல்கலைக்கழகத் தகவலியல் மையம் முழுமையான உள்கட்டமைப்பு மற்றும் வலைப்பின்னல் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வகம் மூலமாக மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப சுற்றுச்சூழலை வழங்குகிறது.*

[2013 ஏப்ரல் 4

4.4.5 கணினி வழியாக டிஜிட்டல் கற்றலை மேம்படுத்துதல், கற்றலில் புதுமையான அணுகுமுறைகள் நடைமுறைப்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு உதவுதல், டிஜிட்டல் விவரங்கள் பகிர்ந்து கொள்ளுதல், குறிப்பிட்ட பிரிவினருக்கு அறிவைப் பரவலாக்குதல் ஆகிய பணிகள்மூலம் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் உறுப்புக் கல்லூரிகளும் பயன்பெறும் பொருட்டு, பல்கலைக்கழக தகவலியல் மையத்தில் அறிவுக் கருவூல மையம் நிறுவப்பட்டுள்ளது.

4.4.6 பிப்ரவரி - மார்ச் 2012-ல், நடத்தப்பட்ட 1) அடிப்படை கணினி, 2) அலுவலகத்தில் கணினி, 3) கணினி - திட்ட நுட்பங்கள் 4) சி - கணினி திட்டம் 5) சி + + கணினி திட்டம் ஆகிய சான்றிதழ் படிப்புகளில் 27,160 மாணவர்கள் சேர்ந்து, அவர்களில் 99.65 விழுக்காடு மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர்.

சுகாதாரம் மற்றும் தூய்மையில் மகளிர் பங்கு

4.4.7 நாட்டு நலப் பணி திட்டப் பிரிவு, சமூகப் பணி மற்றும் பெண் கல்வி துறைகளுடன் இணைந்து, பெண்களுக்கான "பெண்கள் பங்கு பெறும் சுகாதாரம் மற்றும் தூய்மை" என்ற அமைப்பை உருவாக்கி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற பெண்களிடையே சுகாதார விழிப்புணர்வை மேம்படுத்துகிறது. நிறுவன சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின்கீழ், பெல், திருச்சிராப்பள்ளி நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டுள்ளது. 'பெல்' நிறுவனம் இத்திட்டத்திற்கு ரூ.55 இலட்சம் வழங்கியுள்ளது.

4.4.8 பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் கலாச்சார குழுக்களை ஒருங்கிணைத்து திருவிழா ஒன்று அக்டோபர் 2012-ல் நடைபெற்றது. இத்திருவிழாவில் 42 உறுப்புக் கல்லூரிகளைச் சேர்ந்த 1,110 மாணவர்கள் பங்கு பெற்றனர்.

4.4.9 தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் அல்லாத ஆசிரியர்களுக்கு ஜூன் 2012-ல் SAKSHAM என்ற திட்டத்தினை நடத்துவதற்குத் தமிழ்நாடு அரசு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினை ஒரு மையமாக தேர்ந்தெடுத்துள்ளது.

4.4.10 2013–2014ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- பல்கலைக்கழகத்தின் தொலைதூர உணர்வு மையம் ரூ.2.5

2013 ஏப்ரல் 4]

கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

- பல்கலைக்கழகத்தின் மின் தேவையை பூர்த்தி செய்வதற்கு சூரிய சக்தி, எரிவாயு சக்தி, காற்றாலை சக்தி ஆகியவற்றின் மூலமாக மரபுசாரா சக்தியை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- மின்னணு ஊடகம் மற்றும் காட்சித் தொடர்பியல் இணைத்து பாரதிதாசன் கவின்கலை நிறுவனம் துவங்குதல்.
- இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்பு மாணவர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு இளநிலை மற்றும் முதுநிலை பாடத் திட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வேலை படிப்பறிவை இணைத்தல்.

அழகப்பா பல்கலைக்கழகம்

4.5.1 அழகப்பா பல்கலைக்கழகம் 1985 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் "செயலிற் செம்மை" என்ற குறிக்கோளினை கல்விசார் மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களுடன் நவீன பாடத் திட்டம் மற்றும் கல்விமுறை ஆகியவற்றின்வழி அடைய உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறது.

4.5.2 அழகப்பா பல்கலைக்கழகம், 10 பள்ளிகளாகப் பிரிக்கப்பட்டு, 22 துறைகள், 9 மையங்கள், 3 உறுப்பு மற்றும் 5 மாலைநேரக் கல்லூரிகளையும் கொண்டுள்ளது. அவற்றுடன், இப்பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 8 அரசு கல்லூரிகள், 5 அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் 13 சுயநிதி கல்லூரிகள் உள்ளடக்கிய 26 இணைவுக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அழகப்பா பல்கலைக்கழகத்தில் நான்கு UGC-SAP துறைகளும் மூன்று DST-FIST துறைகளும் உள்ளன.

சாதனைகள்

4.5.3 தேசிய ஆய்வுத் திட்டம் மற்றும் ஆய்வுத்தரத்தினை மதிப்பீடு செய்யும் SCOPUS ஆவணக் கணக்கீட்டின் அடிப்படையில், அழகப்பா பல்கலைக்கழகம் பன்னாட்டு கூட்டு ஆய்வு வெளியீட்டில் இந்திய அளவில் முதல் 50 பல்கலைக்கழகங்களில் மூன்றாவது இடத்தினை பெற்றுள்ளது. இதற்கென இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, பல்கலைக்கழக ஆராய்ச்சி மேம்பாடு, அறிவியல் உயர் சிறப்பு

[2013 ஏப்ரல் 4

திட்டத்தின்கீழ் ரூ.6 கோடியினை ஆய்வு வளர்ச்சிக்காக வழங்கியுள்ளது சிறப்பம்சமாகும். இப்பல்கலைக் கழகத்தில் உள்ள இராமானுஜம் கணித உயர் கணிதவியல் மையமானது உயர் கணித படிப்பு ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கான சிறந்த மையமாக செயல்பட்டு வருகின்றது. பிப்ரவரி 2012-ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக ரூ.5 கோடி மதிப்பிலான கட்டடங்களை திறந்துவைத்து, ரூ3 கோடி மதிப்பிலான பல்வேறு கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். அழகப்பா பல்கலைக்கழகம் தேசிய தர மதிப்பீட்டுக் குழுமத்தின் மறு தர மதிப்பீட்டின் சராசரி கூட்டுப் புள்ளி அளவில் 3.21 என்ற மதிப்பீட்டுடன் நவம்பர் 2011-ல் 'A' தகுதி பெற்றுள்ளது சிறப்பாகும். தமிழக அரசுப் பல்கலைக்கழகங்களில் தற்போதைய நிலையில் இந்த மதிப்பீடு மிக உயர்ந்ததாக உள்ளது.

4.5.4 அழகப்பா பல்கலைக்கழகம் ரூ.5 கோடி தொகுப்பு நிதியைக் கொண்டு "அழகப்பா பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதி" துவங்கி உள்ளது. இந்நிதி, பன்னாட்டு கூட்டு ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ள பயன்படுத்தப்படுகிறது.

4.5.5 தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தொழில்நுட்பம் மற்றும் கல்விசார் எழுதுதல் பயிற்சி மையம், மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வடிவ கருவிகள் தயாரிக்கும் மையம் மற்றும் பல்கலைக்கழக-தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையம் ஆகியவைகளை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்த விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

4.5.6 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

* பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் புதுமைத் திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ள "P.G. Diploma in Structural Pharmacogenomics" மற்றும் MBA (Logistics Management) ஆகிய இரண்டு படிப்புகள் புதுமைப் பாடத் திட்டங்கள் 2013-2014 ஆம் ஆண்டில் துவங்கப்படவுள்ளன.

* Wi-Fi வசதி வழங்கி மென்பொருள் கட்டமைப்பை வலுப்பெறச் செய்ய திட்டமிடப்பட்டு வருவதுடன், பல்கலைக்கழக வளாகத்தில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியலுடன்கூடிய படிப்புச் சூழலை உறுதி செய்கிறது.

2013 ஏப்ரல் 4]

* உயர் அழுத்த மின்சாரத் தேவையினைப் பெற, சூரிய சக்தி உற்பத்தி தகடு மற்றும் உபகரணத்தை நிறுவுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

* 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து தொலைநிலைக் கல்வி முறையின் வாயிலாக 15 சிறப்புப் பிரிவுகளுடன் மறுவடிவமைக்கப்பட்ட முதுகலை மேலாண்மைப் பாடத் திட்டம் வழங்கப்படவுள்ளது.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

4.6.1 அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானலில் 1984 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் கல்வியின் வழி எல்லாத் தளங்களிலும் மகளிரை மேம்படுத்தும் சீரிய இலக்குடன் பணியாற்றி வருகிறது. பயிற்றுவித்தல், ஆய்வு மேற்கொள்ளல், விரிவாக்கப் பணி என்னும் முப்பரிமாணங்களில் மகளிருக்கு இணையான தகுதியினை வழங்கும் ஒரே நோக்கத்துடன் இது செயல்படுகிறது. பல்கலைக்கழகத்தில் 18 கல்வியியல் துறைகளில் இளநிலை, முதுநிலை, முனைவர் பட்ட ஆய்வு, ஆய்வியல் நிறைஞர் என்ற பல்வேறு நிலைகளில் மாணாக்கியர் பயின்று வருகின்றனர். தொலைநிலைக் கல்வியில் 31 துறைகளில் கல்வி அளிக்கப்படுகிறது. பல்கலைக்கழகத்தில் 11 இணைவு பெற்ற கல்லூரிகள் செயல்படுகின்றன. அதில் 2 அரசு கல்லூரிகள் 2 நிதியுதவி பெறும் 2 உறுப்புக் கல்லூரிகள், 5 சுய நிதிக் கல்லூரிகள் அடங்கும். மேலும், கிராமப்புற, பழங்குடியினர் பகுதிகளின் தேவைகளுக்கேற்ப 8 சமுதாயக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

4.6.2 சாதனைகள்

- பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவினால் கல்வியியல் துறை, ஆற்றல்சார் மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- கல்வியியல் துறை, கல்வியியலில் சிறப்புக் கல்வி என்ற இளங்கலைப் பட்டப் பாடத்தை இந்திய மறுசீரமைப்பு கழகத்தின் ஒப்புதலுடன் வழங்கி வருகிறது.

- கல்வித் துறையில் உள்ள மாணவியர், கொடைக்கானலில் உள்ள பார்வையற்ற மாணவிகளுக்கு தன்னார்வ அடிப்படையில் எழுத்து உதவியாளர்களாக சேவை புரிகின்றனர்.

[2013 ஏப்ரல் 4

- தமிழகத்தின் 17 மாவட்டங்களில் இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் "அனைவருக்கும் கல்வி" என்ற திட்டத்தை மேற்பார்வையிடும் அமைப்பாக கல்வியியல் துறை செயல்படுகிறது.
- பல்கலைக்கழகத்தில் கலைத் திட்ட வளர்ச்சி மையத்தின்மூலம் வணிகவியல், ஆங்கிலம், கணிதவியல், நிர்வாகவியல், வேதியியல், வரலாற்றுத் துறை, சுற்றுலா மேம்பாட்டியல் மற்றும் தமிழியல் துறைகளைச் சார்ந்த தேசிய மற்றும் பன்னாட்டு வல்லுநர்களுடன் இணைந்து பாடத் திட்டம் மேம்படுத்தப்படுகிறது.
- பல்கலைக்கழகம், பல தொழில் நிறுவனங்களாகிய "நோக்கியா இந்தியா பிரைவேட் லிமிட்டெட்" "நகர வங்கி" "மேசிநெட் டேலி அகாடமி" "பாரத வங்கி" "ஸ்மார்ட் பிளே டெக்னாலஜி பெங்களூரு" "மண்டல காபி ஆய்வு நிலையம், தாண்டிகுடி" ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து மாணவிகளுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.
- அடைகாப்பு மற்றும் தொழில்நுட்பப் பகிர்ந்தளிக்கும் மையம் "தொழில் சார்ந்த வாய்ப்பு மற்றும் வழிகாட்டுதல்" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கினை நிகழ்த்தியது. அதில் அணிகலன் வடிவமைத்தல், பானை வடிவமைத்தல், நயப்படுத்துதல், உணவு உருவாக்கம், காளான் பயிரிடுதல் போன்றவற்றிற்கான திறன்பயிற்சி நிகழ்ச்சிகள் அனைத்து மாணவியர்களுக்கும் தொழில் துறை சார்ந்த விழிப்புணர்வுத் திறன் பயிற்சி வகுப்புகளில் நடத்தப்பட்டது.
- தொழில்நுட்பம் மற்றும் கல்விசார் எழுத்து மையம், மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்குப் புத்தொளி பயிற்சிகளை வழங்கியது.
- பல்வகை கருவிகள் உற்பத்தி மையம் இளங்கலை கல்வியியலில், சிறப்புக் கல்வி பயிலும் மாணவர்கள், சிறப்பு குழந்தைகளுக்கு கற்பித்தல் கருவிகள் தயாரிக்கும் பயிற்சி அளித்தது.
- உலக மகளிர் தினத்தையொட்டி, பல்கலைக்கழகம் "பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான வன்முறைகளுக்கான சீர்திருத்தங்கள் மற்றும் தீர்வுகள்" குறித்த கருத்தரங்கு, "பெண் தொழில் முனைவோருக்கான

2013 ஏப்ரல் 4]

வணிக அறிவுசார் கருவிகள்" குறும்படம் தயாரித்தல் (போட்டி) போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியது.

- "பாலின மேம்பாடு" என்ற பெயரிலான பல்கலைக்கழக இதழ் ஒன்றும், நான்கு புத்தகங்களும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 10-3-2013 அன்று வெளியிடப்பட்டன.

- பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு மற்றும் பிற நிதி அளிக்கும் நிறுவனங்களால், பல்வேறு துறைகளுக்குரிய ஆய்வுத் திட்டங்களுக்காக ரூ.2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- அனைவருக்கும் இடைநிலைக் கல்வி கிடைப்பதற்கான நோக்கத்தை அடைய வேண்டி, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தை மேற்பார்வையிட, பல்கலைக்கழக கல்வியியல் துறையானது மனிதவள மேம்பாட்டுத் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

- பல்கலைக்கழக வளாகம் முழுவதும் "இணையதள" வசதி செய்யப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக மாணவியர், ஆசிரியர், அலுவலர், உள்ளூர் பெண்கள் நலனுக்காக, பல்கலைக்கழக வளாகத்தில் உடற்பயிற்சிக் கூடமும், இணையதள மையமும் திறக்கப்பட்டுள்ளன.

- அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக மற்றும் அதன் இணைப்புக் கல்லூரிகளின் மாணவியர் தென்மண்டல பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கபடிப் போட்டியில் முதலிடமும், அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கபடிப் போட்டியில் நான்காவது இடத்தையும் பெற்றனர். பீஜப்பூர் கர்நாடக மாநில மகளிர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய பெண்கள் தடகளப் போட்டியில் பல்கலைக்கழக மாணவியர்கள் 6 தங்கப் பதக்கங்களும், 10 வெள்ளிப் பதக்கங்களும் மற்றும் 12 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றனர்.

4.6.3 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- பல்கலைக்கழக நிர்வாகம் முழுவதும் கணினிமயமாக்குதல்.

- பல்கலைக்கழக வளாகத்தில் தொழில்நுட்பப் பூங்கா நிறுவுதல்.
- ஆய்வு இணைப்புகளை ஏற்படுத்த, அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்.
- பல்கலைக்கழக வளாகத்தை பசுமை வளாகம் ஆக்குதல். மூலிகை மற்றும் மருத்துவ செடித் தோட்டம் அமைத்தல்.
- ICMA/ACS, NET/SLET மற்றும் பிற போட்டித் தேர்வுகளில் தேர்ச்சிப்பெற மாணவிகளுக்குப் பயிற்சி அளித்தல்.
- பெண் குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் இலக்குடன், பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான பயிற்சிகளை நல்குதல். இப்பொருள் சார்ந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் குறும்படங்கள் தயாரித்தல்.
- கிராம மேம்பாட்டு மையம் மற்றும் மகளிர் ஆற்றல் மேம்படுத்தும் மையம் தொடங்குதல்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

4.7.1 தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் இடம் பெற்றுள்ள மனோன்மணியம் என்ற தமிழ் நாடக நூலை இயற்றிய தனிச் சிறப்புமிக்க தத்துவப் பேராசிரியர் பி.சுந்தரம்பிள்ளை (1855-1897) அவர்கள் பெயரில் இப்பல்கலைக்கழகம் 1990 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 31-ன்படி திருநெல்வேலியில் நிறுவப்பட்டது. தற்போது, இப்பல்கலைக்கழகம் சுமார் 73,325 மாணவர்களுடனும், 4,164 ஆசிரியர்களுடனும் இயங்கி வருகிறது. "கல்வி சென்றடையாதவர்களிடம் கல்வியை எடுத்துச் செல்லுதல்" என்னும் இலக்குடன் இப்பல்கலைக்கழகம் இயங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தின் இரண்டு வளாகங்கள் ஆழ்வார்குறிச்சி மற்றும் இராஜக்கா மங்கலம் ஆகிய இடங்களில் உள்ளன.

4.7.2 இந்தப் பல்கலைக்கழகத்தில் 26 துறைகளும், 62 இணைவுக் கல்லூரிகளும் உள்ளன. இவற்றுள் 2 அரசு கல்லூரிகள், 25 அரசு உதவிபெறும் தன்னாட்சி அல்லாத கல்லூரிகள், 28 சுயநிதிக்

2013 ஏப்ரல் 4]

கல்லூரிகள், 7 அரசு உதவிபெறும் தன்னாட்சிக் கல்லூரிகள் மற்றும் 4 உறுப்புக் கல்லூரிகள் அடங்கும்.

4.7.3 *ஏழை எளிய மாணவர்கள், அவர்களால் செலுத்த இயலும் கட்டண விகிதங்களில் கல்வியை அளிக்கும் பொருட்டும், அவர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டும், சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளான நாகம்பட்டி, சங்கரன்கோவில், புளியங்குடி, கோவிந்தபேரி, திசையன்விளை மற்றும் பனகுடி ஆகிய இடங்களில் 6 பல்கலைக்கழகக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன.*

4.7.4 கல்வித் திட்டங்கள்

இப்பல்கலைக்கழகத்தில் 34 முதுகலைப் பாடப்பிரிவுகளும், 24 ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) பாடப் பிரிவுகளும், 7 முதுகலைப் பட்டயப் பாடப் பிரிவுகளும் பல்கலைக்கழகத் துறைகளால் நடத்தப்படுகின்றன. மீநுண் அறிவியல், உயிர் தொழில்நுட்பம், புவிதொழில்நுட்பவியல், மருந்தாக்க வேதியியல், கடல்சார் பொருளாதாரம், உயிரிதகவலியல், குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி, மின்னணு ஊடகம் மற்றும் மனித உரிமைகள் போன்ற சமூகத்திற்குத் தேவைப்படும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பிற பாடங்களும் நடத்தப்படுவதுடன், தொழில் நிறுவனங்களின் தேவையை கருத்தில் கொண்டு இப்பாடப் பிரிவுகளுக்கான பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

4.7.5 சாதனைகள்

- *ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இடையே கல்விப் பரிமாற்றம் செய்வதற்காக இப்பல்கலைக்கழகம் டென்மார்க்கில் உள்ள ஆறஸ் பல்கலைக்கழகத்துடன்* (Arhus University) *ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.*

- *தமிழக அறிவியலாளர் விருது இப்பல்கலைக்கழகத்தின் இரண்டு கணிதவியல் பேராசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

- *பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு வழங்கும் பெருமைமிக்க அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி உதவித் தொகையானது,*

[2013 ஏப்ரல் 4

கணிதவியல் துறையில் 10 பேருக்கும், புள்ளியியல் துறையில் 10 பேருக்கும், கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில் 5 பேருக்கும், இயற்பியல் துறையில் 5 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் சிறப்பு உதவித் திட்டம் (SAP) சமூகவியல் துறை மற்றும் கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் ஆகிய இரு துறைகளால் பெறப்பட்டுள்ளது.

- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையிடமிருந்து கணினி அறிவியல் மற்றும் வேதியியல் துறைகள் முறையே நிலை I மற்றும் நிலை II விருதுகளைப் பெற்றுள்ளன.

- உலக வங்கியின், தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (TEQIP) கணினி அறிவியல் துறை ரூ.2 கோடி பெற்றுள்ளது.

- இப்பல்கலைக்கழகத்தின் 15 பேராசிரியர்கள் அமெரிக்கா, கனடா, இத்தாலி, சுவீடன், நெதர்லாந்து, இங்கிலாந்து, சீனா உட்பட 13 நாடுகளுக்குச் சென்றுவந்துள்ளனர். சென்ற கல்வியாண்டில் 17 வெளிநாட்டு பார்வையாளர்கள்/ கல்லூரி பேராசிரியர்கள் இப்பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளுக்கு வருகை புரிந்துள்ளனர். இப்பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறை பேராசிரியர் ஒருவருக்கு ஜூப்ளி காமன்வெல்த் கல்விப்புல உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், பசுமையைப் பேணவும், அக்டோபர் 2012 இல் பல்கலைக்கழக வளாகத்தில் பெரும் எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் நடும் திட்டம் நடைபெற்றது. இதன்மூலம், 2,000 மரக்கன்றுகள் இப்பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் நடப்பட்டன.

- பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி நிதியிலிருந்து வகுப்பறை கட்டுமானத்திற்காக, கோவிந்தப்பேரியிலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி, ரூ.1.43 கோடியும், மாணவர்களின் மிதிவண்டி நிறுத்துமிடம் கட்டுவதற்காக ரூ.8.5 இலட்சமும்

2013 ஏப்ரல் 4]

பெற்றுள்ளது.

- பொறியியல், கணிதம், உயிர்மருத்துவ தகவலியல், கணினி அறிவியல் மற்றும் மேலாண்மை கல்வி ஆகிய முதுநிலை பாடப் பிரிவுகளை வழங்க, கன்னியாகுமரியில் முதுநிலை விரிவாக்க மையம் ஒன்றினை தொடங்க இப்பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

4.7.6 சமுதாயக் கல்லூரிகள்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 18 சமுதாயக் கல்லூரிகளில், வேலைவாய்ப்பு சார்ந்த, பணி தொடர்பான திறன்களை மையமாகக் கொண்ட ஓராண்டுகால 15 பட்டயப் பாடப் பிரிவுகள் நடத்தப்படுகின்றன. கணினிப் பயன்பாடு, இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுதுபார்ப்பு, குழந்தை நலக் கல்வி, நலவாழ்வு உதவி, ஆய்வக உதவி, குளிர்சாதனம் மற்றும் குளிர் பதனப்பெட்டி பராமரிப்பு, அலுவலக மேலாண்மைக்கான கணினி பயன்பாடு, வர்மக்கலை மற்றும் வலியியல், வெளிநாட்டு வணிகம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி ஆவணங்கள் தயாரித்தல், விமானப் பயணச்சீட்டு வழங்கல், சிலம்பம் மற்றும் வீரக் கலைகள், உணவக நிர்வாகம் மற்றும் சமையல் அறிவியல் உள்ளிட்ட பல பாடங்கள் சமுதாயக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன. "விடுபட்டவர்களை சேர்ப்பது மற்றும் குறையுடன் உள்ளவர்களுக்கு நிறைவை தருவது" என்ற நோக்கில், வாய்ப்பற்ற மற்றும் நலிவடைந்தவர்களுக்கு சமுதாயக் கல்லூரிகள் திறன் சார்ந்த வாழ்வு மேன்மை கல்வி, வேலைவாய்ப்புத் தகுதி போன்றவைகளை வழங்குகின்றன. உள்ளூர் தொழிற்சாலைகளுடன் இணைந்து பயனுள்ள வேலைவாய்ப்பு பெறுவதற்கான போதுமான திறன் வளர்ச்சியை தருவதே சமூதாயக் கல்லூரிகளின் முக்கிய இலக்காகும்.

4.7.7 எதிர்காலத் திட்டங்கள்

- பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் நிதி உதவியுடன், 'சிறப்புக் குழந்தைகளுக்கான ஆலோசனை', 'வாழ்க்கைத் திறனை மேம்படுத்தல்', 'பாதுகாப்பு மேலாண்மை' ஆகிய மூன்று வேலைவாய்ப்பு தொடர்பான பாடத் திட்டங்கள், ஒருங்கிணைந்த முதுநிலை பாடப் பிரிவு மூலமாக வழங்கப்பட உள்ளது.

- தமிழக அரசின் தற்போதைய எரிசக்தி கொள்கையின்

அடிப்படையில், பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்டுவரும் இரண்டு புதிய கட்டடங்கள், அதற்குத் தேவைப்படும் மின்சக்தியை பெறுவதற்கான சூரிய சக்தி அடுக்குகளை கொண்டதாக இருக்கும்.

- சுற்றுச்சூழலைக் கண்காணித்தல், நிலையான வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் ஆகியவற்றிற்காக ஒரு மையத்தை உருவாக்க இப்பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

பெரியார் பல்கலைக்கழகம்

4.8.1 மாபெரும் சமூக சீர்த்திருத்தவாதியும் 'பெரியார்' என்று அனைவராலும் அறியப்பட்டவருமான தந்தை பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்களின் பெயரில் பெரியார் பல்கலைக்கழகம் 1997 ஆம் ஆண்டு சேலத்தில் துவங்கப்பட்டது. பெரியார் பல்கலைக்கழகம், சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள மாணவர்களின் உயர் கல்வி தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றது. இதன் 22 பல்கலைக்கழக துறைகள், 3 ஆராய்ச்சி மையங்கள் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் 10 அரசு கல்லூரிகள், 4 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 5 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 61 சுயநிதி கல்லூரிகள் ஆகிய 80 இணைவுக் கல்லூரிகள் வாயிலாக சுமார் 1,52,000 மாணவர்கள் உயர் கல்வி பயின்று வருகின்றனர்.

4.8.2 இப்பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையம் தர்மபுரியில் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. 14 சமுதாய கல்லூரிகள் கிராமப்புற மாணவர்களின் தேவையினை பூர்த்தி செய்கிறது. பெரியார் பல்கலைக்கழகம் 104 பாடப் பிரிவுகளில் இளநிலை பட்டப் படிப்பு மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

தமிழ் அறிவியல் மாநாடு

4.8.3 பெரியார் பல்கலைக்கழகம், 12-வது தமிழ் அறிவியல் மாநாட்டினை நடத்தியது. இம்மாநாட்டில் பேராசிரியர்கள், அறிவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் உட்பட 1,500 பேர் கலந்துகொண்டார்கள். மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் இம்மாநாட்டினை துவக்கி வைத்தார்கள்.

2013 ஏப்ரல் 4]

வேலைவாய்ப்பு வழிகாட்டு மற்றும் கலந்தாய்வு மையம்

4.8.4 இப்பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்பு வழிகாட்டு மற்றும் கலந்தாய்வு மையம் பல குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. இம்மையத்தின் முயற்சியினால் 1,015 மாணவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டனர். 8,500 மாணவ மாணவியர்களுக்கு இம்மையம் மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டது.

பெரியாஸ் (PERIAS))

4.8.5 பெரியார் நிர்வாகக் கல்வி நிறுவனம், குடிமைப் பணிக்கான தேர்வில் பங்குபெறும் மாணவர்களுக்கு, அறிவுப்பு கட்டுதல், செயல்முறைப் பயிற்சி ஒருங்கிணைத்தல் போன்ற பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறது.

கிராம தத்தெடுப்பு திட்ட மையம்

4.8.6 கிராம தத்தெடுப்புத் திட்ட மையம்மூலம் சங்கீதப்பட்டி என்கிற கிராமத்தில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

இயற்பியல் துறை—உயர் சிறப்பு மையம்

4.8.7 இயற்பியல் துறையில் கல்வி மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளுக்கு உத்வேகம் அளிக்கும் பொருட்டும், பன்னாட்டு தரத்திற்கேற்ப தற்போதுள்ள ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்தும் பொருட்டும், உயர்தர ஆராய்ச்சி திட்டங்களை வழங்குவதற்கும் கலைநயமிக்க, மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி ஆய்வகத்தினை ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசு, பெரியார் பல்கலைக்கழகத்தினைத் தெரிந்தெடுத்துள்ளது.

4.8.8 சாதனைகள்

- முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் டிசம்பர் 2012-ல் கலைத் திட்ட மேம்பாட்டுப் பிரிவு உயிர்வேறுபாடு மற்றும் வன கல்வி மையம், இயற்பியல் துறையில் உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் ஆகியவற்றை திறந்து வைத்து, மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கு பல விருதுகளை வழங்கினார்..

[2013 ஏப்ரல் 4

- கணினி அறிவியல் துறை, பல்கலைக்கழக மானியக் குழுவின் சிறப்புதவி திட்டத்தின்கீழ் (SAP) ரூ.34 இலட்சம் மானியம் பெற்றுள்ளது.

- கடந்த ஆண்டில் 12 துறைகளில் கொடையாளர்களால் தலா இரண்டு இலட்சம் வீதம் 12 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.

- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு நிதியிலிருந்து (Fund for Improvement of Science and Technology (FIST) முறையே இயற்பியல், புவியியல் மற்றும் வேதியியல் துறைகளுக்கு ரூ.38 இலட்சம், ரூ.49 இலட்சம், ரூ.37 இலட்சம் நிதியை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

- பொருளியல் துறையின் சார்பில் தமிழ்நாடு பொருளியல் வல்லுநர்களின் சங்கத்தின் மாநாடு நடத்தப்பட்டது.

- வேதியியல் துறை, உயிரி கரிம வேதியியல் தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கம் நடத்தியது.

- பெரியார் மேலாண்மை கல்வி நிறுவனம், தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுப் பிரிவினை அனைத்து உறுப்புக் கல்லூரிகளிலும் நிறுவியுள்ளது. இரண்டு நாட்கள் பயிற்சிப் பட்டறை ஒன்று இப்பிரிவின் ஒருங்கிணைப் பாளர்களுக்கு நடத்தப்பட்டது.

4.8.9 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- செயற்கைக்கோள் வளாகம் அமைத்தல்.

- காப்புரிமையை அதிக அளவில் பெற முன்னணி துறைகளான நுண்ணுயிரியல், உயிரி தொழில்நுட்பவியல் போன்ற துறைகளில் 'ஆராய்ச்சியில்' அதிக கவனம் செலுத்துதல்.

- ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் பல்கலைக்கழகக் கட்டடங்களில் சூரிய நீர் சூடுபடுத்துதல் மற்றும் சோலார் போட்டோவோல்டிக் மின் அமைப்பு பொருத்துதல்.

2013 ஏப்ரல் 4]

திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

4.9.1 திருவள்ளுவர் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம், தனது ஆளுகையின்கீழ் உள்ள வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 52 இணைவு பெற்ற கல்லூரிகளுடன் தொடங்கப்பட்டது. தற்போது, இப்பல்கலைக்கழகத்தில் 106 கல்லூரிகள் இணைவு பெற்றுள்ளன. அவற்றில் 10 அரசு, 9 அரசு நிதியுதவி, 5 உறுப்பு, 1 தனிவகை கல்வி நிறுவனம் (MBA Institution) 78 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 3 கீழ்திசைக் கல்லூரிகளும் அடங்கும்.

4.9.2 சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த மற்றும் கிராமப்புற மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியிலும், வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலும் இரண்டு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 2011-2012 ஆம் கல்வியாண்டில் திருவள்ளுவர் தொலைநிலைக் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது.

சாதனைகள்

4.9.3 வேலூர் கிருத்துவ மருத்துவக் கல்லூரியில், ஆய்வியல் அறிஞர் பாடத் திட்டத்திற்கான கீழ்க்கண்ட ஆராய்ச்சி திட்டங்களை நடத்த பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன:-

- உயிர்தொழில்நுட்பவியல் துறையில் மூல உயிரணு ஆராய்ச்சி மையம்.
- உயிர்புள்ளியியல் துறையில், உயிர்புள்ளியியல் வளம் மற்றும் பயிற்சி மையம்.
- உயிர்தொழில்நுட்பவியல் துறையில் மூலக்கூறு உயிரியல் மையம்.

4.9.4 தென்மண்டல மற்றும் அகில இந்திய பல்கலைக்கழகங்கள் இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் இணைவுபெற்றக்

[2013 ஏப்ரல் 4

கல்லூரிகளின் மாணவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். மாணவர்கள் தென்மண்டல போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளனர். அகில இந்திய பல்கலைக்கழகங்கள் இடையே நடைபெற்ற மகளிர் கால்பந்துப் போட்டியில் மாணவிகள் கோப்பையை வென்றுள்ளனர்.

4.9.5 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிடமிருந்து 12 (B) தகுதிநிலையை பெறுவதற்கு ஆசிரியர்கள் நியமனம் நடைபெற்று வருகிறது.
- மாணவ, மாணவியர் விடுதிகள் மற்றும் கலையரங்கம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

4.10.1 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் பதின்மூன்று கல்விப் புலங்கள், ஐந்து சேவைப் பிரிவுகள் மற்றும் ஒரு மின்னணு ஊடகத் தயாரிப்பு மற்றும் ஆய்வு மையம் உள்ளது. தற்போது இப்பல்கலைக்கழகத்தில் 103 பாடப் பிரிவுகள் உள்ளன. இதில் ஐந்தில் ஒரு பங்கு, திறன்மேம்பாடு / தொழில் படிப்புகள் ஆகும். மொத்த மாணவர் எண்ணிக்கை சுமார் 4.5 இலட்சம் ஆகும்.

4.10.2 தானே கற்றல் முறையில் (Self Learning) தயாரிக்கப்பட்ட தரமான பாட நூல்களுடன் மின்னணுப் பாடப் பொருட்களையும் தனிவகைக் குறுந்தகடுகள் வழியாக வழங்கி வருகிறது. இத்துடன், நேரடி கலந்தாய்வு வகுப்புகள், தொடர் மதிப்பீடு, ஆண்டு இறுதித் தேர்வு என்ற முறையில் படிப்புகளை வழங்கி வருகிறது.

4.10.3 மாணவர்களின் கற்றல் தேவை, பெரிய அளவிலான 604 கற்போர் உதவி மையங்கள்மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. இவற்றில், 204 சமுதாயக் கல்லூரிகள், 153 கணினி பாட மையங்கள், 144 கற்றல் வள மையங்கள், 33 பிற மையங்கள், 28 கற்றல் மையங்கள், 11 சிறப்பு பி.எட்., படிப்பு மையங்கள், 10 பல்கலைக்கழக ஒருங்கிணைப்பு மையங்கள், 10 பி.எட்., பொது படிப்பு மையங்கள், சிறைச்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள 8 மையங்கள், 3 கலந்தாய்வு மற்றும் உளவியல் சிகிச்சை மையங்கள் அடங்கும்.

4.10.4 பல்கலைக்கழக பணிகள் திறம்படவும், வெளிப்படையாகவும் நடைபெறும் பொருட்டு அவை மின் ஆளுகையின்கீழ் கொண்டு

2013 ஏப்ரல் 4]

வரப்பட்டுள்ளன. தொழில்நுட்பத்துடன் கூடிய உயர்த்தப்பட்ட கற்றல் சூழலுக்கு, பல்கலைக்கழகம் தயாராகி வருகிறது. தமிழகத்தில் முதன்முறையாக, கற்போர் எண்ணிக்கை/பணிப் பளுவை கணக்கில் கொண்டு தானே கற்றல் முறையில் பாடநூல்களைத் தயாரித்து வழங்கி வருவதோடு, கற்றல் அளவெண் (credit system) முறையையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் புத்தகங்கள் ஹைதராபாத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் திறந்தநிலைப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பிற பல்கலைக்கழகங்கள் மதிப்புத் தொகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

4.10.5 சாதனைகள்

- தமிழகச் சிறைகளிலுள்ள சிறைவாசிகளுக்கு தொழிற்கல்வி அளிப்பதோடு, கட்டண சலுகையும் அளிக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு பாடத் திட்டங்களுக்கு மின்னணுப் பாடப் பொருள்கள் (பல்லூடக குறுந்தகடுகள் முதலானவை) உருவாக்கப்பட்டுள்ளன.
- சங்க இலக்கியம் தொடர்பான பல்லூடக பாடப் பொருள்கள் தயாரித்தல்.
- 2 மண்டல மையங்கள் ஸ்ரீரங்கம் மற்றும் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ளன.
- 32 மாவட்டங்களிலும் பல்கலைக்கழக உறுப்பு சமுதாயக் கல்லூரிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க, முதற்கட்டமாக சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் பல்கலைக்கழக உறுப்பு சமுதாயக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான சிறப்பு பலவகைக் கருவிகள் (Multi Modal) பாடப் புத்தகம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் திட்டங்களை இம்மாநிலத்தில் உள்ள சமூக கல்லூரிகளில் செயல்படுத்த மாநில அரசு இப்பல்கலைக்கழகத்தை ஒருங்கிணைப்பு முகவராக தெரிவு செய்துள்ளது.
- ஆங்கிலப் பேராசிரியர் போலந்து நாட்டிலுள்ள ஜான்

[2013 ஏப்ரல் 4

டுலுகோஸ் பல்கலைக்கழகத்திற்கு அழைப்பு பேராசிரியராகச் சென்றார்.

4.10.6 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- *கூடுதலாக, 15 பல்கலைக்கழக உறுப்பு சமுதாயக் கல்லூரிகள் தொடங்குதல்.*
- *கல்விப் புல தொகுப்பில் சூரிய ஒளித் தகடுகளை நிறுவுதல்.*
- *சூரியசக்தி ஆதரவுடன், பசுமை கட்டட விதிகளின்படி, கல்விப் புல தொகுப்பு, புகைப்படக் கூடம், ஆய்வகம், சேமிப்புக் கிடங்கு மற்றும் பன்னாட்டு விடுதி உள்ளிட்ட தொகுப்புக் கட்டடங்களைக் கட்டி முடித்தல்.*
- *டிஜிட்டல் நூலக சேவைகள், திறந்தநிலை கல்வி வளங்கள் மற்றும் இணைய மொழி ஆய்வகம் உள்ளிட்ட கலப்பு கற்றல் சூழலுடன் மேம்படுத்தப்பட்ட தகவல் தொழில் நுட்பத்துடன் கற்றலை நடைமுறைப்படுத்துதல்.*

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

4.11.1 அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது ஒன்றே, ஒரே வளாகத்தில் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய பல்கலைக்கழகமாகும். தற்போது 10 கல்விப் புலங்களின்கீழ் 50 துறைகள் உள்ளன.

உட்புற தர காப்புறுதிப் பிரிவு

4.11.2 கல்விசார் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கு உட்புற தர காப்புறுதிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. உலகளவில் கற்றல் மற்றும் ஆராய்ச்சியில் உள்ள புதிய முறைகளை பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் அறியும் பொருட்டு, தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்கங்கள், பயிலரங்கங்கள், பயிற்சிப்பட்டறை, பாடப் பிரிவு புதுப்பித்தல் மற்றும் மாநாடுகள் நடத்துவதற்கு கல்வித் துறைகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

4.11.3 பல்கலைக்கழகத்தில் மாணவர்களைப் பணியிலமர்த்துதல்/ பயிற்சிப் பிரிவு, ஊரக மேம்பாட்டு மையம், நாட்டு நலப் பணித்திட்டம், செஞ்சிலுவைச் சங்கங்கள், யோகா மையப் பணிகள், சமுதாயப் பணி மன்றம் மற்றும் தேசிய மாணவர் படை ஆகியவை சுறுசுறுப்பாகச் செயல்படுகின்றன.

2013 ஏப்ரல் 4]

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

4.12.1 ஆசிரியர் கல்வியில் சிறப்பு நிலையை அடையும் நோக்கில், 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. இன்றைய விரைவான பொருளாதார வளர்ச்சி, சர்வதேச போட்டிகள் மற்றும் வளர்ந்து வரும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் ஆகிய சூழ்நிலைகளில், ஒப்பில்லா திறன் கொண்ட ஆசிரியர்களை உருவாக்குவதில் ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் ஆளுகையின்கீழ், 674 கல்வியியல் கல்லூரிகள் செயல்படுகின்றன. இவற்றில் 7 அரசு, 14 அரசு உதவிபெறும் மற்றும் 653 சுயநிதிக் கல்லூரிகள் அடங்கும். இப்பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற கல்லூரிகளில் 72,000 இளங்கலை மாணவர்கள், 4,600 முதுகலை மாணவர்கள், 148 அறிவியல் நிறைஞர் (எம்.ஃபில்) மற்றும் 174 முனைவர் பட்ட ஆராய்ச்சி (பி.எச்டி) மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

4.12.2 குறிக்கோள்கள்

- *தமிழ்நாடு அரசு மற்றும் தேசிய கல்வியியல் குழுமம் நிர்ணயித்துள்ள தரம் மற்றும் விதிகளின்படி கல்வியியல் கல்லூரிகளை நிர்மாணித்தல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதே இப்பல்கலைக் கழகத்தின் நோக்கமாகும்.*

- *ஆசிரியர் கல்வியியலில் வளர்ந்து வரும் மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள் நடத்துதல்.*

- *கற்பிக்கும் முறையினைச் செம்மைப்படுத்த தகவல் மற்றும் தொடர்பியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், தன்மைகொண்ட கற்பித்தல் முறையை நீட்டித்து ஆராய்ச்சித் தரத்தினை உயர்த்துதல், ஆகியவற்றிற்கு பல்கலைக்கழகம் முயற்சிகளை எடுத்து வருகிறது. ஆசிரியர் கல்வியை அர்த்தமுள்ளதாகவும், பொருத்தம் உள்ளதாகவும் ஆக்குவதற்கு பாடத் திட்டம் மற்றும் கற்பித்தல் முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்கும்.*

- பரந்த கல்வியின் நோக்கத்தின் அடிப்படையில், நாட்டு நலப் பணித் திட்டம், சாரண, சாரணியர் இயக்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்றவைகளில் தேச மற்றும் மக்கள் நலன் முன்னிறுத்தி பங்கு கொள்வதற்காக, ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்கப்படுத்துதல்.

4.12.3 2012–2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

- ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டப் படிப்பை வழங்கும் 13 கல்வியியல் கல்லூரிகளில், 12 கல்வியியல் கல்லூரிகள் முனைவர் பட்டப் படிப்பு (பி.எச்டி) நடத்துவதற்கு ஆராய்ச்சி மையங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளுடன் பல்கலைக்கழகம் இணைந்து 2012 ஆம் ஆண்டில் நான்கு கருத்தரங்குகள்/ மாநாடுகள் நடத்தியுள்ளது.

- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக வளாகத்தில் 1GB இணையதள இணைப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், பல்கலைக்கழகத்தில் உள்ள அலுவலகங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவ்விணைப்பு, பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றுள்ள அனைத்து கல்வியியல் கல்லூரிகளுக்கும் விரிவு செய்யப்பட உள்ளது.

- பல்கலைக்கழகம் மற்றும் அதனோடு இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் உள்ள ஆராய்ச்சிப் பணிகளைச் செம்மையாக கண்காணிக்க, 13 கல்வியாளர்களைக் கொண்ட ஓர் ஆராய்ச்சி அமைப்பினை பல்கலைக்கழகம் அமைத்துள்ளது.

4.12.4 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவிடமிருந்து 12(B) தகுதிநிலை பெறும்பொருட்டு, 42 ஆசிரியர்கள் கொண்ட கீழ்க்காணும் 6 துறைகளை உருவாக்குவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது:-

  1. கற்பித்தல் முறை அறிவியல் துறை,
  2. விழுமக் கல்வித் துறை,
  3. கல்வி உளவியல் துறை,

2013 ஏப்ரல் 4]

4. கல்வி நுட்பவியல் துறை,

5. பாடத் திட்டம் திட்டமிடல் மற்றும் மதிப்பீடு துறை,

6. கல்வியியல் திட்டமிடல் மற்றும் நிருவாகத் துறை.

- கற்கும் தலைமுறையினருக்கான உத்திகள் மற்றும் அணுகுமுறைகள் (Strategies and Approaches needed for Generation 'Y' Learners) என்ற பொருண்மையில் 2013 மே மாதத்தில் பன்னாட்டு மாநாடு இப்பல்கலைக்கழகத்தால் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- "கல்வியியலில் புதுமைகள் மற்றும் செயல்முறைகள்" என்ற பன்னாட்டு இதழ் வலைதளம் வழியாக காலாண்டு இதழாக வெளியிட இப்பல்கலைக்கழகம் உத்தேசித்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகம்

4.13.1 சென்னை மாநகரில் செயல்பட்டு வந்த நன்கு அறிமுகமான நான்கு தொழில்நுட்ப நிறுவனங்களான கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் கட்டடக்கலை மற்றும் திட்டமிடுதல் பள்ளி ஆகியவற்றை இணைத்து ஒருமைப் பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் 4-9-1978 அன்று நிறுவப்பட்டது. 2001 ஆம் ஆண்டில், அண்ணா பல்கலைக்கழகத்துடன், மாநிலத்தில் இயங்கி வந்த 250 பொறியியல் கல்லூரிகளை இணைத்து, இணைப்புவகை பல்கலைக்கழகமாக இப்பல்கலைக் கழகம் மாற்றப்பட்டது. ஐந்து அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் முறையே 2007 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும், 2010 ஆம் ஆண்டில் சென்னை மற்றும் மதுரையிலும் அமைக்கப்பட்டன. 2010 ஆம் ஆண்டு ஜூன் திங்களில், அண்ணா பல்கலைக்கழகம் மீண்டும் ஒருமைப் பல்கலைக்கழகமாக மாற்றியமைக்கப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம் தனது கடந்த காலப் புகழினை மீட்டெடுக்கவேண்டி, 1-8-2012 அன்று நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டத்தின்மூலம் ஐந்து அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டன. இன்றைய நிலையில், 553 பொறியியல்

[2013 ஏப்ரல் 4

கல்லூரிகளை ஒரு குடையின்கீழ் கொண்டுள்ள அண்ணா பல்கலைக்கழகம், மிகப்பெரிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக விளங்குகிறது. மேற்கண்ட பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்பு, பொறியியல் கல்வியின் உயர்தரத்தினை உறுதிசெய்துள்ளது.

4.13.2 சாதனைகள்

- மிகப்பெரிய இணைவுவகை பல்கலைக்கழகங்களுள் ஒன்றான அண்ணா பல்கலைக்கழகம், நடப்பாண்டில் சுமார் 6.50 இலட்சம் மாணவர்களுக்கு மையப்படுத்தப்பட்ட பருவநிலை தேர்வுகளை வெற்றிகரமாக நடத்தி முடித்தது. இவ்வாண்டு பட்டத்தை பெறுவதற்கான தகுதியினைப் பெற்ற 1,44,707 பட்டதாரி மாணவர்களில் 1,10,460 மாணவர்கள் தங்களுடைய இளநிலை பட்டங்களையும், 33,563 மாணவர்கள் முதுநிலை பட்டங்களையும், 622 ஆராய்ச்சி மாணவர்கள் முனைவர் பட்டங்களையும், 31 ஆராய்ச்சி மாணவர்கள் ஆராய்ச்சிக்கான அறிவியல் வல்லுநர் பட்டத்தையும், 31 ஆராய்ச்சி மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டங்களையும் பெற்றுள்ளனர்.

- அண்ணா பல்கலைக்கழகம், தனது துறைகளின்கீழ் 38 இளநிலை பட்டப் படிப்புகளையும், 83 முதுநிலை பட்டப் படிப்புகளையும், இணைவு பெற்ற கல்லூரிகளில் 37 இளநிலை பட்டப்படிப்புகளையும், 60 முதுநிலை பட்டப் படிப்புகளையும் வழங்கி வருகிறது.

- அண்ணா பல்கலைக்கழகத்தில், அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் பாடப் பிரிவிற்கான முழுநேர இளநிலை பொறியியல் பட்டப் படிப்புகள் தமிழ்வழி மூலமாகவும் நடத்தப்பட்டு வருகின்றன. மாணவர்களின் நலனுக்காக, 25 பாடங்களுக்கான நூல்கள் தமிழ்மொழியில் வெளியிடப்பட்டுள்ளன.

- அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் குழுமத்தின்கீழ் இயங்கிவரும் இந்திய பண்பாட்டு தொடர்புக் குழுமம் மற்றும் தரமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வெளிநாட்டு மாணவர்கள் உள்ளிட்ட 4,050 ஆராய்ச்சி மாணவர்கள் முனைவர் பட்டங்களுக்காகவும், 113 ஆராய்ச்சி மாணவர்கள் அறிவியல் வல்லுநர் ஆராய்ச்சி படிப்புக்காகவும் தங்களது

2013 ஏப்ரல் 4]

பெயர்களை பதிவு செய்துள்ளனர். 2012-2013 ஆம் கல்வியாண்டில் 1,380 ஆராய்ச்சி மாணவர்களும், 34 ஆராய்ச்சிக்கான அறிவியல் வல்லுநர்களும் சேர்க்கப் பட்டுள்ளனர்.

- பல்கலைக்கழக நிதியிலிருந்து ஏற்படுத்தப்பட்ட அண்ணா நூற்றாண்டு ஆராய்ச்சிக்கான ஊக்கத் தொகை, 150 ஆராய்ச்சி மாணவர்களுக்கு (மாதம் ரூ.12,000/- உதவித் தொகையாகவும், ஆண்டுக்கு ரூ.25,000/- இதர செலவினமாகவும்) 2010 ஆம் ஆண்டுமுதல் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.
- புதுமையான ஆராய்ச்சியைத் தொடரும் பொருட்டு 'சிறந்த ஆராய்ச்சியாளர் / சிறந்த ஆலோசகருக்கென' பல்கலைக்கழக நிதியிலிருந்து ரூ.25,000/- ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இவ்வாண்டில், 7 ஆசிரியர்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.
- அண்ணா பல்கலைக்கழகத்தின் விண்வெளி பொறியியல் துறையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒருங்கிணைந்து, 'தக்ஷா' என்ற ஆளில்லா விண்வெளி ஊர்தி ஒன்றை வடிவமைத்து உருவாக்கியுள்ளனர். அவ்வூர்தி, அமெரிக்க நாட்டின் UAVFORGE-Air Vehicle Challenge என்ற அமைப்பு 2012 ஆம் ஆண்டு நடத்திய போட்டியில் முதல் பரிசை வென்றது. சமீப காலத்தில், ஆளிலில்லா விண்வெளி ஊர்தி தமிழக அரசால் வான்வழி கண்காணிப்பிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.
- அண்ணா பல்கலைக்கழகம் தேசிய மற்றும் பன்னாட்டு பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களுடன் 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டுள்ளது. பல்வேறு பன்னாட்டு பல்கலைக்கழகங்களிலிருந்து 33 மாணவர்களும், அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து 20 மாணவர்களும் வெளிநாட்டில் பருவகாலப் படிப்பு மற்றும் பயிற்சி பரிமாற்றத் திட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டு உள்ளனர். பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றுள்ள வெளிநாட்டில் பணிபுரியும் 56 பேராசிரியர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்றுவதற்காக தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.
- அண்ணா பல்கலைக்கழகம் பயிற்றுவித்தல் மற்றும் ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதால், அண்ணா பல்கலைக்கழகத்தின் அறிவு வளம் குறியீட்டு எண் 59 -ஐ எட்டியுள்ளது.

[2013 ஏப்ரல் 4

- 2012-2013 ஆண்டில் பெறப்பட்ட மானியங்கள்

- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு மற்றும் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறையிடமிருந்து ரூ.14.2 கோடி, பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டது.

- மாநில, தொழிற்கூடம் மற்றும் மத்திய முகமைகளிடமிருந்து, பல்கலைக்கழகத்திற்கு வெளியே நிகழ்த்தப்படுகிற ஆசிரியர்களுக்கான திட்டங்களுக்கு ரூ.18 கோடி நிதியாக பெறப்பட்டது.

- ரூ.17.5 கோடி ஆலோசனை திட்டங்களுக்காக பெறப்பட்டது.

- பின்வரும் புதிய திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது:-

பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு சிறப்பு நிதி உதவி	-	6
பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி	-	2
பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு ஆசிரியர் ஊக்க உதவித் தொகை	-	4
அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை-அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான நிதி	-	5
பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு ஆசிரியர் புத்தாக்கம்	-	3

- கற்பித்தல்-கற்றல் தரத்தினை கண்காணிக்கும் வகையில் “கல்வித் தணிக்கை” தொடங்கப்பட்டுள்ளது.

- 71 கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு EDUSAT இன்மூலம் பயிற்சி அளிப்பதற்கான கூடுதல் திறனை, ஆசிரியர் மேம்பாட்டு மையம் பெற்றுள்ளது.

2013 ஏப்ரல் 4]

- *2012 ஆம் ஆண்டில் முன்னெப்போதுமில்லாத வகையில் பின்வரும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது:-*

  - *ரூ.13.1 கோடி செலவில் மாணவ/ மாணவியர்களுக்கு, 210 அறைகளில் 630 மாணவ/மாணவியர்கள் தங்குவதற்கு வசதியாக, 82,100 சதுர அடியில், விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.*

  - *ரூ.14 கோடி செலவில் மாணவ/ மாணவியர்களுக்கு, 144 அறைகளில் 288 மாணவ/மாணவியர்கள் தங்குவதற்கு வசதியாக, 70,050 சதுர அடியில், சர்வதேச விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.*

  - *ரூ.20.96 கோடி செலவில் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு, 1,31,035 சதுர அடியில், குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.*

  - *ரூ.2.69 கோடி செலவில் பேரிடர் தணிப்பு மற்றும் மேலாண்மை மையத்திற்காக, 23,230 சதுர அடியில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.*

- *373 பிரிவுகளை உள்ளடக்கிய நாட்டு நலப் பணித் திட்டக் குழுவானது பல்வேறு சமுதாயம் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. அதுபோலவே, தேசிய மாணவர் படை மற்றும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய இரண்டும் பல்வேறு நலத் திட்டங்களை நடத்தியுள்ளன.*

- *பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன் கல்வி சார்ந்த பல்ஊடக ஆராய்ச்சி மையத்தால்* (EMMRC) *நடத்தப்படும் 90.4* MHz *என்ற அலைவரிசை கொண்ட "அண்ணா சமூக வானொலியானது", இந்தியாவின் முதல் சமூக வானொலியாகும். இவ்வானொலியில் நடத்தப்படும் கல்வி நிகழ்ச்சிகள் பிரபலமாகி வருகிறது.*

- *இப்பல்கலைக்கழகத்தில், பின்வரும் 2 துறைகள் மற்றும் 3 மையங்கள் இந்தக் கல்வியாண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன:-*

  - *மருத்துவ இயற்பியல் துறை*

  - *செயல்முறை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை*

[2013 ஏப்ரல் 4

- அண்ணா பல்கலைக்கழகம் Ryerson பல்கலைக்கழகம், கனடா (AU-RU) நகர்ப் புற ஆற்றல் மையம்
- தொழில்நுட்ப அடைகாப்பு மையம்
- அண்ணா பல்கலைக்கழகம் Bagavan Cyber Tech (AU-BCT) மென்பொருள் மேம்பாடு மற்றும் பயிற்சிக்கான கலாம் திறனாய்வு மையம்

- *இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள், 431 ஏடுகளை தேசிய பருவகால இதழ்களிலும், 680 ஏடுகளை பன்னாட்டு பருவகால இதழகளிலும் வெளியிட்டுள்ளனர். மேலும், இந்தக் கல்வி ஆண்டில் இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள், 68 புத்தகங்களை வெளியிட்டுள்ளனர்.*
- *மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், அண்ணா பல்கலைக்கழகத்தில், கடலோர மேலாண்மை மையத்தை நிறுவுவதற்காக ரூ.165 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கி, அதில் ரூ.11.42 கோடியை விடுவித்துள்ளது.*
- *மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, அண்ணா பல்கலைக்கழகத்தில், 'தேசிய உடல்நல கருவிசார் மையத்தை' நிறுவுவதற்காக ரூ.12.44 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கி, அதில் ரூ.4.00 கோடியை விடுவித்துள்ளது.*

2013–2014 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைகள்

4.13.3 *இப்பல்கலைக்கழகம் கீழ்க்காணும் திட்டங்களை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது:-*

- *மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறையில் உயர் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய முதுநிலை ஆராய்ச்சி மையம் ஒன்று, பல்கலைக்கழக நிதியிலிருந்து ரூ.2.50 கோடி செலவில் தொடங்கப்படவுள்ளது.*
- *புதிய முயற்சியாக, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பாடங்கள் மற்றும் மென்திறன்கள் குறித்த விரிவுரைகள் மற்றும் பயிற்சிகள், குறிப்பாக கல்லூரி நேரத்திற்குப் பின்பு, அவர்களது இல்லங்களுக்கு நேரடியாக ஒளிபரப்பு செய்ய அண்ணா பல்கலைக்கழக ஊடக மையம், மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் உதவியுடன் நடவடிக்கை எடுத்து வருகின்றது.*

2013 ஏப்ரல் 4]

- *சமீபத்தில், மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், அண்ணா பல்கலைக்கழகத்தை உயிரி மருத்துவ பயன்பாடுகளுக்கான உயர் சிறப்பு மையமாக தெரிவு செய்துள்ளது. இதுபோன்ற சிறப்பு தகுதிபெறுவதற்கான நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களைப் பல்கலைக்கழக உறுப்பு மற்றும் இணைப்புவகைக் கல்லூரிகளிலும் தொடர வலியுறுத்தப்படவுள்ளது.*
- *தமிழக அரசின் 2012 ஆம் ஆண்டு சூரிய சக்தி கொள்கையின் அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளாகங்களில் சூரிய மின் உற்பத்திக்கான வகைமுறைகளை நிறுவ நடவடிக்கையை துவக்கியுள்ளது.*
- *மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் பரிந்துரையின்படி, மகளிருக்கு ஆற்றல் அளிப்பதை உறுதி செய்வதற்காக உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகத்தின் அனைத்து இணைவு பெற்ற கல்லூரிகளிலும் அதனை செயல்படுத்துவதற்கான உறுதியான வழிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.*

5. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

5.1 *1909-ல் தொடங்கப்பட்ட முந்தைய சென்னை ஆவண அலுவலகம், 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் சென்னை எழும்பூரில் உள்ளது. கடலூர், கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டங்களில் மாவட்ட ஆவண மையங்கள் உள்ளன. பொது ஆவணங்களின் பாதுகாவலர் என்ற வகையில், தமிழ்நாடு ஆவணக் காப்பகம், தமிழக அரசின் அன்றாட நிருவாகத்தில் இன்றியமையாத பங்கினை வகிக்கிறது. மேலும், தமிழ்நாடு ஆவணக் காப்பகம், பல்வேறு மாவட்டங்களுக்கான மாவட்ட விவரச் சுவடிகளை வெளியிடுகிறது. தமிழ்நாடு ஆவணக் காப்பகம், அதன் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியுள்ளது.*

5.2 *தலைமைச்செயலகம் மற்றும் முந்தைய வருவாய் வாரியத்தின் 65 இலட்சம் ஆவணங்களைத் தமிழ்நாடு ஆவணக்*

[2013 ஏப்ரல் 4

காப்பகம் பாதுகாத்து வருகிறது. பெரும்பாலான ஆவணங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும், சில ஆவணங்கள் பிரஞ்சு, டச்சு, டேனிஷ் மற்றும் பாரசீக மொழிகளிலும் உள்ளன. இங்குள்ள மிகப் பழைய ஆவணம், 1657 ஆம் ஆண்டிற்கு முந்தையதாகும். இந்திய மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழக மற்றும் கல்லூரிகளைச் சார்ந்த நூலாசிரியர்கள், வரலாற்று அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், தங்கள் ஆராய்ச்சியின் பொருட்டு, தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கு வருகை புரிகின்றனர். மிக அரிய நூல்களை பராமரித்து வரும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம், நூலக ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் மதிப்புமிக்க கருவூலமாகத் திகழ்கிறது.

5.3 2012-2013 ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின்கீழ் ரூ.40 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, கீழ்க்கண்ட பணிகள் மற்றும் குறிப்பிட்ட பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு செலவிடப்பட்டுள்ளது:-

- நுணுகிக் காணுதல் மற்றும் நுண்படச்சுருள் உதவியுடன் டிஜிட்டல் மயமாக்குதல் முறையில் ஆவணங்களைப் பாதுகாத்தல்.
- நூலக மற்றும் விவரச் சுவடி பிரிவிற்கு எஃகு அட்டங்கள்.
- 1900 ஆண்டு முதலான அரசாணைகளுக்கு நுணுகிக் காணுதல் மற்றும் நுண்படச்சுருள் மூலம் டிஜிட்டல் பணி மேற்கொள்ளுதல்.
- 1900 முதலான அட்டவணைகளுக்கு டிஜிட்டல் பணி மேற்கொள்ளுதல்.
- தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் ஆறு மாவட்ட ஆவண மையங்களுக்கு, உலர் அட்டங்கள் மற்றும் பீட வசதி கொண்ட மின்விசிறிகள்.
- கணினி மற்றும் அதற்கான உபக்கருவிகள்.
- தூசு உறிஞ்சும் கருவி.
- அழுத்தும் இயந்திரம்.
- குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்.

5.4 2013-2014 ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின்கீழ் நுண்படச்

2013 ஏப்ரல் 4]

சுருள்களைப் பாதுகாக்க சேமிப்புப் பெட்டிகள் வாங்குவதற்கு, ரூ.10 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

6.1 உயர் கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை மத்திய, மாநில மற்றும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் திட்டங்களுடன் மேம்படுத்தவும், ஒருங்கிணைக்கவும், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் 1992 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இம்மன்றம், உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை பல்கலைக்கழக நிதிநல்கை குழுவின் நெறிமுறைகளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யும்.

6.2 2012–2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள்

- *மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னோடித் திட்டமான "வெளிநாடு சென்று கல்வி கற்கும் திட்டம்", அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் கல்வியில் சிறந்த, ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள முதுகலை மாணவர்கள், அயல் நாட்டு பல்கலைக்கழகத்தில் ஒரு பருவத்தினைப் பயிலும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, இங்கிலாந்தில் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகங்களில், 25 மாணவர்கள் அவர்களின் மூன்றாவது பருவத்தை படிக்கவும் மற்றும் 5 ஆசிரியர்கள் அவர்களது சிறப்பு பாடங்களைப் பயிலவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்திற்கும், பிரிட்டிஷ் கவுன்சிலுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.*

- *25 மாணவர்கள் மற்றும் 5 ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்காக வல்லுநர்களை உள்ளடக்கிய குழு ஒன்று இம்மன்றத்தால் ஏற்படுத்தப்பட்டது. எட்ஸ்ஹில் பல்கலைக் கழகம், பர்மிங்காம் பல்கலைக்கழகம், நாட்டிங்காம் பல்கலைக்கழகம் மற்றும் லண்டன் பல்கலைக்கழத்தின்கீழ் செயல்பட்டு வரும் ராயல் ஹாலோவே கல்லூரி மற்றும் கிங்ஸ் கல்லூரி ஆகியன இத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன. இங்கிலாந்தில், செப்டம்பர் 2013 முதல்*

[2013 ஏப்ரல் 4

ஜனவரி 2014 வரை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மேலே குறிப்பிட்டுள்ளவாறு இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் பயில்வார்கள்.

- ஒரு மாணவர்/ஆசிரியருக்கு ரூ.15 இலட்சம் வீதம், இத்திட்டத்திற்கான முழு செலவினையும் மாநில அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

- தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் கூட்டிணைவு மையங்கள், சிறப்புப் பணிப் பிரிவினை உருவாக்கும் நடவடிக்கையில் உள்ளதோடு, ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமைகளுக்காக தொழில் நிறுவனங்கள், பெருநிறுவன அமைப்புகள், மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றை இணைப்பதற்கான வழிமுறைகளை வகுக்க நடவடிக்கையினை எடுத்து வருகிறது.

- மென்திறன்களை மாணவர்களுக்கு கற்பிக்க, மென்திறன் மையங்கள் உருவாக்கும் திட்டம் மாவட்டத்திற்கு ஒன்று வீதம், 30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் இன்டெல் (INTEL) நிறுவனத்துடன் இணைந்து, இம்மையங்களிலுள்ள மாணவர்களுக்கு உதவுவதற்காக, ஒவ்வொரு மையத்திலும் 15 ஆசிரியர்கள் வீதம் பயிற்சியளித்து, அவர்களை திறன்பெற்ற பயிற்றுநர்களாக மாற்றுகிறது. 450 பயிற்றுநர்களைக் கொண்ட வலுவான குழுக்களை உருவாக்குவதுடன், மாநிலம் முழுவதும் உள்ள 30 மையங்களில் உள்ள மாணவர்களுக்குத் தேவையான ஊக்கத்தையும் வழங்கும். இந்த 30 கல்லூரிகளில் உள்ள மாணவர்களை இன்டெல் நிறுவனம் மென்திறன்களை அளித்து, வடிவமைக்கப்பட்ட மென்பொருளோடு தகவல் தொழில்நுட்பம் மற்றும் மனிதவள மேம்பாட்டுப் பிரிவுகளில் உள்ள வேலைவாய்ப்புகளுக்குப் போட்டியிடுவதற்காகத் தகுதிப்படுத்தும்.

- 'கல்லூரிகளில் மாணவர்கள் இடைநிற்றலைத் தவிர்க்கும்பொருட்டு, மெதுவாக கற்கும் மாணவர்களுக்கு சிறப்புக் கவனம்' செலுத்தும் திட்டம், 2(f) மற்றும் 12(B)) தகுதியினைப் பெறாத 17 அரசு மற்றும் 7 பல்கலைக்கழக உறுப்புக்

2013 ஏப்ரல் 4]

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் செயல்படுத்தப்படவுள்ளது. மூன்றாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்த, ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் தலா ரூ.1,25,000/- வீதம் ஒவ்வொரு கல்லூரிக்கும் நிதி வழங்கப்படும்.

- நிருவாகம், கல்வி, நிதிபொறுப்புகள், மனிதத்தொடர்பு மேலாண்மை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும்வகையில், அரசு மற்றும் அறிவியல் கல்லூரிகளிலுள்ள முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலையிலுள்ள முதல்வர்களுக்கு 3 நாட்கள் 'புத்தாக்கப் பயிற்சியினை' தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் அளித்துள்ளது. மொத்தமாக, 53 கல்லூரி முதல்வர்கள் இப்பயிற்சியில் பங்கு பெற்றனர்.

- சமர்ப்பிக்கப்பட்ட 28 "சிறு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு" (Minor Research Project) (20 அறிவியல் மற்றும் 8 மானுடவியல்) தலா ரூ.1 இலட்சம் வீதம் நிதியுதவி பெற தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் முதுநிலை பட்ட மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட "மாணவர் சிறு திட்டத்திற்கு" (Student Mini Project) தலா இ.15,000/— வீதம் நிதியுதவி அளிக்கப்பட, 38 கருத்துக்கள் (24 அறிவியல் மற்றும் 14 மானுடவியல்) தெரிவு செய்யப்பட்டுள்ளன.

- விருப்பார்ந்த தர மதிப்பு திட்ட முறையை மேலும் சிறப்புறச் செய்யவும், தேர்வு முறையில் சீர்திருத்தம் கொண்டு வரவும், கலைத்திட்ட வளர்ச்சிக்கான வழிகாட்டு முறைகளை வகுக்கவும், துணைவேந்தர்கள், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்கள், கல்வி வளர்ச்சி குழு இயக்குநர்கள், பல்வேறு பாடத்திட்டங்களுக்கான கல்விக் குழு தலைவர்கள், கல்விப்பணியாளர்கள் மற்றும் ஆங்கிலம் கற்பித்தலில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆகியோர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தை மன்றத்தின் கல்வி தொடர்பு மையம் நடத்தியது.

6.3 2013–2014ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

[2013 ஏப்ரல் 4

- அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி கல்லூரிகள் ஆகியவற்றில் தலா ஒரு கல்லூரி வீதம் மூன்று கல்லூரிகளுக்கு பாராட்டுப் பத்திரத்தையும், பணமுடிப்பையும் கொண்ட 'சிறந்த கல்லூரி விருது' நிறுவப்பட்டு உள்ளது.

- பல்வேறு கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் பயிற்றுவிக்கப்படும் பாடப் பிரிவுகளின் தரத்தினை ஒருங்கிணைக்கவும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து மற்றொரு பல்கலைக்கழகத்திற்கு சென்று படிக்கவும், கற்பிக்கவும் வழிவகை செய்ய, மாநில ஒருங்கிணைந்த பாடத்திட்ட குழுக்களை இம்மன்றம் அமைக்கும். இக்குழுக்கள், கீழ்க்கண்ட புலன்களில் பல பல்கலைக்கழக வல்லுநர்களைக் கொண்டு அமைக்கப்படும்:-

  - உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப அறிவியல்.
  - கணித அறிவியல்.
  - இயற் அறிவியல் மற்றும் வேதி அறிவியல்.
  - கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம்.
  - மேலாண்மை மற்றும் வணிக அறிவியல்.
  - சமூக அறிவியல்.
  - மானிடவியல்
  - மொழிகள்.

- தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களை, உலக அளவிலான உயர் கல்வியில் பங்குகொள்ளச் செய்ய மாநில உயர் கல்வி மன்றத்தில் 'பன்னாட்டு தொடர்பு மையம்' உருவாக்குதல். இம்மையம், ஆராய்ச்சி, ஆளுமைத்திறன் மற்றும் விரிவாக்கப் பணிகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்த வழிவகுக்கும். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் வாயிலாக பெறக்கூடிய உதவித் தொகை, ஆராய்ச்சித் தொகை, வேலைவாய்ப்புத் தகவல் ஆகிய தளங்களில் தமிழகத்தில் உள்ள கல்லூரிகள்/ பல்கலைக்கழகங்கள் மற்றும் பன்னாட்டுப்

2013 ஏப்ரல் 4]

பயிலகங்களுக்கிடையே இணைப்பினை ஏற்படுத்த உதவும். தமிழகத்தின் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனுக்காக, பன்னாட்டுப் பயிலகங்களில் கிடைக்கப்பெறும் உதவித் தொகை /ஆதரவு ஊதியம் மற்றும் வாய்ப்புகள் பற்றிய தகவல்களை இம்மையம் அளிக்கும். மேலும் வெற்றிகரமான மாணவர்களுக்கு, உதவித் தொகை/ஆதரவு ஊதியம் பெறுவதற்கான செயல்பாடுகள் மற்றும் புத்தாக்கப் பயிற்சி மற்றும் ஆற்றல் மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துவதற்கு இம்மையம் வழிவகை செய்கிறது.

7. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

7.1 தொழில்நுட்பக் கல்வி கல்லூரிகளை ஒருங்கிணைக்கவும், அவற்றின் தரத்தினை நிர்ணயம் செய்வதற்காகவும், 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றமானது அமைக்கப்பட்டது.

7.2 2012–2013–ல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

- தமிழ்நாடு உயிரி தொழில்நுட்பக் கொள்கை 2012-ஐ இறுதி செய்வதற்கான ஆலோசனைகள் மற்றும் குறிப்புக்கள் இம்மன்றத்தால் சமர்ப்பிக்கப்பட்டது.
- மாநில தொழில்நுட்பக் கல்வியின் தரமேம்பாட்டிற்கான திருத்திய தொலைநோக்குத் திட்டம் பல்வேறு தலைப்புகளின் கீழ் தயாரிக்கப்பட்டது.

7.3 2013–2014 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைகள்

- வழங்கப்படும் பாடப் பிரிவுகள், மாணவர்களின் எண்ணிக்கை, தேர்ச்சி விழுக்காடு மற்றும் இதுபோன்ற முக்கிய தகவல்களை உள்ளடக்கிய ஒரு தகவல் தொகுப்பினை உருவாக்கிப் பேணுதல்.
- தொழில்நுட்பப் பல்கலைக்கழக வகையறைக்கு அப்பாற்பட்டு, அறிவுசார் பகுதிகளில் உயர்சிறப்பு வாய்ந்த நிறுவனங்களை மேம்படுத்துதல்.

8. அறிவியல் நகரம்

[2013 ஏப்ரல் 4

8.1 கிண்டி-தரமணி பகுதியில் அமைந்து உள்ள மத்திய மற்றும் மாநில அரசுகளைச் சார்ந்த அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் போன்ற தனித்தன்மை வாய்ந்த சுமார் 60 கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை உள்ளடக்கிய வளாகம் "அறிவியல் நகரம்" என அறிவிக்கப்பட்டுள்ளது. மக்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பரவலாக்குவதே இவ்வறிவியல் நகரத்தின் நோக்கமாகும்.

8.2 உயிரி தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொடர்பியல் தொழில்நுட்பம், திசு வளர்ப்பு, வைராலஜி, மீநுண் தொழில்நுட்பம் மற்றும் அணுக்கரு தொழில்நுட்பம் போன்ற வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பயிற்சிப் பட்டறைகள் முதுநிலை மாணவர்கள் நலனுக்காக நடத்தப்பட்டது. இதன்மூலம் 475 முதுநிலை மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

8.3 புவி வெப்பமயமாதல், பேரிடர் தடுப்பு, வானவியல், பல்லுயிர் வேறுபாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட உபகரணங்கள் போன்ற அறிவியலில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு ரூ.3.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது. பள்ளி மற்றும் கல்லூரி அளவிலான 500 ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

மீநுண் வெளிப்படுத்துகை 2012

8.4 சென்னை பல்கலைக்கழகத்தின் மீநுண் அறிவியல் மற்றும் மீநுண் தொழில்நுட்ப தேசிய மையத்துடன் இணைந்து, மீநுண் அறிவியல் மற்றும் மீநுண் தொழில்நுட்பத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களில் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பெறும் 11 கருத்தரங்குகளைக் கொண்ட தொடர் "மீநுண் வெளிப்படுத்துகை 2012" ஆகும்.

8.5 தேசிய அறிவியல் தினத்தன்று துவக்கி வைக்கப்பட்ட இத்தொடர் கருத்தரங்கானது 11 தலைப்புக்களைக் கொண்டதாகும். அவற்றுள் 7 கருத்தரங்குகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு விரிவுரை வழங்க நாடு முழுவதிலுமிருந்து அறிவியலாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

பாதுகாப்பான ஆய்வக நடைமுறைகள்

2013 ஏப்ரல் 4]

8.6 சென்னை பல்கலைக்கழக பகுப்பாய்வு வேதியியல் துறை மற்றும் ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைக்கழகத்துடன் இணைந்து பாதுகாப்பு ஆய்வக நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வு முகாம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் நலனுக்காக நடத்தப்பட்டது.

சென்னை அறிவியல் விழா 2013

8.7 புகழ்பெற்ற விரிவுரைகள், குழு கலந்துரையாடல்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான அறிவியல் சார்ந்த போட்டிகள் தொடர்பான பலதரப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கியது சென்னை அறிவியல் விழாவாகும். அண்ணா ஜெம்ஸ் அறிவியல் பூங்கா பள்ளியில் "பல்லுயிர் வேறுபாடு மற்றும் உணவுப் பாதுகாப்பு" என்ற தலைப்பில் 6 வது சென்னை அறிவியல் விழாவானது 2013 ஆம் ஆண்டு ஜனவரி 30 முதல் பிப்ரவரி 3 வரை நடத்தப்பட்டது. எரிசக்தி, சுகாதாரம், கால்நடை அறிவியல் மற்றும் அடிப்படை அறிவியல் போன்ற தலைப்புகளில் 150 காட்சி அரங்குகள் இடம்பெற்றிருந்தன. இக்காட்சி அரங்குகளை சுமார் 42,000 பேர் பார்வையிட்டு, பாராட்டியுள்ளனர்.

8.8 2013–2014 ஆம் ஆண்டுக்கான செயல்பாடுகள்

- "அறிவியலில் புதுமை" என்ற விருதினைத் தமிழகத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சமுதாயத்திற்குப் பயன்படும் தலைசிறந்த புதுமை கண்டுபிடிப்புகளுக்கு வழங்கப்படும் இவ்விருது, பணமுடிப்பு மற்றும் பாராட்டுச் சான்றிதழைக் கொண்டிருக்கும்.

- அறிவியல் நகரம், கிங் தடுப்பு மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆய்வக தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிப் பட்டறையை நடத்த உத்தேசித்துள்ளது.

- சூரிய ஒளி மின்சாரத்தை தயாரிப்பதற்கு ஏதுவாக, போட்டோ வோல்டாயிக் சூரிய அடுக்குகள் நிறுவுதல்.

- காற்றாற்றல் மற்றும் நீர்சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான புதுமையான திட்டம்.

[2013 ஏப்ரல் 4

9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

9.1 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் 1983 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. அறிவியல் மனப்பாங்கை உருவாக்கி, ஆர்வத்தைத் தூண்டுவதன்மூலம் இளந்தலைமுறையினரை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தளத்திற்கு ஈர்ப்பதே இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டின் பிறபகுதிகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், திருச்சிராப்பள்ளியில் அண்ணா அறிவியல் மையம் மற்றும் வேலூரில் மாவட்ட அறிவியல் மையம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

9.2 தற்காலிகக் கண்காட்சிகள், வானவியலில் குறுகியகால வகுப்புகள், கணினி பயிற்சிப் பட்டறைகள், அறிவியல் கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகள், கோடைகால மற்றும் குளிர்கால அறிவியல் முகாம்கள், வானவியல் முகாம்கள், கணித திறனறிப் போட்டிகள், வானவியல் திறனறிப் போட்டிகள் மற்றும் 'அறிவியலாளரைச் சந்தியுங்கள்', 'உங்களது மருத்துவ வல்லுநரைச் சந்தியுங்கள்' போன்ற நிகழ்ச்சிகளை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் மாணவச் சமுதாயத்தின் நலனுக்காக ஏற்பாடு செய்து நடத்துகிறது.

9.3 செயல்பாடுகள்

- "பொருட்கள் எவ்வாறு இயங்குகின்றன" என்ற காட்சிக்கூடம் (How things work Gallery), "ஆடைகள் குறித்த காட்சிக்கூடம்" (Textile Gallery), "இயல் அறிவியல் காட்சிக்கூடம்" (Physical Sciences Gallery) கேளிக்கை அறிவியல் காட்சிக்கூடம் (Fun Sciences Gallery) ஆகிய நான்கு காட்சிக்கூடங்களுடன், முப்பரிமாணத் திரையரங்கு (3D Theatre) மற்றும் அறிவியல் பூங்கா (Science Park) ஆகியவை கொண்ட மண்டல அறிவியல் மையம் ரூ8.5 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டல அறிவியல் மையம், பொது மக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவரப்படவுள்ளது.

- சென்னையில் "டைனோசர் பூங்கா" உருவாக்கப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்கு திறக்கப்பட்டுள்ளது.

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கோட்பாடுகளை குழந்தைகள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் அறிவியல்

2013 ஏப்ரல் 4]

பூங்காவில், அறிவியல் கோட்பாடுகள் குறித்த காட்சிகள் வைக்கப்பட்டுள்ளது. மேலும், முப்பரிமாண அறிவியல் திரையரங்கம் பரிணாம பூங்கா, பிர்லா கோளரங்கம் ஆகியவை சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- இந்திய நாட்டின் பாதுகாப்புப் படைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில்நுட்ப வளர்ச்சி விவரங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்பொருட்டு, ரூ.1 கோடி மதிப்பீட்டில் மைய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (Defence Research and Development Organsiation) உதவியுடன் "பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு" காட்சிக்கூடம் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

- மாணவச் சமுதாயத்தினரிடையே கணிதப் பாடத்தின்மீது நிலவுகின்ற அச்சத்தினை நீக்கும்பொருட்டு, கேளிக்கை வழி கணிதம் கற்றல், அன்றாட வாழ்வில் கணிதத்தின் பயன்பாடு, தொழிற்சாலைகளில் கணிதம் போன்ற விவரங்கள் அடங்கிய இராமாநுஜன் காட்சிக்கூடம் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இக்காட்சிக் கூடம் பொது மக்களின் பார்வைக்கு விரைவில் திறக்கப்படவுள்ளது.

- ஊரகப் பகுதிகளில் உள்ள மாணவச் சமுதாயத்தினரிடையே கணிதத்தின்மீது ஆர்வத்தினை அதிகரிக்கும் வகையில், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நடமாடும் கணிதப் பேருந்து, பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவரப்படவுள்ளது.

- மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, ரூ.1.4 கோடி செலவில் மரபுசாரா எரிசக்திப் பூங்கா சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில், அமைக்கப் பட்டுள்ளது.

- அணு ஆற்றல் மீதான தவறான கருத்துக்களை நீக்கும் பொருட்டு சமுதாயத்தின் ஆக்கபூர்வமான பயன்பாடுகளுக்கு அணு ஆற்றல் உதவி புரியும் என்பதை

[2013 ஏப்ரல் 4

பிரதிபலிக்கும் வகையில் 21 தலைப்புகள் அடங்கிய அணு ஆற்றல் காட்சிக்கூடம் (Hall of Neclear Power) ஒன்று, இந்திய அணு ஆற்றல் கழகத்தின் (Neclear Power Corporation India Limited) நிதி உதவியுடன் ரூ.2.4 கோடி மதிப்பீட்டில் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

- பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே, விண்வெளி ஆராய்ச்சி மற்றும் ஏவூர்திகள் (Rocket) செலுத்துதல் ஆகியவற்றில் நிகழ்ந்து வரும் மேம்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் கோள்கள் மற்றும் விண்மீன்கள் பற்றிய தகவல்களை அளித்தல் ஆகியவற்றிற்காக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (Indian Space Research Organisation) ரூ.25 இலட்சம் நிதி உதவியுடன் "விண்வெளி அறிவியல் காட்சிக்கூடம்" (Space Science Gallery) ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

9.4 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- ரூ.10 கோடி மதிப்பீட்டில் சென்னையில் உள்ள கோளரங்கம், கலைநயம் மிக்க தொழில்நுட்பத்துடன் டிஜிட்டல் கோளரங்கமாக மேம்படுத்தப்படும்.
- சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் உள்ள முப்பரிமாண அரங்கு நவீனமயமாக்கப்படவுள்ளது.
- அறிவியல் தொழில்நுட்பக் கோட்பாடுகளை பரப்பும் விதமாக, வேலூர் மாவட்ட அறிவியல் மையத்தில் முப்பரிமாண அரங்கு அமைக்கப்படவுள்ளது.

10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

10.1 பல்வேறு அறிவியல் புலங்களில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டினை ஆதரிப்பதற்கு, 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் தன்னாட்சி பெற்ற தலைமை நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திட்டங்களை இம்மாநில மன்றம் செயல்படுத்தி வருகிறது.

2013 ஏப்ரல் 4]

சாதனைகள்

10.2 அறிவியல் மனிதவளம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி, ஆராய்ச்சி நிறுவனங்கள்மூலம் பல்வேறு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திட்டங்களை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் செயல்படுத்தி வருகிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திட்டங்கள், மாணவர் திட்டங்கள், கல்லூரிகளில் ஆராய்ச்சி மாணவர்களுக்கான ஆராய்ச்சி நிதி உதவி, தமிழ்நாடு அறிவியலாளர் விருது ஆகியவை மூலமாக இந்நிறுவனங்களில், குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி சாத்தியமாகிறது. இளம் அறிவியலாளர் ஆராய்ச்சி உதவித் தொகை, இளம் அறிவியலாளருக்கு பயணக் கட்டணம், கருத்தரங்கு, பயிலரங்கு, பட்டறை ஆகியவற்றிற்கான நிதியுதவி மூலமாக அறிவியல் பூர்வமான மனிதவள மேம்பாடு சாத்தியமாகிறது. மொத்தமாக, இத்திட்டங்கள், அதிக எண்ணிக்கையிலான பயனாளிகளைச் சென்றடையும் வகையில், 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.1.5 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு, 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.18 கோடியாக உயர்ந்து, 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.2.3 கோடியாக கணிசமாக உயர்ந்துள்ளது.

செயல்பாடுகள்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திட்டங்கள்

10.3 நமது மாநிலத்தைப் பொருத்த வரையிலும், பயனுள்ள வகையிலும், வேளாண்மை, சுற்றுச்சூழல் அறிவியல், உடற்கூறு அறிவியல், உயிரி அறிவியல், கால்நடை அறிவியல், மருத்துவ அறிவியல், சமூகவியல் மற்றும் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில், உயர் கல்வி நிறுவனங்கள் மூலமாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2012-2013 ஆம் ஆண்டில் 15 திட்டங்களுக்கு ரூ.35 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில் 18 திட்டங்களுக்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

10.4 நமது மாநிலத்தின் மாணவர்களின் திறன்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு பயன்படும் வகையில், மாணவர்களின் பாடத் திட்டத்தின்கீழ், சமூகத்திற்குப் பொருத்தமான திட்டங்களை மேற்கொள்வதற்கு, ஒரு திட்டத்திற்கு

[2013 ஏப்ரல் 4

ரூ.10,000/- என்ற உயர்ந்தபட்ச உதவி என்கிற அடிப்படையில், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை அறிவியல் துறைகளைச் சார்ந்த இளநிலை மற்றும் முதுநிலை இறுதி ஆண்டு மாணவர்களுக்கும், அறிவியல் முதுநிலை மாணவர்களுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டில் 275 திட்டங்களுக்கு ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது.

பயிலரங்கு / கருத்தரங்கு / பயிற்சிப் பட்டறைகளுக்கு பகுதி நிதியுதவி

10.5 அறிவியல் அறிவினை பரிமாற்றம் செய்து கொள்ளவும், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், அறிவியலாளர்கள், தொழிலதிபர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் மற்றவர்களிடையே கருத்துகளை பகிர்ந்து கொள்ளவும், மாநிலத்தில் உள்ள நிறுவனங்கள் நடத்தும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பயிலரங்குகள் / கருத்தரங்குகள் / பயிற்சிப் பட்டறைகளுக்கு பகுதி நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 50 திட்டங்களுக்கு ரூ.10 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில் 70 திட்டங்களுக்கு ரூ.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்படும்.

இளம் அறிவியலாளர்கள் பயண மான்யம்

10.6 தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகம் / கல்லூரி ஆராய்ச்சி மையத்தில் பணிபுரியும் 40 வயதுக்குட்பட்ட அறிவியலாளர்கள் மற்றும் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு பன்னாட்டு மாநாட்டில் கலந்து கொண்டு ஆராய்ச்சி முடிவுகளை சமர்ப்பிப்பதற்கு, 50 விழுக்காடு விமான கட்டணமும், தேசிய மாநாட்டில் கலந்து முடிவுகளை சமர்ப்பிப்பதற்கு 100 விழுக்காடு தொடர்வண்டி பயண கட்டணமும் வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 13 அறிவியலாளர்களுக்கு ரூ.3 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில் 13 அறிவியலாளர்களுக்கு ரூ.3 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்படும்.

இளம் அறிவியலாளர்கள் உதவித் தொகை திட்டம்

10.7 அறிவியல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் உள்ள புதிய தொழில்நுட்பத்தினை அறிந்து கொள்ளும் வகையில், 35 வயதுக்குட்பட்ட இளம் அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும் 2 முதல் 6

2013 ஏப்ரல் 4]

மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்கள், இந்தியாவில் உள்ள ஆராய்ச்சி மையங்களில் / பல்கலைக்கழகங்களில் முதுநிலை அறிவியலாளர்களுடன் இணைந்து ஒருங்கிணைந்த ஆராய்ச்சி பணி செய்தல் அல்லது நவீன ஆராய்ச்சி முறைகள் குறித்த பயிற்சி பெறுதல் / கற்றல் அல்லது மேம்படுத்தப்பட்ட கருவிகள், தொழில்நுட்பம் குறித்த பயிற்சி பெறுதல் / ஆகியவற்றினை மேற்கொள்ளலாம். 2012-2013 ஆம் ஆண்டில், 12 அறிவியலாளர்களுக்கு ரூ.3 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில், 15 அறிவியலாளர்களுக்கு ரூ.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு அறிவியலாளர்கள் விருது (டான்சா)

10.8 மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், அவர்களது துறையில், திறன்/ சிறப்பான பயன்பாட்டு ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் பிற பணிகள்மூலம் முக்கிய பங்கு ஆற்றுவதை ஊக்குவிக்கவும் மற்றும் கௌரவிக்கும் வகையிலும், "டான்சா" (TANSA) விருது வழங்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அறிவியலாளர்க்கும் ரூ.25,000/- பணமுடிப்பும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகிறது. இவ்விருது (1) வேளாண்மை அறிவியல், (2) உயிரி அறிவியல், (3) வேதியியல் அறிவியல், (4) பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், (5) சுற்றுச்சூழல் அறிவியல், (6) மருத்துவ அறிவியல், (7) கணித அறிவியல், (8) இயல் அறிவியல், (9) சமூகவியல், (10) கால்நடை அறிவியல் போன்ற பல்வேறு புலங்களில் வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 10 அறிவியலாளர்களுக்கு ரூ.3.50 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில், ரூ.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 10 அறிவியலாளர்களுக்கு இவ்விருது வழங்கப்பட உள்ளது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தினை பரவலாக்குதல்

10.9 பள்ளிக் குழந்தைகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தினைப் பரவலாக்குவதற்கு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் நடத்தும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறு பொருள்கள் பற்றிய அறிவியல்

[2013 ஏப்ரல் 4

கண்காட்சிகள், ஆசிரியர் பயிற்சித் திட்டம் மற்றும் புகழ்பெற்ற விரிவுரைகள் ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில், 60 நிறுவனங்களுக்கு ரூ.10.50 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டு, 3 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளார்கள். 2013-2014 ஆம் ஆண்டில், 72 நிறுவனங்களுக்கு ரூ12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன்மூலம் 3.25 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

இளம் மாணவர் அறிவியலாளர் திட்டம்

10.10 அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் திறமையான இளம் மாணவர்களை வெளிக்கொணரவும், அறிவியல் மற்றும் ஆராய்ச்சியினை தங்களது எதிர்கால தனித் திறப்பணியாக எடுத்துக் கொள்ளவும், வசதிகள் மற்றும் ஆசிரியர்களைக் கொண்ட சிறந்த கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தில், பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு, மே மாதத்தில் 25 நாட்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய விவரங்கள் கற்பிக்கப்படுகின்றன. 2012-2013 ஆம் ஆண்டில், 20 மாவட்டத்தைச் சேர்ந்த 800 மாணவர்களுக்கு ரூ.30 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில் 30 மாவட்டங்களைத் சேர்ந்த 1,200 மாணவர்களுக்கு ரூ.45 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு உதவி

10.11 தமிழில் உள்ள அறிவியல் வெளியீடுகளின்மூலம் குழந்தைகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வெளியிடும் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில், 10,500 மாணவர்கள் பயன்பெறும் விதத்தில் ரூ.40,000/- செலவிடப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில் 12,000 மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.75,000/- நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

புதுமை தொழில்நுட்பத்தை பரவலாக்குதல்

10.12 நமது மாநிலத்தில் அதிக எண்ணிக்கையில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி திட்டங்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாடுகளுக்கு வழிவகுக்கிறது. எனவே, கல்வியாளர்கள் மற்றும் அறிவியலாளர்கள் நடத்தும்

2013 ஏப்ரல் 4]

பயிற்சித் திட்டம் மற்றும் பயிற்சிப் பட்டறை மூலமாக களப் பயன்களுக்கான திறன்பெற்ற புதுமைகள் பரவலாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 450 நபர்கள் பயன்பெறும் வகையில், 17 திட்டங்கள் ரூ.9 இலட்சம் மானியத்துடன் நிறைவேற்றப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில் 500 நபர்கள் பயன்பெறும் வகையில், 20 திட்டங்கள் ரூ.10 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

ஊரக பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தர மேம்பாடு

10.13 *அறிவியல் கல்வியை மேம்படுத்துவதற்கு குறிப்பாக, ஊரக பள்ளி குழந்தைகள் பயன்பெறும் பொருட்டு, ஆறாவது, ஏழாவது மற்றும் எட்டாவது வகுப்பு அறிவியல் ஆசிரியர்களுக்கு, சிறந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 5 நாட்களுக்கு பணிசார்ந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில், 10 மாவட்டங்களில் 10 திட்டங்கள் ரூ.10 இலட்சம் மானியத்துடன் செயல்படுத்தப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில் 12 மாவட்டங்களில் 12 திட்டங்கள் ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட உள்ளது.*

அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

10.14 *ஊரக பகுதி பள்ளி மாணவர்கள், ஊரக விவசாயிகள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் ஆகியோரிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலமாக விழிப்புணர்வு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் 2012-2013 ஆம் ஆண்டில், ரூ.6.50 இலட்சம் செலவில், 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம், 2013-2014 ஆம் ஆண்டில், ரூ.8 இலட்சம் செலவில் 12 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.*

தொழிற்சாலை தேவைக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறன் உருவாக்குதல்

10.15 *தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப, பட்டதாரிகள் திறன்களைப் பெறுவதற்கும், அவர்களை சுயவேலைவாய்ப்பிற்கு ஊக்குவிக்கும் வகையிலும், இத்திட்டம் கல்வி நிறுவனம் மற்றும் தொழிற்சாலைகளிடையே பாலமாக திகழ்கிறது. இத்திட்டம், தொழிற்சாலைகள் மற்றும் கல்லூரிகளின் (பலவகைத்*

[2013 ஏப்ரல் 4

தொழில்நுட்பக் கல்லூரி உட்பட) முனைப்பான பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில், 3,500 மாணவர்கள் பயன்பெறும் வகையில், இத்திட்டம் ரூ.14 இலட்சம் மானியத்துடன் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில், 4,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில், இத்திட்டம் ரூ.15 இலட்சம் மானியத்துடன் 12 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

ஊரக பகுதிகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு

10.16 தமிழ்நாட்டின் மாவட்டங்களில் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலையினை உயர்த்தும் நோக்கில், இத்திட்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முடிவுகளை ஊரக பகுதிகளுக்கு மாற்றம் செய்வதற்கு வழி வகுக்கிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 5,000 விவசாயிகள், கலைஞர்கள் மற்றும் ஊரகபகுதி மக்கள் பயன்பெறும் வகையில், இத்திட்டம் 10 மாவட்டங்களில் ரூ.14 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில், 5,500 விவசாயிகள், கலைஞர்கள் மற்றும் ஊரகபகுதி மக்கள் பயன்பெறும் வகையில், இத்திட்டம் 12 மாவட்டங்களில் ரூ.15 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படவுள்ளது.

கல்லூரிகளில் உள்ள ஆராய்ச்சி மாணவர்கள் ஆராய்ச்சி நிதி உதவியினை பெறுவதில் உள்ள இடைவெளியினை சரிசெய்வதற்கான திட்டம்

10.17 பெரும்பாலான கல்லூரிகளில் உள்ள ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஆராய்ச்சி நிதியுதவி கிடைப்பதில்லை. ஆராய்ச்சி நிதியுதவியினைப் பெறுவதில் உள்ள இடைவெளியினை சரிசெய்யும்பட்சத்தில், புதுமையான எண்ணங்களை ஊக்குவிப்பதற்கும், ஆராய்ச்சி தகவல்களைப் பெறுவதற்கும், அறிவியல் மனித சக்தியை மேம்படுத்துவதற்கும் வழிவகுக்கும். குறிப்பாக ஊரகப் பகுதியில் உள்ள கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களை, மத்திய அரசின் உதவியுடன் பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி பெறும் பல்கலைக்கழகங்களோடு ஒப்பிடுகையில் அத்தகைய நிதியுதவியினை இவை பெறுவதில்லை. எனவே நமது மாநிலத்தின் கல்லூரிகளில் உள்ள ஆராய்ச்சி மாணவர்களிடமிருந்து ஆராய்ச்சி கருத்துருக்கள் பெறப்பட்டு, அவை நிபுணர்களால் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் உரிய திட்டங்களுக்கு நிதியுதவி உரிய

2013 ஏப்ரல் 4]

அளவில் செய்யப்படுகிறது. 2012-2013ஆம் ஆண்டில் ரூ.15 இலட்சம் செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டது. மிகுந்த வரவேற்பை பெற்ற இத்திட்டம், 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.24 இலட்சம் செலவில் தொடரப்படவுள்ளது.

11. தமிழ்நாடு மாநில உருது கழகம்

11.1 *தமிழ்நாடு மாநில உருது கழகம் 21-7-2000 அன்று துவக்கப்பட்டது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் இக்கழகத்தின் தலைவர் ஆவார்.*

11.2 பணிகள்

- *தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து அகில இந்திய அளவில் கழகத்தால் கவியரங்கம் நடத்தப்படுகிறது.*
- *'டாக்டர் அப்துல் ஹக்' இலக்கிய பரிசு மற்றும் பரிசுத் தொகை தலா ரூ.25,000/- வீதம் ஆறு கவிஞர்களுக்கு பொதுமக்கள் பங்கேற்ற விழாவில் வழங்கப்பட்டது. மேலும், உருது மொழி வழியாக தே*

ர்வுகளில் மாநில அளவில் இடம் பிடித்த மாணவர்களுக்கு தகுதிப் பரிசு மற்றும் பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

- *தமிழ்நாட்டில் 20 கல்லூரிகளில் உருது மொழி பாடப் பிரிவுகளும், 5 கல்லூரிகளில் அரபு மொழி பாடப் பிரிவுகளும் நடத்தப்படுகிறது.*

1.3 2013–2014 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- *தகுதிவாய்ந்த உருது மாணவர்களுக்கு பணப் பரிசுகள் மற்றும் கல்வி உதவித் தொகை அளித்தல்.*
- *உருது பயிற்றுவிக்கும் மையங்களுக்கு நிதி உதவி அளித்தல்.*
- *உருது மொழியை வளர்க்கும் கவிஞர்களை ஊக்குவிக்க, உள்ளூர் கவியரங்கம் நடத்துதல்.*

[2013 ஏப்ரல் 4



கல்லூரிக் கல்வி
அட்டவணை–1
மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை 2012–2013

கல்லூரிகளின் வகை	அரசு கல்லூரிகள்	அரசு உதவிபெறும் கல்லூரிகள்	சுயநிதி கல்லூரிகள்	மொத்தம்
கலை மற்றும் அறிவியல்	62	133	438	633
உடற்கல்வி	0	3	8	11
கீழ்திசை	0	10	0	10
சமூகப் பணி கல்லூரிகள்	0	2	0	2
கல்வியியல் கல்லூரிகள்	7	14	651	672
பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள்	35	0	0	35
மொத்தம்	104	162	1,097	1,363

அட்டவணை–2
மாணவர் சேர்க்கை 2012–2013

கல்லூரிகளின் வகை	ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்						மாணவர் சேர்க்கை விவரம்					
	இளநிலை	முதுநிலை	ஆராய்ச்சி படிப்பு	கல்வி இயல்	ஆராய்ச்சி மேற் படிப்பு	மொத்தம்	இளநிலை	முதுநிலை	ஆராய்ச்சி படிப்பு	கல்வி இயல்	ஆராய்ச்சி மேற் படிப்பு	மொத்தம்
அரசு கல்லூரிகள்	46984	5417	573	1169	169	54312	46915	5403	557	1169	169	54213
பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள்	8067	321	0	0	0	8388	8067	318	0	0	0	8385
அரசு உதவிபெறும் கல்லூரிகள்	97829	19982	2581	1818	443	122653	83537	19968	2546	1818	443	108312
சுயநிதி கல்லூரிகள்	108997	25695	1197	66157	249	202295	89913	15355	1186	59547	249	166250
மொத்தம்	**261877**	**51415**	**4351**	**69144**	**861**	**387648**	**228432**	**41044**	**4289**	**62534**	**861**	**337160**

தொழில்நுட்பக் கல்வி
அட்டவணை–3
2012–2013 ஆம் ஆண்டு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை, மொத்த இடங்கள் மற்றும் மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

கல்லூரிகளின் எண்ணிக்கை	கல்லூரிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்	மாணவர் சேர்க்கை	பொது		பிற (மற்றவர்)		பிற (முஸ்லிம்)		மிமிவ		ஆதி திராவிடர்		ஆதி திராவிடர் அருந்ததியர்		பழங் குடியினர்		மொத்தம்	
				ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
அரசு முறையான	30	8430	7625	75	41	2025	977	219	72	1556	593	1258	522	138	60	69	20	5340	2285
அரசு சுழற்சி	*	3420	3037	51	10	1039	169	111	8	809	89	521	127	74	6	22	1	2627	410
அரசு உதவி	34	14257	12173	376	62	4754	923	594	61	2589	450	1639	134	267	48	55	8	10274	1899
இணைப்பு	5	335	267	18	0	93	0	9	0	78	0	64	1	1	0	3	0	266	1
சுயநிதி	395	159264	107879	6697	686	40469	3233	4846	159	31481	1972	15797	1297	756	64	376	46	100422	7457
மொத்தம்	464	185706	130981	7217	799	48380	5302	5779	300	36513	3104	19279	2294	1236	178	525	69	118929	12052

(*): மேலே அரசு–முறையான, பிரிவில் இது உள்ளடக்கியுள்ளதால், மொத்தத்தில் சேர்க்கப்படவில்லை.

அட்டவணை–4

2012–2013 ஆம் ஆண்டு பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை, மொத்த இடங்கள் மற்றும் மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

கல்லூரிகளின் எண்ணிக்கை	கல்லூரிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்	மாணவர் சேர்க்கை	பொது		பிப.வ (மற்றவர்)		பிப.வ (முஸ்லிம்)		மிபிவ		ஆதி திராவிடர்		ஆதி திராவிடர் (அருந்ததியர்)		பழங் குடியினர்		மொத்தம்	
				ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
அரசு	7	2660	2749	83	62	757	594	66	38	379	267	199	199	46	32	18	9	1548	1201
அரசு உதவி	3	2735	2778	228	117	825	639	53	30	296	205	175	131	37	24	10	8	1624	1154
சுயநிதி	525	248724	170604	13938	6499	49080	33079	5332	1863	26635	13596	11759	6455	1357	652	259	100	108360	62244
அண்ணா பல்கலைக் கழகம் (உறுப்புக் கல்லூரிகள்)	18	7845	6360	336	336	1381	1238	133	101	846	697	549	473	88	88	48	16	3411	2949
மொத்தம்	553	262164	182491	14615	7014	52043	35550	5584	2032	28156	14765	12682	7258	1528	796	335	133	114943	67548

2013 ஏப்ரல் 4]

அட்டவணை–5

தொலைதூரக் கல்வி வாயிலாக பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை

வ. எண்	பல்கலைக்கழகங்கள்	மாணவர்களின் எண்ணிக்கை	
		ஆண்	பெண்
1.	சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.	16,101	20,577
2.	அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.	1,26,936	1,76,356
3.	மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.	38,739	31,045
4.	பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.	8,047	13,978
5.	பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.	40,982	37,306
6.	அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்.	–	1,514
7.	அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.	52,610	50,731
8.	மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.	13,071	15,117
9.	பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.	1,826	1,843
10.	திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.	466	845
11.	தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.	4,366	4,975
12.	தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை.	–	–
13.	அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.	967	1,070
	மொத்தம்	3,04,111	3,55,357
	பெரு மொத்தம்	6,59,468	

[2013 ஏப்ரல் 4

அட்டவணை–6

பல்கலைக்கழக வளாகத்தில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 2012–2013

வ எண்	பல்கலைக்கழகங்கள்	மாணவர்களின் எண்ணிக்கை	
		ஆண்	பெண்
1.	சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.	1,545	1,589
2.	அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.	27,996	8,858
3.	மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.	950	760
4.	பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.	967	1,258
5.	பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.	1,409	1,665
6.	அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்.	–	1,228
7.	அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.	726	1,256
8.	மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.	716	1,223
9.	பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.	614	704
10.	திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.	143	231
11.	தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.	–	–
12.	தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை.	–	–
13.	அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.	4,301	2,508
	மொத்தம்	39,367	21,280
	பெரு மொத்தம்	60,647	

2013 ஏப்ரல் 4]


வரைபடம் – 1
2012-2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை
200000
150000
100000
50000
0
54213
8385
108312
166250
அரசு கல்லூரிகள்
பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள்
அரசு உதவி பெறும் கல்லூரிகள்
சுயநிதி கல்லூரிகள்



2012-2013 ஆண்டு மூலதனச் செலவுத்திட்டத்தின் பெரும்பான்மைச் சட்டமுன்வடிவின் மீதான விவாதம்

| | | |

2013 ஏப்ரல் 4]

வரைபடம் – 3
2012-2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல்
கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை
200000
150000
100000
50000
0
2749
2778
6360
170604
அரசு கல்லூரிகள்
அரசு உதவி பெறும் கல்லூரிகள்
அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள்
சுயநிதி கல்லூரிகள்

[2013 ஏப்ரல் 4


வரைபடம் – 4
2012-2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பாலகை
தொழில்நுட்ப கல்லூரிகளின் எண்ணிக்கை
400
300
200
100
0
30
34
395
ஆரக கல்லூரிகள்
ஆரக உதவி பெறும் கல்லூரிகள்
சுயநிதி கல்லூரிகள்

2013 ஏப்ரல் 4]